தென்றல்

பொங்கல் மலர்


இப்பொழுது
நடைபெறுகிறது
கிருஷ்ணா பிக்சர்ஸ்
காவேரி
கதை, வசனம்: டைரக்ஷன்:
ஏ.எஸ்.ஏ.சாமி • யோகானந்த்
பாடல்கள்:
உடுமலை நாராயணகவி
சென்னை
ஸ்ரீ கிருஷ்ணா • பாரகன்
ராஜகுமாரி & உமா
மற்றும் தென்னாடெங்கும்

[illegible] பெரியநாயக்கர்
ஞா. கோவிந்தசாமி அவர்களின்
நூல் தொகுப்பு

காதற் காவியம்!

கருநிறக் கூந்தல் கண்டேன் ;
கலையெழில் ஆடல் கண்டேன் !
ஒரு கரம் கூந்தல் தாங்கி !
உவப்புறக் கண்டேன் ; கண்டேன் !

செந்நிற அதரம் கண்டேன் ;
சித்திர வடிவம் கண்டேன் !
இன்னொரு உருவம் அந்த
இதழ்களை மூடக் கண்டேன் !

வெண்ணிறக் கழுத்தும் கண்டேன் ;
வியப்புறும் நகைகள் கண்டேன்
அண்ணலின் கைகள் அஃதை
அணைத்திடக் கண்டேன்!

சோலையில் இயற்கை காட்டும்
சுந்தர வர்ணம் கொண்டாள்,
பாலையிற் பசுமை காட்டும்
பைங்கொடி ! வாழ்க ! வாழ்க !



உரிமையாளர் : எஸ். எஸ். பி. லிங்கம்

★ இயற்கை வெளியிலே காணும் வர்ணங்களை உங்கள் வீட்டிலே, மாளிகையிலே, மண்டபத்திலே, காண வேண்டுமா ?

★ உங்கள் வீட்டில் உள்ள, மர—இரும்பு — உலோக, வேலைப்பாடுகள் செல்லரிக்காமல், துரு அரிக்காமல், சீரழியாமல், இருக்கவேண்டுமா ?

★ கண்கவரும், ஓவியங்களைத் தாளிலும், தட்டியிலும், திரையிலும், தரையிலும், கற்சுவரிலும், காகித மலரிலும் காணவேண்டுமா ?

அப்படியானால்...?

தன்மையில் சிறந்த, வகையில் உயர்ந்த,
விலையில் குறைந்த, உறுதியில் நிறைந்த,

எஸ். வி. அம்பாள் கம்பெனிக்கு

வாருங்கள் ! வர்ணங்களை வாங்குங்கள் !

319-322, ராசப்ப செட்டி தெரு, சென்னை-3.

கைகளிலே வளை கலீர் கலீரென
காலிற்சிலம்பு கணீர்கணீரென
செவிதனிலே குழை சீர்த்திகள் காட்டிட
சித்திரமாதவள் ஆட வந்தாள் !

★

அங்கம் பொங்கும் இளமையும்
அணிகலன் காட்டும் புதுமையும்
எங்கும் கதிரவன் ஒளியென
எழுந்தது கண்டார் மாந்தரே !

★

பிறைபோல் நெற்றிப்பெண்ணவள்
பி. ஏ. ராஜுச் செட்டியார்
கடையில் பெற்ற நகைகளால்
கலையே உருவாய்த் தோன்றினள் !

★

நாணயம் மிகுந்த இடம் பி.ஏ.ஆர்.
நம்பிக்கை நிறைந்த இடம் பி.ஏ.ஆர்.
வேண்டிய தங்கம், வைரம், மற்றும்
வெள்ளிப் பொருள்கள் தருகிறார் !

★

குறைந்த விலைகள் ! அழியாச் சொத்து !
கோமளப் பெண்களும் ஆண்களும்
விரும்பும் பொருள்கள் ! வாரீர் ! காணீர் !
வேண்டியகொள்வீர் ! வாழி நீர்!

எதிர்கால சந்ததிகளுக்கு நகைகள் சிறந்த சொத்தாகும் !

—: சிறந்த இடம் :—

பி. ஏ. ராஜு செட்டியார்

சொர்ண மாளிகை - கோயமுத்தூர்

போன் : 268 தந்தி : ராஜா

தென்றல்

இதழ் 29 ◉ பொங்கல் மலர் ◉ 15-1-55

எண்ணம்

திராவிடப் பெருங்குடி மக்கள் அனைவருக்கும் 'தென்ற'லின் சார்பில் பொங்கல் வாழ்த்துக்களை தெரிவித்துக்கொள்கிறேன்.

'தென்ற'லின் பொங்கல் மலர் உங்கள் கரங்களிலே தவழ்கிறது. மலரின் மணம் பற்றிய ஆராய்ச்சியில் நீங்கள் இறங்குமுன், ஒரு சில வார்த்தைகள் கூற விரும்புகிறேன்.

'தென்ற'லின் பொங்கல் மலர் மிக்க் குறைந்த விலையில் வெளிவர வேண்டும் என்று நான் ஆசைப் பட்டேன். அதன்படி எட்டணா விலையைத் தீர்மானித்தேன். அந்த விலையிலேயே அதிகம் கருத்துரைகள், கவிதைகள் தரவேண்டுமென்று விரும்பினேன். பல, தமிழ் அறிஞர்களுக்கும் கடிதம் எழுதினேன். அனேகர் ஒப்புதல் அளித்தனர். ஆனால், ஒப்புதல் அளித்த பின்பும், அலுவல்களினால் என்று நினைக்கிறேன்-சிலர் தங்கள் கருத்துரைகளை அனுப்பவில்லை. ஆகவே 'தென்றல்' முன்பு விளம்பரம் செய்தபடி முழுக் கருத்துரைகளையும் தாங்கி வர முடியவில்லை. ஆயினும் பெரும்பான்மைக் கருத்துரைகள் இடம் பெற்றிருக்கின்றன. அறிஞர் அண்ணா அவர்களைத் தொல்லை செய்ய விரும்பாது, உரிமையோடு-சென்ற ஆண்டில், பொங்கல் பற்றி, அவர் எழுதிய கருத்தை எடுத்துத் தந்துள்ளோம்.

டாக்டர் ராசமாணிக்கனார், தமிழ் இனம் பற்றி ஒரு அரிய ஆராய்ச்சியைத் தந்துள்ளார். பன்மொழிப் புலவர் அப்பாதுரையார், மலையாள அறிஞரின் இராமாயண ஆராய்ச்சியை மிக அழகாக எழுதியுள்ளார். கலைஞர் கருணாநிதி அவர்கள் கண்வேதனைக்கு இடையிலும், தான் எழுத முடியாத நிலையிலும், சொல்லிச் சொல்லி எழுதச் செய்து ஒரு சிறு கட்டுரை வழங்கியுள்ளார். மற்றும் அன்பழகன், மாசி, பொன்னம்பலனார், தங்கப்பழம், சத்தியவாணிமுத்து, என் எஸ்.கே, வாணிதாசன், முடியரசன், கம்பதாசன், சாமி பழனியப்பன், இராதாமணாளன் சிவப்பிரகாசம், அரங்கண்ணல் தென்னரசு, அருண்மொழி ஆர்.எஸ். சம்பந்தம், மெ. சுந்தரம். பரமசிவானந்தம், கி. ஆ. பெ. விசுவநாதம், தங்கவேலர், பூ. கணேசன், கோமேதகவேலு முதலிய தமிழ்ப் பெருமக்கள் அனைவரும் தங்களது எழுத்துக்களில் கரும்புச் சுவைபாய்ச்சி, சர்க்கரைப் பொங்கல் வழங்குகிறார்கள்.

அடியேனும் எழுதியிருக்கிறேன்.

இவ்வாண்டு பொங்கல் மலரை நீங்கள் ரசிக்கும் விதம் தெரிந்து அடுத்த ஆண்டு புதுமைகள் செய்ய எண்ணம். குற்றங்கள் மலரில் காணப்படின், பொறுத்தருள்க.

மீண்டும் என் பொங்கல் வாழ்த்துக்களை, நண்பர்கள் அனைவருக்கும் கூறிக்கொள்கிறேன்.

வணக்கம்

கண்ணதாசன்

இனிய பொங்கல்

பொங்கற் புது நாள்; தமிழர் திருநாள்! எங்ஙனமோ, ஓர் விழாக்கோலம் அமைந்து விடுகிறது, வீடெல்லாம்; நாடெங்கும்! நேற்றுவரைஇருந்து வந்த சங்கடம் ஓய்வெடுத்துக் கொள்கிறது; எங்கிருந்தோ ஓர் மகிழ்ச்சி. இல்லம் புகுந்து, இதயம் புகுந்து, தமிழரைப் பொலிவுள்ள பேசும் பொற்சித்திரமாக்கி விடுகிறது!

புத்தாடை! பாற்பொங்கல்! புன்னகை! மழலை! கொஞ்சும்மொழி கனிவு! மகிழ்ச்சி! தாய்மையின் அழகொளி, குடும்ப பாசம்! விழாக் கோலம்! அட்டியின்றி அன்று அரும்பும் மலர்களின் பட்டியல் கூறின் விரியும்! வறுமை ஒழிந்து விடுவதில்லை—அன்று தலைகாட்ட அஞ்சுகிறது! விசாரத்திலிருந்தும் மக்கள் விடுபட்டுவிடுவதில்லை—அன்று ஓய்வெடுத்துக் கொள்கிறது. ஏக்கமும் பெருமூச்சும், இன்ப மொழிக்கு இடமளித்து விட்டு மூலை சென்று பதுங்கிக்கொள்கிறது. வேறு எந்த விழாவிற்கும் இல்லாத ஓர் தனித்தன்மை, மணம், தமிழர் திருநாளன்று கிடைக்கிறது. இல்லம் எல்லாம் இந்த இன்பம் பெறவேண்டும்—இன்று போல் என்றும் அந்த இன்பம் இருந்திடும் நிலையில் நாடு அமைந்திட வேண்டும், என்ற என் விருப்பத்தை வழங்குகிறேன், உங்கள் நல்லெண்ணத்தைப் பெற்றுள்ளவன் என்ற நிலையில் உள்ளவனுதலால். பொங்குக இன்பம்! தங்குக என்றும்!

தண்ணொளியும் தன்னரசும் இழந்தோம்—நாடு, அடிமைக்காடாகி விட்டது. எனினும், ஒப்புயர்வற்ற தன்னரசையும் அதனைத் தழைத்திடச் செய்யும் ஆற்றல்மிக்க எந்தையையும் இழந்தாலும், பாரிமகளிர் பண்பினை இழந்திடாதிருந்த பான்மைபோல, தன்னரசு இழந்த நாமும், பண்பு இழந்தோமில்லை—எனவே, இழந்த இன்பத்தை மீட்டிடும் ஆற்றலை, வாய்ப்பை இழந்துவிடவில்லை! இற்றைத்திங்கள் இழிவும், பழியும், இடரும் தாக்கிடுவது உண்மை! எனினும், இழந்த குன்றம், மீண்டும் நமதாகும் என்ற நம்பிக்கை நாதம் கேட்கிறது, நரம்புக்கோர் புது முறுக்கு ஏறுகிறது—விழியிலே ஏக்கம் ஆர்வப்பொறி கிளம்புகிறது—சூளுரைத்து விட்டோம் சுடுசொல் அல்ல, கெடுமதியாளரின் பிடியிலே சிக்கிச் சீரழியும் நமது அரசு மீண்டும் நமதாகவேண்டும்—அதற்கான அரும்பணிக்கு, நம்மை நாம் ஒப்படைத்து விட்டோம்—முயல்வோம், வெல்வோம்!

இந்த உற்சாகமும் உறுதியும் நம்பிக்கையும் பொங்குக! என்று கூறி, என் அன்பு கலந்த நன்றியை அனுப்புகிறேன், பாகு, கரும்பு, செந்நெல், கனிவு, மழலை, களிப்பு ஆகியவற்றுடன் இதனையும் கலந்து பொங்கலிடுக! பொங்குக இன்பம்! தங்குக எங்கும்!!

அறிஞர் அண்ணாதுரை M.A.

தென்றல் தழுவுகிறது!

வைகறையே! வா! என் வாழ்த்துக்களை ஏற்றுக் கொண்டுபோ! அடடா! வாழ்த்து என்றதும் இப்படி ஓடி வருகிறாயே, அட புகழ்தேடி! முதலில் வசவு, பின்தான் வாழ்த்து! ஆமாம், சேவலையும் எழுப்பிவிட்டாய், செங்கதிரையும் எழுப்பிவிட்டாய்; இரண்டுக்குமிடையிலே, உழைப்பாளி வீட்டின் கதவை ஏனப்பா அவ்வளவு அவசரமாகத் தட்டுகிறாய்? இரவெல்லாம் உடல் வலியால் மண்தரையில் உருண்டு, கடைசியில் அந்தக் களைப்பில் கண்மூடிக்கிடக்கிறானே தவிர, உறங்கிக் கொண்டிருக்கிறான் என்று எண்ணுகிறாய்!

ஏழை என்ற "இளக்காரம்" உனக்கும் ஏற்பட்டுவிட்டதால்தானே சோர்ந்து சுருண்டு கிடப்போரின் குடிசைக் கதவை அவ்வளவு பலமாகத் தட்டுகிறாய்.

மாளிகைகளின் படியேற உன் கால் நடுங்குகிறதோ அன்றி கைதான் கதவைத் தொட்டிட அஞ்சுகிறதோ!

"ஏழையே எழு! எடு கலப்பையை" என்று எவ்வளவு அதிகாரமாய் அதட்டுகிறாய். என்றைக்காவது ஒரு நாள்; எழில் மாடத்தின் சாளரத்தின் வழியாகவாவது, "நேரமாகி விட்டது" என்று வீணை அதிர்வதுபோலவாவது விளம்பியிருக்கிறாயா?

ஏழையை நீ எழுப்பாத நாள் அவன் இறந்துபோன நாள் தானே! **பிணத்தை நீ எழுப்புவதில்லை; மாளிகையின் நடைப்பிணத்தையும் நீ எழுப்புவதில்லை.**

தென்றல் தழுவும் இந்த நேரத்தில் உன்னை நான் ஏன் காக்கவைக்கிறேன்!

புரிந்துகொண்டேன் உன் பொருள் பொதிந்த போக்கு!
வைகறையே நீ வாழி!

கலைஞர்

கருணாநிதி

பாஞ்சாலி சபதம்

தேனளந்த மேனிச் சிலைமடவீர் ! உங்கள்முனம்
நானளந்த காதல் நடத்துகிறேன் !--வானளந்த
மாயோனும் காணு வலிவான காதலிலே
தீயூடு வேகும் சிறுமலராய்—ஆயாசம்
கொண்டேன் ; தளர்ந்தேன் ; குறைகேட்பார் இல்லாது
நின்றேன் ; தமிழ்மண்ணை நினைவுண்டேன் !—குன்றாத
கற்பில் இயங்கும் காரிகையீர் ! என் துயர்உம்
பொற்பாதம் வைத்துப் பொறுமுகிறேன் !—அற்புதமாம்
என்வாழ்வு கேட்டு இடிபோல் நகைக்காதீர் !
"பெண்வாழ்வா ?" என்றெல்லாம் பேசாதீர்!-மண்வாழ்வில்
மெல்கின்ற வாய்க்கெல்லாம் அவலானேன்! என்செய்வேன்!
சொல்கின்றேன் எந்தன் துயர் !
முறையோடு என்னை மணந்தார் ஒருவர் ; அதைப்
பிரிவாக்கிக் கொண்டார் பிறநால்வர்—அறியாத
அத்தைக்கு ஒருசொல் ; அன்றுமுதல் என்வாழ்வில்
மெத்தைக்குத் துன்பம் மிகஅதிகம் !—பத்தினிமார்
காணுத வாழ்வு ; கடைகெட்டார் கற்பனையும்
பூணுத வாழ்வு ; பொதுவாழ்வு !—நாணுது
மரம்போல நின்று, வகிர்ந்தார்கள் ஐவர்கையில்
சரம்போலப் பட்டேன் தனிப்பாடு—உரம்போட்டு
வளர்க்கின்ற மரமும் வலிவான ஐவர்தொட
'மளுக்'கென்று சாயாதோ மண்மீது ?—பளுக்கொண்டும்
பலகாலம் வாழ்ந்தேன் ; பாண்டவர்கள் ஐவரெனும்
கொலைகாரர் கையில் குடையானேன் ;—சிலகாலம்
வீமனுர் தம்மோடு வீற்றிருப்பேன் ; தருமனெனும்
காமனுர் வாவென்று கண்ணசைப்பார் !—மாமியார்
பெற்ருளும் பெற்ருர் பெருங்காளைப் பிள்ளைகளை
குற்ருல மலைபோற் குவலயத்தில் !—உற்ருரின்
முகம்பார்க்கப் போவேன் ; முன்நின்று பார்த்திபனுர்
" அகம்பார்க்க வில்லையோ ஆரணங்கே ?—சகம்பார்க்க
முடியாத காதல் மூண்டிருக்கும் நெஞ்சோடு
கொடிகாண வந்தேன் குளிர்நிலவே !—தடையின்றி

கண்ணதாசன்

மகிழ்த்திருப்போம் வா''வென்பார் ; மறுகணத்தில்
நகுலர்வந்து
"நெகிழ்ந்ததடி நெஞ்சம் நேரிழையே !—கவிழ்ந்தகலம்
போலே நான்வாடிப் புலம்புகிறேன் ; இழைவகிர்ந்த
நூலானேன் வாராய் ! நுண்ணிடையே !—பூலோகம்
காணாத இன்பமெலாம் காணுவோம் ! வா !'' என்பார்
கோணாமல் அவரோடு குலவிடுவேன்—ஆணாகத்
தப்பிப் பிறந்த சகதேவர் தூரநின்று
அப்பாவிபோல அரற்றிடுவார்—"கொப்பாக
நால்வோரும் கொண்டு, நமைமறந்தார்'' என்றெண்ணி
தாளாமல் நின்று தவித்திடுவார்—ஆளாரும்
இல்லாத வேளை எனைநாடி, கால்பணிந்து
"கொல்லாமல் கொல்லும் கோமளமே ! நல்லாய்நீ
இன்றேனும் என்னை ஏற்றுக்கொள் ; இல்லையெனில்
கொன்றேனும் போ''டென்று குழம்புவார்—மன்றேறிச்
சொல்வாரா ? உடன்பிறந்த சோதரர்பால் தூதனுப்பி
வெல்வாரா ? என்செய்வார் ! வெம்பிடுவார் — பொல்லாத
நால்வருடன் கூட்டு நான் சேர்ந்தேன் !எனக்கெனஓர்
வேல்வருடிச் செய்த விழிமாது —கால்வருடி
'கண்ணாளா !' என்று கதைகூற இல்லை !''யென
புண்ணான நெஞ்சின் புறம்போவார்—பெண்நானும்
அவர்க்கென்றே ஓடிவந்த ஆயிழைபோல், ராப்போகச்
சுவர்க்கோழி ஒலிமுட்டச் சுவைதருவேன்—எவர்க்கேனும்
சிறுதுளியும் தனிமைத்தீ இன்றி காத்திருந்தேன்
மறுபடியும் சொல்வதென மாண்புடையீர் !—கருகியஎன்
பொன்மேனி சொல்லும் புராணங்கள் அத்தனையும்
மண்மீதில் நீரறிய மாட்டீரோ ?—பெண்பேதை
'பாஞ்சாலி' என்றால் [1]பார்ப்பாரைப்பின்தொடரும்
ஆண்சாதி முற்றும் அறியாதோ ?—மான்சாதித்
தமிழ்ப் பெண்டிர் ! உங்கள் தாய்நாட்டில் எனபோலப்
'புகழ்'ப்பெண்டிர் உண்டோ புகன்றிடுவீர்—இகழ்வான
மாதென்பீர் ! எனைஇந்த வாழ்வில் அழுத்தியவள்
பாதகியாம் குந்திஎனப் பாரறியும் !—தீதறியா
நானந்த வாழ்வில் நலிந்தகதை கேட்டும்,
ஆனந்தம் கொள்கின்றார் ஆத்திகர்கள் !—கானங்கள்
பாடுகிறார் ; எனக்கென்று பத்தினிக் கோயில்கட்டி
ஆடுகிறார் ; எனக்கிதுதான் ஆச்சரியம் !—தேடிவரும்
எல்லோர்க்கும் சாய்பவளே எல்லையிலாப் பத்தினியாம் !
சொல்லாமல் சொல்கின்றார் ! தோகையரே !—நல்லோர்கள்
எனைப்போன்ற பத்தினியை ஏற்பாரா ? தென்னாட்டார்
நினைத்தாலே நெஞ்சம் நீறுமே ?—தினைத்துணையும்
ஓய்வின்றி வாழ்ந்தேன் ; ஓரைவர் மட்டுமல ;
ஆய்ந்திட்டால் தோன்றும் அதிசயங்கள் !—காய்ந்தநிலா
மெய்வருட ஓர்நாள் மேனிசிலிர்த் திருந்தேன்
ஐவரும் அன்றில்லை ; அகன்றிருந்தார்—கைவருடும்
கூந்தல் அணைபுரள, குளிர்காற்று மேனிதொட
ஏந்திழை யென்உள்ளம் இசைகேட்க---காந்தமெலாம்

---

[1] பார்க்கும் பெண்களை



இல்லாமல் வாடும் இரும்பான என்உடலம்
கொல்லாமல் கொல்லக் குமைந்திட்டேன் !--இல்லாத
நாளில்லை ; ஓர்நாள் நான் தனியாய் கதைபேச
ஆளில்லை யென்றால் அமைவேனோ ?--சூழெல்லை
அத்தனையும் என்னை ! ‘ அவர் ’பக்கம் தள்ளிவிட
மெத்தையினில் சாய்ந்தேன் மிகஎண்ணி--“ முத்தனைய
வர்ணனைகள் தேர்ந்த வடிவழகன் ; பெருவீரன்
கர்ணமகா ராசனவன் கண்திறந்தால்--சொர்ணமலர்
துவள்கின்ற காட்சி தொடராதோ ?” என்றெண்ணிக்
கவிழ்ந்திட்டேன் ; மற்றகதை வேண்டாம் !--அவிழ்ந்திட்ட
கூந்தல் முடிக்கக் கொடுஞ்சபதம் போட்டதுபோல்
‘ஏந்தல்’ முடித்துவிட எண்ணமிட்டேன்--மாந்தர்என்ன
சொன்னாலும் கவலையிலை ! தொட்டவர்கள் ஐவரெனில்,
என்னாகும் மீண்டொருவர் என்னைத் தொட்டால் ?
--தண்ணீர்தான்
தலைக்குமேல் போனபின்னர் சாண்முழம் பார்த்தாவ
துண்டோ ?
நிலைக்குமேல் போகத்தான் நினைத்துவிட்டேன்--
கலைக்குமேல்
அழகான மேனி ஆடவரைக் கண்டக்கால்
புளகாங் கிதம்பெற்றுப் பூரித்தேன்--பழகாத
சின்னவரைக் கண்டால் சிலிர்த்திட்டேன் ; ஓவியம்போல்
மன்னவரைக் கண்டால் மயக்குற்றேன்--அன்னவரை
நினைவாக்கி ஆக்கி நெகிழ்ந்திட்டேன் ; முகம்யாவும்
அணைதேக்கித் தேக்கி அனல்பட்டேன்--கனியாக்கி
உண்பாரைக் கண்டால் ஓடினேன் ; தினைமாபோல்
‘தின்பாரைக் கண்டால் சிரிப்புற்றேன்--பெண்பாவை
‘ரதியென்று சொல்வாரை நாடினேன் ; அவர்பக்கம்
சதியென்று அன்போடுந் தாவினேன்--நதிகாட்டில்
தடமின்றிப் பாயும் தரத்தினிலே, மறுப்புக்கு
இடமின்றி வாழ்ந்திட்டேன் ! ஏசாதீர் !--கெடவென்று
பணித்திட்டார் அத்தை பகிர்ந்திட்டார் ஐவோர்க்கும்!
கணித்திட்டேன் மற்ற கதையாவும் !--எனைத்திட்டி
என்னபயன் ! நீர்சொல்வீர் ! ஏந்திழையாள் ! இப்படிநான்
சொன்னவற்றைப் புராணந் துலக்கிடுமே !--என்கதையில்
பாக்கியுள்ள யாவும், பஸ்லுல்லா ரோட்டருகில்
தேக்கியுள்ள வேந்தர் செப்பிடுவார் !--கேட்கவெனில்
அங்குநீர் செல்வீர் ! அனைவோர்க்கும் என்வணக்கம்!
பொங்குக ! நான் வருகின்றேன், போய் !

◉

தமிழ் இனம்

டா. மா. இராசமாணிக்கனர்

M.A.M.O.L.Ph.D

இனவாழ்வின் உயிர்நாடி

ஒரு மொழி பேசும் மக்கள் தொகுதியை 'இனம்' என்னும் சொல்லால் குறிக்கலாம். இதன்படி, 'தமிழ்' என்னும் மொழியைப் பேசும் மக்களைத் 'தமிழ் இனம்' என்னும் தொடரால் குறிப்பது பொருந்தும். இவ்வொருமொழி பேசும் மக்கள் இனம் வன்மை பெற்றதாக விளங்கவேண்டுமாயின், அவ்வினத்தைச் சேர்ந்த மக்கள் இயற்கையாய் அமைந்த 'இனவாழ்வு' உடையவராக இருத்தல்வேண்டும். அஃதாவது அவ்வினத்தைச் சேர்ந்த அனைவரும் ஒரு தாய் ஈன்ற மக்களைப் போல வாழ வசதியிருத்தல் வேண்டும். உழைப்பால் எவரும் இனவாழ்வில் எத்தகைய உயர்நிலையையும் அடையத்தகும் வசதி அவ்வினத்தில் அமைந்திருத்தல்வேண்டும். இதனை மேலும் விளக்கிக் கூறவேண்டுமாயின், ஒரே மொழி பேசும் மக்கள் சேர்ந்து வாழும் இனவாழ்வில் பிறவிகொண்டு பிரிக்கப்படும் பாகுபாடுகள் இருத்தல் கூடாது. அவரவர் தம் முயற்சியால் உயர்ச்சி பெறலாம் என்னும் இனவாழ்விற்கு உயிர்நாடியான அடிப்படை இனவாழ்வில் அமைந்திருத்தல்வேண்டும.

மேனடுகளில் இனவாழ்வு

இவ்வினவாழ்வின் உயிர்நாடி நன்கு அமையப்பெற்ற காரணத்தால்தான் மேல்நாடுகள் அறிவிலும் ஆற்றலிலும் நம்மால் எண்ணிப் பார்க்க முடியாத அளவில் முன்னேறி வருகின்றன. அந்நாடுகளில் பிறப்பால் உயர்வு தாழ்வு இல்லை. அதனால் செருப்புத் தைக்கும் சக்கிலி, தூண்டில் போட்டு மீன் பிடிக்கும் எளிய மகன், செங்கல் எடுக்கும் சிற்ருள், பயிர்க்கொல்லையைக் காக்கும் பணிமகன் போன்றவரும் உழைப்பால் உயர்ந்து அரியணையில் அமர்ந்து ஆட்சி செய்தலைக் காண்கிறோம். அங்கு ஒவ்வொருவரும் அடுத்தவரைத் தம் இனத்தவராகவும் நாட்டவராகவும் கருதிப் பண்புடன் நடந்துகொள்ளும் பழக்கம் பெற்றுள்ளனர்.

இத்தகைய இனவாழ்வு நம் நாட்டில் இல்லாமைக்குக் காரணம் யாது?' இந்நாட்டில் பல வகை உட்பிரிவுகள் உட்படப் பல்லாயிரக்கணக்கான சாதிகள் இருக்கின்றன என்று கூறுதல் தவருகாது.* எந்த நாட்டிலும் மக்கள் பல தொழில்களைச் செய்தல் இயல்பு. ஆயின், 'ஒவ்வொரு தொழிலைச் செய்வோரும் பிறவியிலேயே வேறுபட்ட சாதியினராகக் கருதப்படும் இழிநிலை பிறநாடுகளில் காணப்படாதது. ஆனல், இந்நாட்டில் தொழில் காரணமாக ஏற்பட்ட பெயர்கள் சாதிப் பெயர்களாக நிலைநிறுத்தப்பட்டன.

வட இந்தியாவில்

இந்நாட்டில் குடிபுகுந்த ஆரியர் சாதிப் பிரிவினை அறியாதவர். ரிக்வேத காலத்தில் அவர்களிடம சாதிப்பிரிவுகள் இல்லை, ஆயின், பிற்பட்ட காலங்களில் அவர்களிடையே அவர்கள் உயர்வு கருதிப் பிரிந்து வாழ்ந்தனர். கொடுக்கலும வாங்கலும் படிப்படியாக நிறுத்தப்பட்டன. பிராமணர், க்ஷத்திரியர், வைசியர் என்னும் முப்பிரிவினைகள் தோன்றின. அவர்களிடையே இருந்த பலவகைத் தொழிலாளர்கள் நான்காம் பிரிவினராயினர். நாளடைவில் ஆரியரால் ஆளப்பட்ட இந்நாட்டிற்குரிய மக்களும் சூத்திரராக்கப்பட்டனர்.

தமிழகத்துப் பிரிவுகள்

இங்ஙனம் வடஇந்தியாவில் உண்டான சாதிப் பாகுபாடுகள் அதேகாலத்தில் தென்னிந்தியாவில் காணப் படாதனவாக இருந்தன. தமிழகம் குறிஞ்சி, பாலை, முல்லை,

*The elaborate institution Known as the caste system among the Hindus in India may almost be said to be without a parallal in the world... ..To-day cast is rigidly fixed by birth and exclusive commensality and comubium between the members of a cast-group to the exclusion of all others are its fundamental and outstanding characteristics. Further, the conception of impurity communicable to a higher cast by contact with a lower are underlies this fissiparons tendency, and has resulted in the untouchability of the so-called Sudra, who by popular error is almost identified with the panchama, or one outside the famework of the chaturvarnya. Again, in plase of the four original varnas of class groups, there are to-day **thousands of caste divisions and sub-divisions, and the member is still growing.**

—The Vedic Age ed by R. C. Majundar, pp. 384—'5.

மருதம், நெய்தல் என்ற ஐந்து நிலங்களாகப் பிரிந்திருந்தது. குறிஞ்சி நிலத்து மக்கள் பொருப்பன், வெறபன், சிலம்பன், குறத்தி, கொடிச்சி, குறவன், கானவன் எனட பெயர் பெற்றனர்; பாலை நில மக்கள் விடலை, காளை, மீளி. எறியிற், எயினன், மறவன், மறத்தி எனப் பெயர் தாங்கினர்; முல்லை நில மக்கள் தோன்றல், மனைவி, கிழத்தி, இடையன், இடைச்சி, ஆயன். ஆய்ச்சிஎனப் பெயர்கள் வழங்கப் பெற்றனர். முல்லை நிலம் ஐந்து நிலங்களுக்கும் இடையே அமைந்திருந்தகாரணத்தால் இடைநிலத்தார் என்னும் பொருள்பட முல்லை நில மக்கள் ‘இடையர்’ எனப்பட்டனர். மருதநிலத்து மக்கள் ஊரன், மகிழ்நன், கிழத்தி, மனைவி, உழவன், உழத்தி எனப் பெயர் பெற்றனர். நெய்தல் நில மக்கள் சேர்ப்பன், புலம்பன், பரவன், பரத்தி, நுழையன், நுழைச்சி, அலவன், அலத்தி எனப் பெயர் பெற்றனர். இவ்வொவ்வொரு நில மக்களுள்ளும் தலைமக்கள், பொதுமக்கள் என்ற இரண்டே பிரிவுகள் உண்டு. அரசனும் குடிமகனும் என்னும் பிரிவைப்போலவே இப்பிரிவுகள் அமைந்திருந்தன.

அலுவல் முதலியன பற்றிய பிரிவுகள்

ஆட்சிமுறை அமைந்த பின்னரே நகரங்களிலும் சிற்றூர்களிலும் இக்காலத்தைப் போலவே, அலுவல் காரணமாக அலுவற் பெயர்கள் வழங்கலாயின. அரசு செய்பவன் **அரசன்;** அரசனுக்கு மெய்காப்பாளராக இருப்பவர் **அகம்படியர்;** மறம்-வீரம், வீரத்தை உடையவர் **மறவர்;** படையை ஆட்சி புரிந்தவன் **படையாட்சி;** இவனே நாயகன் (**நாயகர்**) எனப் பெயர்பெற்ருன். பறை-இச்சொல் மலையாளத்தில் சொல்லுதல் என்ற பொருளைத் தரும்; அரசன் ஆணையை மாநகரத்தார்க்குப் பறையறிந்து சொல்லுபவன் **பறையன்;** வண்ணம்-அழகு? அழுக்கு ஆடைகளை அழுக்குப் போக்கி வண்ணம் செய்பவன் (அழகு செய்பவன்) **வண்ணத்தான் அல்லது வண்ணான்** எனப் பெயர் பெற்ருன். சலவைத்தொழிலாளிக்கு ‘வண்ணத்தான்’ எனற பெயர் வழக்கு இன்னும் மலையாள நாட்டில் உண்டு.

‘தாளாண்மை’ என்பது ‘முயற்சி’ என்னும் பொருளை உடையது. வறிய நிலத்தில் நீர்பாய்ச்சிப் பதப்படுத்திக் கலப்பை கொண்டு உழுது எருப் போட்டு வயலைப் பக்குவப் படுத்தி விதைகளை விதைத்து ......அறுவடை செய்யும்வரை உழவன் மேற்கொள்ளும் முயற்சி அளவிடற்கரியதன்ரே? அவனிடம் தாளாண்மை இல்லையாயின ஓரினத்தின் வாழ்வே கெட்டுவிடுமன்ரே? இத்தகைய முயற்சியுடையவன் ‘தாளாளன்

திராவிடத்தின் ஒளிவிளக்குகள் !...

சி. பி. சிற்றரசு.



தில்லைவில்லாளண். M. A;

எனப் பெயர்பெற்றான். தாளாண்மையால் வந்த பொருளை அவன் பிறர்க்கு உதவும் நிலையில் '**வேளாளன்**' எனப்பட்டான். (வேளாண்மை - உதவி), உயிரைத் துரும்பாக மதித்துப் பல கல் தொலைவு ஆழந்தெரியாத கடலில் கட்டுமரங்களைச் செலுத்தி மீன்பிடித்து வாழ்ந்த மனிதன் '**கடலரசன்**' எனப் பாராட்டப்பட்டான். அவனே கடற்கரையில் வாழ்ந்த காரணத்தால் 'கரையான்-கரையாள் -**கரையாளன்**' என்னும் பெயர்களைப் பெற்றான். பரவை-கடல்; **பரவன்** - கடலன்; கடலருகில் வாழ்பவன், கடலில் வாழ்பவன், கடலைக் கொண்டு வாழ்பவன் 'பரவன்' எனப் பெயர்பெற்றான், மலையில் வாழ்ந்தவன் '**மலையன்**' என்றும், காட்டில் வாழ்ந்தவன் **காடன், காடவன்** என்றும், ஊரில் வாழ்ந்தவன் **ஊரன்** என்றும், பெயர் பெற்றனர். ஊரையாண்டவன் **ஊராளி** எனப்பட்டான். சேனைத் தலைவனை தமிழன் '**நாயன்**' எனவும், 'நாயகன்' எனவும், தெலுங்கன் '**நாயடு**' என்றும், சேரநாட்டான் 'நாயன்' (**நாயர்**) என்றும் பெயர் பெற்றனர். பலவகை ஆடைகளுள் 'தேவாங்கு' என்னும் ஒருவகை ஆடையை நெய்தவர் **தேவாங்கர்** எனப்பட்டனர். செக்காட்டி எண்ணெய் எடுப்பவன் '**செக்கான்**' எனப்பட்டான். கடலில் 'முக்கி' (மூழ்கி)த் தொழில் செய்பவன் '**முக்குவன்**' எனப்பட்டான்; வேட்டையாடுபவன் '**வேட்டுவன்**' எனப்பட்டான்; கஞ்சம்-பித்தளை; கஞ்சத்தால் வேலை செய்பவன் '**கஞ்சான்**' எனப்பட்டான். இராசிகளைக் கணித்துச் சோதிடம் கூறியவன் '**கணியன்**' எனப்பட்டான். வேல் ஏந்தி வெறியாடியவன் '**வேலன்**' எனப் பெயர்பெற்றான்; பண் இசைத்துப் பாடினவன் '**பாணன்**' எனப் பெயர்பெற்றான். செருப்புத் தைத்தவன் '**செருமான்**' எனப்பட்டான. குறிஞ்சி நிலத்தில் வாழ்ந்தவன் '**குறிச்சியான்**' என்று அழைக்கப்பட்டான்.

ஒவ்வொரு தொழிலியற்றும் கூட்டத்தார்க்கும் ஒரு தலைவன் உண்டு; அவன் இடத்திற்கு ஏற்ப **மூப்பன்** என்றும், **மூத்தன்** என்றும், **முதலி** என்றும் பெயர் பெற்றான். வீரர்களின் போர்த் திறத்தைப் பாராட்டி அரசர்கள் வீரர்களுக்கு '**அரையன்**', '**மாவரையன்**' என்னும் பட்டங்களை வழங்கியதும், அப்பட்டங்கள் நாளடைவில் '**ராயன்**' என்றும், '**ராயர்**' என்றும், '**மாராயர்**' என்றும் வழங்கலாயின. 'ஜனபா' என்பது கோணிப்பை செய்வதற்குரிய ஒருவகை செடி-அச் செடி தரும் சணலைக் கொண்டு கோணி செய்பவர் '**ஜனபா**' (ஜனப செட்டிமார்) எனப்பட்டனர். இவ்வாறு அலுவல் பற்றியும், இடம் பற்றியும், சிறப்புப் பற்றியும் வந்த பெயர்கள் எண்ணில. இவற்றை மேலும் அறிய விரும்புவோர் தமிழிலக்கிய அறிவோடு சேர நாட்டுச் சாதிப் பெயர்களையும், அங்கு வழக்கிலுள்ள பிற பெயர்களையும், உணர்ந்து ஆராய்தல் நலமாகும். †

ஏ. வி. பி. ஆசைத்தம்பி

பிற்காலத் தமிழகத்தில்

இங்ஙனம் தொழில் பற்றியும், இடம் பற்றியும், சிறப்புப் பற்றியும், தோன்றிய பெயர்கள், நாளடைவில் எவ்வாறோ பிறவி பற்றியவை ஆகிவிட்டன. சாதிகளை ஒழித்துச் சமுதாயத்தை ஒரு நிலைக்குக் கொண்டுவர முயன்ற பௌத்த சமயமும், சமணசமயமும் நாட்டில் வீழ்ச்சியுற்றன. வடக்கே ஆட்சியிலிருந்த "ஒரு குலத்துக் கொரு நீதி" கூறும் மனுதர்ம சாத்திரம் தென்னாட்டிலும் கால் கொண்டது. மனுநீதி முறைப்படி இந்நாட்டை ஆண்டதாகப் பெருமை பேசிக்கொண்ட மன்னர்கள் தென்னிந்திய வரலாற்றில் இடம் பெற்றுள்ளனர்.

நாயன்மார் காலத்திலும் ஆழ்வார்கள் காலத்திலும் சாதி வெறி தலைதூக்கி யிருந்ததை **நந்தனார்** வரலாறும், யாழ்ப்பாணர் வரலாறும், திருப்பாணாழ்வார் வரலாறும் ஓரளவு தெரிவிக்கின்றன. சமணத்தையும் பௌத்தத்தையும் ஒடுக்க நேர்ந்த போராட்டத்தில் வைதிகர், சைவர், வைணவர், ஆகிய இந்துக்கள் (இந்து என்பது பிற்காலப் பெயர்) தம்முள் இருந்த சாதி வேறுபாடுகளை ஓரளவு மறந்திருந்தனர். மேற்சொல்லப்பட்ட இரண்டு சமயங்களும் ஒடுக்கப்பட்ட பின்பு, மீண்டும் இவ் வேறுபாடுகள் தலைதூக்கின. இச்சாதி வேறுபாடுகள் சோழப் பேரரசிலும் நிலைபெற்றன. சில சாதியினர் குடிமக்களுக்கு உரிய சில உரிமைகளை இழந்திருந்தனர் என்பதைக் கல்வெட்டுகள் உணர்த்துகின்றன.

ஒரே இனத்தில் இழிநிலை

தமிழினம் இவ்வாறு எண்ணிறந்த பிறவி பற்றிய சாதிக

†Vide castes of Tribes of S. India, Tamil Sangam Literature of Malabar gazetteer.

ளாகப் பிரிக்கப்பட்ட காரணத்தால் நாளடைவில் வலிமையிழந்தது; இவ்வலிமையின்மையே தமிழ் மன்னர் ஆட்சி அழியவும் ஒரு காரணமாக இருந்தது. கோவிலுக்குள் இன்ன வகுப்பார் இறைவன் கருவறையில் போகலாம், இன்னவர் இடை மண்டபத்தில் இருக்கலாம், இன்னவர் முன் மண்டபத்தில் நிற்கலாம், இன்னவர் முன் மண்டபத்திற்கும் வெளியே நிற்றல் வேண்டும், இன்னவர் கோவிலுள் வரலாகாது, என்ற வரையறைகள் ஏற்பட்டன. பொதுமக்கள் வரிப்பணங்கொண்டு கட்டப்பட்ட கோயில்களில் பொதுமக்கள் நிலை இவ்வாறாயிற்று. அவரவர் தொழிலின்படி. வாழ்க்கை நடத்த வேண்டும் என்ற மனுதர்ம முறைப்படி, மக்கள் இன்று நுகரும் உரிமைகளை இழந்து வாழ்ந்தனர் என்று கூறுதல் மிகையாகாது. 'கண்டால் தீட்டு' 'தொட்டால் தீட்டு' என்று சொல்லும் அளவிற்கு மனிதன் மனிதனை வெறுத்தான்; நாயினும் கீழாக மதித்தான். உயர் வகுப்பானைக் கண்டவுடன் மற்ற வகுப்பாருள் ஒவ்வொரு சாதியானும் இவ்வளவு தூரத்தில் விலகி இருக்கவேண்டும் என்ற நியதி ஏற்பட்டது. உயர் வகுப்பார் வாழும் இடங்களில் தாழ்ந்த வகுப்பார் வரலாகாது என்றும், அவர்கள் வாழும் தெருக்களில் நடத்தல் கூடாது என்றும் கட்டளைகள் பிறந்தன. இங்ஙனம் பொதுமக்கள் நடமாடும் கோவில் முதல் தெருக்கள் ஈறாக உள்ள எல்லாப் பொது இடங்களிலும் ஒரே இனத்தாருக்குள் எண்ணிறந்த பாகுபாடுகள் ஏற்பட்டன. இவ்வேறுபாடுகள், 'இவரை விட நாம் உயர்ந்தவர்' என்று செருக்குக் கொள்ளப் பயன் பட்டனவே தவிர, இன வாழ்வு அமைதியாக நடத்தப் பயனபடவில்லை. உடம்பின் எல்லா உறுப்புக்களுக்கும் சமமாகச் செல்ல வேண்டும்- இரத்த ஓட்டம் தலைக்கும் கழுத்துக்கும் அதிகமாகச் சென்றும், இடைக்கும் கால்களுக்கும் வேண்டும் அளவு செல்லவில்லையாயின், அம்மனிதனுடைய தலையும் கழுத்தும் பருத்துக் காணப்படும்; இடையும் கால்களும் மிகச் சிறுத்துக் காணப்படும். இத்தகைய மனிதனைப் பிறர் பாராட்டுவரா? தம்முன் ஒருவனாக ஏற்றுக்கொள்வரா?

சமயமாற்றம்

இந்தப் பரிதாப தோற்றமுடைய மனிதனைப்போலவே பொதுவாக இந்திய இனமும்—சிறப்பாகத் தமிழ் இனமும் காட்சியளித்தது, இந்நிலையில் 'பிறவியினால் உயர்வு தாழ்வு இல்லை' என்று கூறிக்கொண்டு இசுலாம், கிறிஸ்துவம், என்னும் சமயங்கள் இந்நாட்டுக்கு வந்தன. மக்கள் சிலர் மதம் மாறினர்.

தாகூர் கூற்று

தமிழ்இனத்தவருள் இலட்சக்கணக்கான மக்கள் இங்ஙனம் மதம்மாறிய பிறகும், இந்து சமயத் தலைவர்கள் தமது சமயக் குறைபாடுகளைஉணர்ந்து திருத்தம் செய்யவில்லை, 19-ம் நூற்றாண்டில் வாழ்ந்த இராமலிங்க அடிகள் இச்சாதிகளைக் கண்டித்துள்ளார்; விவேகானந்த அடிகள் வெறுத்துப் பேசியுள்ளார்; காந்தி அடிகள் கண்ணீர் விட்டுக் கூறினார். தாகூர் வருந்திக் கூறியுள்ளதை இங்குக் காண்க:

"In her caste regulations Hinduism recognised differences and not the mutability, which is the law of life. To avoid collisions among castes she set up boundaries of immovable walls. She thus gave its races peace and order, but not expansion of movement. Therefore her social system lost life and India is worshipping the cage of endless comparments which she had manufactured. It is the same with her trade. Different trades and associations were associated with different castes. In this also Hinduism laid all her emphasis upon the law of heredity, ignoring the Law of mutation and thus, reduced arts into crafts and genius into skill."

இன்றைய நிலை

ஆங்கிலக் கல்வியினாலும், பிறநாடுகளில் இத்தகைய சாதிகள் இல்லையென்ற உணர்வினாலும், மக்கள் ஓரளவு சிந்திப்பதாலும் முன்னிருந்த சாதிக் கொடுமைகள் ஓரளவு மறைந்து வருகின்றன. தீண்டப்படாத மக்கள் இன்று ஓரளவு முன்னேறியுள்ளனர்.

நாம் செய்யவேண்டுவன

தமிழினத்தின் உயிர்நாடிக்கே உலைவைக்கும் இச்சாதி வேறுபாடுகள் பிறநாடுகளில் இல்லாமையால்: இயற்கையில் உண்டானவை அல்ல. எனவே, இவை செயற்கையில் உண்டானவை என்பது தெளிவு, இவ்வேறுபாடுகள் செய்துள்ள தீமைகள் பல. ஆதலின், இவற்றை இனவாழ்விலிருந்து அகற்றுவதே தமிழர் நல்வாழ்விற்கு அடிப்படையாகும். இதை எங்ஙனம் நடைமுறைக்குக் கொணர முடியும். தமிழ்மக்கள் அனைவரும் இக்கேடுகளை நன்குணர்ந்து, சாதி வேறுபாடுகளை விட்டொழித்தல் நல்லது. கல்வியறிவற்ற மக்கள் பெரும்பாலராகவுள்ள தமிழ் இனத்தில் இஃது எளிதில் நடைபெறாது. ஆதலால் பொறுப்புள்ள அரசாங்கம் சட்டத்தின் மூலமாக இவ்வேறுபாடுகளைக் களைதலே பொருத்தமாகும், "ஒன்றே குலம், ஒருவனே தேவன்" என்ற திருமூல வாக்கு இத் தமிழ்நாட்டில் செயல் முறையில் வரும் நாளே, நமது தமிழகம் உருப்படத்தக்கப் பொன்னாளாகும்.

* * *



மயிலாசனம்

தந்தத்தால் செய்த ஓர் ஆசனத்தில், மகிழ்ச்சி நிறைந்த முகத்தோடு அமர்ந்திருந்தான், முராத் பாட்சா! அழகும இளமையும் கொப்பளிக்கும் பருவ மங்கை ஒருத்தி, அவன் பக்கத்தில் நின்றிருந்தாள். அந்தச் சுந்தரியின் கையிலிருந்த தங்கக் கிண்ணத்தை, அவன் விழிகள் மொய்க்க, கன உதடுகள் "மெர்லா!" என்றன.

சங்கு வளையல் அணிந்த அந்த மலர்க்கரம் நீட்டிய தங்கக் கிண்ணத்தை, முராத் பாட்சா புன்னகையோடு வாங்கிக்கொண்டான். அந்தத் தங்கக் கிண்ணத்திலே மது!

மது! அவன் கண் வண்டுகள், அதை ஒருமுறை சுவை பார்த்தன! களிப்பு அவன் உள்ளத்திலே குமிழிவிட்டது!

"மதுவே, இப்பொழுது உன்னைச் சுவை பார்க்கப் போகிறவன் சாதாரண முராத் பாட்சா அல்ல, சர்வ வல்லமையும் கொண்ட பாதுஷா முராத் பாட்சா! மயிலாசனம் எனக்குக் கிடைத்து விட்டது! அந்த ஆனந்தத்தை, ஆயிரம் மடங்கு அதிகமாக்கவே—அருமை மதுவே—உன்னிடம் அடைக்கலம் புகுகிறேன்!"

மதுக் கிண்ணத்தை, உதடுகளுக்கு அருகே எடுத்துச்சென்றான். "வெற்றி! வெற்றி!" என்று அவன் மனதிலே, ஒரு குரல் கூவிக் குதித்தது!

ஆமாம், வெற்றிதான்! மயிலாசனத்தில் உட்காருவோம்—மொகல் சாம்ராஜ்யத்தின் சக்ரவர்த்தியாவோம்—என்று அவன் கனவுகூட கண்டதில்லை. மயிலாசனத்தில் அமர்ந்து அரசு புரிந்தவனும், காதல் மாளிகையான தாஜ் மகாலைக் கட்டியவனுமான ஷாஜகானின் மகன்தான், அவன்! செங்கோல் பிடித்தவனின், செல்வ மகன்தான் அவன்! ஆனால் ஷாஜகான் எப்படி அவனைப் பாதுஷாவாக்க முடியும், மூத்த மகன் தாரா உயிரோடு இருக்கும்போது!

திடீரென்று ஷாஜகான் நோய் வாய்ப்பட்டு, படுத்த படுக்கையாகப் படுத்துவிட்டார் என்ற செய்தி, தாரா, முராத் பாட்சா, ஷா ஷுஜா, ஔரங்கசீப் ஆகிய அவரது நான்கு புத்திரர்களின் மனதிலே, மயிலாசனத்தைப் பற்றிய ஆசையைத் தூண்டிவிட்டது.

"ஷாஜகானுக்குப் பிறகு, பாதுஷாவாவது யார்?"

—: இராதாமணாளன் :—

இந்தக் கேள்விக்கு விடை காண, ஔரங்கசீப்பைத் தவிர, மற்ற மூன்று சகோதரர்களும் வாள் எடுத்தனர். வாளின் கூர்மையைவிட, மூளையின் கூர்மையில் ஔரங்கசீப் அதிக நம்பிக்கை வைத்தவன. ஆகவே நிலைமையை உன்னிப்போடு கவனித்துக் கொண்டு, கொஞ்ச நாட்கள் மௌனமாகவே இருந்தான.

தாரா, முராத் பாட்சா, ஷா ஷுஜா ஆகிய மூவரும் ஒருவரோடு ஒருவர் மோதிக்கொண்டனர். ஔரங்கசீப் தீர யோசித்து அந்தரங்க திட்டத்தோடு, முராத் பாட்சாவின் பக்கம் சேர்ந்துகொண்டான்.

"அண்ணா! என் அருமை அண்ணா! மற்ற சகோதரர்களைவிட, உம்மீதுதான் எனக்கு அன்பும், ஆசையும் அதிகமென்பதை, தாங்கள் அறிவீர்கள்! தங்களுக்குத் தெரிந்ததுதான், இந்தப் பட்டம் பதவிகளில் நான் ஆசை கொள்ளாதவன் என்ற உண்மை! தாங்கள் மயிலாசனத்தில் அமரவேண்டும் அதைக் கண்டு நான் மகிழவேண்டும் என்ற ஆசை நீண்ட நாட்களாகவே எனக்கு உண்டு! அந்த ஆசையை நிறைவேற்றிக் கொள்ளவே, அண்ணா, இப்பொழுது தங்கள் பக்கம் நின்று போரிட வந்திருக்கிறேன்!"

ஔரங்கசீப்பின் இந்தப் பேச்சை, கள்ளங் கபடமற்ற முராத் பாட்சா பூர்ணமாக நம்பிவிட்டான். அந்தத் தைரியத்திலே, போர்க் களத்திலே சிங்கமெனச் சீறிப் பாய்ந்து வாள் சுற்றினான். தாரா, ஷா ஷுஜா தோல்வியடைந்து, ஓடி ஒளிந்துகொண்டனர்.

"ஷாஜகானுக்குப் பிறகு, பாதுஷாவாவது யார்?"

"நான்தான் பாதுஷா! மயி

லாசனம் எனக்குத்தான் சொந்தம்!" என்று முராத் பாட்சா வான்முட்ட குரலெழுப்பிக் கூவிஞன்! அந்த வெற்றியின் மகிழ்ச்சியை அதிகமாக்கிக் கொள்ளவே, எழிலரசி மெர்லா தந்த மதுவை பருக ஆரம்பித்தான்!

"மெர்லா!" என்பான், கிண்ணம் காலியானதும்! அவள் ஊற்றித் தருவாள்! அதையும் தீர்த்து விட்டு, "கண்ணே மெர்லா!" என்பான்! தங்கக் கிண்ணம் நிரம்பும்! மறு நொடியே அது காலியாகிவிடும்! அவள் சிரித்துக் கொண்டே இன்னும் தருவாள்!........... குடித்துக் குடித்து அவன் கண்கள், கோவைக் கனியாகி விட்டன! அந்தப் போதையிலே, அவன் வாயினின்றும் வார்த்தைகள் கொட்ட ஆரம்பித்து விட்டன!

"காஷ்மீரத்துச் சிங்காரியே! கட்டழகியே! வெற்றி விழா கொண்டாடுகிறேன் நான்! மணி முடி தரித்த மன்னர் பலர் மண்டியிட்டு வணங்கும், மண்டலாதிபதியாகப் போகிறேன்! சிம்மாசனம் ஏறிடச் சீறிப் போரிட்ட என் சகோதரர்களை, முறியடித்து விட்டேன்!...... என் கடைசித் தம்பி, ஆசைத் தம்பி, அருமைத் தம்பி—ஔரங்கசீப்! என் சொல் கேட்டு நடக்கச் சித்தமாக இருக்கிறான்! தியாகத்தின் செம்மல் அவன்! சுயநலம் கிடையாது! சூதுவாது தெரியாது அவனுக்கு! கள்ளங் கபடமற்ற வெள்ளையுள்ளம் கொண்டவன்! பட்டம் பதவிகளில் ஆசை கொள்ள மாட்டான்! போக போக்கியங்களிலே இச்சை கிடையாது அவனுக்கு! நான் அரசனாக, அவன் ஆதரவு தந்தான்! நான்கோலோச்ச, அவன் தன் செங் குருதியையும் கொட்டத் தயாராயிருக்கிருன்! ஆம்! இனி இந்த முராத் பாட்சா பரந்த இந்த மொகலாய சாம்ராஜ்யத்தின் பலம் பொருந்திய ஏகச் சக்ராதிபதி!"

இப்படி வெற்றிச் சிரிப்போடு சொல்லிக் கொண்டே, அந்த வேல் விழியாளிடம் தங்கக் கோப்பையை நீட்டினன்.

"போதும் இன்னும் வேண்டாம்!" என்ற பாவனையில், அவள் கொஞ்சுதலாகக் கையை ஆட்டினள். "இன்னும் கொஞ்சம் கொடு, மெர்லா!" என்று பார்வையால், அவன் கெஞ்சினன். சரி யென்று அவள் கொஞ்சம் மது ஊற்றித் தந்தாள். அதைப் பருகிக் கொண்டே, பக்கத்தில் நின்றிருந்த அந்தப் பச்சைத் துளிர் மேனியாளை உற்றுப்பார்த்தான்!

"மெர்லா! மெர்லா! கண்ணே மெர்லா!"

அவன் குரலிலே தொனித்த போதையைக் கண்டு, அவள் மிரண்டாள். அச்சத்தோடே "என்ன?" என்ருள்!

"மெர்லா! மெர்லா!"

"என்ன பாதுஷா?"

"ஏன் பயப்படுகிருய், நான் சுய நினைவோடுதான் இருக்கிறேன், மெர்லா!"

"இல்லை என்று நான்சொல்லவில்லையே, பாதுஷா!"

"என்றுமே கேட்காத ஒன்றை, இன்று உன்னிடம் கேட்கப போகிறேன், மெர்லா!" என்று சொல்லிக் கொண்டே தள்ளாடி எழுந்திருக்க முயன்றவனை, அவள் தடுத்து உட்கார வைத்து, "நான் தங்கள் அடிமைப் பெண்! என்ன வேண்டும் சொல்லுங்கள்!" என்று உதறும் உள்ளத்தோடு கேட்டாள்.

"பாதுஷா நான், பரவசமடைய பசும் பொன்மேனியாளே—நீ நடனமாடு! மயிலாசனம் ஏறப் போகும் நான் மகிழ்ந்திருக்க, என வண்ணமயிலே—சக்கரை மொழியாளே—நீ சதிராடு! சிருங்காரச்சித்திரமே, உன் சிற்றிடை துவள, வேல்விழிகள் சுழல, அங்கங்கள் அசைய ஆடு! விரைவாக ஆடு!...... களிப்புக்கடலில் குதித்து விளையாட, நான் துடிதுடிக்கிறேன்! பருவத்தின்எழிலாளே, பதுமை போல் நின்று பதைபதைக்கச்

திராவிடத்தின் ஒளி விளக்குகள்!



நாவலர் நெடுஞ்செழியன், M.A.

என். வி. நடராசன்

கே. ஏ. மதியழகன் B. A;



அறிஞர் அப்பாதுரை M.A; L.T.

செய்யாதே! உயிருள்ள தங்கச் சிலையே, உன் தளிர்க்கரம் நீட்டி, நீ ஆடுவதைக் காணத் தவிக்கிறேன்! தாமதிககாதே! தாகத்தை அதிகமாக்காதே! அழகே! இளமையே! எங்கே ஆடு பார்க்கலாம்!" என்று சொக்கும் கண்களோடு சொல்லிக் கொண்டே, அவள் அருகே எழுந்து வந்து விட்டான்.

"நீங்கள் உட்காருங்கள்--நான் ஆடுகிறேன்!"

தந்த ஆசனத்தில் அவன் உட்கார்ந்தான், ஆடலரசியின் நடனத்தைக் காண! சதங்கை ஒலிக்க, அவள் ஆடத் தொடங்கிஞள்!

கண்களை மூடிக்கொண்டு, அவன் அதை ரசித்தான்! அவளுக்கோ துக்கம் ஒருபக்கம் சிரிப்பு ஒருபக்கம்! ஆனுலும் அவள் ஆடிஞள்! சதங்கை ஒலி நின்றுவிட்டதும், அவன் கண்களைத் திறந்தான்!

"ஆகா! மான் போலத்துள்ளி ஆடும் உன் நடனம், என் மதியை மயக்குகிறதே! மெர்லா—என் கண்ணின் கருவிழியாளே—வா! வா! என் அருகே வா!"

பதைபதைக்கும் கையோடும், துடிதுடிக்கும் உதட்டோடும் அவன் நெருங்குவதைக் கண்டு "வேண்டாம் பாதுஷா!" என்று நடுநடுங்கும் குரலில் சொல்லிக் கொண்டே, தூரமாக விலகி நின்ருள்!

"குயில் போலக் கூவி, என் மையலை அதிகமாக்கிவிட்டாயே! நந்தவனம் விட்டு, அரண்மனை வந்து விட்ட அன்னப் பறவையே...அருகில் வா! வெண்ணிலவே, நனமலரே, என் வேதனையை அதிக மாக்காதே! வா! வா! கூர்வாள் அல்லவோ உன் கண்கள்! அந்தவாளினுல், என் துயரை அறுக்க மாட்டாயா? அதோ பார், மெர்லா—ஆகாயக் கடலிலே ஒருபடகு! அந்தப் படகிலே ஏறிச் சென்று, விண்ணின் விளிம்பிலே விளையாடி மகிழலாம்—வா, மெர்லா! பயப்படாதே! பக்குவம் தெரியாதவன் அல்ல நான்! என் வஞ்சிக் கிளியே, வஞ்சனை செய்யாதே! வா! வா!...... நான் நெருங்க, நீ ஏன் ஓடுகிருய்? ஓடுகிருயா? இல்லை இல்லை! மீண்டும் ஒரு முறை நடனமாடி விட்டுத்தான் வருவேன் என்கிருயா? சரி சரி! அழகு ராணியே! அற்புத ஓவியமே! உன் ஆட்டம் அபாரம்! என் உள்ளத்தையே ஆட்டிப் படைக்கிறதே! நீ ஆடினுல், இந்த உலகமே என்கண்ணெதிரில் ஆடுகிறதே! நான் எங்கிருக்கிறேன்? மெர்லா! மெர்லா! பேச மாட்டாயா? நீ ஆடியதுபோதும், கண்ணே! இப்பொழுது நான் எங்கிருக்கிறேன், சொல்! ஓகோ! மயிலாசனத்தில் அமர்ந்திருக்கிறேனு! ஆமாம், பாதுஷாவாகி விட்டேன அல்லவா? மறந்தே போய்விட்டேன், பாதுஷா..."

குடிமயக்கத்தில்முராத்பாட்சா ஏதேதோ பிதற்றிவிட்டு, மதுக் கிண்ணம் கையிலிருந்து நழுவி விழ, ஆசனத்தில் 'தொப்' பென்று சாய்ந்தான். "அப்பா!" என்று பெருமூச்சு விட்ட மெர்லாவின் காதில், யாரோ வரும் காலடிச்சப்தம் கேட்கவே அவள் பக்கத்து அறைக்கு ஓடி விட்டாள்!

ஔரங்கசீப், அகீம் என்ற வாலிபன், மதகுரு ஆகியோர் சில சேவகர்களோடு வேகமாக, அந்த அறையினுள் நுழைந்தனர்.

"ஆ! குடி! குடி! மிதமிஞ்சிய குடி! அக்கிரமம்!" என்று அகீம் கோபத்தோடு சொல்லியதைக் கேட்டதும், ஔரங்கசீப்பும் மதகுருவும, "ஆ!" என்று ஏக காலத்தில் அலறினர்!

அகீமை ஔரங்கசீப் தனியாக அழைத்து, "அகீம்! ஔரங்கசீப் பாதுஷாவாவது, இப்பொழுது உன் கையில்தான் இருககிறது!" என்று காதோடு காதுஇரகசியமாகச் சொன்ஞன்.

"எல்லாம் எனக்குத் தெரியும், பயம் வேண்டாம் தங்களுக்கு!" என்ற கருத்தை விளக்கும் புன்சிரிப்பைக் காட்டிவிட்டு, "அக்கிரமம்! அநீதி! மகமதியன் மது

குடிப்பதா? மதகுருவே, அடுக்குமா இது? இஸ்லாத்தின் இணையில்லா ஜோதியாக விளங்க வேண்டிய இவர், இந்த இழி செயலைச் செய்யலாமா? அரசனாகப் போகிறவரிடமா, இந்த அலங்கோலம்? ஆகாது! கூடாது!" என்று அகீம உரத்த குரலில் கத்தினான்.

"அகீம்! என்ன கூடாது!" என்று கோபங் கொண்டவனைப் போல ஔரங்கசீப் கேட்டான்.

"உங்கள் அண்ணா முராத் பாட்சா, பாதுஷாவாகக் கூடாது" என்று உறுதியான குரலிலே அகீம் கூறினான்.

"என்ன, நீ யார் அதைச் சொல்ல?" என்று பல்லைக் கடித்துக்கொண்டே கேட்டான், ஔரங்கசீப்!

"நானா? இந்நாட்டுப் பிரஜை நான்!"

"அகீம் என்ன உளறுகிறாய்?"

"உளறவில்லை, உண்மையைச் சொல்லுகிறேன்! மகமதியன் தான் மயிலாசனம் ஏறவேண்டும்!"

"என் அண்ணாமட்டும் மகமதியன அல்லாமல்......"

"குடிப்பவன் மகமதியன் என்று எந்தக் குரானில கூறியிருக்கிறது?"

"என்ன?" என்று கேட்டுக் கொண்டே, ஔரங்கசீப் மதகுருவைப் பார்த்தான.

அவர்கள் தன்னை உடன் அழைத்துவந்த காரணத்தையும் அங்கே நடைபெறும் பேச்சின் சூட்சுமத்தையும், மதகுரு ஒரு நொடியில் புரிந்துகொண்டார்! ஆகவே நிலைமைக்கு ஏற்றாற்போல நடந்துகொள்ள, அவரும் தீர்மானித்துவிட்டார்!

"ஔரங்கசீப! திருக்குரானை முற்று முணர்ந்த உனக்குக் கூடவா, இந்த மதிமயக்கம்? அகீம் சொல்வது, சரிதானே?" என்று மதகுரு சொல்லியதைக் கேட்டு, உள்ளூரப் பூரித்துப் போன ஔரங்கசீப், "அப்படியானால்......?" என்று தயக்கத்தோடு கேட்டான்.

"யார் மன்னனாவது என்று கேட்கிறாயா......?" என்ற மதகுருவின் பேச்சை இடைமறுத்து, "பாதுஷா ஷாஜகான் அவர்களின் திருமகனான ஔரங்கசீப்பைத் தவிர, வேறு யார் இருக்கிறார்கள்?" என்று அகீம் சொல்ல, "என்ன எல்லோருமாகச் சேர்ந்து என்னை......" என்று ஔரங்கசீப் பேச்சை முடிக்காமலேயே, மதகுருவின் கண்களைப் பார்த்தான.

"நாங்கள் எல்லோருமாகச் சேர்ந்து, உன்னைப் பாதுஷாவாக்கி விட்டோம்! மறுக்க வேண்டாம், ஔரங்கசீப்! முராத் பாட்சா மூடச் செயல் புரிந்து விட்டான்! அண்ணன் என்று அவனுக்காக மன மிரங்காதே! அவன் செய்த குற்றத்திற்குத் தேசப்பிரஷ்டம் செய்ய வேண்டும்! அதற்குமேல் உன் இஷ்டம்! நீ உத்தமன்! ஒழுக்க சீலன்! நீ அரசனாவதில் எனக்கு தனிப்பட்டதோர் மகிழ்ச்சி உண்டு! மொகலாயசாம்ராஜ்யத்தின் பரப்பினைப் பெருக்க, யார் வேண்டுமானாலும் அரசு கட்டிலில் அமரலாம்! ஆனால் அகீம் கூறியபடி, இஸ்லாத்தின் இணையில்லா ஜோதியாக விளங்கக் கூடிய தகுதி, உனக்குத்தான் உண்டு!" என்று மதகுரு கூறியதை, அங்கிருந்த சேவகர்களும் அகீமுமாக சேர்ந்து "உண்மை! உண்மை!" என்று சொல்லி ஆமோதித்தனர்.

"தங்கள் ஆசீர்வாதம் தேவை!" என்று ஔரங்கசீப், மதகுருவின் முன்பு மண்டியிட்டான்.

"எழுந்திரு! வாழ்க உன் அரசு! வளர்க இஸ்லாம்!" என்று கூறிவிட்டு, மதகுரு அவ்வறையை விட்டு வெளியே சென்றார்.

"பாதுஷா, உத்தரவு கொடுத்தால் இவரைச் சிறையில் அடைக்கச் சொல்கிறேன்!"

"சரி, அகீம்! உன் விருப்பம் போல், சிறைக்கு அழைத்துச் செல்ல உத்தரவிடுகிறேன்!"

"விலங்கிட்டு வைத்தால் தான், நலமென்று எண்ணுகிறேன்!"

"சரி, அப்படியே செய்யுங்கள்!" என்று ஔரங்கசீப் தன் சேவகர்களுக்குக் கட்டளையிட்டு விட்டு, வெளியில் சென்றான்.

"பாதுஷா! பாதுஷா!" என்று கேலியாகச் சேவகர்கள், முராத் பாட்சாவைத் தட்டி யெழுப்பினர்.

"யார்? என் மெர்லாவா?"

"ஆமாம்!"

"எங்கே அழைக்கிறாய் மெர்லா? கட்டிலறைக்கா......"

"ஆமாம்!" என்று ஒரு சேவகன், பெண் குரலில் கூறியதும், முராத்பாட்சா தள்ளாடிக் கொண்டே எழுந்தான். அவன் கைகளிலே விலங்கு மாட்டி சேவகர்கள் இழுத்துச் சென்றனர், சிறைக்கு!

இவற்றை எல்லாம், பக்கத்து அறையிலிருந்தபடியே கவனித்துக்கொண்டிருந்த மெர்லாவின் கண்கள் கலங்கின!

"முராத் பாட்சா, தமது சகோதரர்களோடு இரத்தக் களத்தில் போரிட்டுப் பெற்ற மயிலாசனத்தை—இந்த ஔரங்கசீப் சுலபமாக, குரானைக் காட்டிப் பறித்துக் கொண்டான்!" என்று காய்ந்துபோன அவள் உதடுகள் முணுமுணுத்தன!

◉



'தென்றல்'! அப்பெயரைச் சொன்ன உடனேயே ஓர் இன்பம். ஒவ்வொருவர் உள்ளமும் துள்ளிக் குதிக்கும், உடல் சிலிர்க்கும், மகிழ்ச்சி பெருக்கெடுக்கும் தமிழரின் வாழ்விலே, எந்நாளும் இரண்டறக் கலந்து நிற்பதே தென்றல். தென்றலை விரும்பாதாரோ, உணராதாரோ எவருமிலர் தென்னாட்டில்!

எனவே, தென்றல் தமிழ் இலக்கியங்களிலும் தவழ்வதைக் காண்கிறோம். காதலர் களியாட்டத்தின் இடையே தென்றல் நுழைகின்றது. காதலர்களிடையே தூதுவனாகின்றது. "காமனுடைய தேர்" எனவும் கற்பிக்கப்படுகிறது.

பச்சைக்கிளிகள் ஆகிய புரவிகள் பூட்டிய தென்றல் தேரிலே, கரும்பு வில்லைக் கையிலே கொண்டு பல் வேறு மணமலர்களாலும், பஞ்ச பாணங்களையும் தொடுத்தபடி, மன்மதன் வலம் வருவதும், மாலை வேளையிலும், தண்ணிலவிலும், இருட்காலத்திலும் சிக்கிய சேயிழையார் அந்தக் காமக் கணைகளால் அடிபட்டுத் துன்புற்றுத் துணை நாடித் தவிப்பதும், பழம்பாடல்களிலே கண்டறிந்த செய்தியேயாகும்.

தென்றல், பிரிந்து நிற்கும் காதலர்க்குப் பெரு நெருப்பாகவும், அவர்களைக் கொடுமை யென்னும் படுபாதாளத்தில் கொண்டு தள்ளும் சூருவளியுமாகவே புலவர்களின் கற்பனையில் பொருந்தி நிற்பது மரபு. கோடையிலே இளைப்பாறிக் கொள்ள உதவும்படி, மேடையிலே வீசுகின்ற மெல்லிய பூங்காற்றுகவும், சோலையிலே பூத்துச் சிரித்த முல்லையின் மணங்கொண்டு மாலையிலே மனம் மகிழ்விக்கும் மென்காற்றுகவும், பாடியுள்ளவர்களும் பலர். காதலிலே களித்துக் கணவனோடு கூடிக்குலவி இன்புற்ற கன்னியர் கருவுற்ற நிலையில், திங்கள் பல நகர்ந்து செல்ல, அதனோடும் வளருகின்ற வயிற்றோடும் உள்ளத்திலே இன்பம் சுரக்க, அன்னமென நடந்துசெல்லும் அழகையும் 'தென்றலென, அசைந்து வருவதாகப் பாடியுள்ளவர் பலர். தென்றல், கவிஞரின் கற்பனை வளத்தைக் காட்டத் துணையாகி, உவமையாகி இன்பம் நல்கிவந்ததையே பெரும்பாலும் காணக்கூடும் பழைய இலக்கியங்களிலே. ஆனால், இந்நாள், தென்றல் அத்துடன் நிற்கவில்லை, அதுவே பாடப்படும் பொருளாகி விட்டது, ' இலக்கியத் தலைவி 'யாகி விட்டது,! கற்பனைக் காதலி' ஆகி விட்டது! யாரால்? அதுவும் ஒரு கவிஞரால்தான்! அக்கவிஞரும் தென்றல் கவிஞரல்ல! குளிர்மொழிப் பாவாணரல்ல! அவரோ, புரட்சிக் கவிஞர்! கனல் கக்கும் எரிமலையென உணர்ச்சிப் பெருக்கைப் புலப்படுத்துபவர்! அவரிடத்திலே தான் தென்றல்— புதுவாழ்வு பெற்று உயர்ந்துள்ளது! தென்றலின் அருமையும் பெருமையும், மென்மையும் தண்மையும், "புதுமைப்புயலுக்குத்" தான் புலப்படும் போலும்!

'சிரித்த முல்லை' என்னும் கவிதையிலேதான், முதலில் தென்றல், வருவதை அறிகிறோம்!

"மாலைப் போதில் சோலையின் பக்கம் சென்றேன். குளிர்ந்த தென்றல் வந்தது. வந்த தென்றலில் வாசம் கமழ்ந்தது"

குளிர்ந்த தென்றல்—மெதுவாக வந்து மணம் கமழ்ந்தது! அது— கவிஞரின் கவிதையில் காணப்படும் எளிமைக்கு எடுத்துக் காட்டு.

ஆனால், மற்றொரு கவிதையில், தென்றல் தோன்றுமிடமும் தோயுமிடமும், தவழுமிடமும் தங்குமிடமும் விளக்கி, அதன் செயல், விளையாட்டு, பயன் அனைத்தும், கேட்டுப் பூரிக்கும் விதத்தில் விளக்கப்படுகிறது அவரால். இதோ, அது:

பொதிகை மலைவிட் டெழுந்து சந்தனத்தின்
புதுமணத்தில் தோய்ந்து பூந்தாதுவாரி
நதி தழுவி அருவியின் தோளுந்தித், தெற்கு
நன்முத்துக் கடல்அலையின் உச்சிதோறும்
சதிராடி, மூங்கிலிலே பண் எழுப்பித்
தாழையெலாம் மடற்கத்தி சுழற்ற வைத்து,
முதிர் தெங்கின் இளம்பாளை முகம் சுவைத்து,
முத்துதிர்த்துத் தமிழகத்தின் வீதி நோக்கி,
அந்தியிலே இளமுல்லை சிலிர்க்கச், செந்நெல்
அடிதொடரும் மடைப்புனலும் சிலிர்க்க, என்றன்
சிந்தை உடல் அணு ஒவ்வொன்றும் சிலிர்க்கச்
செல்வம் ஒன்று வரும்; அதன் பேர் தென்றற்காற்று!

பொதிகையினின்றும் எழுந்தது, சந்தனத்தில் தோய்ந்தது, மகரந்தத்தை வாரிக்கொண்டது, அருவியிலும் நதியிலும் படிந்தது, கடல் அலையில் சதிராடிற்று, மூங்கிலிலே நுழைந்து 'இசை' வளர்த்தது, தாழைமடலை கத்தியென சுழற்றியது, தென்னம்பாளையின் சாற்றைச் சுவைத்ததுடன் அதன் மணிகளைச் சிதறியது, இளமுல்லையும், செந்நெற்பயிரும், வாய்க்கால் நீரும் சிலிர்க்க, தமிழகத்தின் தெருக்களை நோக்கி, மாலை வேளைகளிலே

க. அன்பழகன், M.A.

வரும்—அதுதான் தென்றற்காற்று—என்று புலப்படுத்தியுள்ளார் கவிஞர். அதுமட்டுமா? அத்தென்றல் உடலில் தோயும் காலத்தில், மெல்லிய மயிற் பீலியின் தொகுதி உடலிற் பட்டது போலும், பட்டுக் குஞ்சத்தால் உடலைத் தடவியது போலும், நெஞ்சம் புளகாங்கிதம் அடைவதால், அத் தென்றல் சிந்தை, உடல், அணு ஒவ்வொன்றும், சிலிர்க்க வரும் என்றும் கூறினர். அதுவே—தமிழர் பெற்ற தனிப்பெரும் இயற்கை இன்பமாக அமைதலின் "செல்வம்" என்றும் போற்றினர்.

ஆம். அத் தென்றல் ஆற்றலற்றது என்று எண்ணிவிடப் போகின்றனர், என்ற ஐயம் அவருக்கு. எனவேதான் மற்றோரிடத்தில்,

''திண் குன்றைத் தூள்தூளாகச்
செய்யினும் செய்வாய்; நீ ஓர்
துன் துளி அனிச்சப் பூவும்நோகாது
நுழைந்தும் செல்வாய்!''

என்று, அதன் வன்மை மென்மை இயல்பையும் வியந்துள்ளார். 'தென்றல்' தென்னாட்டிற்கே உரியது, பிறநாட்டார் பெறாத பேறு என்பதை,

'தென்னாடு பெற்ற செல்வத் தென்றலே, உன் இன்பத்தைத் தென்னாட்டுக் கல்லால் வேறே, எந் நாட்டில் தெரியச் செய்தாய்'' என்று பெருமிதத்தோடு கேட்கின்றார்.

தென்றல், தான் இசை எழுப்புவதே அன்றி இசை கேட்டும் இன்புறுகிறது என்பார்,

"வண்டின் கிளர்நறும் பண்ணில் நல்ல கேள்வியை அடைந்தாய்'' என்று பாராட்டுகிறார்.

தென்றல் கண்ணுக்குப் புலனாகாவிடினும்அதன் ஒவ்வோர் அசைவும் கருத்துக்குப் புலனாதலையும், அதுவே அதன் உண்மைக்கு உயிராதலையும்உணர்த்துவார்,''உன்றன் ஒவ்வோர் சின்ன நல் அசைவும் என்னைச் சிலிர்த்திடச் செய்யும்' என்று உவந்தார்.

தென்றல், ஒவ்வொரு செயலிலும் கலந்து நிற்பதைக் கண்ணுற்ற கவிஞர், அதனை ''உலைத்தியை ஊதுகின்றாய், உலைத்தீயில் உருகும் கொல்லன், மலைத்தோளில் உனது தோளும், மார்பினில் உன் பூ மார்பும் சலிக்காது தழுவத் தந்து, குளிர்ச்சியைத் தருவாய்'' என்று வாழ்த்துகின்றார்.

நகைச் சுவையும் மறக்கவில்லை கவிஞர். தென்றலின் மென்மைத் தன்மையை மெல்லியலாரும் விரும்பு தலையும், அதைவிலக்குதல் இயலாமையையும் குறிக்க, ''பெண்கள் விலக்காத உடையை நீபோய் விலக்கினும் விலக்கார் உன்னை-என்று நகை செய்தார்.

கவிஞரின் 'தென்றல்' அத்துடன் நிற்கவில்லை. குழந்தையின் ஒளிவீசும் நெற்றிமீது கிடக்கும் கருங்குழலை அசைக்கின்றது, கண்ணில் குளிர்கின்றது,உடலிலே வழிந்தோடுகின்றது, விளையாடும் கிலுகிலுப்பையையும் ஆட்டுகின்றது, நன்மணமும் தண் குணமும்கொண்டு கோடையின் வெப்பத்திற்கு மருந்தாகின்றது. இளங்கிளியின் பாட்டாகின்றது, வானில் வட்டமிடும் பருந்தாகின்றது.

சிறுபிள்ளையாடும் பந்தோடு உருண்டோடி,மலர் இதழ்மேல் கூத்தாடி, களிச்சிறுதும்பி பெற்ற கண்ணாடிச் சிறகில் மின்னி இளிச் சிறகாடைபற்றிக் கிழித்து விளையாடுகிறது அவ்விளந் தென்றல்!

கவிஞர் கருத்தூறி நின்று, அச் சாற்றை எழுத்துருவில் ஏட்டில் வடித்துத்தரும்போதெல்லாம் வந்து வந்து அவரது களைப்பாற்றி இன்பமளிக்கும் ''தென்றல்'', கவிதையைக் கொள்ள வாயூறச் சிலர் நிற்கும் போதே அத்தாள் களைக் கிளப்பிடக் கண்டார், ஏனென்றும் கேட்டார், ''புழுதியை துடைத்தேன்'' என்ற பதிலையும் பெற்றார். கோபம் நிற்குமோ? மீண்டும் தென்றல் வந்தது. ஊடலும் தீர்ந்தது. கூடலும் நிகழ்ந்தது. ஒரு கவிஞனின் 'கற்பனை' இதைவிட இனிதாக ஊடுதல்தான்ஒல்லுமோ? அன்றிப் புணர்ந்தின்பம் பெருக்கல்தான் இயலுமே

கவிஞரின் உள்ளம் தென்றலையே காதலித்தது. கூடிற்று—என்றால்

நீங்கள் எதிர்பார்த்திருந்த நூல்கள் வெளிவந்துவிட்டன !

1. "தமிழர் திருமணத்தில் தாலி" ரூ. 1—8—0

-டாக்டர் இராசமாணிக்கனார்—

"சங்க காலத்தில் தமிழர் திருமணங்களில் தாலி கட்டும் வழக்கம் இல்லை என்பதனை இலக்கியங்களிலிருந்து தக்க சான்றுகளுடன் விளக்கும் ஓர் அரிய ஆராய்ச்சி நூல்."

2. "திருவள்ளுவர் காலம் யாது" ரூ. 1—0—0

"வள்ளுவர் வாழ்ந்த காலம் பற்றி அறிஞர்களின் கருத்துவேறுபாடுகளை எடுத்துக்காட்டி வள்ளுவர்காலம் சங்ககாலத்திற்கு முற்பட்டது என்பதனையும்திருக்குறள் வடமொழி நூல்களைப் பின்பற்றி எழுதப்படவில்லை யென்பதனையும் இந்நூல் நன்கு விளக்குகிறது.

3. "சிலம்புச் செல்வம்" ரூ. 4—0—0

சுத்தானந்த பாரதியார்

சிலப்பதிகாரக் கதையையும் இலக்கிய நயத்தையும் சுவையுடன் விளக்கிக் காட்டும் உயர்ந்த நூல்.

செல்வி பதிப்பகம்

காரைக்குடி (S.I.)

முன்பணம் அனுப்புவோருக்கு தபாற் கட்டணமின்றி அனுப்பப்பெறும்.

ஐயுறுவாரும் உளர். அந்த ஐயந் தான் ஏனோ? இதோ கவிஞரேகூறு கிறார்; கூறுகிறாரா! அல்ல, அல்ல, தென்றலைத் தழுவிக் குதூகலிக் கிறார். அந்தக் காட்சியைக் காணுங் கள், கண்டு கவிதை அமுதை உண்டு பின் பதில் கூறுங்கள். இதோ தென்றலைத் தழுவும் கவிஞர் !

'' வெந்தயத்துக் கலயத்தைப் பூனைதள்ளி
விட்டதென என் மனைவி அறைக்குப்
போனாள்
அந்தியிலே கொல்லையில் நான் தனித்
திருந்தேன்;
அங்கிருந்த விசுப்பலகை தனிற்படுத்தேன்.

★

பக்கத்தில் அமர்ந்திருந்து சிரித்துப் பேசி
பழந்தமிழின் சாற்றாலே காதல் சேர்த்து
மிக்க அவசரமாகச் சென்ற பெண்ணாள்
விரைவாக என்னிடத்தில் வருதல் வேண்டும்
அக்காலம் அறைக்குவந்த பூனையின் மேல்
அடங்காத கோபமுற்றேன் பிறநேரத்தில்
பக்காப்பூனை நூறு, பொருளையெல்லாம்
பாழாக்கினாலும் அதில் கவலை கொள்ளேன்.

★

வாழ்க்கைமலர் சொரிகின்ற இன்பத்தேனை
மனிதனது தனிமையினால் அடைதல் இல்லை
சூழ்ந்த துணை பிரிவதெனில் இரண்டு
நெஞ்சும்
தொல்லையுறு வகை இருத்தல் வேண்டும்
அங்கே
வீழ்ந்துகிடந்திட்ட எனைத் 'தனிமை',
'அந்தி'
இவையிரண்டும் நச்சுலகில் தூக்கித்தள்ளப்
பாழான அவருடலின் குளிர்ச்சி, மென்மை,
மணம்இவற்றைப்பருகுவதே
நினைவாயிற்று.

★

தெரியாமல் பின்புறமாய் வந்த பெண்ணாள்
சிலிர்த்திடவே எனை நெருங்கிப் படுத்தாள்
போலும்,
சரியாத குழல் சரியலானாள் போலும்,
தடவினாள் போலும், எனைத்தன் கரத்தால்
புரியாத இன்பத்தைப் புரிந்தாள் போலும்
புரியட்டும் என இருந்தேன்! எதிரில் ஓர்பெண்
பிரிவுக்கு வருந்தினேனென்றாள் ! ஓகோ,
பேசுமிவள் மனைவி ; மற்றொருத்தி
தென்றல் !

ஆம், கவிஞரின் உள்ளக் காதலி யாகத் 'தென்றல் திகழ்ந்ததைக் கண்டோம்! கவிதை உணர்வும், தென்றலும் காதலர்களாகி விட் டனர் ! கவிஞர் தக்க இடத்தில் அத் தென்றலை வாழ்த்தவும் தவற வில்லை. இத்திருநாளில் நாமும் அவ்வாறே வாழ்த்துவோமாக!

'' திங்கள் வாழ்க செங்கதிர்
வாழ்க
தென்றல் வாழ்க செந்தமிழ்
வாழ்க
இங்குத் திராவிடர் வாழ்க மிகவே
இன்பம் சூழ்ந்தே எங்கள் நாடு ''
வாழ்க, வாழ்கவே!

இன்பமான வாழ்வு ! **நல்ல குடும்பம் !**

அதற்கு வழிகாட்டும் சிறந்த நூல்கள்! குடும்பக்கலை அனுபவம் மிக்க ''சீதாலக்ஷ்மி'' எழுதியவை.

மணமக்களுக்குச் சில யோசனைகள்

வாழ்க்கையின் புதிய அத்தியாயத்தைத் தொடங்கும் இளம் தம்பதிகளுக்கு

பரிசுப் பதிப்பு ரூ. 2 0
மலிவுப் பதிப்பு ரூ. 1 8

பெண்களுக்கு

பெண்களுக்குரிய தனிப்பட்ட பிரச்னைகளைத் தீர்ப்பதற்கு வேண்டிய சிறந்த ஆலோசனைகள்

ரூ. 2 0

குழந்தை வளர்ப்பு

குழந்தை பெற்றால் மட்டும் போதாது! நன்றாக வளர்க்கவும் தெரியவேண்டாமா? அதற்கு உதவும் பயனுள்ள நூல்.

ரூ. 2 0

கர்ப்பமும் பிரசவமும்

தாய்மையை ஏற்றதுமுதல் குழந்தை பெறுவதுவரை அறிந்துகொள்ள வேண்டிய பல விஷயங்கள்

ரூ. 3 0

மணமகனுக்குச் சில யோசனைகள்

தாம்பத்ய வாழ்க்கையிலே மணமகனைப் புதுவாழ்வு தொடங்கும் இளைஞர்களுக்குரிய தனிப்பட்ட பிரச்னைகளை விளக்குவது

ரூ. 1 12

மணமகளுக்குச் சில யோசனைகள்

மணமகளாக இல்வாழ்வில் அடி எடுத்து வைக்கும் பெண்களின் தனிப்பிரச்னைகளை விளக்கும்.

அச்சில்.

இவையன்றியும் தமிழ்ச்சோலையிலே மலர்ந்த மலர்கின்ற அறிவு மலர்கள் அனைத்தும் எங்களிடம் கிடைக்கும்.

எழுதுக :

தமிழ்ப் புத்தகப் பண்ணை

புத்தகம் வெளியிடுவோர், விற்பனையாளர்கள்

14, உஸ்மான் ரோடு, தியாகராயநகரம்,

சென்னை-17.

இதோ தலைசிறந்த படங்கள்!

திருச்சி தஞ்சாவூர் ஜில்லாக்களுக்கு
நாங்கள் விநியோகிக்கிறோம்.

கஸ்தூரி பிலிம்ஸ்
மேனகா

பத்மினி பிக்சர்ஸ்
முதல் தேதி

T. R. R. புரொடக்ஷன்
கோமதியின் காதலன்

மதராஸ் பிக்சர்ஸ்
திருடர்கள் ஜாக்கிரதை

மதராஸ் பிக்சர்ஸ்
செந்தாமரை

மதராஸ் பிக்சர்ஸ்
எங்க குடும்பம் பெரிசு

பிரின்சிபள் பிக்சர்ஸ்
வெறும் பேச்சல்ல

மற்றும்

சொர்க்கவாசல், கல்யாணம் பண்ணியும்
பிரம்மச்சாரி, மாங்கல்யம், நால்வர்,
முயற்சி, பொன்வயல், ஆசைமகன்,
பணம்.

ராணி பிக்சர்ஸ்.
திருச்சி.

Anand

வாழ்க்கையேட்டில் ஒரு காட்சி

"தென்றல்" பொங்கல் மலருக்கு ஒரு கட்டுரை அனுப்பிவையுங்கள், என்று அவ்விதழின் ஆசிரியர் எழுதிய கடிதம் மேசையின் மேல் பிரித்தபடி இருந்தது. என்ன எழுதுவது என்று எண்ணிய நான், என் வாழ்க்கை ஏட்டைத் திரும்பிப் பார்த்தேன். ஏறத்தாழ இருபது ஆண்டுகளுக்கு முன்னால், ஒரு நாளின் சில நிகழ்ச்சிகள் என்கண்கள் முன் தோன்றின. அன்றைய அனுபவம் இன்னும்என் மனத்தை விட்டு அகலவில்லை.

அந்தநாள் தமிழர்களுடைய திருநாளாகிய பொங்கல் நாள்தான். அன்று மாலை, சிறிது நேரம் வெளியிலே சென்று வரலாமெனப் புறப்பட்டேன். எங்கள் ஊர் சிறிய கிராமமாயினும், மிகவும் அழகானது. அங்கிருக்கும் மக்கள் நல்ல பண்பாடுடையவர்கள், ஆனால் எழுதப் படிக்கக் கற்றுக்கொள்ள அவர்களில் பெரும்பாலோருக்கு வாய்ப்புக் கிடைக்கவில்லை. கற்றுக்கொண்ட சிலரும் சிறந்த அறிவு பெறவில்லை. அன்று அரசியல் கொந்தளிப்பான காலமாகையால், கிராம மக்களில் சிலர் உரிமைப் போராட்டம் பற்றிய வரலாற்றைக் கேட்க என்னிடம் வந்தனர். அங்கு வந்தவர்களில் ஒரு கிழவர், என்னைப் பார்த்து, "காந்தியடிகளைச் சுடுவதற்கு வைசிராய் வெலிங்டன் பிரபு வந்தவுடன், அவர் ஆயிரம் காந்தியாக மாறிவிட்டாராம். உடனே துப்பாக்கியைப் போட்டுவிட்டு வெலிங்டன் துரை ஓடிவிட்டாராமே! தம்பி இது உனக்குத் தெரியுமா?" என்று கேட்டார். வெலிங்டன் பிரபு தனது பதவிக் காலம் முடிந்துவிட்டதால் சென்றுவிட்டார்; அதைத்தான் நான் அறிவேன். ஆனால் ஆயிரம் காந்திகள் தோன்றியது பொய்" என்று சொன்னேன். "அது பேப்பரிலே போட்டிருக்கு தம்பி" என்றார் அப்பெரியார். "சுதந்திரச் சங்கு" என்ற பத்திரிகையிலேவந்தகேலிச் சித்திரம் (கார்டூன்) ஒன்றையும் காண்பித்தார். அந்தக் கேலிச் சித்திரத்தினடியில், "காந்தியினது ஆத்மபலம், மக்களிடையே விரைவாகப் பரவி வருவதால், அச்சக்தியை அழிக்க முடியாமல் தோல்வியுடன் வெலிங்டன் பிரபு இங்கிலாந்து செல்கிறார்" என்று எழுதப்பட்டிருந்தது. கலை உரைத்த கற்பனையை நிலையெனவே நம்பி வாழும் இப்பாமர மக்களின் கண்மூடித்தனம் என்று மறையுமோ என்ற ஏக்கத்துடன் வீடு திரும்பினேன்.

அன்று இரவு எங்களூரில் "கோவலன்" நாடகம் நடந்தது. அதைக்காண நானும்என் நண்பர்களும் சென்றோம். சிலம்புச் செல்வத்தை அங்குக்காணமுடியவில்லை. சீரழிந்தஒருகதை அது. பாண்டியன் மகளாகக் கண்ணகி பிறக்கிறாள்- அதுஅழுதால் நாடு நசித்துப் போகுமென்றுகூறுகிறான் ஒரு சோதிடன். இக்கூற்றை நம்பி, அரசன் கண்ணகியை வைகையாற்றிலே விட்டுவிட, அவளை ஒரு செட்டி எடுத்து வளர்க்கிறான். அவளுக்கு ஐந்துவயதிலே அறியாப் பருவத்திலே திருமணம் நடக்கிறது. அங்குவந்த தாசி மாதவி, மாலை வீசிக் கோவலனைத் தன்னுடனே அழைத்துச் சென்றுவிடுகிறாள். மாதவி பத்துலட்சம் பொன்கேட்டுச் சத்தியமும் வாங்கிக் கொள்கிறாள். கோவலன் நிதி திரட்ட மதுரைக்குச் சென்று, அங்குத் தன் மனைவியின் சிலம்பை விற்க முயலும்போது, கள்வன் என்று குற்றம் சாட்டப்பட்டுக்கொலை செய்யப்படுகிறான். கண்ணகி அவனைக் காணச் செல்லுகிறாள். "மாதவியானால் அருகில் வா. கண்ணகியானால் கடந்து செல்" என்று கூறிவிடுகிறான். பின்னர் கண்ணகி பாண்டிய மன்னனிடம் சென்று, தன் கணவன் கள்வன் அல்லன் என்ற உண்மையை நிலைநாட்டுகிறாள். நீதி மறந்தேனே எனக் கூறி பாண்டியன் உயிர் விடுகிறான். பின்னர்க் கண்ணகி, தான் "காளி" யின் திருஅவதாரம் என்று கூறுகிறாள். அவளுக்கு ஒரு கோவில் எழுப்பப் படுகிறது. இதுதான் அந்த நாடகத்தின் கதை. பல ஆண்டுகளுக்குப் பின், இக்கதை திரைப் படமாகவும் காட்சி தந்தது. நான் சிந்திக்கத் தொடங்கினேன். நெஞ்சை அள்ளும் சிலப்பதிகாரம் எங்கே? இந்த நாடகக் கதை எங்கே? ஏன் இந்த வித்தியாசம் என்ற கேள்வி என் மனத்தை விட்டு அகலவில்லை. ஆயிரம் காந்திகள் தோன்றி, வெலிங்டனை வெருட்டி ஓட்டி விட்டதாக நம்பிய அறியாமை நிறைந்த கிழவரும் என் மனக்கண்முன் நின்றார்.

வெகு அண்மையில் என் நண்பர் உரையுடன் கூடிய "சிலப்பதிகாரம்'! பதிப்பு ஒன்றை என்னிடம் தந்தார். அதன் முகவுரையில், சிலப்பதிகாரம் கட்டுக்கதை என்றும், இயற்கைக்குப் புறம்பான நிகழ்ச்சிகள் பல அதில் காணப்படுவதால், அவைகள் புராணங்களுடன் சேர்க்கப்படவேண்டியவை என்றும் குறிப்பிட்டிருந்தது. சிறப்பாக, கோவலன் தலைகண்ணகியுடன் பேசியதைக் குறிப்பிட்டு, இது நடக்கக் கூடாத ஒன்று என்றும், இது ஒன்றே அது கட்டுக்கதை என்பதற்குத் தக்க சான்றாகும் என்றும் கூறப்பட்டிருந்தது. நான் சிந்தித்தேன். முகவுரை எழுதிய அறிஞர் என்னைவிட அறிவிலும், அனுபவத்திலும் பெரியவர். அவர், எங்கள் ஊரில் நான் கண்ட கிழவர்போல், பலரைக் கண்டு விரிந்த அனுபவம் பெற்றிருப்பார். கிழவர் உரைத்த ஆயிரம் காந்தி கதை ஒருவகையில் கற்பனையையும், ஒருவகையில் உண்மையையும் அடிப்படையாகக் கொண்டதை, எனது சிற்றறிவே நன்கு தெரிந்துகொண்டது. அவ்

வாறுதான் இலக்கியங்களில் காணப் படும் கற்பனைக் காட்சிகளும் அமைந் துள்ளன என்பதை இயற்கையறிவு படைத்த எவரும் துணிந்துகொள் வர். அப்படியிருக்க, சிலப்பதிகார முன்னுரை காரரான அறிஞருக்கு இந்த அனுபவமும், துணிவும் என் உண்டாகவில்லை என என் உள்ளம் எண்ணத் தொடங்கியது. அவரே சிலப்பதிகாரக் கற்பனைப் பகுதி களைக் கருத்தூன்றிப் படித்திருப் பாரேயானுல் இந்தத் தவருனமுடி புக்கு வந்திருக்க மாட்டாரே என அவர்பால் இரக்கம் கொண்டேன்.

இதுபற்றிக் கூறுமுன், சிலப்பதி காரத்தின் கதையைச் சுருக்கமாகக் கூறிவிடுகிறேன். கோவலன் என்ற வணிகப் பெருமகன், கண்ணகி என் பாளை மணந்து, எட்டு ஆண்டுகள் இல்லிருந்து நல்லறம் புரிந்துவந் தான். மாதவி என்ற கணிகை ஆட லிலும் பாடலிலும், அழகிலும் சிறப் புற்று அதற்குப்பரிசாக வேந்தனிட மிருந்து, ஒருமாலையைப் பெற்ருள். அந்த மாலையை வாங்கிக்கொண்டு, அவளைத் தன் காதற் பரத்தையாக் கிக் கொண்டான் கோவலன். சில ஆண்டுகளுக்குப் பின், கருத்து வேற்றுமையுற்று, மாதவியைப் பிரிந்து கண்ணகியுடன் புதுவாழ்வு வாழவேண்டி மதுரைக்குச் சென் ருன். அங்கு அவள் தன் மனைவி யின் சிலம்பை விற்கச் செல்லு கையில், கள்வனென்று குற்றஞ் சாட்டப்பட்டுக் கொலை செய்யப்பட் டான். தன் கணவன் கள்வன் அல் லன் என்பதை அரசன்முன் நிலை நாட்டி, மதுரையைத் "தீயுண்க" என்று அதை எரியும்படி செய் தாள். அரசன் நீதி தவறியவன் என்ற குற்றம் தன்மேல் சார்ந்த வுடன் இறந்துவிட்டான். பின்னர் சேரநாடு சென்று அவள் இறந் தாள்.

இவளுடைய தூய கற்பையும், வீரத்தையும் கண்ட இளங்கோவடி கள், இவளுடைய வரலாற்றை, சிலப்பதிகாரமென்ற நூலாகச்செய் தார். இளங்கோவின் அண்ணன் சேரன் செங்குட்டுவன் கண்ணகிக் குக் கோயில் எடுப்பதற்காக, வட நாடு சென்று அங்கு மன்னர்களை வென்று, அவர்கள் தலையில் கல் லேற்றி வந்து, அத்திருப்பணியை முடித்தான். இது நிற்க.

இப்பேரறிஞர் தமிழ்நாட்டிற் கென்று ஒரு பண்பாடு இல்லையென் றும், எல்லாம் வடமொழியி லிருந்துதான் கடன் வாங்கப்பட்ட தென்றும் கருதுபவர். திருவள் ளுவருக்கு இயற்கையைக் கண்டு நிகழ்ந்தவற்றை நினைந்து கூறும் ஆற்றல் கிடையாது. மயிர் அனை யர், மான் அன்னர் என்ருற் போலும் கருத்துக்களையும், வட மொழி நூல் காட்டக் கண்டாரே யன்றித் திருவள்ளுவர் இயற்கை யாகக் காணக் கூடியவரல்லர் என்ற கருத்துப்பட வடமொழி நீதி சாத்திரங்களிலுள்ள நீதிகள் தாம் திருக்குறளில் எடுத்தாளப் பட்டிருக்கின்றன என்று கூறுவா ராஞல், அவரது அறிவின் பெரு மையை என்னென்பது. அவர் தாம் எழுதிய முன்னுரையில், "சிலப்பதிகாரம் பொய்க் கதை யென்றும், வடமொழிக் கதையின் திரிபு" என்றும் கூறத் தொடங்கி விட்டார். இக்காப்பியத்திலுள்ளது பொய் என்பதற்கு அவர் தரும் ஆதாரம், அறிஞர்கள் ஏற்றுக் கொள்ளத் தக்கதா என்று பார்ப் போம்-

"நின்ருன் எழுந்து
நிறைமதி வான்முகம்
கன்றியது என்று
அவள் கண்ணீர் கையால்
மாற்ற"

கோவலன் கொலையுண்ட களத் துக்குக் கண்ணகி சென்றவுடன் இறந்துபட்ட கோவலன் எழுந்து, "உன்னுடைய மதிமுகம் வாடி விட்டதே" என்று கூறி, அவளு டைய கண்ணீரைத் துடைத்துப் பின் மறைந்தான் என்பதே இவ் வரிகளால் கூறப்படும் செய்தி. இப் பேராசிரியர் கேட்கிருர், "பிணம் எழுந்து பேசுமா?" என்று, ஆனல் பின் இரு வரிகளைப் படிக்கு மாறு அவரை வேண்டுகிரும்.

"மாயங்கொல் மற்றென்கொல்
மருட்டியதோர்
தெய்வங்கொல் போய்எங்கு
நாடுகேன் பொருளுறையோ
இதுவன்று"

என் அருமைக் கொழுநன் என் எதிரே நின்று பேசியதும், கண்ணீ ரைத் துடைத்ததும் உண்மையோ, அல்லது தோற்றமோ? மாயமோ மற்று என்னவோ? ஏதேனும் தெய்வம் வந்து அச்சுருத்தி விட் டதோ? அறியேன். எங்கு கோவ லனைப் போய்த் தேடுவேன் என்று கண்ணகியே கோவலன் பேசினுன் என்பதை நம்பமுடியாமல், அழும் போது, இளங்கோவடிகள் பிணத் தைப் பேசவைத்து விட்டார் என்ற கூற்று எவ்வாறு பொருந்தும்?

கண்ணகியின் முகம் கன்றியது என்று அவள் கண்ணீரைக் கை யால் கோவலன் மாற்றினுன் என்று கூறுவதன் கருத்தென்ன வென்ருல், கோவலன் உடம்பைக் கண்டு, பெரும் துக்கத் தால் அறிவு கலங்கி, மதி மருண்டு மயங்கிய அவள் மனக் கண்ணில், தோன்றிய உருவெளித் தோற்றம். உடல் சிதைத்துக் கிடப்பதைக் கண் ணிற் காணினும், மனக் கண்ணில் கோவலன் வடிவம் முழுதும், நன்கு தோன்றி அவள் கண்ணீரை மாற்றுவதை மனத்திற் காண கின்ருளாதலால், சிறிது தெளிவு பிறந்ததும், "மாயங்கொல் மற் றென்கொல்" எனக் கூறத் தொடங்கினுள். எதிர்பாராத வகை யில், இன்னல் உற்று இறந்து போனவர்களைக் காணும் எவர்க் கும் இத்தகைய காட்சி இயல்பாகத் தோன்றும் அனுபவமல்லவா? இயற்கை அனுபவத்தை இல்லை யென்பது அறிவின் செயல் அல்லவே?

புறக்கண்ணில் தோன்றும்காட்சி களைக் கண்டவாறு கூறுவது செய் தித் தாள்களின் வேலை. புறக் காட்சிகளையும், மனக் கண்ணில் தோன்றும் அகக்காட்சிகளையும், சேர எடுத்து, ஒன்ருய்க் கூட்டிப், படிப்போர் மனவியல்புக்கு ஒப்பப் புலப்படுத்தி, இன்பம் விளைவிப்பது இலக்கியத்தின் வேலை. இலக்கிய ஆராய்ச்சியாளர் இந்த இயற்கை நெறியை எண்ண வேண்டாவா? இவற்றை எண்ணுதிருத்தல் இலக் கிய ஆராய்ச்சியாகுமா?

முற்காலத்தில், "சிலப்பதி காரம்" இன்றுபோல் பலரும் அறி யக் கிடைக்காத குற்றத்தினுல், கண்ணகி வரலாறு, செவிவழிச் செய்தியாகவே, நாட்டில் வழங்கி வந்தது. கால வெள்ளத்தில் வர லாற்று முறை மறைந்துபோகவே, கண்ணகி கற்புடையவள் என்பதும் கடவுள் தன்மை யுடையவள் என் பதும், மாதவி கணிகை குலத்தில் பிறந்தவள் என்பதும், மாலையின் காரணமாக மாதவி வீடு சென் ருன் கோவலன் என்பதும் பிற வுமே அறிந்தனர்.

இளங்கோவடிகள் தாம் சேர னின் தம்பியாதலால் தென்னவ

னைக் குற்றம் கூறி, மற்ற இரு மன்னர்களையும் உயர்த்திப் பாடிஞல், பாண்டியர் குலத்தவர் மனம் புண்படுமெனக் கருதிப் பின்வரும் வரிகளை விண்ணுலகம் சென்றதாகக் கூறப்படும் கண்ணகியின் கூற்ருக, வரந்தரும் காதையில் கூறுகின்ருர்.

‘‘ தென்னவன் தீதிலன்
தேவர்கோன் தன் கோவில்
நல்விருந் தாயினன்
நான் அவன் தன்மகள் ’’

(தென்னவஞகிய பாண்டியன் ஒரு குற்றமும் செய்தவனல்லன். அவன் வானுலகத்திலே இந்திரன் விருந்தினஞகவாழ்கின்ருன்.நான் அவனுடைய மகள்!)

இதன் உண்மைக் கருத்துஎன்னவென்ருல், ‘‘ கண்ணகியாகியநான் பாண்டியன் உயிர் போகும்படி நீதி எடுத்துக் கூறினேன். என்ருலும், நீதிக்காகவே அவன் உயிர் துறந்ததைக் கண்டு, அவன் விதியின்வலியால்தான் பிழை செய்தான் என்று உணர்ந்த நான், அவனைத்தந்தைக் குச்சமமாகவே எண்ணுவதால்-அவனுடைய மகளாகி விட்டேன்.தந்தை மகள் என்ற பாசம் ஏற்பட்ட பின் எங்களுக்குள் கருத்து வேற்றுமை உண்டோ என்பதே.

கணவன் இறந்தது கேட்டுக் கண்ணீரும் கம்பலையுமாய்க் கதறிப் புலம்பிக்கொண்டு பாண்டியன் நீதிமண்டபத்திற்கு வந்த கண்ணகியைக் காவலர், ‘¡ காளியோ ’’ எனக் கருதிக் கண் கலங்கிப் பின்னர், காளியல்லள் என்றுதுணிந்து வேந்தனிடம் விளம்பினர். நூலை நேரில் படித்தறியும் வாய்ப்பில்லாத பலர் கண்ணகி காளியின் அவதாரம் என்று கூறிவிட்டனர்.

நாடக ஆசிரியர்களும், நாடகக் குழுவினரும் மேற்கூறிய உண்மைகளை அறியாமலும், உண்மை வரலாற்றை யறியும் அக்கரை கொள்ளாமலும், பல காலமும் ‘‘ கண்ணகி’’ என்றபெயராலும், ‘‘கோவலன் ’’ என்ற பெயராலும், நாடகங்களும், திரைப்படக் கதைகளும் எழுதி நடித்தனர். கலையுரைத்த கற்பனையை நிலையெனவே கொள்ளும் பாமர மக்களும், பேரறிஞர்களும், நாடகக் கதாசிரியர்களும் இன்னும் தெளிவு பெறக் காணேம். திரை ஓவியங்களும், நாடகங்களும் கண்மூடித் தனமாகச் சென்று கொண்டிருக்கின்றன. இதனைத் தடுத்து நிறுத்துவார் இன்றளவும் யாருமே இல்லை. சிலப்பதிகாரத்தையும் சேரன் செங்குட்டுவன் வரலாற்றையும் நிலை நாட்டுதற்குத் தமிழ் மக்கள் முன்வர வேண்டும். அப்போதுதான் இலக்கியம் கூறும் உண்மைகள் பொதுமக்கள் உள்ளத்தில் நன்ருகப் பரவி அறிவுப் பயனை விளைவிக்கும்.

ஒரு காவியம் வரலாற்றின் அடிப்படையில் எழுந்ததா? கற்பனைச் சித்திரமா என்று அறிய வேண்டுமாஞல், அதில் வரும் இயற்கைக்குப் புறம்பான செய்திகள், கதைக்கு ஒட்டம் தருகின்றனவா, அவைகளை விலக்கிவிட்டால், கதைத் தடைப்படுமா என ஆராயவேண்டும். எடுத்துக்காட்டாக, ஷேக்ஸ்பியர் எழுதிய இரு நாடகங்களை எடுத்துக்கொள்வோம், ‘‘மேக்பத்’’ என்ற நாடகத்தில் குறிசொல்லும் கட்டத்தில் வரும் இயற்கைக்குப் புறம்பான நிகழ்ச்சி நடந்திராவிட்டால் கதை பாதிக்கப்பட்டிருக்கும்.

‘‘ஹாம்லெட்’’ என்ற நாடகத்தில், கதாநாயகன் இறந்துபோன தன்தகப்பஞரின்பேயைப்பார்த்திராவிட்டால், அ.ந்த நாடகத்தில்வரும் பல நிகழ்ச்சிகள் நடைபெருமலே போயிருக்கும். இயற்கைக்குப்புறம்பான நிகழ்ச்சிகள் இந்நாடகக் கதைக்கு ஒட்டத்தைத் தருகின்றனவாதலால், இவைகள் கற்பனைக் கதைகள்.

சிலப்பதிகாரத்திலும், உண்மைக்குப் புறம்பானநிகழ்ச்சிகள் காணப்படுகின்றன. அவைகள் கவுந்தி அடிகள் துர்த்தர்களை நரியாக்கியதும்,மதுரைமா தெய்வம் கண்ணகியிடம் தோன்றியதும் பிறவுமாம்.

ஆஞல் இந்நிகழ்ச்சிகளை நீக்கி விட்டால் கதையின் ஓட்டம் தடைப்படாததிஞல், இக்காப்பியம் வரலாற்றுத் தொடர்புடையதாகும் என்பது தெளிய விளங்கும்.

கற்பின் பெருமையும், காதற்பரத்தையின் சீரிய ஒழுக்கமும், மக்கள் குரலுக்குமன்னன் பணியும் திறனும்தான் நாம் சிலப்பகாரத் திற்கண்டுபோற்ற வேண்டியவை.

சிலப்பதிகாரம் தமிழர்களுடைய பண்பாட்டிற்கே ஒரு எடுத்துக் காட்டாக அமைந்த நூலாதலால், இதனைப் புறக்கணிக்க நடக்கும் சூழ்ச்சிகளில் சிக்கிவிடாது, இளங்கோவடிகள் கூறும் தமிழர் பண்பாட்டையும், கற்பின் கொழுந்தான கண்ணகியின் வாழ்க்கையையும் போற்றி வாழ்ந்தால், அவர் கண்ட தமிழகம் கூடிய விரைவில் வரும்.



எமது சிறந்த படங்கள்!

வெற்றிகரமாக

ஓடிக்கொண்டிருக்கிறது!

ஜனவரி 5ல முதல்

மேனகா

வருகின்றன:

முதல் தேதி, செந்தாமரை,
கோமதியின் காதலன்.

மற்றும்

மங்கையற்கரசி, லைலாமஜ்னு, மச்சரேகை,
மணமகள், சிங்காரி, பணம், மருமகள்,
அன்பு, ராஜாம்பாள், கல்யாணம்
பண்ணியும் பிரம்மச்சாரி.

கோயம்புத்தூர் பிக்சர்ஸ் லிட்.

ஜெயில்ரோட். கோயம்புத்தூர்.

Anand

இராமாயணம் பற்றி மலையாள அறிஞர் ஆராய்ச்சிகள்

பன்மொழிப்புலவர்
கா. அப்பாதுரை. M.A.L.T.

புதுமை ஆர்வம், பழமைப் பற்று இரண்டும் எல்லா நாட்டிலும் மக்களுக்கு இயல்பானவை. ஆயிர, பதினாயிரக் கணக்கான ஆண்டு நீடித்த பழம் பண்பாடுடைய தென்னாட்டில், இந்த இரண்டு ஆர்வங்களும் மற்ற நாடுகளைக் காட்டிலும் மிகுதியாயிருப்பது இயல்பே. இரண்டுமே நல்லறிஞர், கலைஞர் ஆகியவர்கள் கையில் மக்கள் வாழ்வின் மலர்ச்சிக்கு அரிய தூண்டுதல்களேயாகும். ஆனால் போலி அறிஞர், போலிக் கலைஞர் கையில் இவ்விரண்டும் மூட நம்பிக்கைகள் குருட்டுப் பழக்க வழக்கங்கள், பகுத்தறிவுக்கு மாறான புதிர்கள், சாதிமத வேறு பாட்டுப் பூசல்கள், ஆகியவற்றை வளர்க்கப் பயன்பட்டு வருகின்றன. பழைய குருட்டு நம்பிக்கைகளில், கடவுள்களில், இயற்கையான அறிவு வளர்ச்சி காரணமாக மக்கள் நம்பிக்கை குறையும் போது, இப்போலி அறிஞர்களாகிய ஆரியர் புதிய குருட்டு நம்பிக்கைகளையும் புதியகடவுளரையும் உண்டுபண்ணி மக்களிடையே பரப்புகின்றனர். சிலசமயம் பழமைக்கு அவர்கள் புது உருவம் கொடுத்து அதன்மூலம் பிற்போக்கை நீரூற்றிவளர்த்து நிலையான தீமை பயக்குகின்றனர்.

சுரண்டல் முறைகள் எல்லாவற்றினும் மிகக் கொடிய சுரண்டல் மக்கள் அறிவுவளர்ச்சியைத் தடைப்படுத்தி இன வாழ்வை அரிக்கும் இச்சுரண்டல் முறையேயாகும்.

வேதபுராணங்களால் மக்களிடையே மடமையைப் பரப்ப முடியாத போது, சுமிருதிகளால், மந்திர, தந்திர, சோதிட, கை ரேகை சாஸ்திரங்களால் மக்கள் மதியை மருட்ட முடியாதபோது, ஆரியர் கையில் வற்றாத மடமை யூற்றாக விளங்கிய தெய்வீக நூல்கள் இதிகாசங்களாகிய இராமாயண பாரதங்களேயாகும்.

இராமாயண பாரதங்கள் பற்றிய எதிர்ப்பு ஒருபகுத்தறிவியக்கமாக இன்று தமிழகத்தில்பரவியுள்ளது. பழைய இராம இராவணப் போர் இப்போது இராமாயண ஆதரவுப்போர் எதிர்ப்புப் போராக, நடைபெறுகிறது. பிற நாடுகளிலும் அறிஞர் இராமாயணத்தைப் பற்றிக் கருதும் கருத்துக்கள் பகுத்தறிவைநோக்கியே செல்கின்றன. ஆனால் அறிஞரை ஆதரிக்கப் பெரியார் ஈ.வே.ரா, நல்லறிஞர் அண்ணா போன்ற மக்கட் பெருந் தலைவர்களும் மக்கள் அறிவியக்கங்களும் இல்லாததனால், அங்கே அறிஞர் குரல் மக்கள் மன்றம் ஏறாக் குரலாக இருந்துவருகிறது.

இலக்கிய ஆராய்ச்சியிலீடுபட்ட மலையாள அறிஞர் ஒருவர், சென்னைப் பல்கலைகழகத்தின் மலையாள மொழிஅரங்கத் தலைவரான டாக்டர் செல்நாட்டு அச்சுத மேனோன், இராமாயணம் பற்றிக் கூறும் கருத்துக்களில் சில கீழே தரப்படுகின்றன.

இராமாயணம் பல மொழிகளில்பல வேறுபட்டாலும் அது மக்கள் மதசம்பிரதாயத்தில் ஒரு பகுதியாகப் பலரால் கருதப்பட்டு வருகிறது. அதனால் இலக்கியம் என்ற முறையில் அதை ஆராய்ச்சி செய்வதில் மிகவும் இடர்ப்பாடு ஏற்பட்டுள்ளது. இராமன் ஒரு கதாநாயகன் மட்டுமல்ல. பல இடங்களிலும் மக்களால் வணங்கப்படுகிற ஒரு கடவுள் கூட. கடவுள் நிலையிலுள்ளவர்கள் வணக்கத்துக்கும் பக்திக்கும் உரியவர்கள், ஆராய்ச்சிக்குரியவர்களல்லர். ஆகவே இராமாயணத்தைப் பற்றி ஆராய்வதே—குணாகுணங்களை வகுத்துக் காண்பதே—தெய்வப்பகைமையான காரியம் என்று கருதப்படுகிறது.

இக் காரணத்தால் இந் நாட்டார் பலர் இராமாயண பாரதங்களை ஆராய முற்படாமலே போயினர். ஆராய முற்பட்ட சிலரும் ஆராய்ச்சிஎன்ற பெயரால் கண்ணை மூடிக்கொண்டு, அதன் தெய்வீகத் தன்மையை மனிதத்தன்மையுடன் ஒட்டமுயன்றனரேயன்றி வேறல்ல. சராசரி மனிதன் செய்யக் கூசத்தக்க செயல்களை கூட இராமன் செய்ததனால் சரியான செயலேயாகும் என்று நிலைநாட்டுவதில் அவர்கள் தம் வழக்குவாதத் திறமையை நுணுக்க விரிவாக எடுத்துக் காட்டி அமைத்தனர்.

ஆயினும் இராமாயணத்தின் வரலாற்றைக் கூர்ந்து கவனிப்பவர்களுக்கு இராமன் கடவுளானது அல்லது ஆக்கப்பட்டது அணிமைக் காலத்துச் செயல் என்பது குன்றிடையிட்ட விளக்

கம்போலத் தெளிவாகத் தெரிய வரும். வால்மீகிக்கு முற்பட இராமாயணமும், பாரதமும், காவியங்களாக இல்லை. மக்களிடையேயும் மன்னர் அவைகளிடையேயும் பாடப்பட்ட வீரகாதைகளாகவும் மக்கட் பாடல்களாகவுமே அவை விளங்கின. வால்மீகி அதைத்தம் காலத்திற்கேற்ப, ஒரே காவியக் கதை ஆக்கினார். இராமனைக்கடவுளாகக்காட்டவே இல்லை. முதல்முதல் இராமனைக் கடவுளாகக் கொண்ட இராமாயணம் வால்மீகிக்கு நெடுநாளைக்குப் பின், (கம்பருக்குக்கூடப் பிற்பட்டு) இயற்றப்பட்ட அத்யாத்ம

இவன்தான் கடலைக் குடித்தானாம்!

ராமாயணத்திலேயே ஆகும். இந்த இரண்டு இராமாயணங்களின் தொடக்கமே அவற்றின் கால வேறுபாட்டையும் நோக்க வேறுபாட்டையும் தெற்றென எடுத்துக்காட்டத் தக்கவை. வால்மீகி ராமாயணத்தில் வால்மீகி முனிவர் தெய்வீக முனிவராகிய நாரதரிடம் ‘இப்பூவுலகில் குணத்தில், வீரத்தில், சமயப் பற்றில்......சிறந்தவன் யார்?’ என்று கேட்க, நாரதர் அத்தகைய வீரனான இராமன் கதையை இராமாயணமாகஎடுத்துரைக்கிறார். (இருவருக்கும் இடைவந்த கம்பர் இராமனைக் கடவுட் பிறப்பாக, திருமாலின் கூறாகக் காட்டுவதுடன் அமைகிறார்.) ஆனால் அத்யாத்ம ராமாயணம் இவ்வெல்லை கடந்து நெடுந்தொலை செல்கிறது. அது இராமனே திருமால் என்பதனுடன் அமையாமல், இராமனாகிய திருமாலே சிவபெருமானுக்கு மேற்பட்டபெருங்கடவுள் என்று தொடக்கத்திலேயேகூறுகிறது. இதைச் சிவபெருமான் திருவாக்காகவே தந்து, சிவபெருமானுக்கு ஒரு பக்தனின் பணிவை அளிக்கிறது. ஏனெனில் இங்கே கேட்பவர் பார்வதி தேவியார் இராம நாமத்தின் ஆற்றலையும் இராமன் புகழையும் அப்புகழ்க் கதையாகிய இராமாயணத்தையும் இங்கே பார்வதிக்குப் பரமசிவன் பக்குவமாய் எடுத்துக் கூறுகிறார்.

அத்யாத்ம ராமாயணம் ஏற்பட்ட காலத்தின் வரலாற்றை அதன் பிற பகுதிகள் விளக்குகின்றன. (கம்பர் காலத்தவரான 12-ம் நூற்றாண்டுக்குரிய இராமானுசாச்சாரியர் 14-ம் நூற்றாண்டுக்குரிய மாதவாச்சாரியர் கருத்துக்களடங்கிய) இராம சீதா அதில் ஒரு பகுதி. முடிசூட்டு விழாவின்பின், இராம பக்தியாலும் நீடித்த பிரமசரிய நோன்பாலும் பக்குவமடைந்த அனுமனை இராமன் அருகே அழைத்து, சீதையைக் கூப்பிட்டு, அந்தப் பக்தனுக்கேற்ற பரிசாக, இராம மகிமையை அவனுக்கு அறிவுறுத்தும்படி அவர் சீதையைக் கேட்டுக்கொள்கிறார்.

இங்கே நாம் இராமாயண வரலாற்றின் நான்கு படிகளைக் காண்கிறோம். முதல் படி மக்கள் வீரப்பாடல். இரண்டாவது படி வால்மீகியின் ஆரிய காவியம். மூன்றாவது படி கம்பனின் வைணவங் கலந்த ஆரிய காவியம். கடைசிப் படி விஷ்ணு புராணங்களைவிடச் சிறந்த ஒரு வைணவ புராணமாகிய அத்யாத்ம ராமாயணம்.

அத்யாத்ம ராமாயணம் வால்மீகி ராமாயணத்தைப் போல ஒரு சிறந்த காவியமல்ல. அதன் மூலக் கதை முழுவதும் வால்மீகியின் கதையே. ஆனால் அது ஒரு பழுத்த மதப்பிரசார நூல். இன்று எந்த இராமாயணத்தை இராமாயணப் புராணிகர் வாசித்தாலும், அவர் அத்யாத்ம ராமாயணத்தை வியாக்கியானமாகக் கொண்டு, அதன் ஒளியிலேயே இராம கதையைக் கண்டு விளக்குகிறார்.

அத்யாத்ம ராமாயணம் முன் எழுதப்பட்டதோ, பிரமாண்ட புராணம் முன் எழுதப்பட்டதோ; இது எப்படியானாலும் இன்று அத்யாத்ம ராமாயணம் பிரமாண்ட புராணத்தில் ஒரு பகுதியாய் இணைக்கப்பட்டிருக்கிறது. அதுபோலவே அத்யாத்ம ராமாயணம் முன் இயற்றப்பட்டதோ, பாகவத புராணம் முன் எழுதப்பட்டதோ, எது எப்படியானாலும், பாகவத புராணத்தினுள்ளும் அத்யாத்ம ராமாயணம் இணைக்கப்பட்டுள்ளது.

இந்தியாவின் இராமாயணங்களுள் கடைசி இராமாயணங்களான மலையாளத்து எழுத்தச்சனின் அத்யாத்ம ராமாயணமும் இந்தியில் துளசிதாசரின் துளசி ராமாயணமும் அத்யாத்ம ராமாயணத்தை அடிப்படையாகக் கொண்டவையே.

* * *

இராமாயண, பக்தி இராமாயணத்தில் வரலாறு காண விரும்புவது இயல்பே. வரலாற்றாராய்ச்சியில் இணைந்தவர்களுள் இருசாரார் அதில் இருவகையான வரலாற்றுக் கருமூலத்தைக் காண முயன்றுள்ளனர். இருசாராரும் அதை ஆரிய திராவிடப் போராட்டமாகவே கருதினர்.

ஒரு கட்சியார் இராமாயணக் கதை ஆரியர் விந்தியம் கடந்து தென்னாட்டிலும்இலங்கையிலும் பரவிய கதையின் காவிய வடிவம் என்று கருதுகின்றனர். மற்றக் கட்சியும் இதையே குறித்தாலும், அதற்கு இருக்குவேதம் நான்காம் மண்டலம் 57-6 சூக்தத்தின் துணை சேருகிறது. இந்தச் சூக்தத்தில் உழவு சால் ‘சீதா’ என்ற பெயரால் வணங்கப்படுகிறது. உழவு சாலைப் பிடித்த உழவனாக, ஆரியர் வேளாண்மை நாகரிகம் தெற்கே பரந்த கதைதான் இராமாயணம் என இக்கட்சியார் கூறுகின்றனர்.

தமிழ் மொழி இலக்கிய ஆராய்ச்சி, தென்னாட்டு மொழிகளின் இலக்கிய ஆராய்ச்சி ஆகியவற்றில் ஒரு சிறிது அறிந்த எவரும் மேற்கூறிய விளக்கங்களில் எதையும் சிறிதும் ஏற்க முடியாது. ஆரப்பா மோகஞ்சதரோவில் கண்டுணரப்பட்ட ஆரியருக்கு முற்பட்ட சிந்துவெளி திராவிட நாகரிகம் அதற்குச் சிறிதும் இடம் தராத வண்ணம் அக்கருத்தைச் சிதறடித்துவிட்டது.

வால்மீகி ராமாயணமே, இவ்வகையில் ஒன்றுக் கொன்று முரண்பட்ட கூற்றுக்களின் குளறுபடி ஆகும். விந்திய மலைக்குத் தெற்கே கன்னியாகுமரிவரை, ஒரே தண்டகக் காடாய் இருந்ததென்று அது குறிப்பிடுகிறது. அதே சமயம் சேர, சோழ, பாண்டியர்கள் ஆட்சி பற்றியும் அது விதந்துரைக்கிறது கிட்டத்தட்டஇராமாயண காலத்துக்கே உரிய பாரதமும் இம்மூவேந்தர் பற்றிப் பல வரலாறுகள் தருகின்றது. தவிர, அசோகன் கல்வெட்டுக்களாலும் இவற்றின் பழமை உணருகிறோம்.

தென்னாட்டவர் முழுவதும் ஒரே திராவிட எதிரிகளாக வால்மீகி காட்டவில்லை. வடக்கே பெரும்பகுதி மக்களை அது குரங்காக்கி விடுகிறது. தெற்கே சேர, சோழ, பாண்டிய அரசுகளைக் குறிப்பிடுகிறது. இன்னும் தெற்கே தலைநகரமமைத்து, விந்தியம்வரை ஆண்ட இராக்கதர்களைப் பற்றியும் கூறுகிறது. வடபுலக் குரங்குகள் அடிமைகளாகவும். தென்திசை மனிதர்கள் நண்பர்களாகவும், இன்னும் தெற்கிலிருந்து முழுத் தென்னாட்டை ஆண்ட இராக்கதர்கள் பகைவர்களாகவும், வால்மீகியால் தீட்டப் பட்டுள்ளனர்.

தமிழர், தமிழினத்தவராகிய திராவிடர் பல்லாயிரக் கணக்கான ஆண்டுகளுக்கு முன்னிருந்தே ஆரியரைவிட, உயர்ந்த வேளாண்மை, வாணிக,தொழில் நாகரீகம் உடையவராயிருந்தனர் என்பதை நாம் இன்று அறியும் நிலையில், வால்மீகியின் இராமாயணம் வரலாற்றுக்கு ஒவ்வாத ஒரு இனப் பிரசார நூலாக மட்டுமே காட்சியளிக்கிறது. இராமாயணக் கதை அவர் முழுக் கற்பனையல்ல. அது நாட்டுப் பழங்கதை மரபைச் சேர்ந்தது. அதன் வரலாற்றுப் பின்னணி அவருக்குரியது. ஆனால் அதில் உண்மை மிக மிகக் குறைவு. போலி பிரசாரப் புனைசுருட்டு மிகுதி. தென்னாட்டவரைப் பழிப்பதற்காகவே அதை அவர் எழுதினார் என்பதில் தடையில்லை. ஆனால் புளுகியது பொருந்தப் புளுகியதாக இல்லை. ஒரே இனத்தவர் ஓரிடம் குரங்கு ஓரிடம் மனிதர், ஓரிடம் இராக்கதர் ஆகின்றனர்.

தென்னாட்டில் ஆரியர் என்றேனும் **'படையெடுத்தனரா?' 'வென்றனரா?'** இரண்டும் ஆரியர் நீண்ட நாள் ஆசையைக் குறிக்கிறதே யன்றி, நடந்த, நடக்கக் கூடும் வரலாற்றைக் குறிக்கவில்லை. வால்மீகியும் இதை உள்ளூர உணர்ந்திருக்கிறார் என்பதை அவர் கதை காட்டுகிறது. ஆரிய வீரத்துக்துக்கு இராமனும் திராவிட வீரத்துக்கு வாலி அல்லது இராவணனும் சான்றுகள் என்று கொண்டால், இன்றைய அறிவுலகம் வீரத்தை எப்பக்கம் காணும் எனபதற்கு ஐயமே இருக்க முடியாது. வாலியை வென்ற வீரத்தையும் எவரும் போற்றுவதற்கில்லை. அதே வீரன் இந்திரசித்தன் பிரமாஸ்திரத்தின் முன் நெடுஞ்சாண் கிடையாகக்கிடக்கும் தன் ஆரியத் தம்பிமார், குரங்கு வீரர், நேச இராக்கத வீரரைக்கண்டு கலங்கி நிற்கும் காட்சியைக் கண்டு எவரும் உண்மையில் இரக்கம்கூடக் கொள்ளமுடியாது. (தென்னாட்டவர் பக்தி உணர்ச்சியோ வட நாட்டவர் இன இறுமாப்போ இல்லாவிட்டால், இந்த இரண்டு கட்டங்களிலும் இராமனைக் கண்டு நகைக்காமல் இருக்க முடியாது!) போர் முயற்சிக்காக இந்திரசித்தன் இயற்றிய வேள்வியைத் தடுக்க, விபீடணன் அறிவுரையைப் பின்பற்றிஅல்லது திருத்தி இராமன் மேற்கொள்ளும் நடவடிக்கை இன்றைய ஹிட்லர், முசோலினிகள் கூட எண்ணக் கூசுவர். இவை ஆரியர் வீரத்துக்கோ, ஒழுக்கத்துக்கோ உயர்வு தரமாட்டா. ஆனால் இவற்றின் துணையிருந்துங்கூட, அனுமான் விபீடணன் உதவிகளே வெற்றி தந்தன. வால்மீகி தரும் வெற்றி வீரக்கதை இதுவே.

போரில் மட்டுமல்ல, கடவுட் கருத்து, கலை, பண்பாடு, ஆட்சிமுறை, நாகரிகத் துறைகள் எதிலும் ஆரியர் உயர்வு என்ற ஒன்றோ, திராவிடர் தாழ்வு என்ற ஒன்றோ கற்பனைக்கும்

கடவுளான கதாநாயகன் !

எட்டாததாகும். சமயத் துறையில் கலையைக் காண விரும்பும் ஆரியர்கள் இன்னும் செல்ல வேண்டியது காசிக்கல்ல, தில்லைக்கு! டாக்டர் ஏ. குமாரசாமி அவர்கள் கூறுவது போல, 'ஆரிய திராவிடப் போராட்டத்தில், ஆரியர் வென்றவர் என்பதை நம்புபவர்கூட, அந்த வெற்றிக்குரிய சின்னமாக (உயர்சாதி, தாழ்சாதி என்பது தவிர) எதுவும் காட்ட முடியாது. ஆரியர் தங்கள் வேள்வியைக் கை

விட்டுவிட்டு, பூசையும் பிரசாதமும் மேற்கொண்டு விட்டனர். இசையும் நடனமும் இன்னும் தென்னிந்தியர் கலைகளாகவே இயல்கின்றன. 'ஆட்டம்,' 'கூத்து,' 'பாட்டு' ஆகியவற்றின் வகைபேதங்களையும், ஆயிர, இரண்டாயிர ஆண்டு வளர்ச்சிகளையும் நாம் தென்னாட்டில் தமிழிலும் மலையாளத்திலுமே, காண முடியும். வடநாட்டில் எதுவும் காண்பதற்கில்லை. வடமொழியில் கூட அவற்றின் முடிந்த பாடப்புத்தகமான நாட்டிய சாஸ்திரத்தையும், அவற்றின் இறுதிக்கால இலக்கியமான

வால்மீகி காட்டும் வடநாட்டு மனிதன்!

நாடகத்தையும் மட்டுமே காண முடியும். மலையாளக் 'கதைகளி'யிலும், கன்னட நாட்டு 'யட்சகான'த்திலும் அவற்றின் இக்கால உயிர் வளர்ச்சியை நாம் காணலாம்.'

ஆரிய திராவிட நாகரிகங்களை ஒப்பிட்டு நாம் இவ்வளவு கூறுவதற்குக் காரணம், பலர் ஆராய்ந்து பார்க்காமலே நம்பிக்கை அடிப்படையாக, முன்னதன் உயர்வை ஏற்றுக்கொண்டு, அந்தப் பொய்மை அடிப்படையில் பல பொய்மைக் கோட்டைகளைக் கட்டிக்கொண்டு போக நேர்கிறது என்பதனால் தான்.

* * *

இராமாயணம் உண்மை வரலாறோ, கற்பனையோ எதுவாயினும் ஆகுக. அது இயற்றப்பட்ட காலத்துக்கு முற்பட்டுத் தென்னாட்டவர் வாழ்வு எத்தகையது என்பதை நோக்க, அது கற்பனை மட்டுமல்ல; உண்மைக்கு மாறான கற்பனை என்பது போதரும்.

வால்மீகி இராமாயணம் அகத்திய முனிவரைப் பற்றிக் கூறுகிறது. அவர் இருந்ததாகக் கூறப்படும் சித்திரகூடமே இன்று மலையாளத்தில் அகத்திய கூடமென்றும், தமிழில் பொதிகை என்றும், குறிக்கப்படும் மலை ஆகும். (இது செங்கோட்டைக்குத் தெற்கே பாவநாசத்துக்கு அருகில் உள்ளது.) இந்த அகத்தியரின் மாணாக்கரான தொல்காப்பியரே தமிழுக்கு இலக்கணம் எழுதினர் என்று தமிழ் ஆரிய மரபு கூறுகிறது. ஆனால் வியக்கத்தக்க முறையில். தொல்காப்பியர் எழுதிய நூலில் அவர் காலத்து அரசன், அவர் காலத்தின் சிறந்த புலவர்கள், கருத்துக்கள், கருத்து வேறுபாடுகள், கூடக் குறிக்கப்பட்டிருக்கின்றன. அவர் ஆசிரியர் என்று கூறப்படும் அகத்தியர் பெயர் மட்டும் தான் இல்லை! தொல்காப்பிய இலக்கணத்தின் புகழ் தென்னாடெங்கும் பரவியதன் பின்னரே அகத்தியர் கதை கட்டப்பட்டது என்பதை இது திறம்படக் காட்டுகிறது. (வால்மீகி இராமாயணம் இவற்றுக்கும் பிற்பட்டதே என்பது தெளிவு.) வால்மீகிக்கும் அகத்தியர் கதைக்கும் முற்பட்டே தமிழில் இலக்கண இலக்கியங்கள் பெருக்கமுற்றிருந்தன என்பதும் புலப்படும்.

தமிழ் மொழி ஆராய்ச்சியால் பெறப்படும் இந்த முடிபுக்கு, மற்றத்தென்னாட்டு மொழிகளின் ஆராய்ச்சிகளும் முழுதும் இணக்கமுடையவையே. தெலுங்கு, கன்னடம், மலையாளம் ஆகிய எல்லா மொழிகளின் இலக்கியத்திலுமே ஆரியச் சார்பற்ற ஒரு அடிப்படை இலக்கியமும் அடிப்படை இலக்கியப் பண்பும் தெளிவாகக் காணக் கிடக்கின்றன. எல்லா மொழிகளிலுமே (கிட்டத்தட்ட 13-ம் நூற்றாண்டிலிருந்து தொடங்கி) 'தூய தாய்மொழி'க்கும 'ஆரியக் கலப்பு மொழி'க்கும் இடையேயுள்ள போராட்டம் நீடித்து வந்துள்ளது. இந்நாள் வரை அந்தப் போராட்டம் எந்த மொழியிலும் ஓய்ந்து விடவுமில்லை. (தாய்மொழிச் சார்பாக, தமிழில் அது இன்று அடைந்துள்ள வெற்றியை மற்ற மொழிகள் இன்னும் அடைந்துவிடவில்லையானாலும், வரலாற்றுச் சார்பாகப் பார்ப்பவர்களுக்கு, அவ்வெற்றி நோக்கித்தான் அவை செல்கின்றன என்பதில் ஐயம் இருக்கமுடியாது.)

தமிழில் 'அகத்தியர்' கதை தமிழ்மரபில் பிற்பட்டதாயிருப்பதுபோல, மலையாளத்திலும் 'பரசுராமர் கதை' மிகவும் பிற்பட்டது. 'கேரளோற்பத்தி' என்ற பெயருடைய பல நூற்பதிப்புக்களில், முற்பட்ட பலவற்றில் அக்கதையின் தடம் காணப்படவில்லை. அதுமட்டுமல்ல. 16-ம் நூற்றாண்டில் இந் நாட்டுக்கு வந்த வெளிநாட்டு வருகையாளர் எழுத்துக்களில் கூட அதன் தடம் காணப்படவில்லை. ('ஆரியர் வருகை, ஆரியர் வெற்றி' பற்றிய பல கதை மரபுகள் இங்ஙனம் 'வெள்ளையர் வருகை'க்குப் பிற்பட்டனவாகவே காணப்படுகின்றன.)

(பழமையைப் புதுமையாக்க வல்ல பக்தி உணர்ச்சியுடன் புதுமையைப் பழமையாக்கவல்ல பகதிப் பிரசாரம் இந்நாட்டில் எளிதில் இழைந்து விடுகிறது.)

வால்மீகி வாழ்ந்தகாலம் கி.மு. 2-ம் நூற்றாண்டு என்னலாம். தென்னாட்டின் நிலைபற்றி அவர் குறிப்பிட்ட 'பிரசாரப் புளுகுகள்' இன்றைய தென்னாட்டை மனத்தில் கொண்டு பார்த்தால் கூடப் பொருந்தாதவை. அவர் காலத்தில் தென்னாட்டின் நாகரீக நிலை இன்றைய நிலையை விட எவ்வளவோ மேம்பட்டது என்பதை வரலாறு தெளிவாக காட்டுகிறது. தமிழகத்தைப் பற்றிய வரை இதை அவரே ஒத்துக்கொள்கிறார். ஆனால் அவர்

காலத்துக்கும் மூவாயிர நாலாயிர ஆண்டுக் காலத்துக்கு முன்னிருந்தே தென்னாடுபொதுவாகவும், தமிழ், மலையாளப்பகுதிகள் சிறப்பாகவும் உலக நாகரிகத்தின் உச்சியில் இருந்தன என்பதைப் பழம் பொருளாராய்ச்சியும், வரலாறும், ஒருங்கேவிளக்குகின்றன. மோகஞ்சதரோ நாகரிகம் கி. மு. 5000-க்கும் கி. மு. 3000-க்கும் இடைப்பட்டதென்று கணிக்கப்படுகிறது. தென்னாட்டில் தமிழகத்தில் ஆதிச்சநல்லூர், கோயமுத்தூர்ப் பகுதிகளிலும் மைசூரில் சித்தலதுருக்கத்திலும், கிட்டத்தட்ட அதே நாகரிகத்தின் பரப்பை நாம் காண்கிறோம். பல துறைகளில் தென்னாட்டின் அன்றைய நாகரிகம் சிந்துவெளி நாகரிகத்துக்கும் வழிகாட்டியாயிருந்தது. இக்காலத்திலிருந்து எகிப்திய நாகரிக காலம் (கி. மு. 2500-1000), சாலமன் காலம் (கி. மு. 975) ஆகிய எல்லை கடந்து வரலாற்றுக் காலத் தொடக்கம் வரை தென்னாடு எகிப்தியருடனும் பினீசியருடனும் தேக்கு, சந்தனம், முத்துக்கள், மஸ்லின்கள், மயிலிறகுகள், மிளகு ஆகியவற்றின் கடல் கடந்த ஏற்றுமதி வாணிகத்தில் ஈடுபட்டிருந்ததாக அறிகிறோம். இவற்றுள் மிளகு மலையாளநாட்டின் விளைவு. இதுவும் மயிலும் 'முசிறி' என்று அந்நாளில் அழைக்கப்பட்ட மலையாள நாட்டுக் கொருங்கல்லூர்த் துறைமுகத்தின் வழியாகவே கப்பலேற்றப்பட்டன.

இவ்வரலாற்று விளக்கங்களின் மூலம் வால்மீகி தரும் விளக்கம் எத்தகையது?

(பண்டைய தமிழகமுசிறி, அல்லது கொருங்கல்லூர், குரங்கினூர் ஆகி, குரங்காகிய அனுமாரின் பிறப்பிடமாக ஆரியரால் கொண்டாடப்பட்டது விந்தையினும் விந்தை!)

* * *

இலக்கிய ஆராய்ச்சி, வரலாற்றாராய்ச்சியும்விட்டு, இராமாயணம்தரும் அரசியல், ஒழுக்க நெறிமுறைகளை ஆராய்வோம்.

ஆட்சிமுறை நேர்மைக்கும், தாய் தந்தை பேணும் கடமைக்கும் உரிய தியாக வீரனாக இராமன் கொள்ளப்படுகிறான். பெற்றோர் சொல் காப்பதற்காக அரசுரிமை துறந்து, 14 ஆண்டு காட்டில் வாழ்ந்ததே இந்தத் தியாகத்தின் அடிப்படையாகக் காட்டப்படுகிறது.

வால்மீகி இராமாயணத்தில் தசரதர் இராமனைக் காட்டுக்குப் போகும்படி கூறவில்லை. நேர்மாறாக, கைகேயின் சூழ்ச்சியை எதிர்த்து, போராடும்படி கூறுகிறார். ஆயினும் இராமன் தசரதர் செய்யவேண்டியகடமையை எண்ணி, கைகேயியின் கட்டளையை ஏற்கிறான். இங்கே அவன் மக்கள் கடமையை எண்ணியதாகத் தெரியவில்லை. பரதனை மக்கள் விரும்புகின்றனரா! அல்லது பரதன் இதை ஏற்கின்றானா என்றும் கருதவில்லை. குடிமக்களையோ அரச குடும்பத்தின் ஆட்சி வீரரையோ பொருட்படுத்தாமல், அந்தப்புரப் பூசலையே மதித்து, நிலைமையைச் சமாளிக்க முடியாமல் தப்பியோடுபவனாகவே இராமன் காட்சியளிக்கிறான்.

மக்களை ஏமாற்றி இரவோடிரவே ஓடிய செயல் கடமையைப் புறக்கணித்த செயல் என்பது வெளிப்படை.

(மனைவி பாசத்துக்காக சீதையையும் தமையன் பாசத்துக்காக இலக்குமணனையும் கொண்டு சென்ற இராமன், இலக்குமணனின் மனைவியின் பாசத்தையோ கடமையையோ எண்ணிப் பார்த்ததாகத் தெரியவில்லை.)

கடமை, தியாகம், அரசியல் நேர்மை எங்கே இருக்கிறது என்று தேடுபவர்கள் அதைப் பரதனிடம் காணலாம்.

மக்களுக்கொளித்து மனைவியுடனும் தம்பியுடனும் ஓடிய வீரன்தான் மக்களுக்காக தம்பியிடம் மனைவியை ஒப்படைத்த அரசன் என்பதைக் கண்டால், அரசன், புதல்வன், உடன் பிறந்தான், கணவன் என்ற எல்லா நிலைகளிலும் இராமன் ஒரு கோழையாகவே நடந்து கொண்டான் என்ற கருத்து முழு நிறைவுபெறும்.

புராணிகர் வால்மீகி காலத்துக்குப் பின்னர் இக்கோளாறுகளை மனத்தில் எண்ணி அவற்றுக்கு ஒரே விடை கண்டனர்- இராமன் கடவுள், இராவணனைக் கொல்லும ஊழ் கண்ட கடமையே இச்செயல்களில் அவனைத் தூண்டின என்றனர். மனித ஒழுகத்தின் குறைபாடே இங்கே தெய்வீக ஒழுக்கம் ஆக்கப்பட்டது!

மத உணர்ச்சியும் இனஉணர்ச்சியும் இல்லாத பழைய இராமன் எப்படி வரையப்படக் கூடும்? அத்தகைய பழங்காலக் கவிஞன் புதிய வீரச் செயல்நாடி அவன் இளமை முறுக்குடன் புறப்பட்டதாகக் காட்டியிருப்பான்! ஆனால் இத்தகைய வீர இராமன் வேறு, வால்மீகியின் இராமனும் புராண இராமனும் வேறு. முந்திய இராமன ஒரு விக்கிர மாதித்தியன், ஒரு ஒடிஸியனைக் காட்சியளித்திருக்கலாம்.

கட்டிலறைக் காட்சியல்ல !
கைலாயத்தில்

வால்மீகியோ அவருக்குப்பின் வந்த புராண இராமாயண ஆசிரியர்களோ அத்தகைய மக்கட் கவிஞர்களல்ல !

* * *

வாலி படலத்தில் வீரம், ஒழுக்கம், அரசுரிமைக் கடமை, குடும்ப பாசம் ஆகிய எல்லாம் இழந்த

அப்பட்டமான கோழை இராமனையே காண்கிறோம். இராமன் ஆதரிப்பது சுக்கிரீவனை- அவன் வீரமும் ஒழுக்கமும் சொல்லும் தரம் உடையவை அல்ல. இரண்டு உடன் பிறந்தார்களையும் கிளறிவிட்டு, தன் கைவரிசைக் 'காட்ட முன்வந்த அனுமான், இராம பக்தன்! பிற்கால புராணிகருக்கு அவன் இராமனுடன் போட்டியிடும் பக்தித் தெய்வம்!

ஏடா! ராமா! மாவீரனே நீ!

கதாநாயகனுகிய இராமனையும் அவன் நண்பர்களையும்விட, வாலி எவ்வளவு உயர்ந்தவன் என்பதை, கண்ணை மூடிக் கொண்டு, வால்மீகியும் பிறரும் கூறும் கதைகளே காட்டப் போதியவை. அந்தக் கதைகளை மாற்றிக் கூறுகிற 'புனைகதைத் திறமை' கூட இந்த ஆரியக் கவிஞர்களுக்கு இருந்ததில்லை என்று காணலாம். வாலி ஒரு பகை இராக்கதனைத் தாக்க ஒரு குகையினுள் செல்கிருன். தம்பி சுக்கிரீவன் இராக்கதர்கள் ஓடாமல், வாசலில் காவலுக்குநிறுத்தப்படுகிருன். போர் பல ஆண்டு நடக்கிறது. எதிரி கொல்லப்பட்டபின், வாலி வெளிவருகிருன். காவலாகநின்ற தம்பி குகைவாயிலைக் கல்லாலடைத்திருந்த காட்சி காண்கிருன். தன் பேருடல் வலிமையினுல் வாலி கல்லை உதறித்தள்ளி விட்டு, ஆட்சியைக் கைக்கொள்கிருன். சுக்கிரீவனைப் போன்ற இத்தகைய குடும்பத்துரோகி, கோழைகயவனைத்தான் வாலிக்கெதிராகச் சூழ்ச்சிக்காரக் கோழையாகிய இராமன ஆதரிக்கிருன்!

வாலியைத் தான் கொன்றதற்கு ஒரு நியாமாக, சுக்கிரீவன் மனைவி உருமாவிடம் வாலி தவருக நடந்து கொண்டதை இராமன் சுட்டிக் காட்டுகிருன். ஆனுல்இது உண்மைக்கு மாருக வலிந்து கூறப்பட்ட குற்றச்சாட்டு—வால்மீகி பழங்கதைப் பண்பை மாற்றவேண்டிய இடத்தில் மாற்ருமல் அப்படியே கூறுகிருர். இராமனைவிட வாலியின் ஒழுக்கத்தவற்ருல் மிகுதி பாதிக்கப்பட்டவள் அவன் மனைவி தாரா. அவள் கணவனைப் பற்றிப் புலம்பும் போது,

எல்லாக் குற்றங்களுக்கும் நீயே பழி
[யேற்ருய்?
சுக்கிரீவன் நாடிழந்தான்.
உருமா கணவனைப் பிரிய நேர்ந்தது·
இவற்றுக்கு நீ பழியாளுய்!

சுக்கிரீவன் மனைவியை விட்டுப் பிரிய நேர்ந்ததைத் தவிர, வாலியால்வேறு தவறு நேர்ந்திருந்தால், அதை அவள் கூறியிருப்பது இயப்பு. அவனிடம் வேறு தவறில்லை என்பது மட்டுமன்று, அத்தகைய தவறு இராமன் நண்பன் சுக்கிரீவனிடம் தான் இருந்தது என்பதையும், வால்மீகியே குறிக்கிருர். அதை கூறுபவன் அந்தநண்பர் கூட்டத்தில் சேர்ந்து விட்ட வாலியின் மகன் அங்கதனே. இதே செய்தியை அனுமான் கூடக் குறிப்பிடுகிருன். வாலியைப்பற்றி அவன் குறிப்பிடும்போது, "அன்புடையவன், மக்கள் உள்ளங்களிலெல்லாம் இடம் பெற்றவன். வள்ளன்மை உடையவன். பொறுமைக் கடல், உண்மைநெறி பிறழாதவன். இத்தகையவன் மாள்வு மற்றவர் வாழ்வைவிட உயர்ந்தது" என்று புகழ்கிருன்.

இராமாயணக்கதையில் உண்மையான கதாநாயகனுக்குரிய பண்புடையவன் ஒருவனஉண்டு என்ருல், அதில் முதல் உரிமை வாலிக்கே. இராவணனுக்குக் கூட இரண்டாம் இடமேஉரியது.

* * *

வாலி கதைக்கு முந்தியது சூர்ப்பநகைகதை. அது வாலி கதையை விட இராமாயணக் கதைக்கு உயிர் நிலையான பகுதியும் ஆகும்.

சூர்ப்பநகையின் ஒரே குற்றம் அவள் இராமனைக் காதலித்தாள் என்பதாகும். இன்னெரு தவறும் வால்மீகியால் குறிப்பாகக் காட்டப்படுகிறது. அவள் காதலைச் சீதை இருக்கும்போதே தெரிவித்து விட்டாள். குடும்ப ஒழுக்கமுடைய ஒரு கணவன் இச்சமயம் நடக்கவேண்டிய முறையில் இராமன்நடக்கவில்லை அவள் காதலை மறுக்கும் உரிமை அவனுக்கு உண்டு. அவன் அதை நேரடியாகச் செய்யவில்லை. கேலியும் நையாண்டியும் செய்து சூர்ப்பநகைக்கும் சீதைக்கும் பழிகேடு செய்கிருன். 'எனக்குமனைவியிருக்கிருள் பார்! இலக்குமணனுக்கு இல்லை. அவனைக்கேள்' என்கிருன். இலக்குமணன் "எனக்கு வீட்டில் இருக்கிருள்" என்கிருன். அண்ணன் சீதையை ஒரு இடைஞ்சலாகச் சுட்டிக்காட்டினுன். தம்பியும் எனக்கு உன்காதல் வேண்டாம் என்று நேரடியாக மறுக்க

வழிப்பறித்திருடன்! வால்மீகி முனிவன்!

வில்லை. இந்நிலையில் காட்டு வாழ்வு வாழும் காரிகை என்ன செய்யக்கூடும். சீதையை அப்புறப்படுத்திப் பார்ப்பது தவிர வேறுவழியில்லை.

இதனை அடுத்த பெண் பழிச் செயல்கள் காமுகர்கள் செய

லாகவல்லாமல் வேறு எவ்வகையில் பொருந்தும்?

இராமன் கடவுள் என்ற கற்பனை தவிர வேறு எதுவும் இந்தக் கதை கேட்டு மகிழும் பண்பை நன்மக்களுக்குக் கொடுத்திருக்க முடியாது. கடவுட்பண்பு ஏற்றப் படாத வால்மீகி இராமாயணத்தில், இது போன்ற காட்சிகள் காவிய அழகைக் கெடுக்கும் அருவருப்புச் சுவை தட்டுவதன் காரணம் இதுவே.

இதேபோன்ற காதற்கட்டத்தில் இராவணன் எப்படி நடந்து கொள்கிறான் என்று பார்ப்பது பயனுடையது. புராணங்களில் இந்நிகழ்ச்சி கூறப்படுகிறது. அச்சமயம் இராவணன் இளைஞன் என்பதும் குறிப்பிடப் படுகிறது. அவன் காதலித்த அரம்பையோ, இந்திரன் நகரில் ஒரு பொதுமகள். முனிவர்கள் அமைதியைக் கெடுக்க இந்திரன் அவளையும் மற்ற தேவமகளிரையும் பயன்படுத்தினான். நண்பர்களுக்கு விருந்தாகவும் அவர்களை அளித்தான். இந்திரனை வென்ற இராவணன் அவளை அடையக் காதலை எதிர்பார்த்திருக்க வேண்டியதேயில்லை. ஆனால் காதல் நிறைவேறாததாலேயே இளமை வெறி, வெற்றி வெறி, இரண்டுக்கும் ஆளாகிறான். அப்போதும் அவளுக்கு உடல்கேடுகள் எதுவும் செய்ய அவன் முனையவில்லை.

* * *

இராக்கதர்களை பழிப்பதற்கே எழுந்த ஏடு வால்மீகி இராமாயணம். ஆனால் பழம்பாடற்கதைகளின் பண்புகளை அவராலும் முற்றிலும் மறைக்கமுடியவில்லை. வசவுகளைத் தவிர, இராக்கதர்களின் தீயபண்பாக அவரால் எதுவும்குறிக்கப்படவில்லை. விராதனும் கவந்தனும் மட்டும் மனிதரை விழுங்குபவராகக் கற்பனை செய்யப்பட்டனர். ஆனால் இலங்கை அரக்கர்கள்பண்பு, அயோத்தியின் ஆரிய மக்கள் பண்பைவிட எத்துறையிலும் உயர்வுடையதாகவே தீட்டப்படுகிறது. ஆரிய வேதங்களைக்கூட அவர்கள் ஆரியரைக் காட்டிலும் நன்காராய்ந்தறிந்தவர்கள் என்று ஒத்துக் கொள்ளப்படுகிறது. குடிப்பிறப்பு, அழகு, கற்பு, வீரம், கல்வி, ஆகிய துறைகளில் அவர்கள் மனித உலகின் மேம்பட்டவர்களாகவும், ஆரியர், தேவர் ஆகிய இருசாரார்களையும் விட உயர்ந்தவர்களாகவுமே காணப்படுகின்றனர்.

வால்மீகி இராமாயணத்தின் இக்குளறுபடிகளைக் கண்டால் தான், மக்கள் மன்றத்தில் வால்மீகியின் பெயர்மட்டும் வழங்கி, அவர் இராமாயணம் மறைக்கப் படுவதின் மர்மம் விளங்கும். மக்கள் மன்றத்தில் வால்மீகியின் பொருந்தாத பழங்கதை—புதுக்கதை முரண்பாடுகளைப் பக்திப் பூச்சால் மெழுகும் வேலையைத்தான் (கம்பராமயண முதலான) பல தாய்மொழி இராமாயணங்களும், அவற்றைப் பின்பற்றி வடமொழியின் புதிய அத்யாத்ம ராமாயணமும் செய்தன.

எழுத்தச்சனும் துளசிதாசரும் வால்மீகி ராமயணக் கதையைத் தாய்மொழி இராமாயணங்களில் துவைத்து, அத்யாத்ம ராமாயணச்சாயம் தோய்த்து, தத்தம் கற்பனைத் திறமைகளால் கரையிட்டு அணிசெய்து, உலகுக்கு அளித்தனர்.



உள்ளம்மட்டும் பூக்காடாம்! ஆனால் உடல்.........?

இனப் பண்பை நிறைவு படுத்திய சிறந்த கவிஞன் வால்மீகி! கடவுட் பண்பை நிறைவு படுத்திக் காட்டிய ஒரே இராமாயணக் கவிஞன் எழுத்தச்சன்! சமயப் பிரசாரத்தை நிறைவு படுத்தியவன் துளசிதாஸ். மனிதப் பண்பைச் செப்பப்படுத்திக் காட்டிய ஒரே இராமயணக் கவிஞன் கம்பன்! என்று நுட்பதிட்பம்படக் கூறலாம்.)

பேராசிரியர் க. அன்பழகன் எம். ஏ.
அவர்களின் எழுத்தோவியங்கள்

அழகரசி	1	4	0
அறிவும் சிந்தனையும்	0	8	0
வளரும் கிளர்ச்சி	0	8	0
தொண்டா? துவேஷமா?	0	8	0
வகுப்புரிமை போராட்டம் (கம்யூனல் ஜி. ஓ.)	1	12	0

ஒவ்வொருவர் கையிலும் இருக்கவேண்டிய ஒப்பற்ற ஏடுகள்

கிடைக்குமிடம் :

பாரி நிலையம்

59, பிராட்வே, சென்னை-1.

பரிதி செயல்



கவிஞர் வாணிதாசன்

செந்நெல் விளைந்ததுவும்
தீங்கரும்பு முற்றியதும்
இந்நாள் எவர்செயலோ தோழி?—நல்
இன்பப் பரிதிசெயல் தோழா! 1

வாடை பனிகாற்று
வாய்இறுக்கும் ஊதைகுளிர்
ஓடிமறைந்த தென்ன தோழி—உயிர்
ஓம்பும் பரிதிசெயல் தோழா! 2

காடெல்லாம் பூப்பூத்துக்
காய்கனிக ளேமுதிர்ந்து
தேடிஅழைப்ப தென்ன தோழி!—நாம்
செம்பரிதி வாழ்த்துதற்குத் தோழா! 3

தாமரையில் சேல்புரளத்
தாழ்வரைகள் எக்களிக்க
நாமடைந்த பேறென்ன தோழி—தை
நற்பொங்கல் திருநாளே தோழா! 4

ஆடைதி ருத்திப்பொன்
அணிதிருத்தி நம்பெண்கள்
பாடிமகிழ்வ தென்ன தோழி?—நாம்
பாற்பொங்கல் உண்டாடத் தோழா! 5

மரமண்டைகள்

அருண்மொழி. B.O.L.

யாரையடா சொன்னாய்? வற்றாத ஜீவநதிகள், வளைந்தோடுஞ் சிற்றாறுகள், வான்முட்டும் மலை முகடுகள், வளமிக்க வயற்காடுகள் கால்வைத்த இடமெல்லாம் கைலாச வைகுண்டவாசிகளின் திருக்கோயில்கள், இன்பந்தரும் இராமாயணம், மயக்கம் தரும் மாபாரதம், பழம் பெருமை பேசி நிற்கப்பத்துப்பாட்டு, பரிபாடல் பதிற்றுப்பத்து, கான மழை பொழிய தேவாரம் திருப்புகழ், சைவநெறி தழைக்க குன்றக் குடிகள், திருப்பனந்தாள்கள், இறந்துபட்ட வைணவத்திற்கு இரணச் சிகிச்சை செய்ய நல்ல ராஜாஜிகள். இத்தனையும் உள்ள இக் கன்னித்தமிழ் நாட்டில் பிறந்த எம்மைப் பார்த்தா மரமண்டைகள்என்று சொன்னாய்? இறுமாப்புக்காரனே இரணியன் வழித்தோன்றலே. இறுதிக்காலம் கிட்டிவிட்டதடா உனக்கு'' என்று ஒருவர் கேட்கவும் கூடும் அல்லவா?

கேளடா கேள். காதைத் தீட்டிக்கொண்டு கேள். நீ கேட்கத்தான் கூறுகிறேன். பார்வை கெட்டவனே. பண்பை மறந்தவனே. பரிதாபத்திற்குரியவனே. கண்ணைத் திறந்து பார். நன்றாகப்பார். வந்தாரை உண்பித்து வருவோரைப் பார்த்திருந்த சோணாடு சோம்பிக் கிடப்பதைப்பார். ஆலவாயப்பன் அங்கயற்கண்ணியோடு எழுந்தருளிய, பாலும் தேனும் கலந்தோடிய, தலையாலங்கானத்துச் செருவென்றபாண்டியன் நெடுஞ்செழியனின் நன்னாடு பசிப்பிணியாம்பஞ்சணையிலே புரளுவதைப் பார். வகையற்ற வடநாட்டின், வாளேந்தத் தெரியாதான் வக்கணை பேசுவதா? அதைக் கண்டும் வாளாவிருப்பதா என வஞ்சி சூடிப் புறப்பட்ட வஞ்சியாத வஞ்சி நாட்டார் வஞ்சிக்கப் படுவதைப்பார். கொஞ்சும் மொழி பேசும் கோதையர் மடியிலே பிஞ்சுக்கரம்நீட்டிப் பாலோ பால் எனப் பறக்கும் குழவிகளை பார். பாரடா பாதகனே, பணம் என்றால் பல்லிளித்துப் படையென்றால் பதுங்குகின்ற பண்பாளர் பாங்காக வாழ்வதைப் பார். ஆதியும் (ஆதிமந்தி) மருதியும், காவற்பெண்டும் கண்ணகியும் கற்பிற்கு இலக்கணங் காட்டி நின்ற இன்பத் தமிழகத்தில் விபசாரத்திற்கு விலைபேசி நிற்கும் வனிதா மணிகளைப் பார். ஏன் இந்த நிலை? எப்படி வந்தது? அறிவின் பிறப்பிடமாய், அன்பின் உறைவிடமாய் ஆற்றலின் இருப்பிடமாய், அமைதியின் நிலைக்களமாய், கற்பின் புகலிடமாய் அநீதியின் கொலைக்களமாய் விளங்கிய இத்திருவிடத்தில் உன்போன்ற சில மரமண்டைகள் இருப்பதால்தான், தெரிகிறதா! என் மானிலச் செல்வமே.

என்ன தலையசைக்கிறாய்? இது ஆராய்ச்சிக் குரியதொரு விஷயம்தான் என்றா? ஏறுகிறதா உன் மரமண்டையில்? பறக்கும் தட்டும் மிதக்கும் விமானமும், ஜப்பான் பெல்ட்டும் ஜலவாயுக்குண்டும் கண்டுபிடித்துக்கொண்டு குஷியாக வாழ்கின்ற அமெரிக்க, ரஷ்ய ஜர்மானிய கிரேக்கப் போர்த்துகீசியச் செஞ்சீன சமத்துவம் பேசும் சமரச வாதிகளும் வெட்கப்படும் அளவுக்கு வேதனை தரும் திருவிழாக்கள் இந்தநாட்டிலே. பல்லுயிரும் பலவுலகம் படைத்தளிக்கும் பரமனின் பல திருவவதாரங்கள் இந்தப் பாங்கான நாட்டிலேதான். வெண்ணெய் திருடிய கண்ணன் முதல் கண்ணைக் கொடுத்த கண்ணப்பர்வரை வாழ்ந்தது இந்த விசித்திர நாட்டிலேதான். தன்னவன் ஒருவன் பின்னால் கொல்லப்பட்டதுக்கநாளை (தீபாவளி) புனலாடிப் புத்துடை தரித்து புன்முறுவல் பூக்கப் பூவாணம் (மத்தாப்பூ) கொளுத்தி மகிழும் கோழைகளைக் கொண்டதும் இக்கோல் வளையாத் தமிழகத்தில்தான். தன்னுடன் பிறந்தாளையோ, தன்னண்ணன் பத்தினியையோ பழித்துரைத்தாலும் பாதகமில்லை யெனறிருப்போர் பார்த்தும் கேட்டுமறியாதான் மனையாளைப்பழித்தால் (சீதை, பாஞ்சாலி) பங்காளிகள் போல் பதறி எழும்பக்த கோடிகள் உள்ளதும் இந்நாட்டிலேதான். பஞ்சமாபாதகங்களைச் செய்துவிட்டுப் பிராயச்சித்தம் செய்து கொள்ள பழநிபாபநாசம், தில்லை திருவாரூர், திருத்தணி திருப்பதி; போன்றஸ்தலப்பெருமை பெற்றதும் இந்நாடுதான். வறுமையைப் போக்க வழியுண்டா என்றால் வழிமறிச்சான், வானம் பார்த்தான்களுக்கு (தேவதைகள்) விழா நடத்தும் விதண்டாவாதிகள் வாழ்வதும் இந்நாட்டிலேதான். தலையிலே பேன் பிடித்தால் நாவிதன் கடையிலே போடவேண்டிய திருமுடியைத் திருப்பதியிலே போட்டிடும் தியாகமூர்த்திகள் திகழ்வதும் இந்நாட்டிலேதான். அறநெறி காட்டிய அண்ணல் காந்தியை, மதவெறிதுரத்த மாளச் செய்த மாபாதகன்தோன்றிய பரம்பரையார் பட்டங்கட்டியாள்வதும் இந்நாட்டிலேதான். வீட்டிலே உலா

வினால் ப்ளேக்கிலே (கொள்ளை நோய்) சாவோம் என்று நஞ்சிட்டுக் கொல்லப்படும் (மேல்நாட்டார்) நாலுகால் பிராணி தெய்மாய் போற்றப்படுவதும் இங்குதான் கேட்டாயா? போதுமா? இன்னமும் வாயைக் கிளறாதே. வேதனையைத் தூண்டாதே. விவேகமற்றவனே! குதர்க்கும் பேசும் கோணல் மதியாளனே! கூறுகிறேன்கேள். எவனோ ஒருவன. எம்மவன் அல்லன். எம்மொழி, எம்நாடு ஏதுமறியான். எங்கிருந்தோ வந்தான். உன் நாட்டானை, உன்உடன் பிறந்தானை, மொழிப்பற்றுக் காரணமாய் விழிப்புற்றுவீறு கொண்டெழுந்தவனை "மடையா" என்றான நீயோ வெல்செட் (well said) என்றாய். அரசியல் நாகரிகத்தை அகில உலகமும் அறிய அறைகூவி நின்றானைக் காட்டுமிராண்டியே என்றான். கைதட்டி ஆரவாரித்தாய். "கடுகு சிறுத்தாலும் காரம் போகாது," என்றார்களே. அப்படியானால் உன் உடல் வெறும் மாமிசமலை தானா? உணர்ச்சி யென்பது மருந்துக்கும் கிடையாதா? இருந்திருந்தால் காட்டியிருப்பாய் கை வரிசையை; குதித்திருப்பாய் களத்திலே. ஆனால் அதற்குப் பதிலாக ஆகா என்று அப்ளாஸ் அல்லவா கொடுத்தாய். மதத்திற்காக மார்தட்டும் மரமண்டையே! மனிதனே காற்றில்பறக்கிறான் என்றால் அவனால் படைக்கப்பட்ட,அவன் விரும்பின் அழியக் கூடிய மதம் எம்மாத்திரம் என்று சிந்தித்துப்பார்த்தாயா? சோம்பேறிகள் சொல்லி வைத்த சோற்றுக்கு வழியில்லாத விழாக்களைப் பற்றி எண்ணிப்பார். உழைப்பாளிகள் வஞ்சனையில்லாது உழைத்திட்டு அதன் பயனை அடைந்திட்ட பெருமையைப் பறைசாற்றும் பொங்கற் பண்டிகையைப்பார். ஊதாரியே, உதவாக்கரையேசீர்தூக்கிப்பார். காசைக் கரியாக்கும் காமன் பண்டிகை எங்கே? சிந்திய வியர்வையைச் சொட்டும் தேனாகப் பெற்றுக் கொடுக்கும் பொங்கற் பண்டிகை எங்கே? குனியாமல் நிமிராமல், குத்தாமல் வெட்டாமல், ஆயுதமே பார்த்தறியாத அறிவிலிகள் கூறிடும் ஆயுத பூசையெங்கே? சங்கடம் தீரவழி; சளைக்காமல் உழைப்பதே என்று சகலருக்கும் பறைசாற்றும் சங்கராந்தி (பொங்கல்) எங்கே?

பொங்கற் புது நாளிலே உன்னோடு நீண்ட நேரம் நின்று பேச அவகாசமில்லை. வருகிறேன். அடுத்த ஆண்டில் அவகாசமாக சந்திக்கிறேன். அதற்குள் நீயும் சிந்தித்திடு, என்ன சரிதானா?

வணக்கம்

* * *



நாம் நாமாகவேண்டும்

தமிழனது முழு உள்ளத்துக்கும் மகிழ்வு தருவது, இந்த ஒரே ஒரு திருநாள்தான்.

தமிழன் கொண்டாடும் இந்த ஒரே ஒரு திருநாளில்தான் அர்த்தம் இருக்கிறது—ஆனந்தம் இருக்கிறது — அனைத்தும் இருக்கிறது. மற்றைய திருநாட்களிலெல்லாம் தமிழர்களது நாசூக்கான தற்கொலை முயற்சிகள்தான் காணப்படுகின்றன!

இந்தத் திருநாள்...?

உழவனிடமிருந்து முதலில் தொடங்கி, நம் அனைவரிடமும் வந்து முற்றுப் பெறுகிறது. உழவன் தான்பட்ட பாட்டின் பயனைக் காணுகிறான் — அப்போது, அனைவருமே மகிழ்வு காணமுடிகிறது. இதிலிருந்துதான் அனைவரின் மகிழ்ச்சிக்கும் உழவனது மகிழ்ச்சிக்கும் இருக்கும் அந்தரங்கமான தொடர்பைப் புரிய முடிகிறது. இது பற்றி இன்னும் சில சொல்ல ஆசை.

பொங்கல்—என்ற வார்த்தை அடுப்பிலே பொங்கும் பாற்பொங்கலை நோக்கி எழுந்தது தான் என்கின்றனர் பலர். உழவனின் உள்ளம் அந்த நாளில் மகிழ்ச்சியினால் பொங்குகிறது—அதைக் கண்டு அனைவரின் மனமும் மகிழ்ச்சியினால் பொங்குகிறது — இதைக் கண்டுதான், சதா இதயலோகத்திலேயே சஞ்சரித்துக்கொண்டிருந்த நமது தமிழறிஞர்கள் உழவனது உள்ளம் உவகையால் பொங்கும் இந்த நாளுக்கே பொங்கல் திருநாள் என்று பெயர் இட்டிருக்கலாமென யூகிக்கிறேன்.

நியாயமாக மகிழ்ச்சியினால் பொங்கவேண்டிய அந்த உழவனது உள்ளம் இந்த நன்னாளில் பொங்குகிறதா?—பொங்க முடிகிறதா? — என்று பார்த்தால் அதுதான் இல்லை.

பாடுபடுகிறான்—பலனைத் தன் கைகளாலே அளந்து குவிக்கிறான். ஆனால், அவன் கைகளாலேயே அந்த பலன் அனைத்தையும், வயலுக்கே வந்திராத ஒரு பயல் வீட்டில் கொண்டு குவிக்க வேண்டியதாய் இருக்கிறது.

கலைவாணர்
என்.எஸ்.கிருஷ்ணன்

இரவென்றும் பகல் என்றும் பாராமல் பாடுபட்ட உழவன் வெறுங்கைகளுடன் தன் வீடு திரும்பிச் செல்கிறான்; அவன் தூயவன்தான், உழைப்பவன் தான். சந்தேகமில்லை! ஆயினும் அவனுக்குத்தான், சகல இன்னல்களும் நாளுக்குநாள் சொந்தமாகிக்கொண்டு வருகின்றன. இந்த நிலையில் அவன் மனம் எப்படி மகிழ்வினால் பொங்கமுடியும்......? அவன் மனம் பொங்காதிருக்கும் நிலை, கடைசியில் கலைஞர்களின் மனத்தையும் கலக்கி, அவர்களது மனத்தையும் மகிழ்ச்சியினால் பொங்கமுடியாமல் செய்துவிடுகிறது. உழவன் முதல், கலைஞன் வரை தலை குனிந்து கன்னத்தில் கைவைத்து அப்படியே அமர்ந்துவிட நேரிடுகிறது—தலை குனிந்து கன்னத்தில் கைவைத்துவிட்ட அந்த நல்லவர்கள், நிமிர்ந்து பார்ப்பதற்குள்ளே தான், யுகப் புரட்சி ஏற்பட்டு விடுகிறது. இதுபற்றி உலகச் சரித்திரமே நமக்கு ஒன்றிரண்டு சான்று கூறக் கேட்கலாம்.

இதை நாம் இன்று நினைக்கக் காரணம் :

நமது நாட்டில் இந்தத் திருநாளில், இந்தத் திருநாளுக்குப் பூரண காரணமாக விளங்கும் உழவன், பூரண மகிழ்வுபெற முடியாமல் குடும்பத்துடன் தவிக்கிறான்.

பெரும்பான்மையான உழவர்களின் வீட்டில், அடுத்த வீட்டிலிருந்து கடனாக வாங்கப்பட்ட அரிசிதான், "பொங்கலோ பொங்கல்" என்ற போலித்தனமான வாழ்த்தொலியுடன் பொங்கிக்கொண்டிருக்கிறது.

அவன் படும் இந்தத் துயரத்துக்காக நாம் வெட்கப்படவேண்டும். அப்படி நாம், என்றைக்கு நல்லவர்களின் துயரங்களுக்காக வெட்கப்பட்டு, வெட்கப்பட்டுப் பழகி வருகிறோமோ— அன்றைக்குத்தான் "நாம், நாம் ஆனோம்" என்று அர்த்தம்!

* * *

வெறும், புலவர்களின் நகைச்சுவையை எடுத்துத்தர வருகிறார் நண்பர். அதனால் பல தத்துவங்களும் பின்னிக்கிடக்கின்றன ; நாட்டிற்கு வேண்டாத தத்துவங்கள்கூட

இலக்கியச் சோலை

மெ. சுந்தரம் B. O. L.

வில்லெடுத்து விளையாடிய மக்கள், சொல்லெடுத்து விளையாடத் தலைப்பட்ட காலத்தில்தான் இலக்கியத்தில் நகைச்சுவை தோன்றியது. அந்த வீர விளையாட்டு உடல்வன்மையைப் பொறுத்து எழுந்தது. ஆனால் இப்புலமை விளையாட்டோ அறிவு உரத்தை முன்னிட்டுத் தோன்றியது. ஒன்றுக்கு அடிப்படை புறம்; பிறிதொன்றுக்கு அடிப்படை சுகம்.

வில் விளையாட்டு, உடல் சோர்வை நீக்கி உற்சாக மூட்டியது போல, சொல் விளையாட்டு உள்ளச் சோர்வைப் போக்கி உவகை ஊட்டியது. இதனால் பேச்சிலும், எழுத்திலும் பெருகி வரத்தொடங்கியது இந்தநகைச் சுவையை வேடிக்கையாக பேசுவதன் மூலம் வேதனைகளை மறக்க முடியும், காரசாரமான பொருள்களை விவாதிக்கும்போது கூடச், சிறிது நகைச் சுவை கலந்தால், கடுமை குறையும் என்ற கருத்து உரம் பெற்றுவரும் இக்காலத்தில், நகைச்சுவையை விரும்பாதார் யாருமிலர். நாகரிகம் மலரத் தொடங்கிய காலத்தில் கடும் உழைப்பில் ஈடுபட்டிருந்த ஆதிகால மனிதனுக்குத் தன் பேச்சிலே நகைச்சுவையையும் கலந்தால்தான் இன்பமாக இருக்கும், கவர்ச்சியாக இருக்கும், என்ற கருத்துத் தோன்றியிருக்கலாம். அதனால் தான் பேச்சிடை சிரிப்புக் கலந்திருக்கலாம். செய்கைகளில், நடிப்புக்களில் செறிந்திருந்த சிரிப்பு, பேச்சிலும் வர முற்பட்ட காலம் நாகரிக வாழ்வின் தொடக்க காலமாகலாம். அக்காலத்தே வித்திடப்பட்ட இக் கலை, வானுற வோங்கி வளம்பெற வளர்வதாயிற்று. நாகரிகம் மிக, மிக, இக்கலையும் காலத்தோடு ஒட்டிப் பெருவளர்ச்சி எய்தியது.

மிகவும் தொன்மையான இலக்கணமாகிய தொல்காப்பியத்தில், நான்கு பொருள்காரணமாக நகை பிறக்கும் என்று ஆசிரியர் தொல்காப்பியர் கூறுகிறார். இடைக்காலத்து இலக்கியங்களில் இச்சுவை விரவிக் கிடக்கின்றது. மிகவும் பிற்காலத்து இலக்கியங்களில் இது கலந்து புலமையின் அறிகுறியாக வெளிப்பட்டது. உரை நடை, செய்யுள் ஆகிய இரண்டிலும் இவை கலந்து வெளிவரத் தொடங்கின. அப்படிக் கலந்து காட்சி அளித்தவற்றுள் சிலவற்றை இங்கு காண்போம், வாழ்க்கை நிகழ்ச்சிகளிலும், செய்யுள்களிலும்.

கடிகை முத்துப்புலவர் கடுநோய் வாய்ப் பட்டிருந்தார். படுத்த படுக்கையாய் இருந்தார். உணவு உட்கொள்ள முடியவில்லை. அதனால் அவருடைய பெண்மக்கள் துணியில் பாலை நனைத்து வாயில் பிழிந்து ஊற்றினர். சிலநாட்செல்ல அப், பால் கூடத் தொண்டையில் இறங்குவது அரிதாயிற்று. மிகவும் வருந்தமுற்ற அவர் பெண்மக்கள், 'ஏன் அப்பா, பால் கூடக் குடிக்க மாட்டேன் என்கிறீர்களே, பால் கசக்கிறதா?' என்று கேட்டார்கள். அதற்கு அவர், "பாலும் கசக்கவில்லை, துணியும் கசக்கவில்லை." என்றார். அப்பொழுதுதான் அவர் மக்களுக்கு, பால் துணியைக் கசக்கிப் பிழிந்து அழுக்குப் போகாதிருப்பது தெரிந்தது. இப்படி இறப்போடு போராடுகின்ற காலத்திலும், புலவர், 'கசக்கவில்லை' என்ற சொல்லில் நயம் காட்டி, 'கசப்புத்தரவில்லை கசக்கி அழுக்குப் போக்கவில்லை' என்ற பொருள்கள் படும்படி பேசியிருக்கிறார். சர்க்கரைப் புலவரும், சவ்வாதுப் புலவரும் ஒருநாள் ஒருவரையொருவர் கண்டு உரையாடிக் கொண்டிருந்தனர். அப்பொழுது சர்க்கரைப் புலவர்; 'சவ்வாது மணம் மூக்கு மட்டும்; சர்க்கரைச் சுவை கண்டமட்டும்' என்று கூறினார். உடனே சவ்வாதுப் புலவர், 'அதுவுங்கண்ட மட்டும்' என்று கூறிப் புலவர் பேச்சையடக்கினார். சர்க்கரைப் புலவர், 'கண்ட மட்டும்' என்பதை, 'கண்ட இடங்களிலெல்லாம்' என்ற பொருளில், 'சர்க்கரைச் சுவை கண்டமட்டும்' என்று கூறினார். ஆனால் அவரை அடக்க நினைத்த சவ்வாதுப்புலவர், 'கண்டமட்டும்' என்பதை 'கழுத்துமட்டும் என்ற பொருளில் வைத்துக் கொண்டு (கண்டம் கழுத்து.)' அதுவுங் (அந்தச் சர்க்கரையும்) கண்டமட்டும் (தான்) என்று கூறி முடித்தார் சர்க்கரையார் சொல்லில் கரைந்துபோனார்.

ஒரு புலவர் புற்றொரு புலவர் வீட்டுக்கு விருந்திற்குச் சென்றிருந்தார். விருந்துப் புலவர் உண்டு முடிந்ததும், வீட்டுக்காரர், 'உண்ட இடத்தில் சாணி தடவு' என்று தன் மனைவியினிடத்தில் கூறினார். உடனே

விருந்துண்ட புலவர், 'சொன்ன இடத்தில் தடவு' என்றார். வீட்டுக்காரர்வேடிக்கையாக 'உண்ட இடம்' என்பதை, 'உண்ட இடமாகிய தரை, உண்ட இடமாகிய வாய்' என்று இருபொருள் படும்படிக் கூறினார். கேட்டுக்கொண்டிருந்த விருந்துப் புலவர், அடித்த வாய் துடைத்தது போல, 'சொன்ன இடத்தில் தடவு' என்றார். இவரும், 'சொன்ன இடத்தில்' என்பதை, 'சொன்ன இடமாகிய தரை, இந்தச் சொல்லைச் சொன்ன இடமாகிய வாய்' என்று இரு பொருள் பெறப்படும் படியாக உரைத்தார். வீட்டுப் புலவர் மௌனியானார். அம்மையார் சிரித்துக் கொண்டு சொன்னதைச் செய்ய முற்பட்டார்,

ஒரு புலவர் ஒரு அரசனிடம் பரிசில் பெறச் சென்றார். புலவரின் புலமை சிறப்பை அறிந்த அரசன் பொன் தட்டில் நிறையப் பொருள் வைத்துப் புலவர் முன் நீட்டினான். பரிசில் பொருள்களைக் கையில் எடுத்துக் கொண்ட புலவர், 'தட்டு யாருக்கு' என்று அரசனிடம் கேட்டார். புலவரின் பேராசையை அறிந்துகொண்ட அரசன் ஒருநொடி யோசித்து, 'தட்டு உமக்கே' என்று மறுமொழி கூறினான். தட்டு என்பது, பொன் தட்டு என்றும் பஞ்சம் என்றும் இருபொருள் படும். பொன்னை, மணியைப் பெற்ற புலவருக்கு ஆசை அத்துடன் நில்லாமல் தட்டிலும் சென்றது. ஆதலால், 'தட்டு யாருக்கு' என்றார்; ஏனென்றால் அரசன் தன் கையில் தட்டை ஏந்திக் கொண்டிருக்கிறான். இதை உணர்ந்த அரசன் புலவரின் ஆசையைத் தட்ட எண்ணி 'வறுமையில் வாழ்ந்து, பஞ்சத்தில் அடிபட்டுக் கிடக்கும் உமக்குத்தான் தட்டு (பஞ்சம், பொன் தட்டு) சரியே ஒழிய எனக்குத் தட்டு வேண்டாம்' என்ற பொருள்பட, 'தட்டு உமக்கே' என்றான். இதனின்று அரசரும் புலவோர் போலவே சொல் நயத்தில் வல்லவராய் இருந்தனர் என்பது நன்கு வெளிப்படும்.

கிழவர் ஒருவர்; பெரிய கஞ்சன். அவருடைய பேரன் 'தாத்தா' என்று அவரை அடிக்கடி கூறுவதைக்கூட அனுமதிக்கமாட்டாராம். ஏனென்றால் 'தாத்தா' என்ற சொல், தா, தா (கொடு, கொடு) என்று கேட்பதைப் போல இருக்கிறதாம். அவ்வளவு கணக்குப் போடும் பேர்வழி. எச்சில் கையால் கூட காகம் ஓட்டாத எமகாதனிடம், தா, தா என்று நச்சரித்தால் எப்படிப் பொறுத்துக் கொள்வார்?

ஒரு புலவர் தலையில் பெரிய சுமையைத் தூக்கிக்கொண்டு சென்றார். வழியில் அவரைச் சந்தித்த அவர் நண்பர், 'என்ன புலவரே! தலையில் தாங்கமுடியாத சுமை' என்று கேட்டார். அதற்குப் புலவர் 'தலைவிதி வசம்' என்றாராம். இதனை, 'தலைவி-திவசம்' என்றும், 'தலைவிதி வசம்' என்றும், இருபொருள் படும்படியாகக் கூறிவிட்டார். 'என் மனைவி இறந்துவிட்டதனால் அந்தத் திவசச் சடங்கிற்கு எடுத்துச் செல்கிறேன்' என்ற பொருளில், 'தலைவி திவசம்' என்றும் "இதை நான் தூக்கவேண்டும் என்று தலைவிதி இருக்கிறது என்ற கருத்தில் 'தலைவிதி வசம்'" என்றும் கூறினார்.

ஜமீந்தார் ஒருவரை ஒரு புலவர் பார்க்கச் சென்றார். ஜமீந்தாரின் கேளிக்கைகளையும், ஆடல் பாடல் சிறப்புக்களையும் பார்த்த புலவர், அவரிடம் 'பலவித வைபோகங்களில் மகிழ்ந்திருக்கிற உங்களுக்கு என்ன குறை' என்று சொன்னார். அதைக் கேட்ட ஜமீந்தார், புலவர் தன்னை உண்மையாகவே

தமிழர்களின் தலைமீது விழவிருக்கும்
இந்தியெனும் பேரிடியைத் தடுத்து
நிறுத்தத் தனித்து நின்று போராடும்
தனித் தமிழ் நூல்!

தமிழ்

(எழுதியது: எஸ். சதாசிவம்)

விலை ரூ. 1—0—0 விற்பனைக் கழிவு 25%

விற்பனையாளர்க்குமட்டும் எங்கள் செலவில்
நூல்கள் அனுப்பிவைக்கப்படும்.

இன்பவாழ்வுப் பதிப்பகம்,
ரத்தினசபாபதிபுரம் P. O.

சிறப்பித்துப் பாராட்டுகிருர் என்று பெருமகிழ்ச்சியடைந்து நிறையப் பொருள் கொடுத்து அனுப்பினர். ஆனல் புலவர் சொன்னது என்ன? ஜமீந்தார் ஆடும் 'மைனர் ஆட்டத்தைப் பார்த்த அவர், 'பல விதவை போகங்களில் மகிழ்ந்திருக்கிற உங்களுக்கு' என்ற பொருள் பெறப்படும்படியாகக் கூறினர். ஆனல் ஜமீந்தார் தெரிந்து கூப்பிட்டுக் கேட்டாலோ, 'பல வித-வைபோகங்களில்' என்றல்லவா கூறினேன் என்று சொல்லித் தப்பித்துக் கொள்ளலாம் அல்லவா?

ஒரு சாமியார் ஒவ்வொரு நாளும் தூங்கப் போகும்போது 'முருகா சம்போ கந்தா' என்று சொல்லிக்கொண்டு படுத்துக் கொள்வார். இதைப் பக்கத்திலே இருந்த சாமியார் கவனித்துக்கொண்டே இருந்தார். ஒரு நாள் பொறுமையை இழந்து, 'என்னையா முருகன் உனக்கு வச்சிருக்காரு, அள்ளிக்கொடுக்கிறவரு மாதிரித்தான் அடிக்கடி 'முருகா, கந்தா'ன்னு கூப்பிடுறுரு' என்று கோபமாய்க் கேட்டார். அதற்கு அந்தச் சாமியார், 'கந்தனையும், கடம்பனையும்' யாரையா கூப்பிட்டது. புரியாமல் உளறுகிறீரே; 'முருகா சம்போகந் தா' என்றல்லவா சொல்லிக்கொண்டு ஒவ்வொரு நாளும் தூங்கப் போகிறேன். இந்தக் கட்டையை வேறு யார் கவனிப்பார்' என்று சொன்னாராம். சகோதரப் பண்டாரம் சாமியாரின் சாமர்த்தியத்தை மெச்சி, 'இந்த அளவு புத்தி கொஞ்ச நாளைக்கு முன்னே இருந்திருந்தா, 'ரிடயர்' ஆன ஒன்றுவது கிடைத்திருக்கும்' என்று கூறினராம்.

பெண் பார்ப்பதற்காக தந்தையும் மகனும் ஒரு வீட்டிற்குச் சென்றிருந்தார்கள். அங்கே தாயும் மகளும் மட்டும் இருந்தார்கள், தாய், விதவை. பெண்ணைப் பார்த்ததும் பையனுக்குப் பிடிக்கவில்லை. ஏனென்ருல் பெண் பார்ப்பதற்கு ஒல்லியாக, வலிமையில்லாமல், பார்ப்பதற்கு அழகில்லாமல், இருந்தாள், தந்தையும் இதைப் பெண்ணின் தாயாரிடம் தெரிவித்தார். உடனே அவள் 'அதைப்பற்றிக் கவலைப் படாதீர்கள், வயசுக்கு என்மாதிரி ஆகிவிடுவாள்' என்ருள். இதை கேட்டதுதான் தாமதம், உடனே தந்தை, 'அம்மா, தாயே எனக்கு ஒரே மகன்தான்- அவன் அவளைக் கட்டிக்கொண்டு ,அல்பாயுசா' போகவும் வேண்டாம்: அவள் வயசுக்கு உன்மாதிரி விதவை ஆகவும் வேண்டாம்' என்று சொல்லிவிட்டுப் போய் விட்டாராம். தாய், பாவம் இதைக் கருதியா சொன்னுள்? 'வயசுக் காலத்திலே என்னைப் போலச் சதைப் பிடிப்பா, தெம்பா வந்துவிடுவாள்' என்று நினைத்து அல்லவா சொன்னுள். இந்தச் சொல் விபரீதத்தினுல் சம்பந்தமே விட்டுப் போய் விட்டது.

ஒரு காய்கறிக்காரி தெருவில் கீரை விற்றுக்கொண்டு சென்ருள். 'ஏம்மா முழிக்கிறே, மானத்தக் களிக்கிறே' என்று கூவிக்கொண்டு போனுள். இது சிலருக்கு அதிர்ச்சியை உண்டாக்கி விட்டது. சிலர் ஆச்சரியப்பட்டார்கள். இவள் எந்தப் பெண்ணைப் பார்த்து 'முழிக்கிறே' எனறு சொல்கிருள்? யார் மானத்தை அப்பெண் களிக்கிருள்' என்று பலவாராகச் சந்தேகப்பட்டு, அவளிடம் சென்று, 'யாரையம்மா பார்த்து நீ இவ்வாறு சொல்கிருய். சும்மா சொல்லு. நாங்க ஒரு கை பார்த்து விடுகிறோம். இப்படியெல்லாம் விட்டா ஊரு கெட்டுப் போய்விடும்' என்று கேட்டார்கள். அவள் 'ஒருகையாவது அரைகையாவது என்னையா ஔரீங்க' ஒண்ணும் புரியலே. நான் கீரை அல்லவா விற்கிறேன். என்னிடம் முழுக் கீரே, மனத்தக்காளிக் கீரே எல்லாம் இருக்கு உங்களுக்கு எதுவேணும், வாங்கிக்கொண்டு போங்கள்' என்று பதில் சொன்னுள். வந்து கேட்டவர்கள் அசந்து போனுர்கள். அந்தக் கூடைக்காரி 'ஏ, அம்மா முழுக் கீரை, மனத்தக்காளிக் கீரை' என்று கூவியது இப்படி அனர்த்தத்தில் வந்து முடிந்து விட்டது.

செருக்கு மிகுந்த ஒரு பெரியவரை அடக்க நினைத்தான் ஒரு சிறுவன். அவரைப் பார்த்து, 'ஐயா! நான் கண்ணை மூடிக் கொண்டு செய்யும் வேலையை நீங்கள் கண்ணைத் திறந்து கொண்டு செய்வீர்களா?' என்று கேட்டான். 'இது என்ன பிரமாதம். பொடிப்பயல் செய்யும் பொழுது நாமா செய்ய முடியாது' என ஏளனமாக நினைத்து சரி என்ருர். உடனே அச்சிறுவன் கண்ணை மூடிக்கொண்டு கைநிறைய மண்ணை அள்ளிக் கண்ணின் மேல் போட்டான். சிறிது நேரஞ் சென்று மண்ணை தட்டிவிட்டு, 'எங்கே, கண்ணைத் திறந்துகொண்டு செய்யுங்கள்' என்ருன். பெரியவர் அசந்து போய் விட்டார்.

வடநாட்டிலிருந்து ஒரு புலவர் தன்னை 'சர்வக்ஞ பட்டர்' என்று கூறிக்கொண்டு, ஒவ்வொரு அவைதோறும் சென்று அங்குள்ள புலவர்களை வாதுக்கழைத்துத் தம் புகழைப் பரப்பி வந்தார். இவர் எப்புலவரையும்

சலவைக்குச் சிறந்தது!

144

பார் சோப்

தயாரிப்பவர்:

நம்நாடு சோப் ஒர்க்ஸ்

லால்குடி

(திருச்சி மாவட்டம்)

மதிப்பதில்லை. இவருடைய ஆணவத்தை அடக்க நினைத்தனர் அனைவரும். இந்த எண்ணம் எல்லா இடத்திலும் பரவலாயிற்று. ஒருநாள் பல்லக்கேறி, பராக்குக் கூறப்பெற்றத் தெருவழியே சென்று கொண்டிருந்தார். ஒரு பையன் ஆடம்பரமான அவரது போக்கைப் பார்த்தான். தான் அவருடன் வாதாடத் தயார் என்று அறைகூவல் விடுத்தான். வடநாட்டுப் புலவரின் விழிகள் அகல விரிந்தன. பல்லக்கைவிட்டு இறங்கிச் சிறுவனைப் பாதாதிகேசமும், கேசாதி பாதமும் பார்த்துவிட்டு, 'சரி தம்பி, தொடங்கு' என்றார். சிறுவன் கைநிறைய மண்ணை எடுத்தான். 'இதில் எவ்வளவு மண் இருக்கிறது?' என்று கேட்டான். புலவர் பையன் கையைப் பார்த்தார். பூமியைப் பார்த்தார்; வானத்தைப் பார்த்தார்: பக்கத்தே சுற்றிமுற்றிப் பார்த்தார். என்ன சொல்வதென்று புரியவில்லை. சிறிது நேரம் பொறுத்தான் பையன் 'என்ன புலவர் சிகாமணியே, இன்னும் கணக்கு முடியவில்லையா? கூட்டல் சரியாக வரவில்லையா?' என்று கிண்டலாகக் கேட்டான். சிகாமணி கனைத்தார் சிறுவன் சிரித்தான். 'சை, நீர் ஒரு சர்வக்ஞ பட்டர். இந்தச் சிறிய விஷயம் தெரியவில்லை. என்னையா? பட்டர்? இது ஒரு பிடிமண். இது சொல்லத் தெரியவில்லை. பல்லக்கு, பராக்கு, பரிவட்டம் பரிசு, படாடோபம்' என்று அடுக்கினன் சிறுவன். அவைகளில் சன்மானங்கள் பெற்று எழுந்த புலவர்களை இருக்க வைத்து சர்வக்ஞர் என்ற நினைப்போடு நிமிர்ந்திருந்த சர்வபண்டிதர் சற்றே சிரம் குனிந்தார். சிறுவன் தலை நிமிர்ந்தான்.

ஊற்றுமலை ஜமீந்தாராக விளங்கிய இருதாலய மருதப்ப பாண்டியன் நல்ல தமிழ்ப் புலவர்; புலவர் போற்றும் புரவலர்; அவரைப் புலவர்கள், "வாடா மருதப்பன்" என்று கூறுவார்களாம். அதாவது வாடாத மருதப்பன் என்ற பொருள் அமைத்து இவர் ஒரு சமயம் இளமை விளையாட்டில் இறங்கிப் பெருந்துயர் ஏற்றார். நோய் பெரிதும் வாட்ட, அரையாப்பு எய்தி அழகிழந்த நிலையில், மனம் மிக வருந்திக் கூறியதாகஒரு பாட்டு, ஊற்றுமலைத் தனிப்பாடல் திரட்டில் உள்ளது. அப்பாடல்,

"ஆதி இலக்கணப்படியே
உதித்து இரண்டிற்கு
அடங்காத்துன்பு அடைந்து மூன்றை
மேதினியிற் பலவிதமாச் சிலவு
செய்யுமாறு புரிவித்தநாலிற்
பாதியினல் யான்பட்ட பாடு சொல்ல
முடியாது பஞ்ச மென்பது
ஏதுமிலை ஓதுமிலை இகந்து தெரு
உலவுதற்கும் ஏதுவில்லை."

என்பதாகும். இதனை அண்ணாமலை ரெட்டியார் பாடியதாக உரைப்பார்.

இப்பாட்டில் தமிழில் உள்ள ஐந்து இலக்கணத்தையும் அமைத்து நயம் தோன்றும்படி பொருள் விளக்கம் செய்துள்ளார். ஐந்து இலக்கணங்களாவன; எழுத்து, சொல், பொருள், யாப்பு அணி என்பவையாகும்.

ஆதி இலக்கணப் படியே உதித்து—முதல் இலக்கணப் படியே தோன்றி; முதல் இலக்கணம், எழுத்து. அதாவது தலை எழுத்தின்படி தோன்றி; இரண்டிற்கு அடங்காத்துன்பு-- இரண்டாவதற்கு அடங்காத துயரம் உழந்து; இரண்டாவது இலக்கணம், சொல்; சொல்ல முடியாத துன்ப மடைந்து; மூன்றை மேதியினிற் பலவிதமாச் சிலவு செய்து—மூன்றுவதை உலகில் அதிகமாகச் சிலவுபுரிந்து; மூன்ருவது இலக்கணம், பொருள்: பொருளை அதிகமாகச்சிலவழித்து; நாலில் பாதியினல் யான் பட்டபாடு சொல்லமுடியாது-நான்காவதில் பாதியினல் நான் அடைந்த துன்பம் சொல்ல ஒண்ணாது; நான்காம் இலக்கணம், யாப்பு; நான்காவதில் பாதி, அரையாப்பு; அந்த அரையாப்பினல் நான் அடைந்த துன்பம் சொல்லி முடியாது. பஞ்சம் என்பது ஏதுமிலை—(பஞ்சம்—ஐந்து) ஐந்தாவது கொஞ்சமும் இல்லை. ஐந்தாம் இலக்கணம், அணி அதாவது அழகு என்பது இல்லாமற் போய்விட்டது. ஆதலால் தெருவில் வந்து நடமாடுதற்கும் இயலவில்லை.

இங்ஙனம் நோயையும், நோய்க் காரணத்தையும், துன்பத்தையும் எவ்வளவு சாமர்த்தியமாக, நயம்பட இப்பாட்டில் காட்டியுள்ளார், என்பது அறிந்து இன்புறத் தக்கது. இதனையே வெளிப்படையாகக் கூறினல் இத்துணை இன்பமும், மகிழ்ச்சியும் பெறமுடியாது. சொற்களுக்குள்ளேயே விளையாடிச் சொல்ல நினைத்ததையும் சொல்விவிட்டார்.

இதுபோன்றே காய்கறிப் பெயர்களை அமைத்து ஒரு கவிதை உண்டு. காதலன் தன் காதலியிடம் கூறுவதாக உள்ளது அப்பாட்டு.

"வெள்ளரிக்காயா, விரும்பும்
அவரைக்காயா,
உள்ள மிளகாயா ஒரு பேச்
சுரைக்காயா."

இப்பாட்டின் சொற்கள் இரு பொருள்பட அமைந்துள்ளன.

வெள் அரிக்கு ஆயா—அரி என்பது பல பொருளில் வரும் ஒரு சொல். வெண்மையாகிய திருமாலுக்குத் தாயா அல்லது வெள்—வெண்மையான, அரி—கண்; காயா—கோபியாமல், அல்லது வெள்—வெண்மையாகிய, அரி—சிங்கம் போன்று; காயா—சினவாமல்; அல்லது கோபம் மிகுதலால் சிங்கத்திற்குத் தாயா என்று கேலியாகக் கூறுயதுமாம். அரி என்பதற்கு பகைவன், சூரியன், நமன், தேவேந்திரன் என்ற பல பொருள்களும் உள. ஏற்பது அறிந்து இயைத்துக் கொள்க. விரும்பும் அவரைக் காயாது.

உன்னை விரும்பக்கூடிய அவரைக் கோபியாமல், உள்ளம் இளகாயா மனம் சற்று உருக மாட்டாயா; ஒரு பேச்சு உரைக்காயா. ஒரு சொல் உரைக்க மாட்டாயா? என்று இங்ஙனம் பொருள் கொள்ள நிற்கின்றது. இதன் கண்ணேயே நான்கு காய்களின் பெயர்களும் குறிப்புப் பொருள்களாக நிற்றல் வெளிப்படையாகத் தெரிகிறது. அவை வெள்ளரிக்காய், அவரைக்காய், மிளகாய், சுரக்காய் என்பன,

ஒருகணவன் குழந்தைபிறந்தவுடன், மனைவியைப் பிரிந்து, பரத்தை வீட்டிற்குச் சென்று விடுகிறான். மணந்த கணவன் தணந்ததைக் கண்டு மனம் மிக வருந்திய மனைவி ஒரு பாட்டுக் கூறுகிறாள். அதிலே இனிமையான பொருள்களும், கசக்கும் பொருள்களும் கலந்து கவிக்குச் சுவை ஊட்டுகின்றன.

“கச்சிருக்கும் போது கரும்பானேன்;
கைக் குழந்தை
வச்சிருக்கும் போது மருந்தானேன்;–
நச்சிருக்கும்
கண்ணார் கரும்பு ஆனார்; காணவும்
நான் வேம்பானேன்;
அண்ணா மலையர சுக்கு.”

கச்சு இருக்கமாய் மார்பு விம்மும்படி இருந்தபோது நான் கரும்புபோல இனியவளானேன். குழந்தை பெற்றுக் கையில் வைத்திருக்கும்போது நோய்க்கு மருந்துபோல் பயன்பட்டேன். நஞ்சு உள்ள கண்களையுடைய விலை மகளிர் இப்பொழுது கரும்பு போலானார்கள். பார்ப்பதற்குக்கூட நான் இதுபொழுது வேம்புபோலக் கசப்பவளானேன் என்று தலைவி பாலனையும், பரத்தையையும் பழித்துக் கூறுகிறாள், இப்பாட்டில் கரும்பு மருந்து, வேம்பு ஆகியவை பொருள் நோக்கிப் பயன்படுத்தப்பட்டிருத்தல் பெரிதும் மகிழ்வூட்டுவதாகும். ஒருகாலத்தில் மிகவும் அண்மையிலேயே உள்ள தலைவி மற்றொரு காலத்தில் எவ்வளவு சேய்மையில் சென்று விடுகிறாள் என்பதை இவ்வெண்பாவின் உவமைச் சொற்கள் நன்கு காட்டுகின்றன. இதைப் போலவே பிறிதொரு பாட்டும், இக்கருத்தை உள்ளடக்கி அழகாகக் கூறுகிறது. அதில் இரும்பு, பித்தளை ஆகிய உலோகங்களின் பெயர்கள் நயப் பொருளில் அமைந்து மகிழ்வூட்டுகின்றன.

அரும்பாக்கிய கொங்கை பாலாக்கியும்
உங்கள் அப்பன் நெஞ்சை
இரும்பாக்கி யென்னெஞ்சைப்
பித்தளையாக்கியவ் வேந்திழையைக்
கரும்பாக்கி யென்னையும் வேம்பாக்கி
யிவ்வண்ணம் கண்டனையே
பெரும்பாக்கிய மல்லவோ மகனே
உனைப் பெற்றதுவே.

முருகன் இருவரைத் திருமணம் புரிந்துகொண்ட நிகழ்ச்சியையும் இப்படி வேடிக்கையாக உரைப்பது உண்டு.

“புள்ளிருக்கும் வேளூர்ப்
புண்ணியனார் பெற்றமுத்துப்
பிள்ளைதனக்கு இந்திரனார்
பெண்கொடுத்தார் அம்மானை
பிள்ளைதனக்கு இந்திரனார்
பெண்கொடுத்தார் ஆமாகில்
வள்ளி தனைக் கொள்ள
வழக்குண்டோ அம்மானை;
வள்ளியம்மை அம்மான்
மகளல்லோ அம்மானை.”

முத்துப்பிள்ளை என்ற முத்துக் குமாரசாமிக்கு (முருகன்) இந்திரன் தன் மகளாகிய தெய்வயானையை மணம் செய்து கொடுத்தான். அப்படி இந்திரன் பெண் கொடுத்திருக்கும் போது வள்ளியைத் திருமணம் செய்துகொள்ள வழக்குண்டோ என்றால், உண்டு. எப்படி? வள்ளி, ‘அம்மான்’ மகள் அல்லவா? அதாவது, அம்மான்— மாமனுடைய (திருமால்); மகள் -பிள்ளை; அம்-அழகிய, மான்-மானின், மகள்-குழந்தை.

பிறிதொரு பாடல்

“சோற்றால் மடையடைக்கும் சொக்கர்
திருக் கூடலிலே
வேற்றாளாய் மண்சுமக்க வேண்டினர்
காண் அம்மானை;
வேற்றாளாய் மண்சுமக்கவேண்டினரே
ஆமாகில்
மாற்றான் அடிக்க வழக்குண்டோ
அம்மானை
வைகையிலே தானடிக்க வழக்
குண்டோ அம்மானை. (16)

சோமசுந்தரக் கடவுள் பிட்டுக்கு மண் சுமந்தபோது அடிபட்டார். அப்படி மாற்றார் அடிக்க வழக்குண்டோ என்றால், உண்டு. எப்படி எனில், ‘வைகயிலே தானடிக்க வழக்குண்டு’ அல்லவா? அதாவது வைகையிலே — வைகை நதிக் கரையிலே, கூலியாளாக ஒழுங்காக வேலை செய்யாமல் விளையாடும்பொழுது, வைகைக் கரையில் அடித்தது சரி. மற்றொன்று; வைகையிலே திட்டும் பொழுது, ஒருவரைத் திட்டும் பொழுது அடிப்பது நியாயம் தானே.’ இப்படி இரு பொருள் கொள்வதற்கு இலக்காக நிற்கிறது. ‘வைகையிலே’ என்ற இச்சொல்.

இவ்விரு பாடல்களும் ‘மூவர் அம்மானையில்’ வருகின்றன.

இப்படி இலக்கியத்தில், சொற்களைச் சதுரங்கக் காய்களாகப் பயன்படுத்திக்கொண்டு புலவர்கள் இலக்கிய விளையாட்டு விளையாடியிருக்கிறார்கள். திருப்புகழ், திருவாய்மொழி, திருவாசகம் ஆகியவையும் இத்தகு சொல் விளையாட்டிற்கு நயமுறப் பயன்படுவனவாகும். ‘புரட்சிக் கவிஞர் பாரதிதாசனர், இராவணன் திருப்புகழை,தமது திருவாசகமாகிய கவிதைத் திரட்டில் ‘அன்றந்த இலங்கையினை ஆண்ட மறத் தமிழன்’ என்ற திருவாய்மொழி வாயிலாக நன்கு விளக்கியுள்ளார்’ என்று கூறும்போது பழைய பக்தி நூல்களின் பெயர்கள் இக்காலத்தில் ஏற்ற பெற்றி, திரு-அழகிய, புகழ்-புகழ் மொழி, என்றும், திரு-அழகிய, வாய்மொழி-வாயினின்று வெளிவரும் சொல் என்றும் பொருள் பெறக் கிடப்பது, காணத்தக்கது.

இங்ஙனம் இலக்கிய உலகு இன்ப விளையாட்டைச் சில நேரங்களில் புலவர்களாகிய விளையாட்டாளர்களைக் கொண்டு அயர்கிறது. சொல் — விளையாட்டுப் பொருள் ஆகிறது. அந்தத் திருவிளையாடல்தான் இலக்கியச் சந்தையில் மகிழ்ச்சியையும். மலர்ச்சியையும் நல்குகின்றது. ◉

அலெக்ஸாண்டர் டூமாஸ்

இன்றைக்கும் - இறந்து எண்பது வருடங்கள் மடிந்து மறைந்துவிட்ட பின்னும்-இலக்கிய தேவியின் சன்னதியிலே அணையாத தூண்டா மணி விளக்காகத் துலங்குபவனும், சரித்திரம் நுழையப் பயந்து, கூற மறுக்கும் பிரான்ஸ் நாட்டு அதிபர்களின் அந்தப்புரத்திலே நடந்த சீமான் சீமாட்டிகளின் சிருங்கார நாடகங்களை, அலங்கார சாகசங்களை, அகம்பாவ வெறிக்கூத்துக்களைத்தன் பேனு மூலம் உலகத்திற்குப் படம் பிடித்துக்காட்டியவனும், தன் நாட்டின் புகழ் பெற்ற சரித்திரத்தை நாடக உருவில் உருவாக்கியவனும், தனக்கு ஐந்து நூறு பிள்ளைகள் இருப்பதாகப் பெருமை அடித்துக் கொண்டவனும், உலகத்து எழுத்தாளர்களிலேயே மிக அதிக அளவுக்கு எழுதிக் குவித்தவனும் இவன்தான். இவன் பெயர் அலெக்ஸாண்டர் டூமோஸ்!

இவன் மனித ஆத்மாவின் மர்மத்தைப் பற்றியோ, சுவையற்ற வாழ்க்கைச் சித்தாந்தத்தைப் பற்றியோ எழுதவுமில்லை. அதைப் பற்றிக் கவலைப்படவுமில்லை! தான் ஆடம்பரம் நிறைந்த வாழ்க்கையை வாழ்ந்ததுமட்டுமல்லாமல், படாடோப வாழ்க்கையைப்பற்றி, அக்கால மக்கள் சுகபோகத்தில் புரண்டநிலையைப்பற்றி எழுதினன். -அவனும் கவலையற்று வாழ்ந்தான், தான் சித்தரித்த 'ஜாலி' பேர்வழிகளைப்போல!

பிரான்ஸ் நாடு உலகத்திற்கு அளித்துள்ள சிறந்த இலக்கிய மன்னர்களில் ஜாம்பவானுன டூமோஸ் 1802-ம் வருடம், ஜூலைத் திங்களின் 24-ம்தினத்தன்று, வில்லர்ஸ் காட்டரட்ஸ் **(Villers- coterets)** என்ற கிராமத்தில் பிறந்தான்.

டூமோஸின் பாட்டன் ஒரு சீமான்-பிரெஞ்சுக்காரன். அவனின் பாட்டி நீக்ரோ ஜாதியைச் சேர்ந்தவள். பெயர் மேரி டூமோஸ். மேற்கு இந்தியத் தீவுகளில், பருத்திப் பண்ணையில் அடிமையாக, ஏழையாக, கல்வி வாசனையற்றவளாக இருந்தவள். தன் பேரன் பிற்காலத்தில், அரசர்களாலும், அறிஞர்களாலும், கவிஞர்களாலும் போற்றப்பட்டு, தன் பெயரை உலகம் புகழச் செய்வான் என்பதை அவள் தன் கனவிலும் கருதியிருக்கமாட்டாள்.

இவன் நாளங்களின் ஓடிய இரத்தத்தில் முக்கால் பங்கு வெள்ளையனின் இரத்தம்-கால் பங்கு நீக்ரோவின் இரத்தம். டூமோஸ் தனது நீக்ரோ பாட்டியைப்போல அழகற்றவனுகவும், ஆஜானுபாகுவான தோற்றமுள்ளவனுகவும் காட்சியளித்தான். மேனிவெண்பனிநிறத்துடனும். நீலவானை நிகர்க்கும் கண்களுடனும், தடித்த உதடுகளுடனும் பரட்டைத் தலையுடனும் காட்சி தந்தான். டூமோஸ் அடைந்த பெரும் புகழைக்கண்டு பொறுமையும், கசப்பும் கொண்டவர்கள் அவனின் உடலில் ஓடிய நீக்ரோ இரத்தத்தைப் பற்றிப் பரிகசிக்கத் துவங்கினர். ஒரு நாள் ஓட்டல் ஒன்றில் டூமோஸ் அமர்ந்திருக்கும் சமயம் ஒருவன் வந்து, ''டூமோஸ் சார்! உங்கள் உடலில் நீக்ரோ இரத்தம் ஓடுகிறது என்று நினைக்கிறேன்; அதுபற்றிய உங்களின் அபிப்பிராயம் என்ன'' என்ருன். இது கேட்டு, டூமோஸ், ''நீங்கள் நினைப்பது மிகவும் சரியானதே, எனது தந்தை ஐரோப்பியர் ஒருவருக்கும் நீக்ரோ பெண்ணுக்கும் பிறந்தவர்; எனது பாட்டி நீக்ரோ சாதியைச் சேர்ந்தவள்; எனது முன்னேர்கள் குரங்குகளாக இருந்தார்களாம். உங்கள் பாரம்பரியம் எங்கு முடிகின்றதோ அங்கு என்னுடைய பாரம்பரியம் துவங்குகின்றது'' என்ருர்.

டூமோஸ், நெப்போலியனின் குதிரைப் படை வீரர்களில் ஒருவனுக்கும், ஓட்டல் ஒன்றை நடத்தி வந்த படைத்தலைவனின் மகளுக்கும் பிறந்தவன். டூமோஸின் தந்தை தான் போரிட்ட போர்களத்தின் தீர வீரச் செயல்களை சொல்லியும், கத்தியைத் திறம்பட உபயோகிக்கும் முறையைச் சொல்லிக் கொடுத்தது போலவே, பேனவைத் திறம்பட உபயோகிக்கும் உணர்ச்சியையும் ஊக்குவித்தார். அவர் நல்ல பல சாலி-வீர தீர செயல்களை அவர் அழகாகச் செய்துக் காண்பிக்கும் பொழுது ஆவலும் ஆச்சர்யமும் நிறைந்தவனுய், இமை மூடாமல் அவரையே பார்த்துக் கொண்டிருப்பான். உலகத்தின் பல பாகங்களை நெப்பெலியனுடன் சுற்றிப் பார்த்த அவர் தம் அனுபவங்களை அழகாக அவனுக்குச்சொல்லுவார். அவனைத் தன் நாட்டின் சரித்திரத்தைப்படிக்க ஆவல் ஊட்டியவரும் அவரே. இறந்த காலத்தில் வாழ்ந்தவர்கள், பழைய நிகழ்ச்சிகள்-இவைகளுக்கு

கோமேதகவேலு

உயிரூட்டி அவைகளை நிகழ்காலத்துடன் இணைத்துக் காண்பித்தார்.

டுமோஸ் பிறந்து நான்கு வருடங்களுக்குப் பிறகு, பல போர்க்களங்களுக்குச் சென்று வந்த அவனின் தந்தையின் தேக ஆரோக்கியம் குன்ற ஆரம்பித்தது. நோய்வாய்ப்பட்டு மரணப்படுக்கையில் வேதனைப்பட்டுக் கொண்டிருக்கும் சமயம், ஒரு நாள், தன் மகனைக் காண ஆசைப்பட்டார். அச்சமயம் அலெக்சாண்டர் தன் சிற்றன்னை வீட்டிற்கு போயிருந்தான். 1806-ம் வருடம் பிப்ரவரி மாதம் 26-ம் தேதியன்று அவனது தந்தை இறந்துவிட்டார். அன்று அலெக்சாண்டர் வீட்டிற்கு வந்த பொழுது, தன் தந்தையை கடவுள் பரலோகத்திற்கு அழைத்துப் போய் விட்டார் என்றும், அவர் திரும்ப வரமாட்டார் என்றும் அவனிடம் சொன்னார்கள். வீட்டின் மாடியின் அறையில் தந்தையின் சடலம் இருக்க, தன் தந்தையின் கனமான துப்பாக்கி ஒன்றைத்தூக்கிக்கொண்டுமாடிப்படிகளில் அவன் ஏறிச் செல்வதைக் கண்ட அவனின் தாய், ''எங்கே போகின்றாய்?'' என்று அவனைக் கேட்க, ''நான் பரலோகத்திற்குப் போகிறேன் என்றான்.'' ''எதற்காக கண்ணே!'' என்று அவன் தாய் கேட்டதற்கு, ''என் தந்தையைக் கடவுள் கொன்றதற்காக, நான் கடவுளைச் சுட்டுக்கொல்லப் போகிறேன்'' என்றானும்.

தான் பிறந்த கிராமத்தைச் சுற்றியிருந்தகானகங்களின் உயர்ந்தமரங்களின் பசிய நிழலிலேதான் அவனின்இளம்பிராயம் கழிக்கப்பட்டது. அவன் வாழ்வின் இறுதிவரை அவன் இளம் பிராயத்தில் தன் கிராமத்தில் வாழ்ந்த வாழ்க்கையைப்பற்றிய நினைவுகள்அவன் நினைவிருந்து நீங்காமலிருந்தன. மற்ற கிராமத்து பிள்ளைகள் எழுத்துக்களை கூட்டிப்படிக்கும் நிலையிலிருக்கும் பொழுது, டுமோஸ்நன்றாகப்புத்தகங்களைப் படிக்கக்கூடிய நிலையிலிருந்தான். முதல் முதலாக பஃபான் (**Buffon**) என்பவர் மிருகங்களின் வாழ்க்கையைப் பற்றி எழுதியிருந்த புத்தகத்தையும், பைபிள் புத்தகத்தையும் படித்தான். பிறகு ராபின்சன் குரோசோ, ஆயிரத்து ஓர் இரவு கதைகள்-இவைகளை ஆவலுடன் படித்து வந்தான். ஆயிரத்து ஓர் இரவு கதைகளில் பொதிந்து கிடந்த இன்பம் அவன் மனதைச் சுண்டியிழுத்து, அவனின்கற்பனைத்திறனை வலுப்படுத்தியது.

அலெக்சாண்டர் டுமோஸ் தன் சிறு வயதில் தன் வயதொத்த சிறுவர்களுடன் பழகவே மாட்டான். வயதானவர்களுடன் பழகி அவர்களுடன் காடுகளுக்குப்போய் வருவான். இவர்களின் நட்பின் விளைவாக, குதிரைச் சவாரி, வேட்டையாடுதல் கத்திச்சண்டை போடுதல், துப்பாக்கியால் சுடுதல், பறவைகளைக் கண்ணி வைத்துப் பிடித்தல்-முதலிய காரியங்களில் கைதேர்ந்தவனாக விளங்கினான். இது போன்று இவன் படிக்காமல், இதர காரியங்களில் தன் கவனத்தைப் படியவிட்டுக் காலம் கழித்து வருவது கண்டு அவன் தாய் மனம் பொருமினாள். அவள் காட்டுக்குச்சென்று வேட்டையாடிய பட்சிகளையும் பழங்களையும் கொண்டு

மணிமேகலை ரோமன்

DESIGN PATENTED UNDER No. 80434

நம் தமிழ் நாட்டின் சிறப்பழியாச் செல்வம் மேகலைக் காவியம். இஃது இவ்வுலகுள்ளளவும் ஒளிர்ந்து விளங்கும் உன்னத கவிச் சித்திரங்களில் ஒன்றாகும். மேகலையின் மாண்புற்ற சிறப்பை சித்தரிக்கும் வடிவில் எமது

"மணிமேகலை எழுத்துக்கள்"

தயாராகியுள்ளன என்பதை, மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறோம்!

நார்ட்டன் அண்டு கம்பெனி, சூளை, மதராஸ்

வந்து அவன் தாயிடம் தரும் சமயம் அவள் மனம் துயரப் பட்டது. மேலும் தன் கணவனின் மரணத்திற்குப் பிறகு அவள் கஷ்ட ஜீவனம் செய்து வாழ்ந்து வந்தாள்.

அவளின்உறவினரான ஒருபாதிரி இறந்த சமயம் அவளுக்குக் கிடைத்த 1500 பிராங்குகள், அவளுக்குப் பேருதவியாயிருந்தது. தன் மகனையும் பாதிரியாக்க வேண்டு என்ற எண்ணம் அவள் மனதில் எழுந்தது. இது கேட்டு டூமாஸ், பாதிரி வாழ்க்கையை வெறுத்தவனாய் மூன்று நாட்களுக்கு வீட்டிற்கு வராமல் காட்டிலேயே தங்கி விட்டான். பிறகு, தன் தாயின் வற்புறுத்தலின் பேரில் கிராமப் பள்ளிக்குச் செல்ல இசைந்தான்.

அலெக்சாண்டர் டூமாசுக்கு வயது பதினைந்தாக இருக்கும் சமயம் அவனின் தாய் மேய்ட்டர் மெனஸ்ஸன் என்ற வக்கீலிடம் சென்று தன் மகனுக்கு குமாஸ்தா வேலை கொடுக்குமாறு கேட்டாள். ஷேக்ஸ்பியர், கார்னீலி, மொரீமி, பால்ஜாக், டிக்கன்ஸ் முதலிய எழுத்தாளர்களைப் போலவே டூமாஸும் வக்கீல் குமாஸ்தா வேலை பார்த்து வந்தான். இவனுடன் இரண்டு குமாஸ்தாக்கள் இருந்த காரணத்தால் வேலை சற்று சுலபமாகவே இருந்தது. இருந்தாலும் அவன் மனம் அந்த வேலையில் இலயிக்க மறுத்து விட்டது. அவனின் முதல் காதல், அவன் இந்த வேலையிலிருக்கும் சமயத்தில் தான் அரும்பியது. அவன் உள்ள வானிலே முதல் காதல் தாரகையாக மிளிர்ந்தவள் அடாலே டால்வின் (**Adele dalvin**) என்ற பெண்ணுவாள். அவன் வயதொத்த அவள் நல்ல அழகி. இந்த முதல் காதல் தான் அதன் முழு வாழ்வில் முழுமையான புரிசுத்தம் உடையதாக இருந்தது. இவர்களின் காதல் நடுக்கோடை காலத்தில் உதய மாயிற்று மலரற்ற தடாகம் போல, மேகங்களற்ற வானம்-நிர்மலமான நீலப் பொய்கை போல விளங்கிக் கொண்டிருந்தது. காலப் பறவை வானத்தின் துரிய வெளியிலே பறந்து கொண்டிருந்தது. நாள் முழுமையிலும் டூமாஸ், வக்கீலின் அலுவலகத்தில் எழுதிக் கொண்டேயிருப்பான். மாலையில் தன்னைக் கனஜோராக அலங்கரித்துக் கொண்டு தன் இதய ராணியைச் சந்திக்கப் போவான். வானம் மேகங்களற்று இருந்தால் நிலவின் நீல ஒளி வெள்ளம் நிரம்பியுள்ள மலர்க் காட்டில் தன் காதலியுடன் இருந்து இருவரும் இன்ப உறையாடல்களில் உலகத்தை மறந்து விடுவர். சற்று மழையாக இருந்தால் அவர்கள் காதல் ராஜ்யம் ஹோட்டல் அறையின் விளக்கொளியின் கீழ் இருக்கும்.

1818-ம் வருடம், டூமாஸ் இது போன்ற கவலையற்ற வாழ்க்கையை வாழ்ந்து வந்துக் கொண்டிருக்கும் பொழுது அவன் வாழ்வின் போக்கையே மாற்றியமைத்த நட்பு கிடைத்தது. அந்த நண்பனின் பெயர் அடோல்ப் லூவன் (**Adolphe Leuven**) அலெக்சாண்டர் டூமாஸின் மனதில் காதல் உணர்ச்சிகளை டாலவின் தூண்டி விட்டார்; டூமாஸுக்கு இலக்கியப் பசியை உண்டாக்கியவன் இந்த நண்பன்.

இவன் டூமாஸின் வயதொத்தவன்; ஆனுல் அவன் சீமான் குடும்பத்தில் பிறந்து உலகத்தின் பல பாகங்களைச் சுற்றி வந்திருக்கிறுன். நல்ல அறிவாளி ; நிறையப் படித்தவன். பாரீஸ் பட்டணத்தின் அழகிய காட்சிகளை, நகரின் பல வர்ண வாழ்க்கையைப்பற்றி, அந்நகரத்துப் புகழ் பெற்ற மனிதர்களைப் பற்றி டூமாசுக்கு லூவன் எடுத்துச் சொன்னுன் டூமாஸிடன் நெருங்கிப் பழகவேண்டும் என்றுலூவனுக்குத் தோன்றியதாம். டூமாஸின் கல்வி இலக்கிய அறியாமையைக் கண்டு, நையாண்டி செய்யாமல் அவனுடன் பழக ஆசைப் பட்டான் லூவன், லூவன், டூமாஸின் நண்பன் மட்டுமல்ல ; உபாத்தியாயராகவும் இருந்தான். சில சமயங்களில் எழுத்துப் பயிற்சியும் கொடுத்து வந்தான். ஒரு நாள் டூமாஸ் பக்கத்துப் பட்டினத்தில் ஆங்கில மகாகவி ஷேக்ஸ்பியர் எழுதிய ஹாம்லெட் (**HAMLET**) என்ற நாடகம் நடிக்கப் படுவதைக் காணச் சென்றுன். அந்த நாடகம் அவன் மனதை முழுவதும் கவர்ந்து விட்டது. அந்த நாடக வசன முழுவதையும் மனப்பாடம் செய்யும் வரை அவன் மனம் ஓர் நிலையில் நிற்கவில்லை. பிறகு, அவன் கதே, ஷில்லர், பைரன், ஸ்காட் முதலிய வர்களின் எழுத்துக்களைப் படித்து வந்தான். லூவன், டூமாசுக்கு பாரீஸ் பட்டினத்தைப் பற்றி விவரித்து வர்ணனை செய்யும் பொழுது தானும் பாரீஸ் பட்டினத்திற்குச் சென்று தீரவேண்டும் என்ற தணியாத தாகம் அவன் மனதில் கிடந்தது. அந்நகரத்துக்காட்சிகள் அவன் கனவில் சதா நடனமாடிக் கொண்டிருந்தன.

ஒரு நாள் லூவன், டூமாஸிடம் இருவரும் சேர்ந்து நாடகங்கள் எழுத வேண்டும் என்று சொன்னுன். அந்த நிமிடத்திலிருந்து டூமாஸுக்கு எழுத வேண்டும் என்ற 'நினவு' அவன் மனதில் குடி கொண்டது. வருங்கால மக்களால் புகழப்படும். எழுத்துக்களைப் படைக்க வேண்டும் என்று துடித்தான். லூவனுக்கு என்ன தெரியும் - வருங்காலத்தில் பிரான்ஸ் நாட்டு இலக்கியத்தில் மறு மலர்ச்சியை மலரச் செய்யப் போகும் ஒருவனுக்கு உதவி செய்வதாக! இந்தக் காலத்தில் தன் காதலியை இரவு வேளையில் கள்ளத்தனமாகச் சந்தித்து வருவான் டூமாஸ். 1822-ம் வருடம் டூமாஸின் காதலியான அடாலே டால்வின் வேறெருவனை மணக்க டூமாஸின் காதலும் மறைந்தது.

அதே வருடம், எப்படியாவது பாரீஸ் பட்டினத்தைப் பார்த்தே தீர வேண்டும் என்ற உணர்ச்சியினுல் உந்தப்பட்டு, டூமாஸ் பாரீஸ் பட்டினத்திற்குப் புறப்பட்டான். அந்த சமயம் லூவன் பாரீஸ் பட்டினத்தில் இருந்தான். அந்த காலத்தில் பாரீஸ் பட்டினத்தில் தலைசிறந்த நடிகன், தால்மா (**TALMA**) என்பவன். பாரீஸ்பட்டினத்தை அடைந்த டூமாஸ் தால்மாவின் நாடகத்தைப் பார்த்துவிட்டு, லூவனுடன் தால்மாவைச் சந்தித்து பேசுவதற்குப் புறப்பட்டான். டூமாஸ் தால்மாவிடம் தன் எழுதும் ஆசைபற்றி எடுத்துரைத்தான். பிறகு, 'தால்மா' நீங்கள் உங்களின் கையால் எனது நெற்றியை வருடுங்கள்,

எனக்கு அதிர்ஷ்டம் வரும்'' என்றான். தால்மா அப்படியே செய்து ''நான் உன்னை ஷேக்ஸ்பியர், கார்னீலி, ஷில்லர் முதலிய பெயர்களால் தீக்ஷை செய்கிறேன். உனது கிராமத்துக்கு இப்பொழுதே போ! உனக்குத்திறமையிருந்தால், உனது ஊக்கம் உன்னைஇங்கேயேஅழைத்து வந்துவிடும்'' என்றார். டூமோஸ் தனது கிராமத்துக்குப் புறப்பட்டான். தால்மாவின் வார்த்தைகள் அவன் உள்ளத்தில் எதிரொலித்துக்கொண்டேயிருந்தன.

1823-ம் வருஷம் பாரீஸ் பட்டினத்திற்குப் புறப்பட்டான். பாரீஸ் பட்டினத்தில் அவனின் அழகிய கையெழுத்துதான் அவனுக்கு வேலை தேடித்தந்தது. ஆர்லியன்ஸ் சீமானிடத்தில் 1200 பிராங்கு சம்பளத்திற்கு வேலையில் அமர்த்தப்பட்டான். பாரீஸ் பட்டனத்து யுவர்கள் நடத்திய ஆடம்பர வாழ்க்கையைக் கண்டு, தன்னால் அது போன்ற வாழ்க்கை வாழமுடியாததகாரணத்திற்காக வருந்தினான். அவன் வசித்துவந்த அறையின் எதிர்வீட்டில் தன் கணவனைப் பிரிந்து வாழ்ந்துவந்த ஒரு பெண் மீது ஆசை கொண்டான் டூமோஸ். பார்வை பரிமாற்றத்தில் ஆரம்பித்த நாடகம், காதல் கட்டத்தில் முடிவுற்றது. இருவரும் சேர்ந்து வாழ ஆரம்பித்தார்கள். அவளின் பெயர் காதரின்லிபே (**Catherine Libay**) காதல் வாழ்க்கையை வாழ டூமோஸுக்கு பணம் தேவையுற்றது. பிற எழுத்தாளர்களுக்கு அவர்களின் எழுத்துக்களை அழகாக எழுதிக் கொடுத்து பணம் சம்பாதித்தான். 1824-ம் ஆண்டு இக்காதலர்களுக்கு ஒரு ஆண் குழந்தை பிறந்தது.

டூமோஸ், தான் எழுத ஆரம்பிப்பதற்கு முன்பாக நிறையப் புத்தகங்களை படிக்க வேண்டுமென்று உணர்ந்தான். நிறையப் புத்தகங்களைப் படித்தான். இரவெல்லாம் விழித்துப் படித்துக் கொண்டேயிருப்பான். டூமோஸின் நினைவு, தான் படிப்பதிலேயே ஊன்றிவிடும். அவனுக்கு ஞாபகசக்தி அதிகம். ஒரு முறை படித்ததை மறக்கவே மாட்டான். ஒரு நண்பன் ஒரு நாள் அவனைப் பார்த்து ''உனக்கு நல்ல ஞாபகசக்தி இருக்கிறது'' என்றான். ''அது ஒன்றுதான் என்னிடம் இருக்கிறது'' என்றான் டூமோஸ். டூமோஸ் நிறைய இலக்கியம் படித்ததோடு, மனித உடலின் உடற்கூறு பற்றியும் கற்று வந்தான். ''கற்பது என்றைக்கும் முடிவுற்றது'' என்று கூறியவன் டூமோஸ்!

அவனுக்கு முதல் முதலாகப் புகழைத் தேடிக்கொடுத்த நாடகம் ''மூன்றாம் ஹென்றி'' (**HENRI III**) ஆகும். அன்று அவனின் நாடகம் முதல் முறையாக நடிக்கப்பட்ட நாள்! அன்றைக்கு அவனுடன் வசித்த அவனின் அன்னை மிகவும் நோய்வாய்ப்பட்டு வேதனைப் பட்டுக் கொண்டிருந்தாள். அன்றைக்குத் தன் நாடகத்தைக் காணச் செல்ல, அணிவதற்குக் காலர் இல்லாமல் வெள்ளை அட்டையைக் கத்தரித்து காலராக அணிந்துகொண்டு போனான். தன் தாயை அன்புடன் நேசித்து வந்த அவன் தன் நாடகத்தின் ஒவ்வொரு அங்கத்தின் நடுவிலும் தன்னால் முடிந்தமட்டும் வேகமாக ஓடி தன் தாய்க்கு வேண்டிய பணிவிடைகளைச் செய்துவிட்டு ஓடி வருவான். அன்று அவன் நாடகத்திற்கு அமோகமான வெற்றி. நாடகத்திலே—நாடக உலகிலே புதுமை மணத்துடன் கமழ்ந்து அந்த நாடகம் எல்லோராலும் புகழப்பட்டது. முழு பாரீஸ் பட்டினமே அவனின் புகழைப் போற்றிக்கொண்டிருந்த சமயத்தில் தன் தாயின் கட்டிலின் கீழ் தரையில் படுத்து மனம் பொருமிக் கொண்டிருந்தான் டூமோஸ்!

இந்தச் சமயத்தில் மெலானிவால்டர் (**MELANIE WALTOR**) என்ற மணமான பெண்ணின் நட்பு டூமோஸுக்கு கிடைத்தது. அவர்களின் தொடர்பு நெருங்கியது. இவனிடமிருந்து அவளுக்கு மகிழ்ச்சியும்

எமது புதிய வெளியீடுகள்

கவிமணி தேசிக விநாயகம் பிள்ளை			
குழந்தைச் செல்வம்	0	12	0
கி. ஆ. பெ. விசுவநாதம்			
தமிழ்ச் செல்வம் (நாடகம்)	2	0	0
மா. சு. சம்மந்தம்			
திருச்சி விசுவநாதம் (வரலாறு)	1	4	0
கே. பி. சுந்தரம், ஜி. சி. டி.			
தையற்கலை (பெண்கள் உடை)	2	0	0
க. அன்பழகன், எம். ஏ.			
அழகரசி !	1	4	0
கு. ராஜவேலு, எம். ஏ.			
காந்த முள்	3	0	0
ந. சஞ்சீவி, எம். ஏ.			
மானங் காத்த மருதுபாண்டியர்	1	8	0
சங்ககாலச் சான்றோர்கள்	2	0	0
''சோமு''			
உதய குமாரி	2	0	0
மஞ்சள் ரோஜா	2	0	0

★

பாரி நிலையம்

59, பிராட்வே : : சென்னை-1.

இன்பமும் கிடைத்தது—இவனுக்கு தன் எழுத்துக்கு உணர்ச்சி கிடைத்தது.

அவனின் முதல் நாடகத்திற்குப் பிறகு அவனைப் புகழும், பணமும் அணைத்துக் கொண்டன. அவை—ஒரு குற்றவாளிக்குச் சிறைவாசத் திற்குபின் கிடைக்கும் சுதந்திரத் தைப்போலக்கிடைத்தன. ''என்னை நம்பு! எனக்கு காதலைக் ரசிக்கத் தெரியும்'' என்று தன் காதலிக்கு எழுதினான் டூமோஸ். இப்பொழுது தனக்குக் கிடைத்த வெற்றியை ரசிக்க ஆரம்பித்தான் டூமாஸ், நன்றாக உடுத்தி, ஆடம்பர வாழ்க் கையை முதல் முதலாக வாழ ஆரம்பித்தான். அவன் தன் வாழ்க்கைக் கடலில் எழுந்த முதல் புகழ் அலையின்மேல் மிதந்து கொண்டிருந்தான்.

மெலானி வால்டர் என்ற தன் மூன்றுவது காதல்-அவன் வாழ் வின் மிக முக்கிய சம்பவமாயிருந் தது. அவளால்தான் தன் எழுத் துக்கு உயிரும், உணர்ச்சியும் வரும் எனத் திடமாக நம்பினான். அவன் தன் காதலை, உணர்ச்சிகளை அவளுக் குத் தெரிவிக்க அழகிய காதல் கடி தங்களை எழுதினான். ஒரு முறை, ''ஆம்! நான் உன்னைக் காதலிக் கிறேன். காதலிக்கிறேன், காதலிக் கிறேன்! என் உடலில் காதலால் வந்துள்ள அனல், என் இரத்த நாளங்களில் ஓடுவதால், முன்னை விட எனக்கு உன் மேலுள்ள காதல் பன்மடங்கு அதிகரித்து விட்டது. எதற்கும் அஞ்சாதே! நான் உன் னைத் தான் காதலிக்கிறேன்! உன் னைத் தவிர வேறு யாரை நான் காதலிப்பேன்! என் மெலானி! எனது மூளை கொதிக்கிறது! எனக்கு பைத்தியம் பிடித்துவிடும் போலிருக் கிறது. மதத்தைப் பற்றிப் பிதற் றும் அந்த பித்தர்கள் வேதனை களின் உறைவிடமாக நரகம் என ஒன்று உள்ளதாகச் சொல்லுகிறார் கள். வேறொருவனின் கரங்களில் நீ இருப்பதைப் பார்க்க என் வாழ்க்கை எனக்குப் பெரு நரகமா யிருக்கும் என்று அவர்களுக்குத் தெரியாது. நீ இன்னொருவனின் உடமையாயிருக்கும் எண்ணமே என்னை எதையும் செய்யத் தூண்டி விடுமே!'' மற்றொரு கடிதத்தில், ''உலகத்திற்குக் காதலைப்பற்றி என்ன தெரியும்! பொம்மைகள்'' ......'' நாம் காதலிப்போம்! வாழ் வின் இறுதி முனைவரை ஒருவரை யொருவர் காதலிப்போம்...மகிழ்ச்சி கிடைக்கும் சமயத்திலெல்லாம் அதைப் பருகுவோம்...இது கேள்; என் மரணத்திற்கு பிறகு ஏதாவது தங்கினால், அது! அது ஒரு அணு வாய் இருந்தாலும் அது உன்னைக் காதலிக்கும். என் இன்பத் தேவ தையே! உன்னால் கொடுக்க முடிந்த அளவுக்கு எனக்கு மகிழ்ச்சியைக் கொடு...ஏமாற்றம் பொறுத்துக் கொள்ளமுடியாத வேதனையாகும்'' என்றும், மற்றும் நிறையக் கடிதங் களை எழுதினான்.

எல்லாவற்றிற்கும் ஒரு ஆரம்ப மும் ஒரு முடிவும் இருப்பதுபோல இந்தக்காதலும் தணிந்தது. இவனு டன் வாழ்ந்த காதல் வாழ்க்கையை- நடத்திய காதல் நாடகத்தை அண் டோனி (**Antony**) என்ற நாடக உரு வில் உருவாக்கினான். இந்த நாட கம் இவனுக்கு அமோக வெற்றி யைத் தேடித் தந்தது. நாடகத்தைப் பார்க்க வந்தவர்கள் மகிழ்ச்சியின் பெருக்கால் அதை எழுதியவனைத் தூக்கி, ஊர்வலம் வந்து அவன் அணிந்திருந்த கோட்டை கிழித்து விட்டனர். அந்த நாடகத்தை பார்க்க வந்தவர்களில் ஒருவரான மெலானி வால்டரின் உள்ளம், நாடக வசனம் கேட்டுக் கொந் தளித்து, குமுறி, வேதனை சாகரத் தில் ஆழ்ந்தது.

வெற்றித் தேவியை தன்னிரு கரங்களால் அணைத்துக் கொண்டி ருந்த டூமோஸ் அதை விட்டுவிட மனம் கொள்ளவில்லை. டூமாஸ் இதற்குப் பிறகு பெல் கிரெப்சாமர் (**Bell Krebsamer**) என்ற நடிகை கையைத் தனது மூன்றும் காதலி யாகத் தேர்ந்தெடுத்தான். டூமாஸ் தனக்கு காதரின் லிபே என்பவளி டம் பிறந்த மகனை தன்னுடன் வளர்க்க ஆரம்பித்தான். தனது ஓய்வு வேளைகளில் நிறைய சரித் திர புத்தகங்களைப்படித்து வந்தான்.

அவன் வாழ்க்கையில் அவன் பல நாடுகளில் சுற்றுப்பிரயாணம் செய்து வந்தது மிக முக்கிய அமிச மாகும். முதல் முறையாக ஸ்விட் சர்லாந்து பிரதேசத்தை சுற்றி வந்தான். சுற்றுபிரயாணத்தின் சமயத்திலும் நிறைய எழுதி வந் தான். 1833-ம் வருடம் ஐடா பெரி யர் (**Ida Ferrier**) என்ற நடிகை யின் நடிப்புக் கலையில் மயங்கி அவளைக் காதலித்தான். அவள் நடிப்பு இயற்கையாகவும், உண்மை யாகவும் இருந்தது அவன் மனதை மிகவும் கவர்ந்துவிடடது. அவன் எழுதிய நாடகமொன்றில் திறம்பட நடித்துவிடவே, நாடகம் முடிந்த வுடன் அவளை அணைத்து ''நீ எனக்கு புகழைத் தேடி தந்துவிட் டாய்! உனக்கு நான் மிகவும் கட மைப்பட்டுள்ளேன்'' என்றான். இதுதான்அவர்களின்காதல்நாடகத் தின் முதல்கட்டத்தில், முதல் உரை யாடல். இந்த காதல் நாடகம் பதினேறு வருடம் நடைபெற்றது! 1840-ம் வருடம் இவளை மணந் தான்—முழு பாரீஸ் பட்டினமே ஆச்சரியப்பட்டது!

நாகரீக உலகத்தின் மூலை முடுக்கு களிலெல்லாம் டூமோஸுக்கு புகழ் தேடித் தந்தவை அவன் எழுத்துக் களில் சிறந்த இரண்டு நாவல்களா கும். அவை, ஒன்று, ''மூன்று கத்தி வீரர்கள்'' (**Le Trois Mousq-uetaires**), மற்றது, 'மாண்டிகிரிஸ் டோ' (**Se Comtede Monte Cristo**) ஆகும். இவன் பெற்ற புகழைப் பற்றிச் சொல்லுகையில் ''அவன் பிரான்ஸ் நாட்டை சேர்ந்தவனல்ல; ஐரோப்பா தேசத்தையும் சேர்ந்த வனல்ல; அவன் உலகத்தைச் சேர்ந்தவன்'' என்று விக்டர்யூகோ கூறுகிறான்.

பாரீஸ் பட்டினத்துப் பத்திரிகை ஒன்றில் 'மூன்று கத்தி வீரர்கள்' தொடர்ச்சியாக வர ஆரம்பித்த சமயம் அதுபற்றி முழு பாரீஸ் பட்டி னமும் அதைச் சுற்றியுள்ள பட்டி னங்களிலும் அதைப்பற்றிய பேச் சாகவே இருந்து வந்தது. எல்லா வித மக்களும் அதைப் படித்தனர். டூமோஸின் புகழைக் கண்டு வெறுத் தவர்கள்கூட அதைப் படித்து விட்டுப் புகழ்ந்தனர். இதுபோன்ற வர்களில் ஒருவரான 'பால்ஜாக்' தன் காதலிக்கு கடிதம் எழுதுகையில் ஒரு முழு நாள் அதைப் படித்த தாகவும், அதை மிகவும் புகழ்ந்

தும் எழுதியிருந்தார். உலக இலக்கியத்திலே சாகாவரம் பெற்றுவிட்டது, டூமாஸின் அமர படைப்பான 'மூன்று கத்தி வீரர்கள்' என்ற நாவல்! 'மாண்டி கிரிஸ்டோ'வும் தொடர்ச்சியாக வந்து கொண்டிருந்தது. அநேக வாசகர்கள் அடுத்து கதையின் பாகங்களில் நடக்கும் விஷயங்களை அறிய ஆவலுடன் அதன் ஆசிரியர்கு நிறைய கடிதங்கள் எழுதினர்.

டூமாஸின் புகழ் பெருகியது; எந்த ஆசிரியரின் எழுத்துக்களும் எல்லாவித மக்களால் படிக்கப்பட்டு புகழப்படவில்லை! டூமாஸின் பெயரும், எழுத்தும் பெரும் புகழ் அடைந்தன. முழு பாரீஸ் பட்டிணமே அவனைப் புகழ்ந்து மகிழ்ந்தது. 'பாரீஸின் முடி சூடா மன்னன்' என்று டூமாஸ் அழைக்கப்பட்டான். அவனைப்பற்றி பலர் பலவாறு பேசிக்கொண்டனர். அவன் எழுதிய அளவு எல்லோரையும் ஆச்சரியத்தில் ஆழ்த்தவே, அவன் பலரை தன் வீட்டில் வைத்து பணம் கொடுத்து எழுதச் சொல்கிறான் என்று பேசிக்கொண்டனர்.

டூமாஸ் வாழ்க்கையை விரும்பி அதை நேசித்து வாழ்ந்தான். மனிதத்தன்மையின் நற்குணத்தில் நம்பிக்கை வைத்திருந்த அவன் எல்லோரையும் நேசித்தான்—அன்புடன் நடத்தினான். வாழ்க்கை, டூமாஸுக்கு நம்பத் தகுந்த, வேண்டியதாகவும், நன்றாக அனுபவித்து வாழவேண்டியதாகவும் பட்டது. அவன்தன் எழுத்துக்களின் மூலம்—சலியா உழைப்பின் விளைவாக ஐந்து மில்லியன் டாலர்களைச் சம்பாதித்தான். உலக சரித்திரத்திலேயே அதிகமாக எழுத்தாளன் சம்பாதித்த தொகை இதுவே. சம்பாதித்த பணத்துக்கு அவன் கணக்கு வைத்தது கிடையாது. சேமித்து வைத்ததும் கிடையாது. தனக்காகவும், பிறருக்காகவும் நிறைய செலவு செய்தான். இறந்த நேற்றைப் பற்றியும், பிறவாத நாளையைப் பற்றியும் அவன் கவலைபட்டதே கிடையாது, இன்று தித்திப்பாக இருக்கும்பொழுது!

"அவன், தான் எழுதியதை விட அழகாகப் பேசினான்" என்று சிலர் கூறினர். அவன் மேடையில் பேசவில்லை! அன்றாட உரையாடலில் நகைச் சுவை ததும்பும் வார்த்தைகளில் அள்ளித் தெளிப்பது அவனின் இயல்பான திறமையாயிருந்தது. ஒரு நாள் அவனின் நாடகம் ஒன்று நடந்து கொண்டிருந்தது. டூமாஸ் தன் நாடகத்தை பார்த்துக் கொண்டிருந்தான். எப்பொழுதும் போல உரக்கச் சிரித்துக் கொண்டும், கைத்தட்டிக் கொண்டும் தன் மகிழ்ச்சியைத் தெரிவித்துக் கொண்டிருந்தான். இவனுக்கு பக்கத்திலிருந்த ஒரு ஆசாமி பேசாமல் உட்க்கார்ந்துகொண்டிருந்தான்சிலை போல! டூமாஸின் நடத்தை அவனுக்குப் பிடிக்காத காரணத்தால்' டூமாஸைப் பார்த்து டூமாஸ் சிரிப்பதன் காரணத்தைக் கேட்டான். உடனே டூமாஸ் அந்த ஆசாமியைப் பார்த்து "இது தெரியாதா? நான் உங்களுக்காகச் சிரிக்கிறேன்" என்றான்.

டூமாஸ் உணவு உண்பதில் வல்லவன்; பலவகை உணவு வகைகளை சமைப்பதில் கை தேர்ந்தவன். எந்த இளவரசனும் இவன் உண்ணும் உணவைக் கண்டுவெட்கி தலை குனிவான். அவன் எழுதிக்கொண்டிருக்கும் போது உணவையும், உரக்கத்தையும் மறந்து எழுதிக் கொண்டிருக்கும் சமயம் யாராவது நண்பர்கள் வந்தால்இடது கையால் வணக்கம் செய்து விட்டு வலது கையால் எழுதிக் கொண்டேயிருப்பான்.

அவன் எழுதும் பொழுது உபயோகித்த பேப்பரைப் பற்றியும், பேனாவைப் பற்றியும் அதி ஜாக்கிரதையாக இருந்தான். நீல நிறத் தாள்களில்தான் தனது நாவல்களை எழுதுவான். இதற்கு ஒரு பேனா. கவிதைகள் எழுதுகையில் மஞ்சள் நிற தாள்களில் தான் எழுதுவான், இதற்கு தனியான பேனா. எதாவது பத்திரிகைக்கு கட்டுரைகள் எழுதும் பொழுது ரோஜா நிற தாள்களில் தான் எழுதுவான். ஆனால் அவன் நீல நிற மையினால் மட்டும் எழுத மாட்டான். மேஜையின் மீது மட்டும் தன் நாடகங்களை எழுத மாட்டான். சோபாவில், தலையணை மீது படுத்துக் கொண்டுதான் நாடகங்கள் எழுதுவான். இது கண்டு நகைக்காதீர்கள். இவன் ஆயிரத்து இருநூறு புத்தகங்களை எழுதியுள்ளான். நிறைய பிரயாணம் செய்தான். அப்பொழுதும் எழுதினான் - எழுதினான் - எழுதிக் கொண்டேயிருந்தான்!

வயது வளர, வளர டூமாஸ் இளம் வனிதைகளை நாடினான். அந்த 'வண்ணமலர்' களின் வாசத்திலே, வசந்தமயில்' களின் அணைப்புச் சூட்டிலே வாழ்வின் இன்பத்தைப் பருகத் துடித்தான். இதனால் தன் மகனின் மனக் கசப்பையும் தேடிக் கொண்டான்-

ஒரு நாள் மத்தியானம்! டூமாஸின் நண்பன் ஒருவன் அவனைக் காணவந்தான்! அந்த அறையிலே, எழில் இளம் தையலர்களின் மத்தியில் மையலுடன் மயங்கிக் கிடந்தான் டூமாஸ் அவன் மடியிலே ஒரு மாது அவன் கால்களை வருடிக் கொண்டிருந்தாள். ஒரு கன்னி! அவன் தடித்த உதடுகளில் தன் செம்பவள இதழ்களை பொருத்திப் பார்த்துக் கொண்டிருந்தாள் இன்னொரு பாவை. எல்லா பெண்களும் முக்கால் நிர்வாண கோலத்தில் கிடந்தனர்.

தனக்கென்று பெரிய மாளிகை ஒன்று கட்டினான். தன் புகழ் பரவவே தன்னைக் காண நிறைய மக்கள் வருகின்றனர் என்று தனிமையை நாடினான். இந்த வீட்டிற்கு 'மாண்டி கிரிஸ்டோ' என்ற பெயர் வைத்தான். என்ன புகழின் நடுவிலும், சுகபோகத்தில் புரண்ட சமயத்தில் கூட நிறைய எழுதுவான் ஸ்பெயின் தேசத்திலும், அவன் சென்ற இடத்திலெல்லாம் அவனுக்கு அமோகமான வரவேற்பு கிடைத்தது. ருஷ்யாவிலும் பிரமாதமான வரவேற்பு அளிக்கப் பட்டது! தனக்கென்று தனி வீடு மட்டுமல்ல; தனக்கென்று தனி நாடக அரங்கமும் அமைத்துக் கொண்டான் "எனது நாடக அரங்கம் ஒரு பெரிய புத்தகம்; மாலையில் என் நாட்டு மக்கள் அங்கு கூடி அப்புத்தகத்தின பக்கங்களில் தங்கள் தேசத்தின்

சரித்திரத்தைப்படிக்கலாம்' என்றான்.

அவனின் மாளிகையில் அவனுக்கு தெரியாத எத்தனையோ 'தண்ட பிண்டங்கள்' வசித்து வந்தனர், யூகோவைப் போல, டூமாஸ் நினைத்திருந்தால், முயன்றிருந்தால் கோடீஸ்வரனாக இருந்திருக்கலாம். டூமாஸ் கோடீஸ்வரனாக இருக்கவுமில்லை! வாழவுமில்லை! எத்தனையோ பெண்கள் அவன் வாழ்க்கைப் பாதையில் குறுக்கிட்டனர். பெண்கள் அவனுடன் வாழ வருவார்கள் பிறகு சண்டையிட்டு செல்லும்சமயம் அவனின் பொருள்களையெல்லாம் எடுத்துக் கொண்டு போய்விடுவார்கள், ஒரு சமயம் அது போன்று செய்தவளைப் பார்த்து, "எல்லாவற்றையும் எடுத்து போ! என் மேதையைமட்டும் விட்டு விட்டு போ" என்றானாம். அவன் உழைப்பின் விளைவாக சம்பாதித்ததைபிறர் அட்டைகளைப்போல உறிஞ்சிவிட்டனர்

"அலெக்ஸாண்டர் டூமாஸ்! அவர் மனித தெய்வம்; நான் அவரின் மேதையைப் பற்றி ஒன்றும் கூறப்போவது கிடையாது; அது உலகமறிந்த விஷயம்; காலிபோர்னியாவில் உள்ள தங்க சுரங்கங்களில் உள்ள மொத்த தங்கத்தைவிட அதிகமான தங்கம் அவர் மூளையில் உள்ளது; அவர் உள்ளம் திக்கற்றவர்களுக்கும் அபயமளிக்கும் தருமசாலை என்று ஒரு சிறந்த ஜெர்மன் எழுத்தாளன் டூமாஸ் பற்றி கூறுகிறான், உலக மேதையான பெர்னார்ட்ஷா, "டூமாஸ் கலையின் சிகரம்" என்கிறார். இத்தாலியின் சரித்திரத்தில் மறையாகப் புகழ்பெற்ற சுதந்திர வீரன் கரிபால்டியுடன் நெருங்கிப் பழகும் சந்தர்ப்பம் டூமாசுக்கு ஏற்பட்டது.

இவ்வளவுபுகழ்ப்பெற்றடூமாசின், அந்திமகாலம் துன்பியல் நாடகமாக முடிவுற்றது. என்னதான் சுக போகத்தில் புரண்ட சமயத்திலும், அவன் வாழ்க்கையில் அவன் சாராயம் சாப்பிட்டது கிடையாது! காப்பியும் குடிக்க மாட்டான்! சிகரெட்டும் பிடிப்பதும் கிடையாது! இது பெருத்த ஆச்சரியமல்லவா?

தனது அறுபத்து நான்காவது வயதில் பேரழகி ஆடா ஐர்க்ஸ் மென்கென் (Ada Issacs Menken) என்பவளைக் காதலித்தான். அவள் இளம் பெண்; இலக்கியத்தில் மிகுந்த ஆசை கொண்டவள். உலகில் பல பாகங்களில் சுற்றி, உலகத்து சிறந்த எழுத்தாளர்களுடன் பழகிய அவள் பாரிஸ் பட்டினத்திற்கு வந்த சமயம் டூமாஸுடன் பழக இச்சித்தாள். இந்த காதல் ஜோடியைக் கண்டு பாரீஸ் பட்டபட்டினமே எள்ளி நகையாடியது. டூமாஸின் கடைசி இரண்டு வருடகால வாழ்க்கை வேதனை மயமாக இருந்தது. பணமும் புகழும் இருந்த இடம் தெரியாமல் ஓடி மறைந்தன. "அதிர்ஷ்டம் ஒரு வேசி; இன்றைக்கு பல் இளித்தாலும்; நாளைக்கு அவள் முதுகைக் காட்டுவாள்" என்று தன் நாவலொன்றில் கூறியுள்ளான் டூமாஸ் அவன் காலம் நெருங்கிவிட்டது. மரணத்தின் நிழல் அவன் மேல் படிந்துவிட்டது. அணி மணிகளை விற்று வீட்டு வாடகை செலுத்தினான். அவன் ஓய்வு என்பது என்ன என்பதை இப்பொழுதுதான் தெரிந்துகொண்டான். அவன் எழுதிய காலத்தில், தான் எழுதியதைப் படிக்க அவனுக்கு நேரம் கிடையாது. காதல் விவரங்களில் தலையிட்டு இருபது முறை காதல் சண்டை போட நேரம் இருந்தது. தி

வறுமையில் வாடினான் டூமாஸ். ஒருநாள் அவன் சுவற்றில் யாரோ பின்வருமாறு எழுதியிருப்பதைப் பார்த்தான், "டூமாஸ்! உனக்கு வாழ்க்கையை நன்றாக அனுபவிக்கத் தெரியும். ஆனால் ஒரு நாளைக்கு நீ வருந்தி. உன்னையே நிந்தித்துக் கொள்வாய்" என்றிருந்தது. அதற்குக் கீழ், டூமாஸ் "இதை எழுதியது ஆணாக இருந்தால் அவன் முட்டாள். பெண்ணாக இருந்தால் அவள் பொய்க்காரி" என்று எழுதினான்.

உலகிலேயே அதிகமாக எழுதியவன்

டூமாஸ்! **1200** புத்தகங்கள் எழுதியிருக்கிறான்! உலகிலேயே அதிகமாக எழுதி சம்பாதித்தவன் டூமாஸ் 5 மில்லியன் டாலர்கள் சம்பாதித்திருக்கிறான்! இவ்வளவு சம்பாதித்த அவன் தனக்காக ஒரு காலணாவும் சேமித்து வைக்கவில்லை. ஷா வால், கலையின் சிகரம்' என்று போற்றப் பட்ட இவன் வயது ஏற ஏற, இளம் வனிதையர்களை அதிக மாகக் காதலித்தான். மங்கையரின் செம்பவள அதரங்களை சுவைத்து,சுவைத்து, எழுதினான். கனிமொழி மாதரின் அணைப்பில் தான் கற்பனை ஊற்றெடுத்ததாம் இந்தக் கலைஞனுக்கு! இதை அவனே கூறி இருக்கிறான். வேளைக்கொருத்தி - வித விதமான அழகிகள்,இவன் அணைப்பிலே கிடந்தனராம். இதனால் தன் மகனின் வெறுப்பையும் சம்பாதித்துக் கொண்டான் டூமாஸ்! என்றாலும் ஐரோப்பா கண்டமே அவன் அறிவிற்கு, மேதைத் தன்மைக்கு புகழ் விருந்து படைத்து பூரித்தது!

ஒரு நாள் மாலை டூமாஸ் தனது மூன்று கத்தி வீரர்கள் "புத்தகத்தைப் படித்துக் கொண்டிருந்தான். அவனுடைய மகன் இதைப் பார்த்து, "என்ன படிக்கிறாய்" என்றான்.

"மூன்று கத்தி வீரர்கள்" என்றான் டூமாஸ்,

"அதைப் பற்றி என்ன நினைக்கிறாய்?" என்றான் மகன்.

"அது நன்றாயிருக்கிறது! அதுவே போதும்" என்றான்டூமாஸ்.

அவன் படுத்திருக்கும் சமயம் ஒரு நண்பன் அவனிடம் வந்து, பால்ஜாக் இறந்துவிட்டதால் அவருக்கு ஒரு சிலை அமைக்கவேண்டுமென்று சொன்னான். இது கேட்டு டூமாஸ் "புகழ்பெற்ற மனிதனின் வாழும் காலத்தில் அவன் மீது மக்கள் எறியும் கற்களையெல்லாம் எடுத்துவைத்தால் அதைக் கொண்டு உலகத்திலேயே மிகப் பெரிய நினைவுச்சிலை அமைத்து விடலாம்"

மற்றொரு சமயம், அவனிருந்த அறையில், "ஆத்மாவின் அமரத்தன்மையைப் பற்றி சிலர் பேசிக் கொண்டிருந்தனர். இது கேட்டு டூமாஸ், "ஆத்மா! மறுபிறவி! தூ! நான் அதை நம்பமாட்டேன். நாம் முதல் வாழ்க்கையில் வாழ்ந்தது பற்றி ஒன்றும் தெரியாமலிருக்க, இரண்டாவது வாழ்க்கை பயனற்றது. முன்னால் வாழ்ந்த விதம் பற்றி தெரியாதிருக்க, ஒரு வாழ்வுக்கும்,மறுவாழ்வுக்கும் ஒரு வித தொடர்பும் இல்லாமலிருக்க முன் வாழ்வில் நாம் காதலித்த வரை, நேசித்த வரை மறக்க வேண்டியிருக்க, மறுவாழ்வு பயனற்றது" என்றான் டூமாஸ்.

1870-ம் வருஷம் டிசம்பர்மாதம் 5-ம் தேதி மீளா உறக்கத்தில் ஆழ்ந்தான் டூமாஸ்.

ஜனவரி 5 முதல்
நடைபெறுகிறது

மேனகா

விரைவில் வருகிறது!

முதல் தேதி, செந்தாமரை

கோமதியின் காதலன்

கள்வனின் காதலி

வெறும் பேச்சல்ல

மதுரை, ராமநாதபுரம், திருநெல்வேலி....

ராஜாராணி } திருச்சி...
தஞ்சாவூர்...

ராமநாதன் பிக்சர்ஸ்

காரைக்குடி

Anand..

தென்தமிழ்ப் பாவை

சத்தியவாணிமுத்து

ஏறக்குறைய இரண்டாயிரம் ஆண்டுகட்குமுன் தமிழகம் கலைகளுக்கெல்லாம் இருப்பிடமாகயிருந்தது. காவியத்திலும் ஓவியத்திலும், பண்ணிலும் பாட்டிலும், தலைசிறந்து விளங்கியது. முடி சூடிய மும்மன்னர்களாலும் குடிதழுவிக் கோலோச்சப்பட்டது. நீர் வளமும் நிலவளமும் நிரம்பி, கனியும், கிழங்கும்; தானியங்களும் கணக்கின்றித் தந்தது. மன்னர் அவையிலும் மக்களிடையிலும் முத்தமிழ் முழங்கியது. அறிவிற் சிறந்த புலவர் பெருமக்கள் பல பாடல்கள் பாடினர். கவிதைகள் இயற்றினர், காவியங்கள் தீட்டினர். அந்த நேரத்திலேதான் சிந்தைக்கினிய, செவிக்கினிய செந்தமிழ்க் காவியமாகிய சிலப்பதிகாரம் தோன்றியது. எனினும் சிலப்பதிகாரத்தைப் போன்ற காலத்தை வெல்லும் சிறந்த வல்லமையை அவைகள் பெறவில்லை.

சூதுமதியாளரின் சூழ்ச்சிகளாலும் ஆட்சியாளரின் அடக்குமுறைகளாலும், அறிவு நூல்கள் ஒன்றும் அழிந்துவிடாது. மக்கள் களிக்கவில்லையே என்று மதி தோன்ருமலிருப்பதில்லை, வண்டு பாடவில்லையே என்று வண்ணப்பூ மலராமலிருப்பதில்லை. சிலப்பதிகாரம் தமிழ் நாட்டின் நெஞ்சை அள்ளும் மணி ஆரம் - தமிழரின் பண்பை விளக்கும் எழுத்தோவியம் - தமிழ் பெண்ணிற்கு பெருமை தரும் புதுமைச் சித்திரம். அத்தச் சித்திரத்தின் எழிலரசிதான் கண்ணகி.

கண்ணகி! கற்புக்கரசி - வீரவடிவம் - மதுரையை எரித்த மங்கை என்று காட்டப்பட்டாளே தவிர அவள் ஆரியத்தின் வைரி - பழமையின் விரோதி எனக் காட்டப்படவில்லை. ஆனுல் இளங்கோ அதனை மிக அழகாக விளக்குகிருர்.

கட்டிய கணவன் கோவலன் தன்னை கடைக்கண்ணால்கூட பாராமல் ஆடலழகி மாதவியுடன் ஆடம்பரமாக வாழ்க்கை நடத்துகிருன். ஒரு சில நேரங்களில் வீடு வந்தும் தனக்கு தேவையான நகைகளையும் எடுத்துச் செல்கிருன்: கண்ணீரும் கம்பலையுமாக தானிருக்க, அவன் கலையரசி இல்லத்தில் காலம்தள்ளுவதை நினைத்து உள்ளமுருகி அழுகிருள். வேதனைப்படுகிருள், ஆனுல் அவன்மீதுகுறை எதும் கூறவில்லை. அந்த நேரத்தில்தான் அவளின் உயிர்த் தோழி தேவந்தி, ஓர் பார்ப்பனப் பெண், அவளை அணுகி "கண்ணகி! கவலையை விடு; உன் கணவனை நீ அடையவேண்டுமானுல் நான் கூறுவதைக் கேள். காவிரி கடலோடு கலக்குமிடத்தில் சோமகுண்டம், சூரிய குண்டம், என இரண்டு தடாகங்கள் உண்டு. அவற்றில் மூழ்கி காமன் கோயிலை வழிபட்டால் நீ உன்கணவனை அடைந்து இன்புறுவாய்" என்ருள். அதற்குக் கண்ணகி இப்படி நீர் மூழ்கி, தெய்வந்தொழுதல் எங்கள் பண்பு இல்லை என்று மறுத்துவிட்டாள். இதில் ஆரிய நச்சரவம் தேவந்தியின் உருவில் கண்ணகியைத்தீண்ட முயற்சி செய்து தோல்வி யுற்றதை அறிகிருேம். பார்ப்பனப் பெண்ணிற்குப் பழக்கமான கண்மூடிச் செயலுக்கு, உயர்ந்த தமிழ் பண்பாடுள்ள கண்ணகி கண்ணீர் சிந்தும் காலத்திலேயும், உடன்படவில்லை என்பதை இளங்கோ கீழ்காணும் வரிகளால் காட்டுகிருர்.

"கடலொடு காவிரி சென்றலைக்கு
 முன்றில்
மடலவிழ் நெய்தலங் கானற்
 றடமுள
சோமகுண்டஞ் சூரிய குண்டந்
 துறைமூழ்கிக்
காமவேள் கோட்டந் தொழு
 தார் கணவரொடு
தாமின் புறுவ ருலகத்துத்
 தையலார்
போகஞ் செய் பூமியினும்
போய்ப்பிறப்பர் யாமொருநாள்
ஆடுது மென்ற அணியிழைக்கவ்
 வாயிழையாள்
பீடென் றென விருந்த
 பின்னரே..."

இந்த உயர்ந்த பண்பாடு வாழ்க்கை நடத்திய மரபில் வந்த தமிழ்ப் பெண்கள்தான் இன்று கணவன் நலனுக்கென சோமவார விரதம் போன்ற விரதங்களும்; ஆசைக்கோர் பிள்ளைதேவை என்று அரசமரமும், வேப்பமரமும் சுற்றி, புற்றுக்குப் பால் வார்த்து சிலர் இறுதியில் பூசாரியின் இழிசெயலுக்கும் ஆளாகி மானத்தைத்துறக்கின்றனர். ஆனுல் கண்ணகி பகுத்தறிவு மிகுந்தவளாய் கணவன் கைவிட்டால், காமன் கோயிலை கும்பிடுதல் அறிவுடைமையாகாது என வாளாயிருந்துவிட்டாள்.

பிறகு தானுகவே மாதவிமீது வெறுப்புற்று வீடு திரும்பும் கணவனைக் கண்டு ஆத்திரமோ ஆவேசமோ அடையாமல் பொறு

மையின் உறைவிடமான கண்ணகி அவனை இன்முகங்காட்டி வரவேற்கிறாள். ''இத்தனை காலம் மாதவியின் மையலில் மயங்கி வீழ்ந்து பெற்றோர் மலைபோல் குவித்த செல்வத்தைக் கரைத்து கரியாக்கிவிட்டு வெட்கித் தலைகுனிந்து வந்துள்ளேன்'' என்று வருத்தப் படுகிறான் கோவலன்.

அப்போதும் கண்ணகி அதைப் பற்றி ஒன்றும் குறிப்பிட்டு அவனைப் பழிவாங்கவில்லை. மனம் நோகும் படியும் செய்யவில்லை. மாறாக, கணவனின் துயர் நீக்க, ''கவலையுறாதீர்! என் காற்சிலம்புகள் உண்டு. அவைகளை எடுத்துக் கொள்ளுங்கள்'' என்று கூறிச் சிலம்புகளைத் தருகிறாள். அத்துடன் நிற்கவில்லை. நிறையப் பொருள் இருந்தபோது தன்னை நினைத்தும் பாராத கணவன் இன்று வறியனாய் வந்து 'வா என்னுடன், வெளியூர் சென்று பொருள்தேடி வாழ்க்கை நடத்துவோம்' என அழைத்த போது, உடனே அவன் பின் சென்றிருக்கிறாள். அதனைக் கோவலனே 'எழுக என எழுந்தாய்! என்செய்தனை;' புறப்படு என்றேன் நான் - நீ புறப்பட்டு விட்டாய். என்ன காரியம் செய்தாய் என மனமுறுகி கூறியுள்ளான். இந்தச் செய்கை அவள் கணவன் மீது வைத்துள்ள அன்பு எவ்வளவு தூய்மையானது என்பதையும் மனந் திருந்தியவரை மன்னிக்கும் உயர்ந்த மனிதப்பண்பு உள்ளவள் என்பதையும் எடை போட்டுக் காட்டுகிறது.

மதுரை மாநகரத்தில் சிலம்பு விற்கச்சென்ற கோவலன் சூது மதியாளன் ஒருவனின் சூழ்ச்சியால் கள்வன் எனப் பழிசுமக்கப்பட்டு; பாண்டியன் நெடுஞ்செழியனின் அவசரக் கட்டளையால் கொலை செய்யப்படுகிறான். சேதி அறிந்த கண்ணகி விழுகிறாள் - எழுகிறாள் - கதறுகிறாள் - கண்ணீர் வடிக்கின்றாள் - அழுது புரண்டு அரற்றுகிறாள். பாண்டியனை நீதிகேட்டுப் பழி வாங்க வேண்டுமென்று கோபம் மேலிட்டவளாய் அரண்மனை செல்கிறாள். அங்கேயிருந்த வாயில் காப்போனை 'அறிவறை போகிய பொறியறு நெஞ்சத்து இறைமுறை பிழைத்தோன் வாயிலோயே' அறிவு தாழ்வுற்று நெஞ்சில் அறமில்லாமல் அரசநீதி தவறியவனின் வாயில் காப்போனே! என்று சற்றும் அச்சமின்றி அழைக்கின்றாள்.

இதனைச் சாதாரணமாக குறிப்பிட்டால் 'அறிவுகெட்ட அநியாயக்காரன் அரண்மனைக்கு காவல் புரிபவனே' என்றுதானே பொருள்; இந்தப் பொருள்பட ஒரு அரசனின் அதுவும் நீதியும் நேர்மையும் இமையும் பிறழாது ஆட்சி செய்யும் அரசனின் காவலாளியை அழைத்தாள் என்றால் அவள் உள்ளத்தில் எவ்வளவு உண்மையும், உறுதியும், துணிவும் இருந்திருக்க வேண்டும்.

அழைத்தவள் 'இணையரிச் சிலம் பொன் றேந்தியகையள் கணவனை யிழந்தாள் கடையகத்தா ளென்று அறிவிப்பாயே!' கணவனை இழந்தவளொருத்திமற்றொருசிலம்புடன் அரண்மனை வாயிலில் இருக்கிறாள் என்று போய்ச் சொல்' என்று அவனை அதட்டி அனுப்பியுமிருக்கிறாள்.

பிறகு அரசன் முன்னிலையில் சென்று அவன் நீ யார் என்று கேட்ட கேள்விக்கு, 'தேரா மன்னா' தேர்ச்சியில்லாத மன்னவனே என்று அழைத்து, தான் பிறந்த ஊரின்பெருமையைக்கூறி, ''எனது மாமனார் மாசாத்து வாணிகன் என்ற பெரும் வணிகர், அவரது மகனும், இந்த ஊரில் என் காற்சிலம்பு ஒன்றை விற்க வந்து உன்னால் கொலைசெய்யப்பட்ட கோவலன் மனைவி கண்ணகி'' என்று கூறுகிறாள்.

மாசாத்து வாணிகன் மகனையாகி...
நின்பாற் கொலைக்களப்பட்ட
கோவலன் மனைவி
கண்ணகி யென்பதென் பெயரே,

கள்வனைக் கொல்லுதல் கடுங்காவல் ஆகாது என மன்னன் சொல்ல 'நற்றிறம் படராக் கொற்கை வேந்தே' நல்ல அறநெறிச் செல்லாத கொற்கைநகரத்து வேந்தனே' என்று மீண்டும் அவனின் மடமையைச் சுட்டிக் காட்டுகிறாள்.

மாண்டான் மணாளன் - எனக் கேட்டதும் மயங்கி வீழ்ந்து அழுது புரண்டவள் அவனின் உயிரைப் போக்கிய அரசனைக்கண்டு ஆத்திரப்படவில்லை - அறிவும் மயங்கவில்லை. எவ்வளவு உறுதியும் சமயத்தில் கையாளவேண்டிய பொறுமையும்

உரிமைக் கிளர்ச்சி — என். எஸ். இளங்கோ	0 8 0
பேனா வீரன் — வி. சிவப்பிரகாசம், பி.ஏ.	0 8 0
இடிந்த கோவில் — என். எஸ். இளங்கோ	1 0 0
அருவி அழைக்கிறது — துரைராசன், பி.ஏ.	1 0 0
மன்னிப்பு — தோழியர் அருண்மொழி, பி.ஓ.எல்.	1 0 0
அச்சாரியார் — தோழியர் பூங்கோதை	1 8 0
கவிமணி தேசிகவிநாயகம் பிள்ளை — சதாசிவம்	2 0 0

கழிவு 30 பெர்சண்ட், செலவு தனி.

திருச்சி மன்றம்

தெப்பக்குளம் :: திருச்சி

அவளுக்கு இருந்துள்ளது. ஆட்சி புரியும் அரசன் அவன் - அதிகாரமும் ஆள்அம்பும் ஏராளமுண்டு அவனிடம். அவளோ தனியொருத்தி. ஆனாலும், வாதாடினாள்.

தற்காலப் பெண்களாயிருந்தால் கொலை செய்யப்பட்டான் கணவன் என்றால் வீட்டிலே அழுது மடிவார்களே தவிர வெளியே வரமாட்டார்கள். வந்தாலும் விவரம் கேட்கவும் மாட்டார்கள், கேட்கவும் இடந்தராது சமுதாயம். இன்றும் ஓட்டுச் சாவடி, மருத்துவமனை போன்ற பொது இடங்களிலும், ஏன்? ஆபத்து நேரத்தில் அருகில் நிற்கும் கணவனை அழைக்கவும் அவனின் பெயரைச் சொல்லவும் துணியாமல், அறியாமையால் அவதியுறும் தாய்மார்கள் எத்தனைபேர்.

ஆனால் கண்ணகி மாமனாரின் பெயர், கணவனின் பெயர் தேவைப்பட்ட நேரத்தில் கூறத்தயங்கவில்லை. இதுவன்றோ உயர்ந்த நாகரீகம் - சிறந்த பண்பு. அரச நீதியின் இலக்கணம் தெரியாது, முறை தவறியதை, தன் காற்சிலம்பில் மாணிக்கக் கற்கள் உண்டு என்று உடைத்துக்காட்டி அரசனின் அவசர-அறிவீன- அறமற்ற செய்கை வெளிப்படுத்தி அவனின் தவறை அவனே உணர்ந்து 'யானோ அரசன்! யானே கள்வன்! தென்புலங் காவல் என் முதற் பிழைத்தது! கெடுக என் ஆயுள்!' என வருந்தி வீழ்ந்து உயிரை விடும்படிச் செய்துள்ளாள். இதுவன்றோ வீரம்!

நானோ பெண்! அரச சபை அணுகவும் அருகதையற்றவள். அரசன் அதிலும் பாண்டியன் தவறியா நடந்திருப்பான்? யாரே அவனைத் தட்டிக் கேட்க முடியும்' என்றோ அல்லது 'கணவன் பெயரை எப்படிக் கூறுவது? குடிப் பெயரைச் சொன்னாலும் கொண்டவனின் பெயரைக் கூறலாமா? இது தகுமா நமக்கு? என்று நினைத்து 'எல்லாம் என் தலைவிதி - இறைவன் விட்டபடி நடக்கட்டும்' என்று அவள் படிதாண்டா பத்தினியாக யிருந்திருந்தால் சிலப்பதிகாரம் எது நமக்கு?

எனவே கண்ணகி அறிவின் சிகரம் - அன்பின் உருவம் - வீரத்தின் சின்னம் என்று மாத்திரமல்ல! அவள் ஆற்றலின் ஊற்று - பண்பின் பிறப்பிடம் - நேர்மையின் குன்று என்றும், ஆரியத்தின் வைரி பழமையின் விரோதி என்றும் பாராட்டுகிறோம். அந்த வீர மங்கையின் வழிவந்த பெண்கள்தான் இன்று சமுதாயத்தில் இழைக்கப்படும் அநீதிகளைத் தட்டிக் கேட்கத் தயங்குகிறோம். இனியாவது மூடப் பழக்க வழக்கத்தை அறவே தொலைத்து, அநீதியை அழித்து உரிமையோடு வாழ முயற்சிப்போமாக!

◎

இலக்கியத்தில்

என்னெஞ்ச மென்மலரைக் கசக்கிடவோ என்னில்
இணைந்திருக்கும் அமைதியதை அழித்திடவோ அந்த
வன்னெஞ்சம் மிகவுடைய மங்கையவள் நல்லோர்
மனம்நாணும் கீழ்க்குணத்தாள் சோர்வெனுமோர் வேசி
என்னுருவைத் தொடர்ந்தோடி வந்திட்டாள். கண்டேன்.
இதயத்தில் இடந்தேடி இன்னலூட்டும் அவட்கு
என்றனைநான் அளிப்பேனோ? விரைந்தோடி இன்ப
இலக்கியத்து இல்புகுந்து எனைமறைத்துக் கொண்டேன்.

கத்துகின்ற சிலம்பணிதான் கற்புயர்வு பாட
கவினிடையின் மேகலையோ அருளிஞெளி வீச
சித்திரத்தின் நற்றிறத்தைச் சித்தரிக்கும் இல்லாள்
செவ்வாழைத் தண்டனைய கரத்திலெனை ஏற்று
தொத்துகிளி போலெனது தோளினிலே தோய்ந்தாள்.
துவள்கின்ற தூயவுடல் சுவைத்திடவே ஈந்தாள்.
மெத்தவின்பம் மேவுகின்ற ஒருலகில் அந்த
மெல்லியலாள் தன்னுடனே மேதினியை மறந்தேன்.

- ஆர். எஸ். சம்மந்தம்

கண்ணீர்

காதல் உலகில் :

கவலற்க தைத்திங்கள் வருவேன் என்று
காதலிபால் இனிதுரைத்துத் தேற்றிச் சென்றான்
அவளதற்கு மனமொப்பி ஆற்றி நின்றாள்;
அறுவடைகள் புரிந்துமகிழ் பொங்கும் தையை
உவகைத்தேன் பெருக்கெடுக்கத் தையல் கண்டாள்.
உளங்கவர்ந்து பிரிந்தவன்றன் வரவு நோக்கிக்
குவளைக்கண் கனிசிவந்து துயிலும் இன்றிக்
குளமாயிற் றவன்வாரா திருந்த தாலே.

இடியிடித்து மின்வெட்டிக் குளிர்ந டுக்கி
இருகையால் உடல்போத்தி ஒடுங்கும் வண்ணம்
கொடிபிடித்து மழைபெய்யப் பிரிந்த காதற்
கொழுநன்இனும் வந்திலனே என்று சோர்ந்து
துடிபிடித்த இடையுடையாள் துவளும் போது
துணைவனங்கு தோன்றியதும் புதையல் கண்ட
மிடிபிடித்தோன் உள்ளம்போல்—துள்ளித்தாவும்
மிளிர்விழியில் மெருகிட்டுத்—ததும்பும் கண்ணீர்.

குழந்தை உலகில் :

அன்னையிடம் தின்பண்டம் கேட்டுப் பிள்ளை
அடுத்தடுத்து நச்சரிக்க அச்சம் காட்டி
உன்னையிதோ கட்டுகிறேன் என்று கையை
ஓங்கிஒரு கயிறெடுக்க மிகச்சி வந்து
கன்னமதில் முத்துதிர்க்கும் அழகுக் கண்கள்;
கஞ்சிக்கும் வகையின்றித் தெருவிற் சுற்றிச்
சின்னவர்கை யேந்துகையில் இல்லை என்று
சினந்துரைக்க நீர்சிந்தும் பசித்த கண்கள்.

குடும்பத்தில் :

நோய்வந்து மிகவருத்த உடல்மெலிந்து
நொந்துழலும் சிறுமகவு துயரம் கண்ட
தாய்வருந்தி மனமுடைந்து பெற்ற நெஞ்சு
தாளாமல் சிந்துகிறாள் கண்ணீர்; அந்தச்
சேய்நிலையும் தாய்நிலையும் காணும் தந்தை
செயலற்று வழியற்று வறுமை அம்பு
பாய்ந்திருக்கும் மனப்புண்ணின் செந்நீர் போலப்
பாவமவன் விழிசிந்தும் கண்ணீர் வெள்ளம்.

"திருமணமேன் செயத்துணிந்தேன்? பின்பு பிள்ளைச்
செல்வங்கள் பெற்றெடுக்கும் பிழையேன் செய்தேன்?
வறுமையுறு மக்களுக்கு வாழ்வும் உண்டோ?
வளர்செல்வம் பெற்றவர்க்கே வாழ்வாம்" என்று
பொறுமிமனம் வெம்பிஉல கோர்செய் கேலி
பொறுக்கஉளம் ஆற்றாமல் விம்மு கின்றான்
குறுமனமும் இழிசெயலும் நிறைந்த பாரில்
கொட்டுகிறான் கண்ணீரை அந்தோ! அந்தோ!!

விதவை உலகில்:

வெண்மதியில் தண்மையுண்டு, வீசும் தென்றல்
விளைவிக்கும் நல்லின்பம், அவளிடத்தும்
பெண்மையுண்டு பருவஎழில் நிறைய உண்டு
பேசுமொழி கிள்ளைஎன்பர் இருந்தும் அன்னாள்
பெண்மைநலம் காணுகிலாள் விதவை என்று
பெயர்வைத்துக் கொல்கின்றார். உலகைக் காணக்
கண்ணிருந்தும் குருடாகிக் கண்ணீர் சிந்திக்
கயிறில்லாப் பம்பரம்போல் பாழாய் நின்றாள்.

தொழில் உலகில்:

வித்திட்டுப் பயிர்செய்து விளைச்சல் கண்டான்
விதவிதமா ளிகைபலவும் ஆக்கித் தந்தான்
முத்துக்குக் கடல்மூழ்கிப் பிழைத்து வந்து
முதலாளி உலகுக்கே ஒளியைத் தந்தான்
புத்துக்குள் கைநீட்டும் செயல்போல் மண்ணுள்
பொன்னுக்கு நுழைகின்றான் இவர்க ளெல்லாம்
மத்திட்ட தயிர்போல நெஞ்சு டைந்து
வாழ்வின்றிக் கண்ணீரைச் சிந்துகின்றார்.

பொது வாழ்வில்:

இவ்வண்ணம் மக்கள்படும் துயாம் நோக்கி
இவைநீங்கி கலங்கண்டு வாழ்வ தற்குச்
செய்வண்ணம் யாதென்று சிந்தித் தாய்ந்து
செயல்செய்யத் துன்புற்று மக்கள் இன்னும்
உய்வண்ணம் உணர்ந்திலரோ என்று கண்ணீர்
உகுக்கின்றார் நல்லறிஞர்; இன்னும் சில்லோர்
கைவண்ணம் பலகாட்டித் தாமே வாழக்
காசினியில் வடிக்கின்றார் முதலைக் கண்ணீர்!

முடியரசன்

பொங்குக இன்பம்

அ. மு. பரமசிவானந்தம்
M. A., M. Lit.

பொங்கல் தமிழர் திருநாள், தாம்இன்புறுவது உலகு இன்புறக் காணும் தனிப் பெருந் திருநாள். வாழவைத்தாரை வாழ்த்தும் திருநாள். வளம் வழங்கிய கதிரவனையும் காளைகளையும் வாழ்த்தும் திருநாள். 'நாடெங்கும் வாழக் கேடொன்றுமில்லை' யென்ற கொள்கையை வாழ்க்கையில் காட்டும் வளம் நிறைந்த நன்னாள். ஆம்! அத்தகைய பொங்கல் நாள் இதோ இன்று. தமிழர் தம் மனமகிழ, இன்பம் களி துளும்ப, இனிமைகொழிக்க வருகின்றது. 'வையகம் துயர் தீர்க'என வாழ்த்துவோம்நாம்.

பொங்கல் உழவர் திருநாள். உழைப்பவர் திருநாள். உலகை அன்பால் தட்டி எழுப்பி அனைவரையும் அணைத்துச் செல்லும் திருநாள். ஆடி தொடங்கி அறுவடை வரையில் வெய்யிலிலும் மழையிலும், வெள்ளத்திலும்,பள்ளத்திலும் வருந்திப் பாடுபட்ட உழவன் பெற்றது கொண்டு சுற்றம் அருந்தும் திருநாளே பொங்கல் நாள், வான்நோக்கி நின்று ஆடியில் பெய்த மழையினால் வயலைச் சீர்செய்து, விதைத்து, முளைபெற்றபின் செய்ய வேண்டியவற்றை யெல்லாம் செய்து, களை கட்டு, எருவிட்டு, கதிர் முற்றியபின் அறுத்து, அடித்து; களம் நிரப்பிப் பின் களஞ்சியம் சேர்த்த உணவுப் பொருளை உற்றார்க்கும் மற்றார்க்கும் வாரி வழங்கும் நாளன்றோ பொங்கல் நாள். வயலில் விளைந்த நெல்லைச் சோறாக்கி உண்ண நினைக்கும் பொழுது உருவாகும் விழாவே இப்பொங்கல் நாள்.

தமிழன் நன்றி மறவாதவன் 'எந்நன்றி கொன்றார்க்கும்' உய்வுண்டாம், உய்வில்லை செய்ந்நன்றி கொன்ற மகற்கு' என்ற வள்ளுவர் வழியில் வந்தவனல்லவா அவன். ஆம்! அந்த நிலையிலே தன் வயல் வளம் கொழிக்கச் செய்தவர்களை யெல்லாம் எண்ணிப் பார்க்கின்றான் அவன். மழை பெயவன்றோ நிலம் விளைந்தது. மழையின்றி மாநிலத்தார் வாழ்வேது? அம்மழைக்கு முதலாய கதிரவன் அவன் கண்முன் வருகின்றான். உலகு அவன் ஒளியாலன்றோ வாழ்கின்றது. அவன் வெம்மையும் ஒளியுமின்றி மழையேது? எனவே மழைக்கு முதலாகிய சூரியனை வணங்குகின்றான் அவன்.

தம்மை ஒப்பாரும் மிக்காரு மன்றி எல்லா உயிர்களையும் ஒத்துநோக்கும் பண்பாடு தமிழனுடையது. எனவே தனக்கு உதவிய வான்வழிச் செல்லும் கதிரவனோடு, கானிடைத் திரியும் காளைகளையும் ஒத்து நோக்குகின்றான். தன்னோடு வயலிடை வருந்தி உழைத்த அவற்றைக் குளிப்பாட்டு அழகு செய்து, மாலை அணிவித்து, சோறு படைத்து மகிழ்கின்ற நாளே மாட்டுப் பொங்கல்.

இனி, தன்னைச் சூழ்ந்த உலகை நோக்குகின்றான் தமிழன். எல்லாரும் இன்புற்றிருக்க நினைக்கின்றது அவனது பண்பட்ட உள்ளம். நாட்டிலே அனைவரும் தன்னைப் போன்று வாழ்கின்றார்களா எனக் காண்கின்றான் அவன். தம் உற்றவரையும் மற்றவரையும்

அருகழைத்து உசாவுகின்றான் அவன். 'செல்வத்துப் பயனே ஈதல்' என்ற உணர்வு அவன் உள்ளத்து அரும்புகின்றது. எனவே அவன் அனைவரையும் கண்டு கண்டு ஒல்லும் வகையான் உதவுகின்றான், மற்றவரைக் கண்டு மகிழ்வில் பொங்கும் நாளே காணும் பொங்கல்.

இவ்வாறு தைத்திங்களின் முதல் மூன்று நாட்களும் தமிழர் திருநாளாக அமைகின்றது. விழா என்பதே உலகை ஒத்தும் நோக்கும் நெறியில் நடப்பது என்பது தான். காவிரிப்பூம் பட்டினத்திலே இந்திரவிழா நடக்க இருப்பதை வள்ளுவ முதுமகன் யானைமேல் இருந்து முரசறைந்து அறிவித்ததை அறியின், இவ்வுண்மை புலனாகும். காவிரிக் கரையிலே-உயர்ந்த பட்டத்து யானையின்மீதிருந்து அவன் என்ன சொல்லி மக்களை முரசறைந்து விழாவுக்கு அழைத்தான்? என்ன சொல்லி வாழ்த்தினான்?

'பசியும் பிணியும் பகையும் நீங்கி
வசியும் வளனும் சிறக்கென
வாழ்த்தி'

முரசறைந்தான், வள்ளுவர் பெருமகன். ஆம். விழாநாட்களில் நாட்டில் பசியிருக்கக் கூடாது. பிணிதலை காட்டலாகாது. பகை அடியோடு இல்லையாக வேண்டும். செல்வமும் வளமும் செழிக்க வேண்டும். இதுதான் விழாவின் அடிப்படை. பொங்கல் விழாவும் அந்த அடிப்படையில் அமைந்தது தான். அவ்விழாவில் அனைவர் உள்ளமும் இன்பத்தில் பொங்க நாம் வாழ்த்துவோம்.

பொங்கல் விழா சாதிசமய வேறுபாட்டைக் கடந்தது. இதில் சமயப்பூசலுக்கு இடமில்லை. சாதிச் சண்டைக்கும் வழியில்லை. மக்கள் அனைவரும் ஒன்றிக்கலக்கும் ஒப்பற்ற விழா இது. தமிழ் நாட்டு மக்கள் அனைவரும் உளத்தால் ஒன்றிக் கலந்து கொண்டாடும் ஒப்பற்ற பெருவிழா இது. இந்த ஆண்டு தமிழ் நாட்டில் நல்ல முறையில் அமைகின்றது இப்பொங்கல் நாள். கடந்த ஆறு ஆண்டுகளில் வரண்ட பஞ்சத்தால் பீடிக்கப்பட்ட தமிழ்நாடு இன்று மழையிடை மகிழ்ந்து விளைந்த நெல் கொண்டு பொங்கல் கொண்டாடுகின்றது. இந்த மகிழ்ச்சியில் தமிழர் அனைவருக்கும் பங்கு உண்டு. ஆம்! நாமும் 'மக்கள் நலம் பெறுக' என வாழ்த்துவோம்! அவர் உள்ளத்தே 'இன்பம் பொங்குக' எனப் போற்றுவோம்! பொங்குக இன்பம்! பொங்குக அன்பு!

★

கூர்வாள்! குமுறும் கோடையிடி!
தமிழகத்திலே தவழ்ந்தோடி வரும்
தண்புனலோடை!

கட்டபொம்மன்
(வீரவாலாறு நாடக உருவில்)

''அமலன்'' தீட்டித் தரும் தெவிட்டாத தீந்தமிழ் சொல்லோவியம்

இருவண்ண முகப்பு விலை ரூ. 2-8-0

—: கிடைக்குமிடம் :—
ஸ்ரீவாணி விலாச அச்சகம்
திருப்பாதிரிப்புலியூர்
பாக்கெட் காலண்டர் இனும்!

கதையிலே ஒரு புதுமை!
கருத்திலே ஒரு புரட்சி!

ஜெகவீர பாண்டிய
கட்டபொம்மன்-
-ஊமைத்துரை
(ஜீவிய நாடகம்)

மதுரை N. V. பாண்டியன் எழுதியது.

மூவண்ண முகப்பு விலை ரூ. 2-0-0

—: கிடைக்குமிடம் :—
திங்கள் பதிப்பகம்
திருப்பாதிரிப்புலியூர்
பாக்கெட் காலண்டர் இனும்!

சதீபதீகள் சாசம்

1

கன்னல்தனை தமிழாகப் பிழிந்து பேசும்
காதலியே! கரும் காவற் கண்ணி னாளே!
தென்னை புதுப் பாளையெனச் சிரித்தமுல்லை,
செம்மர்லை வருமீன்போல் கொண்டு வந்தேன்!
பின்னல் சடைக்கரும்பாம்பாய் வாரிப் பின்னி,
பீடுடைய மணிபோல வைக்காவிட்டால்,
உன்றன் அனை இது சோளப் பொரியதென்று,
ஒளிந்திருளிற் பொக்கைவாய்ப் போட்டுக்கொள்வாள்!

2

தங்கநிறம் தனைக்காட்டி கிளிகொத்தாமல்,
சமைத்திருந்த மாம்பழம் உன் கொங்கை போல,
பங்கிடவே உன்னிடமே கொண்டு வந்தேன்
பனிநிலவே! நீ யிதனை மறுத்து விட்டால்,
அங்கிருந்து, செவியிருந்தும் கேளா உன்றன்,
அன்னையவள் பருப்புருண்டைச் சாதமென்று
மங்கிருளில் பொக்கைவாய்ப் போட்டுக் கொண்டு,
மாரடைக்கத் தண்ணீரும் வேண்டுமென்பாள்!

3

கை நெசவில் கைதேர்ந்த காஞ்சிமக்கள்,
கலை வளத்தைக் காட்டுகிற பட்டுச்சேலை,
நெய்நிகர்த்த உன் மேனி கட்டிச் செந்தீ
நெகிழ் சுவாலை வீசிடவே கொண்டுவந்தேன்!
நொய்யரிசிக் கொதியல் போல் கோபம் கொண்டு,
நூலிடையாள் நீ வெறுத்துக் கூறிவிட்டால்,
பெய் மழைக்குப் போர்வையென உனது அன்னை,
பிரித்ததையே போர்த்தி முகம்மூடிக் கொள்வாள்!

கம்பதாசன்

2000 ஆண்டுகளுக்கு முன்னிய
இசைச்செல்வம்

1\. மூவகைக் கலை

இவை ஆடல், பாடல், கொட்டு எனப் பெறும்.

2. ஆடல்

இருவகை. இவை சாந்தி, விநோதம் என்பன. அகக்கூத்து- புறக்கூத்து எனவும் ஆகும். இவ்விரண்டு வகைக் கூத்தும் 11 தொழில் பெறும்.

(அ) சொக்கம்

இது சுத்த நிறுத்தம், அதாவது தாள லயத்தை ஆதாரமாக உடையது.

(ஆ) மெய்த்தொழில்

இது தேசி, வடுகு, சிங்களம் என மூவகைப்படும். இது உள்ளக் குறிப்பை ஆதாரமாக உடையது.

(இ) அவிநயம்

இது கதை தழுவாது, பாட்டின் பொருளுக்கு ஏற்ப கைகாட்டி உணர்த்துவது.

(ஈ) நாடகம்

இது கதை தழுவி வருகின்ற கூத்து.

இவை நான்கும் நாயகன் சாந்தமாக ஆடும் கூத்தாதலின் **சாந்திக் கூத்து** எனப் பெறும். பின்வரும் ஏழும் **விநோதக்கூத்து**களாம்.

(உ) குரவை

இது காமமும், வென்றியும் பொருளாகக் கொண்டும் குரவைச் செய்யுளைப் பாட்டாகக் கொண்டும் ஏழு அல்லது ஒன்பது பேர் கை பிணைந்தாடுவது.

(ஊ) கலிநடம்

இது கழாய்க் கூத்து எனப் பெறும்.

(எ) குடக்கூத்து

தலையில் கும்பம் வைத்து ஆடுவது.

(ஏ) கரணம்

வீழ்ந்து ஆடுதல்.

(ஐ) நோக்கு

பாரமும், நுண்மையும் மாயமும் ஆகும்.

(ஒ) தோற்பாவை

தோலால் பாவை செய்து ஆட்டுவது. இது பொம்மையாட்டம் எனப் பெறும்.

(ஓ) நகைக் கூத்து

நகைப்பிற்குரிய வேடிக்கைக் கூத்துகளாம்.

3. பலவகைக் கூத்து

இது வென்றி, வசை என இரு வகைப்படும். மாற்றான் ஒழுக்கமும் மன்னன் உயர்ச்சியும் **வென்றி** யாகும். பல்வகை உருவமும் பழித்துக் காட்டுவது **வசையா**கும்.

4. கூத்தின் இலக்கணம்

இது நிலை, பாதம், அங்கம், வருத்தனை, நிருத்தக்கை என ஐவகைப்படும்.

இதில் நிலை அறுவகை, பாதம் ஐவகை, அங்கம் பதினாறு வகை. வருத்தனை நான்கு வகை, நிருத்தக்கை முப்பது வகை, ஆக வகை 61 ஆகும்.

5. விலக்கு உறுப்பு

இது வேந்து விலக்கு, படை விலக்கு, ஊர்விலக்கு என்னும் விலக்குக்களாகிய பாட்டுகளுக்கு உறுப்பாய் வருவது. இது 14 வகையாகும்.

1. பொருள், 2. சாதி, 3. யோனி, 4. விருத்தி இந்நான்கும் ஒருவகை.

5. அவை, 6. குறிப்பு, 7. சத்துவம் 8. அவிநயம் இந்நான்கும் மற்றொரு வகை. 9. சொல், 10. சொல்வகை 11.வண்ணம்,12. வரி இந்நான்கும் வேறு ஒரு வகை. 13. சந்தி, 14. சேதம் இவ்விரண்டும் பிறிதொரு வகை.

இப்பதினான்கு துறைகளுக்கும் விளக்கங்கள் உள. நான்காவதாக உள்ள விருத்திக்கு ஒரு விளக்கத்தை இதன் அடியிற் காண்க.

விருத்தி என்பது நாடகத்தின் இயல்பு என்பதாகும். இவ் இயல்பு நால்வகைப் படும்.

(அ) சாத்துவதி

அறம் பொருளாகக் கொண்டு தெய்வமானிடர் தலைவராக வருவது.

(ஆ) ஆரபடி

பொருளைப் பொருளாகக் கொண்டு வீரமகன் தலைவனாக வருவது.

(இ) கைசிகை

இன்பம் பொருளாகக் காமுகராகிய மக்கள் தலைவராக வருவது.

(ஈ) பாரதி

என்பது கூத்தன் தலைவனாக நடன், நடி பொருளாகக் காட்டியும் உரைத்தும் வருவது என்றாகும்.

6. சுவை

ஒன்பது வகைப்படும். அவை, வீரம், அச்சம், இழிப்பு, வியப்பு, இன்பம், துன்பம், வெகுளி, நகை, சமநிலை என்பன. இதனை நவரசம் என வடமொழியாளர் கூறுவர்.

7. நடிப்பு

இது 24 வகைப்படும். இதனை அவிநயம் எனக் கூறுவதும் உண்டு.

1\. வெகுண்டோன், 2. ஐயமுற்றோன், 3. சோம்பினோன். 4. குடித்தோன்,5. மகிழ்ந்தோன், 6. அழுக்காறுடையோன், 7. இன்பமுற்றோன், 8. தெய்வமுற்றோன், 9. மயக்கமுற்றோன். 10. உடன்பட்டோன், 11. உறங்கினோன், 12. உறங்கி விழித்தோன், 13. செத்தோன், 14. மழையில் நனைந்தோன், 15. பனியில்நனைந்தோன் 16. வெயில் காய்ந்தோன், 17. வெட்கமுற்றோன். 18. வருத்தமுற்றோன், 19. கண்ணோவுற்றோன். 20. தலைநோவுற்றோன், 21.நெருப்புப் பட்டோன், 22. சீதமுற்றோன். 23. வெப்பமுற்றோன். 24. நஞ்சு உண்டோன் என்பனவாம்.

இவை 24-க்கும் சுவை, 9-க்கும் சிலப்பதிகாரத்தில் உள்ள அரங்கேற்று காதைக்கு உரை எழுதிய

— கி. ஆ. பெ. —

விசுவநாதம்

அடியார்க்கு நல்லார் மேற்கோளாகக் காட்டிய பாடல்கள் 33-ம் நல்விளக்கமாகும். அவை ஒவ்வொன்றும் நடிப்புக் கலையின் திறத்தைக் கூறி நம்மை வியப்படையச் செய்கின்றன. இன்றைய நடிப்புப் புலவர்களும், நடிப்பைச் சுவைப்பவர்களும் இக்கலையின் திறத்தை அறியவேண்டுமென்பது எனது ஆசை.

இவற்றுள் 24-வதாகிய நஞ்சுண்டோன் நடிப்புக்குஉரிய இலக்கணப் பாடலே மட்டும் இங்கு எடுத்துக் காட்டாகக் காட்டுகிறேன்.

'' கொஞ்சிய மொழியும் கூரெயிறு மடித்தலும்
பஞ்சின் வாயிற் பனிநுரை கூம்பலும்
தஞ்சம் மாந்தர் தம்முகம் நோக்கிஓர்
இன்சொல் இயம்புவான்போல் இயம்பாமையும்
நஞ்சுண்டோன் தன் அவிநயம் என்ப ''

பிறவற்றிற்கும் இவ்வாறு இலக்கணங்கள் உள.

8. சொல்

சொல் என்பது ஒரு உறுப்பு. அது உட்சொல், புறச்சொல், ஆகாயச் சொல் என மூவகைப்படும்.

(அ) உட்சொல் என்பது நெஞ்சொடு கூறுவது.

(ஆ) புறச்சொல் என்பது கேட்போர்க்கு உரைப்பது.

(இ) ஆகாயச் சொல் என்பது தானே கூறுவது என்பனவாம்.

9. சொல்வகை

சொல்வகையாவது சுண்ணம் சுரிதகம், வண்ணம், வரிதகம் என நால்வகைப்படும்.

(அ) சுண்ணம் நான்கடியால் வருவது.

(ஆ) சுரிதகம் எட்டடியால் வருவது.

இ) வண்ணம் பதினாறு அடியால் வருவது.

(ஈ) வரிதகம் முப்பத்திரண்டு அடியால் வருவது.

இந்நான்கின் விளக்கமும் விரியும்ஆதலின் வண்ணத்தின் விளக்கத்தை மட்டும் அடியிற் காண்க.

(அ) பெருவண்ணம், இது 6 வகை.

(ஆ) இடைவண்ணம், இது 21 வகை.

(இ) வனப்பு வண்ணம், இது 41 வகை.

ஆக வகை 3-க்கும் வண்ணம் 68 ஆம். தொல்காப்பியர் 20வண்ணம் கூறியுள்ளார். 100 வண்ணம் கூறுநரும் உளர்.

10. வரி

வரி என்பது வரிக்கூத்துக்கு உரிய பாடல். இது பண், திறம், செயல், பாணி என நால்வகைப் படும்.

வரிப்பாடல்கள் திணை நிலைவரி, கிணைநிலைவரிமுகமுடைவரி,முகமில் வரி, படைப்புவரி எனபலபடப் பாகுபாடு எய்தும்.

இவற்றின் இயல்புகள் அனைத்தையும் சிலப்பதிகாரத்தின் கானல் வரியுள்ளும், வேனிற் காதையுள்ளும் விளங்கக் காணுங்கள்.

11. கூத்து

இக்கூத்து 11-வகைப்படும். இவற்றுள் நின்றுடுதல் ஆறும், வீழ்ந்து ஆடுதல் ஐந்தும் ஆகும். இவற்றை,

(அ) "அல்லியம், கொட்டி, குடை, குடம் பாண்டரங்கம், மல்லுடன் நின்றுடவாறு.''

(ஆ) துடிகடயம் பேடு மரக்காலே பாவை வடிவுடன் வீழ்ந்தாடலைந்து என்ற நூற்பாக்களாலறியலாம்.

12. பாட்டு

பாட்டு என்பது அகநாடகங்களுக்கும், புறநாடகங்களுக்கும் உரிய உருவாகும்.

அகநாடகங்களுக்குரிய உரு **கந்தம்** முதல் **பிரபந்தம்** ஈருக உள்ளவை28-ஆம்.புறநாடகங்களுக்குரிய உரு **தேவபாணி** முதலாக **அரங்கொழி** செய்யுள் ஈருக செந்துறை விகற்பங்கள் அனைத்துமாகும்.

(அ) கந்தம் என்பது அடிவரையறையுள்ளது. ஒரு தாளத்தால் புணர்ப்பது.

(ஆ) பிரபந்தம் என்பது அடிவரையறை இல்லாதது. பலதாளத்தாற் புணர்ப்பது.

13. கொட்டு

கொட்டப்படுகின்ற இசைக்கருவி, இது பாட்டுக்குரியன, நாட்டியத்திற்குரியன. இவ்விரண்டிற்கும் உரியன என மூவகைப்படும்.

(அ) பாட்டிற்குரியன கீதாங்கம் எனப்படும். பாடல் என்பதுஇன்பம், தெளிவு, நிறை, ஒளி, வன்சொல், இறுதி, மந்தம், உச்சம் ஆக எண் வகைப் பயனுடையதாகும்.

(ஆ) நாட்டியத்திற்குரியவை: நிருத்தாங்கம் எனப்படும். இது அகக்கூத்து, புறக்கூத்து இரண்டிற்கும் உரியது. சிற்று, கடிசரி முதலிய தேசிக்குரிய கால்கள் 24. சுற்றுதல், எறிதல், முதலாகிய வடுகுக்குரிய கால்கள் 14. உடல் தூக்கு முதலாகிய உடலவர்த்தனை 9-ம் ஆக 47-ம் இதற்குரியன.

(இ) இரண்டிற்கும் உரியது: ஆடலுக்கும், பாடலுக்கும் உரிய இது **தாளம்** ஆகும்.

கொட்டு, அசை, தூக்கு, அளவு என இது நான்கு நிலைகளையுடையது.

கொட்டு ஆவது அமுக்குதல்.

அசை ஆவது தாக்குதல்.

தூக்கு ஆவதுதூக்கித் தாக்குதல்.

அளவு ஆவது ஓசையின் எல்லை.

14. ஓசையின் அளவு

கொட்டு அரை மாத்திரை, அசை ஒரு மாத்திரை, தூக்கு இரண்டு மாத்திரை, அளவு மூன்று மாத்திரை.

கொட்டுக்கு வடிவு க. அசைக்கு வடிவு எ. தூக்குக்கு வடிவு உ. அளவுக்கு வடிவு க.

15. தாளவகை

அரைமாத்திரையுடைய ஏக தாளம் முதல் 16 மாத்திரையுடைய உவோசனம் வரையுள்ள 41 தாளங்களும் புறக்கூத்துக்கு உரியன.

ஆறன்மட்டம், எட்டன் மட்டம், தாளவொரியல், தனிநிலை வொரியல் என்பனவும், ஒன்றன் பாணி முதல் எண்கூத்துப் பாணி வரையுள்ள பதினொரு தாள விகற்பங்களும், முதல் நடை வாரம் முதலியனவும் அகக்கூத்துக்கு உரியன.

16. தூக்கு

இத்தாளங்களின் வழிவரும் தூக்குகள். அவை செந்தூக்கு, மதலைத் தூக்கு, துணிபுத் தூக்கு, கோயிற் தூக்கு, நிவப்புத் தூக்கு,

கழாத்தூக்கு, நெடுந்தூக்கு என எழுவகைப்படும்.

17. பிண்டி, பிணையல்

பிண்டி என்பது எழிற்கை, பிணையல் என்பது தொழிற் கையாகும்.

பிண்டி ஒரு கையால் காட்டும் அவிநயங்கள், பிணையல் இரு கைகளால் காட்டும் அவிநயங்கள் என்றுருகும்.

இவற்றுள் **ஒற்றைக்கை அவிநயம்** 33 வகை. அவை: பதாகை, 2. திரிபதாகை, 3. கத்திரிகை, 4. தூபம், 5. அராளம், 6. இளம்பிறை, 7. சுகதுண்டம், 8. முட்டி, 9. கடகம், 10. சூசி, 11. கமலகோசிகம், 12. காட்கூலம், 13 சபித்தம், 14. விற்பிடி, 15. குடங்கை, 16. அலாபத்திரம், 17. பிரமரம், 18. தாம்பிரசூடம், 19. பசாகம், 20. முகுளம், 21. பிண்டி 22. தெரிநிலை, 23. மெய்நிலை, 24. உன்னம், 25. மண்டலம், 26. சதுரம், 27. மான்நிலை, 28. சங்கு, 29. வண்டு, 30 இலதை, 31. தபோதம், 32. மகரமுகம், 33. வலம்புரி என்பன.

இரட்டைக்கை அவிநயம் 15வகைகளாகும். அவை: 1. அஞ்சலி; 2. புட்பாஞ்சலி; 3. பதுமாஞ்சலி; 4. கபோதம்; 5. கற்கடம்; 6. சுபத்திகம்; 7. கடகா வருத்தம்; 8. நிடதம்; 9. தோரம்; உற்சங்கம்; 11. புட்பபுடம்; 12. மகரம்; 13. சயந்தம்; 14. அபயவத்தம்; 15. வருத்தமானம் என்பன.

இவை 48-ம் எவ்விதம் கைவிரல்களால் காட்டுவது? என்பதற்கு நூற்பாக்கள் இன்னும் இருக்கின்றன.

18, குரவை, வரிக்கூத்து

குரவைக் கூத்து; வரிக்கூத்து என்பது அவரவர் பிறந்த நிலத்துத் தன்மையும், தொழில் தன்மையும், தோன்ற நடித்தல்.

வரி என்பது பெரும்பாலும் வேற்றுரு தாங்கி நடிப்பது.

முல்லை நிலத்தில் ஆய்ச்சியர் குரவையும், குறிஞ்சி நிலத்தில் குன்றக் குரவையும், நெய்தல் நிலத்தில் கானல் வரியும் பாலைநிலத்தில் வேட்டுவ வரியும், மருதநிலத்தில் ஊர் சூழ் வரியும் நிகழ்ந்தனவாக சிலப்பதிகாரத்தில் அமைந்திருப்பதை பெயரை அறிந்து மகிழுங்கள்.

19. யாழ்

பேரியாழ், மகரயாழ், சகோடயாழ், செங்கோட்டியாழ் என யாழ் நால்வகைப்படும். பேரியாழுக்கு நரம்பு 21, மகரயாழுக்கு நரம்பு 19. சகோட யாழுக்கு நரம்பு 14. செங்கோட்டு யாழுக்கு நரம்பு 7-ஆம் ஆகும்.

20. குழல்

இது புல்லாங்குழல்வேய்ங்குழல், வங்கியம் வேணு எனப் பெயர் பெறும்.

இது மூங்கிலாலும், வெங்கலத்தாலும், சந்தனமரம், செங்காலி மரம், கருங்காலி மரம் ஆகிய மரங்களாலும் செய்யப்பெறும்.

இவற்றுள் மூங்கில் உயர்தரம் வெண்கலம் நடுத்தரம். மற்றவை கீழ்த்தரம் ஆகும்.

21. முழவு என்பது தோல் கருவிகளாகும். இவை அகமுழவு, அகப்புற முழவு, புறமுழவு, புறப்புற முழவு, பண்ணமை முழவு நாண் முழவு, காலைமுழவு என எழுவகைப்படும்.

(அ) அகமுழவு:

மத்தளம், சல்லிகை, இடக்கை, கரடிகை, பேரிகை, படகம் குடமுழா என்பன.

[ஆ] அகப்புறமுழவு:

தண்ணுமை, தக்கை, தகுணிச்சம் என்பன.

[இ] புறமுழவு:

கணப்பறை முதலியன.

(ஈ) புறப்புறமுழவு:

நெய்தற்பறை முதலியன.

[உ] பண்ணமை முழவு:

நிசாளம், துருமை, முரசு, திமிலை என நான்கு.

எங்கும் ஏஜெண்டுகள் தேவை

காரம், மணம், குணம் நிறைந்த



—: விபரங்களுக்கு :—

அனுமான் பட்டணம் பொடி கம்பெனி

வேலூர் (N. A.)

[ஊ] நாண்முழவு:
நாழிகைப்பறை.
[எ] காலே முழவு:
துடி என்றுரும். இவற்றுள் (அ) உயர்தரம் (ஆ) நடுத்தரம். (இ) கடைத்தரம், (ஈ) வீரமுழவு எனப் பெறும்.

22. ஏழிசை: ஏழிசைகளேயும் தமிழில் குரல், துத்தம், கைக்கிளே, உழை, இளி, விளரி, தாரம், எனக்குறிப்பிடப்பெறும். இதனேவட நூலார் சட்சம், ரிடபம், காந்தாரம், மத்திமம், பஞ்சமம், தைவதம், நிடாதம் எனப்பெயரிட்டு இச்சொற்களின் எழு முதல் எழுத்துக்களேக் கொண்டு ச, ரி, க, ம, ப, த, நி, என சுரவரிசையிட்டனர். இது தமிழிசையாகிய ஆ, ஈ, ஊ, ஏ, ஐ, ஓ, ஔ, என்ற ஏழிசை யாகும். இதனே

ஆ, ஈ, ஊ, ஏ, ஐ,ஓ,ஔ,வெனும் இவ் வேழெழுத்தும் ஏழிசைக் குரிய'' என்ற திவாகரச் சூத்திரம் மெய்ப்பிக்கும்.

தமிழில் இசை, பண் என்பவை களே வடமொழியாளர் சுரம், ராகம் எனக்கூறுவர். தமிழில் **அலகு** என்று சொல்லப்படுவதே `வட மொழியில் **சுருதி** என்றுரும். தமிழில் **ஆளத்தி** என்று கூறு வதை வடமொழியினர் ஆலாபனம் எனக்கூறுவர்.

24. அலகுகள்.
ஏழிசைகளாகிய குரல், துத்தம் முதலியவைகளுக்கு தமிழில் 22 அலகுகள் கூறப்பட்டுள்ளன. வட மொழியினும் இவ்வாறே 22 சுருதி கள் கூறப்பட்டுள்ளன. என்ருலும் தமிழ் அலகுகள் 4, 4, 3, 2, 4, 3, 2. வடமொழி அலகுகள் 4, 3, 2, 4, 4, 3, 2. என ஆகும்.

இந்த இசை வரிசையை தமிழில் கோவை யெனவும் கூறுவதுண்டு. இவ்வரிசை அமைப்புகள் **ஆயப் பாலே, சதுரப்பாலே, வட்டப்பாலே, திரி கோணப்பாலே** என நால் வகைப் படும். இவற்றினின்றும் உண்டா வதே **இசையாம்.**

25. இசையின் எண்:
இவ்வாறு பிறக்கும் இசையின் எண்ணிக்கை 11991 ஆகும். இதற்கு எடுத்துக்காட்டாக உள்ள நூற்பா அடியிற்கண்டவாறு சிதைந்து காணப்படுகிறது.

**உயிர் உயிர்மெய் அளவுஉரைத்த
ஐம்பாலினும்
உடல் தமிழ் இயல் இசை ஏழுடன்
பகுத்து
மூவேழ் பெய்தந்....................
தொண்டு மீண்ட பன்னீராயிரம்
கொண்டனர் இயற்றல் கொளே
வல்லோர் கடனே!**

இதில்தொண்டுமீண்ட என்பது ஒன் பதுகுறைந்தஎன்றுரும். உயிர்மெய் **அளவு** ஆவது அவரவர் விரற்கிடை யில் 96 விரற்கிடையாம். மேலே நாற்பத்திஎழரையும் கீழே நாற் பத்திஎழரையுமாக விரற்கிடை அளவுகளேக் கழித்தால் இடையில் இருக்கிற ஒரு விரற்கிடை அளவே யாகும். இந்தவிடத்தில்தான் மூலா தாரம் இருக்கிறது. இந்த மூலாதா ரத்திலிருந்துதான்ஒலிகிளம்புகிறது.

இம்மேற்கோளாக வந்த நூற் பாவும், சுவை, 9க்கும், நடிப்பு 24க்கும் மேற்கோளாக வந்த நூற் பாக்களும் எவர் பாடியதோ? அந் நூல் எதுவோ? எக்காலத்ததோ? எப்பொழுது? எவ்வாறு அழிந் ததோ? அறியமுடியவில்லே.

இன்னும் இசை இலக்கணத்தில் கவிஞன் அமைதியும், ஆடலாசிரியன் அமைதியும், பாடலாசிரியன் அமைதி யும் யாழ் ஆசிரியன் அமைதியும், குழல் ஆசிரியன் அமைதியும் முழவு ஆசிரியன் அமைதியும், ஆடு மகளிர் அமைதியும், பாடுமகளிர்அமைதியும் அரங்கின் அமைதியும், கொட்டகை அமைக்கும் முறையும், குழல் செய் யும் முறையும் கூறப்பெற்றுள்ளன. இவை **அனே**த்தும் விரிக்கிற் பெரு கும். நினேக்கில் நெஞ்சு இளகும்.

இதைப் படிக்கும் தமிழ்மக்கள் தமது முன்னேர்கள் துருவி ஆராய்ந்து, கண்டுபிடித்து, எடுத்து, வகைப்படுத்தித் தந்துள்ள தமிழிசைச் செல்வத்தைக் கண்டு மகிழ்ந்து அவர்கட்கு இப்பொங்கற் பெருநாளிலே கலேவணக்கமும், தலே வணக்கமும் கூறி, தமிழையும் தமிழிசையையும்வாழ்த்தி தமிழகத் தைப் பெருமைப் படுத்தவேண்டு மென்பது எனது எண்ணம்.

★

இந்தியா லேப் & ஜெனரல் அஷ்யூரன்ஸ் சொசைடி, லிமிடெட்

தலேமை ஆபீஸ் : **கோயமுத்தூர்.**

31-12-1953 முடிய பாலிசி ரூ. **1000-க்கு வருஷம் 1-க்கு**

போனஸ்

ரூ 20 முழு ஜீவிய பாலிசிக்கு.
எண்டௌமெண்டு பாலிசிக்கு ரூ15

அதிகப் படியாக போனஸ் அளிப்பதே கம்பெனியின் துடர்ந்த அபிவிருத்திக்கு அத்தாக்ஷி

முக்கிய அம்சங்கள்:
குறைந்த சந்தா விகிதம், உரிமை சீக்கிரம் கொடுப்பது, தமிழ் நாடு முழுதும் பாங்கு, ஏஜன்சி வசதிகள்.
பிரதிநிதித்துவத்திற்கு, பாலிசி எடுப்பதற்கு, தக்க நிலேயம்.

சேர்மன் & Mg. டைரக்டர்.
திரு. M. S. பழனியப்ப முதலியார். B. A.,

டைரக்டர் & காரியதரிசி·
திரு. C. R. சிவசுப்பிரமண்யம், B.A.

கடவுளைக் கண்ட மனிதர்கள்

அ. பொன்னம்பலனார்

உழுது விதைத்து உணவுப் பொருள்களை உற்பத்தி செய்து தரும் விவசாயிகட்கு வயிற்றுக்குச் சோறில்லை. உடைகள் பல, பல, நெய்து கொடுக்கும் நெசவுத் தொழிலாளிகட்குப் போதிய ஆடைகள் இல்லை. மாடமாளிகைகளைக் கட்டிக் கொடுக்கும் தொழிலாளர்கட்கு வசிக்க இடம் இல்லை. சமூக நலம் கருதி பல, பல துறைகளில் உழைக்கும் உழைப்பாளிகள் சமூகத்தில் தாழ்ந்த சாதி. உடல் உழைப்பின்றி பிறர் உழைப்பை சுரண்டி வாழ்ந்திடும் மக்கள் மேல் சாதி. மேல்சாதிக்காரர்கள் வாழ்க்கையில் எல்லா வசதிகளையும் பெற்று உல்லாசமாக வாழ்ந்திட மதம், புராணம், கடவுள், வேதம் ஆட்சிபீடம் ஆகிய எல்லாம் துணை செய்கின்றன. தாழ்ந்த சாதிக்காரன், சமூகத்தில் அடிமை, சூத்திரன், வேசிமகன். மேல்சாதிக்காரருக்கு பணிவிடைசெய்யவே—கடவுளால் படைக்கப்பட்ட கீழ்சாதி மக்கள், வாழ வசதியற்றவர்கள். பிச்சை எடுத்தும், கூலிவேலைகள் செய்தும், நாடோடிகளாக அலைந்தும், வேலையில்லாத் திண்டாட்டங்கட்கு ஆட்பட்டும், இன்னல்கள் பல ஏற்றும் இடர்பட வேண்டியவர்கள். இந்த இழிநிலைமை ஏன்? இந்த பேதங்களைப் போக்கவேண்டாமா? வர்ணச்சரமத்தின் பெயராலும் மதத்தின் பெயராலும், கடவுளின் பெயராலும், மேல்சாதி கீழ்சாதி, ஏழை பணக்காரன், ஆண்டான் அடிமை, என்ற பேதங்களையும், கொடுமைகளையும் நாட்டில் மேலும் வளர்க்க துணை புரிவது அறிவுடைமைதானா? அவசியம்தானா? "ஒன்றே குலம் ஒருவனே தேவன்" என்ற உயர்ந்த நெறியோடு வாழ்ந்த மக்கள், இன்று வர்ணச்சரமத்திற்கும், மதவெறிக்கும், அடிமையாகக் கூடாதென்று மக்கட்கு விளக்கிக் கூறினால், மதத்திற்கும் கடவுளுக்கும், ஆபத்து வந்துவிட்டதென்று கூச்சல் போடுவானேன்? மதத்தையும் கடவுளையும் காட்டி, மக்களை ஏமாற்றிப்பிழைக்கும், தரகர்கட்கும், சுயநலக் கூட்டத்திற்கும், ஆட்சியாளர் ஆக்கமளித்து வருவானேன்?

"ஏழையென்றும், அடிமை என்றும்
எவனுமில்லை சாதியில்: இழிவு கொண்டமனிதர் என்பர் இந்தியாவில் இல்லையே"
"மனிதர் உணவை மனிதர் பறிக்கும்
வழக்கம் இங்கு இல்லை, நம்மில் அந்த வழக்கம் இனி இல்லை"

இந்தப் பாடல்களை அமரகவி பாரதியார் பாடினார். பாட்டின் கருத்தை ஊன்றிப் படியுங்கள். பாடல்களிலுள்ள கருத்துக்கள் உண்மையில் நிறைவெய்தியதா? பாரதியார் ஆசை நிறைவேறவில்லை. அவர் கவிதைகள் போற்றப் படுகின்றன. பாரதி மணிமண்டபங்கள் கட்டப்படுகின்றன. பாரதி விழா கொண்டாடப்படுகின்றன. ஆட்சியாளர்கள், அமைச்சர்கள், பாரதியார் விழாவில் பங்கு பெறுகின்றனர். இன்றைய ஆட்சியாளர்களால், நாட்டுமக்கள் இன்னல்களைப் போக்க, கவலை நீக்க, வறுமை, பஞ்சம், பட்டினி, வேலையில்லாத் திண்டாட்டம் ஆகியவைகளை ஒழிக்கத்திட்டம் தீட்டமுடியவில்லை. அவர்களால் எப்படி மக்கட்கு நன்மை செய்ய முடியும்? நல்ல திட்டங்களைத் தீட்டமுடியும்? சுதந்திரக் குடியரசுத் தலைவரும் கவர்னரும், மந்திரிமார்களும், இராமேஸ்வரத்திற்கு யாத்திரை போய் கடல் நீராடி, பார்ப்பனப் புரோகிதர்கள் காலில் விழுந்து, காணிக்கை செலுத்துவதிலும், கோயிலில் குருக்கள், தீட்சதர்கள் பட்டர்களிடம், தலைவணங்கி மரியாதை மாலைகள் பெற பவனி வருவதிலும், மாரியம்மன் கோயில் காளி கோயில், திரௌபதை கோயில், அநுமார் கோயில் உள்ள இடங்கட்குப் போய், பக்தி, உபதேசங்கள் செய்யவும்தான் அவர்களால் முடிகின்றது. அவர்கட்கு மேலும் ஓய்விருந்தால், நாட்டியக் கச்சேரிகள் நாடகங்கள் இசைவிருந்துகள், வரவேற்புகள், இராமாயண காலட்சேபங்கள் ஆகிய நிகழ்ச்சிகட்குத் தலைமை தாங்க, விருந்துண்ண, மலர்மாலை சூடி, மாற்றுக் கட்சிக்காரர்களையும், அவர்கள் கொள்கைகளையும் ஒழித்துக்கட்டுவோம், என்று வீர உரையாற்றவும்தான் முடிகிறது. இவர்கள்

மக்கள் வரிப்பணத்தில், சம்பளம் பெறுகிறார்கள். மக்கள் நலம் பெற, நாடு வளம்பெற, ஆட்சி பீடத்தில் வீற்றிருப்பதாகவும், ஜனநாயக அடிப்படையில் அரசாட்சியை இனிது நடத்தி வருவதாகப் பெருமையுடன் கூறிக்கொள்கிறார்கள். வெள்ளைக்காரன் ஆட்சிக் காலத்தில், செய்யத்துணியாத அடக்குமுறைக் கொடுமைகளையும், மூடபக்தியை வளர்க்கும் மடமைச் செயல்களையும், மதவெறிமூட்டும், மதியற்ற செயல்களையும் துணிந்து செய்கிறார்கள். உதாரணமாக :- சென்னை ஒற்றைவாடைத் தியேட்டரில் நவாப் ராசமாணிக்கம் குழுவினர்: “திரு முருக அவதாரம் குமார விஜயம்” என்ற புராண நாடகம் நடித்து வருகிறார். இவர் நாடகத்திற்கு, நகரிலுள்ள மந்திரிமார், ராஜாக்கள், போலீஸ் அதிகாரி, ஆகியவர்களை அழைத்துத் தலைமைவகிக்கச் சொல்லுகிறார். மலர்மாலைச் சூட்டி வரவேற்கிறார். அவர்களைப் புகழ்ந்து பாராட்டுகிறார்கள். இது, அவர்கள் சொந்தவரவுசெலவு கணக்கு. வயிற்றுப் பிழைப்புக்காக மக்கள், எதை எதையோ செய்து, பிழைக்கிறார்கள் பொருளீட்டுகிறார்கள்! புகழ்பெறுகிறார்கள்! ஆனால், நாடகம் பார்க்கச் சென்ற மனிதர்கள், சொற்பொழிவுவேறு செய்திருக்கிறார்கள். அவர்கள் கூறுவதில் முக்கிய சாரம் என்னவென்றால், “கடவுள் இல்லை கடவுள் அருள் இல்லை என்று தூற்றப்படும் இக்காலத்தில், நாஸ்திகக் கருத்துக்களையும், நச்சுக் கொள்கைகளையும், மக்கள் மனதில் புகுத்தி நாடகங்கள் நடத்தப்பட்ட இதே தியேட்டரில், கடவுளைக் கண்டோம், முருக பெருமான் மயில் வாகனத்தில், வள்ளி, தெய்வயானையுடன் தோன்றும், அருள், காட்சி கண்டோம். பார்வதியும் பரமசிவனும் புரிந்த காதல் கலவியில், முருகன் திருஅவதாரம் கண்டோம். கடவுள் நெறி பரவுகிறது. கடவுள் பக்தி வளர்கிறது. நாஸ்திகம், நச்சுக் கொள்கை சுக்கு நூறாக உடைபடுகிறது!’ என்றெல்லாம் பேசியதுடன் கடவுள் பக்தியில் அவசியம் பற்றும் கடவுளை மறந்தால், வாழ்வில்லை என்றும், மக்கள் துயரம் குறைகளைக் கடவுள்தான் தீர்ப்பார் என்றும், பொறுப்புள்ள மந்திரிகளும், போலீஸ் நிர்வாக பெரிய உத்தியோகஸ்தரும் பேசியிருக்கிறார்கள். “வேலைக்காரி!! ஓர் இரவு!! பராசக்தி!! நீதிதேவன் மயக்கம்!! சொர்க்கவாசல்!! இரத்தக்கண்ணீர்!! சந்திரோதயம்!! சந்திரமோகன்!! வால்மீகி இராமாயணம் (தோழர் எம். ஆர். இராதா அவர்கள் நடத்தும்) நாடகங்கள் போன்றவைகளை மனதில் நினைத்துக் கொண்டு, “நாஸ்திகம்” பரவுகிறது. “நச்சுக் கொள்கை” வளர்கிறது என்றெல்லாம் தங்கள் ஆத்திரத்தை வெளிப்படுத்திப் பேசியிருக்கிறார்கள்.

இவர்களுக்கு—

“சிவலீலா! கந்தலீலா!! கிருஷ்ண லீலா!! —சிவனும், விஷ்ணுவும் (ஆணும் — ஆணும் கூடி) மோகங்கொண்டு, காதலித்து கலவி செய்து, கையிலே சுக்கிலத்தை ஏந்தி அரிகரன் (பெற்ற) அய்யனார், ”ஐயப்பன்” நாடகம் போன்றவைகளும், ரிஷிபத்தினியைக் கடவுள் கற்பழித்த கதைகளும், கருத்துக்கு விருந்தாகத் தேவைப்படுகின்றது போலும்! அறிவுக்குப் பொருத்தமற்ற புராணக் கதைகளையும், மூடபக்தியை வளர்க்கும், அறிவற்ற அநாகரீகச் செயல்களையும், கடவுள் பெயரால் நடத்தி, கடவுள் என்ற சொல்லுக்கு இழுக்கு உண்டாக்கும் இழி செயல்களையும் பொதுமக்கள் வெறுக்க ஆரம்பித்து பல ஆண்டுகள் ஆயிற்று. ஆதலால்தான் நாட்டின் நிலை, மக்கள் நிலையுணர்ந்த நாடகக் கம்பெனியார், மந்திரிமார், கவர்னர், போலீஸ் அதிகாரி, சட்டசபை உறுப்பினர்கள் ஆகியவர்கள் தலைமையில், விளம்பரம் செய்து, தங்கள் வியாபாரத்தை நடத்தி, பொருளீட்ட முனைகிறார்கள். நாடகக் கம்பெனியில் நடிக்கின்ற சிறுவர்கள் சம்பளம் கேட்டால், சம்பள உயர்வு கேட்டால்! “காளியைத்தியானத்தில் கேட்டுச் சொல்லுகிறேன், சரணம் ஐயப்பா, சரணம் ஐயப்பா, என்று சொல்லிக்கொண்டே போய், காளி உத்திரவு கொடுக்கவில்லை பொறுத்திரு. பணஆசை வேண்டாம்; பொருளாசையை விடு :” என்று தம் கம்பெனி நடிகர் சிறுவர்கட்குப் போதிக்கிற மனிதரும், இவற்றைப் புகழந்து, பாராட்டிவிட்டு மலர்மாலைகள் கழுத்தில் விழுந்தவுடன் கடவுளைக் கண்டேன்! முருகன் திரு அவதார மகிமையைக் கண்டேன், என்று நாடகத்தைப் பார்த்துவிட்டு பொய்யுரைக்கும், மந்திரிமார்கள் போலீஸ் அதிகாரி போன்ற மனிதர்களை எல்லாம், மனதில் வைத்துக்கொண்டுதான் கவி பாரதியார் அவர்கள்.

“சிந்தையில் கள் விரும்பி சிவ, சிவ என்பது போல் வந்தேமாதரம் என்பார்.”

என்று தம் கவிதையில் இடித்துரைத்தார் போலும்! கடவுளை நாடக மேடையில் பார்த்த மனிதர்கள் வாழட்டும். கடவுளை நாடக மேடையில் கொண்டு வந்து காட்டி பொருளீட்டும் மனிதரும் வாழட்டும்! இவர்கள் வாழ்ந்திடபல் வேறு வழி வகைகள் இருக்கிறது! அவர்கள் வாழ்வில் உல்லாசம், மகிழ்வு, இன்பம் எல்லாம் இருக்கிறது. கடவுள் அருளும்கூட இருக்கிறது. குறைவு ஒன்றுமில்லை! ஆனால், சமூகத்தில் தாழ்ந்த சாதி மக்களாய் இழிபிறப்பாய், உண்ண உணவும் உடுக்க உடையும், இருக்க வசிக்கக்குடிசையும் படிக்கவசதியும் நோய்பட்டால் மருத்துவ வசதிகளும் இல்லாமல், உடல்இளைக்க உழைத்தாலும், உழையாத சோம்பேறிகட்கும் சுரண்டல்காரர்கட்கும் கொடுத்துவிட்டு இன்னல், இடர்படும் மக்கள் வாழ்க்கை, வளம் பெறுவது எந்நாளோ?

★

அமெரிக்கா, பிரிட்டிஷ் நாடுகளில் வெளியாகும் தங்களுக்குத் தேவையான எந்தப் பத்திரிகைக்கும் தயவுசெய்து சந்தா விவரத்திற்கும் மற்ற விவரங்களுக்கும் உடனே எழுதுங்கள்.

அங்கீகாரம் பெற்ற ஏஜண்டுகள்:
SALEM ADVERTISING SERVICE,
Gugai, Salem,
South India

சகோதர வாஞ்சையாம்!

பூ. கணேசன், M.A.

வாஞ்சை வேறு, பக்தி வேறு. இரண்டும் போட்டுக் குழப்பப்படுகிறது இராம காதையில். குழப்பத்தைக் குளறுபடி யாக்குகிறார் கம்பர். இல்லாத வொன்றினை இருப்பது போல் கூறி, சிறப்பு கற்பித்துக் கொள்கிறார். கம்பரது இராமாயணத்தை உள்ளது உள்ளபடியே வைத்து அறிவு ரீதியில் - நுணுக்க முறையில் ஆராயின், தனது இராமாயணத்தில் கம்பர் உண்மையையும் புலமையையும் உணர்த்தினாரில்லை யென்பதும் இராமன் மாட்டுக் கொண்டிருந்த 'பக்திப் பிரபாவத்தை'யே கொட்டினாரென்பதும் புலப்படும். காவியம் புனைய வந்த கம்பரின் இப்போக்கு விரும்பத் தக்கதல்ல. இனி அதைக் காண்போம்.

சகோதர வாஞ்சையினை சித்தரித்துக் காட்டுவதுதான் இராமாயணத்தின் உட்கிடக்கை யெனக் கூறப்படுகிறது. இராமாயண நாடக மாந்தர்களிடை நிலவிய சகோதர வாஞ்சையைக் காண முயலுமுன் 'சகோதர வாஞ்சை' யென்ற தொடரின் உண்மைப் பொருளை உணர்ந்து கோடல் இன்றியமையாததாகும். சக உதரத்தில் (ஒரு வயிற்றில்) தோன்றியவர் சகோதரர். வாஞ்சை யென்பது நெருக்க முள்ளார் மாட்டு நிகழும் நேயம். எனவே, "உடன் பிறந்தாரிடையே நிலவும் நேயமும் அன்பும்" என்பது இத்தொடரின் நேரடியான பொருளாகும்.

கம்பரது இராமகாதையின் நாடக மாந்தர்களில் இன்றியமையாச் சிறப்பு வாய்ந்தோர் சில சகோதரக் கூட்டத்தினர் ஆவர். கதை தொடங்கிய இடத்தில் தோன்றியவர்கள் இராமன் முதலான **அயோத்தி வீரர்கள்.** காதைஉச்சநிலையடைந்த இடத்தில் தோன்றியவர்கள் வாலி சுக்கிரீவன் ஆகிய **கிஷ்கிந்தை வீரர்கள்.** காதை முடியுமிடத்தில் தோன்றியவர்கள் இராவணன் முதலாய **இலங்கை வீரர்கள்.** இராமன் இலக்குவன் முதலாய நால்வரும் சக உதரத்தில், அதாவது ஒரு தாய் வயிற்றில் பிறந்த மக்களல்லர். எனவே, அவர்கள் சகோதரர்கள் ஆகமாட்டார்கள். எனினும், ஒரு தகப்பன் மக்கள் எனக்கேள்விப்படுகிறோமாகையால், சகோதரர்களெனக் கொண்டு அவர்களிடைத் திகழ்ந்த அன்பும் தோழமையுமே சகோதர வாஞ்சை எனக் கருதப்பட்டு வருகிறது போலும்.

அயோத்தி வீரர்கள் நால்வரும் தத்தம் உளப் பான்மைக்கும் உண்மை அறிவுக்கும் எற்ற வாறோ, அல்லது பெற்றோர் யாது பற்றியோ செய்த எற்பாட்டினாலோ இருவர் இருவராகப் பிரிந்தே பழகி வந்தார்கள். இளமரச் சோலைகளிலும், தெண்ணீர்க் குளங்களிலும் விளையாடும் போதும் வேத நூல் பயிலும் போதும் இராம இலக்குவர் பிரியாது உறைந்தது போல, பரத-சத்துருக்கனர் கலந்து உறைந்தனர்.

'நின் சிறுவர் நால்வரினும் கரிய செம்மல் ஒருவனைத் தந்திடுதி' எனக் கேட்ட கோசிகன் பின் இராமனும், அவனைவிட்டுப் பிரியா இலக்குவனுஞ்சென்றார்கள். இராமனுக்குப் பட்டங்கட்டும் செய்தியைக் கேட்க தசரதனிடம் சென்றபொழுதுங்கூட "தூயதம்பியும் தானுமச் சுமந்திரன் தேர் மேல்" போய் தந்தை அகங்குளிர அரசவை புகுந்தார்கள். இதனால் இலக்குவன் எல்லா நிலையிலும் பிரியாதிருந்து இராமனுக்குத் தொண்டு பூண்டு ஒழுகி வந்தான் என அறிகிறோம்.

இனி, இராமனுக்குத் துன்பம் வந்துற்ற வேளையிலும் இலக்குவன் அதே நிலையிலிருந்து தொண்டு புரிந்துள்ளான். பரதன் நாடாள, இராமன் காடேக வேண்டு மென்ற கட்டளை பிறந்த காலை இலக்குவனுக்கு எழுந்த சினத்திற்கு எல்லையே இல்லை. போர்க் கோலங் கொண்ட அவனை, இராமன் ஒருவாறு தேற்ற-தேறிய தம்பி "நீருள்ள இடத்தில் மீனும் நீர்ப் பூவும் இருப்பது போல; பாருள்ள இடத்தில் பல்வேறு சீவராசிகள் இருப்பது போல, இராமன் உள்ள இடத்தில் நானும் சீதையும் இருப்போமேயன்றி, பிரிந்து உயிர் வாழோம்" என்றுரைத்தனன். தனதுசெம்பாதியாகிய வாழ்க்கைத் துணைவியைப் பற்றி எண்ணவுமில்லை, பேசவுமில்லை. கம்பரும் மறந்தார். இரவு வேளையில் வனத்தில் சீதையும் இராமனும் துயிலும் பொழுது கூட, தான் தனியே போய்த்துயில மனமிலாதவனாய், இலக்குவன் வில்லை யூன்றிய கையோடு கங்குல் எல்லை காண்பளவும் நயனத்தை இமையாது நின்றிருந்தான்.

இலக்குவனின் வாஞ்சை இவ்வாறிருக்க, யாது காரணம் பற்றியோ நெடுந்தொலைவிலுள்ள கேகய நாட்டிற்குஅனுப்பப்பட்டிருந்தபரத சத்துருக்கனர் நிலையை ஆய்வோம். **அவர்களது அத்தகு பிரிவின் காரணம் புலப்படவே யில்லை. தாய் தந்தையர் மன நிலை எவ்வாறிருப்பினும், இராம இலக்குவர் தாமும் முடி சூட்டு விழா அமைந்த நாளன்று கூட இவர்களைப் பற்றி நினையாதது வருந்தத் தக்கது. செம்மையறிவும் சீர்த்தகல்வியும் நெறி திறம்பா ஆராய்ச்சியும் மிக்கோருக்கு இது ஒரு குறையாகவே தோன்று மென்பதில் ஐயமில்லை.**

மந்தரையாய கூனியே முதன் முதல் பரதன் நினைவை யுண்டு பண்ணுகிறாள்; கைகேயியை அணுகி பரதனுக்குப் பட்டம் வேண்டும் போதுதான், **பாக்கியம் புரிந்திலாப் பரதன் தன்னைப் பண்டு சேணிடைப் போக்கிய காரணம் எனக்கு இன்று போந்ததால்" என்றுகூறி, பரதனை கேகய நாட்டிற்கு அனுப்பியதின் காரணத்தைத் தானறிந்தவாறு வெளியிடுகின்றாள். தசரதன் எண்ணம் அதுதானாயின் அது மிக மிக வெறுக்கத் தக்கதாகும்.**

இராம இலக்குவர், பரத சத்துருக்கனரை வாஞ்சையுடன் நினையா விடினும், கேகய நாட்டிலிருந்த அத்தம்பிமார்-பிரிவினால் எவ்வாறு பீடிக்கப் பட்டிருந்தார்களென்பதை தசரதன் மறைவுக்குப்பின் - தங்களை முடங்கலுடன் அழைக்க வந்த தூதுவரை வரவேற்று, அவர்களுடன் அளவளாவிய முறையிலிருந்தே தெளிகின்றோம். விரைவிலே இராமனைக் காணப்போகிறோமென்ற களிப்புடன் பரதன் அம் முடங்கலினைப் பூக்களிட்டு அர்ச்சித்தனன்.

கேகய நாட்டினின்றும் தந்தையையும் தமையனையும் காணலா

மென்ற ஆவலுடன் வந்த பரதன் தந்தை இறந்தான் என்ற செய்தி தெரிந்தவுடன் மூர்ச்சித்துப் பின் தேறி, ''எந்தையும் எம்பிரானும் எம்முனும் அந்தமில் பெருங்குணத்து இராமன் ஆதலால்'' என்று கூறுகின்றான். அந்தமில் பெருங்குணத்து இராமனை, தனக்குவமையில்லாத தான் வழிபடுங் கடவுளாகவும் போற்றி அவன் தாளை வணங்கி மனக்கவலை மாற்றிக் கொள்ளவேண்டுமெனக் கதறுகிறான். இராமன் பால் எல்லையிலா பக்தி கொண்டிருந்த பரதன் தமையன் வனம் புகுந்த செய்தி கேட்டு அல்லற்பட்டு ஆற்றாது அழுகின்றான். அவனுடைய புலம்பல்களும் சூளுரைகளும் அவனதுபங்கமில் குணத்தை வெளிப் படுத்துகின்றன.

உளமங்கிக் கிடந்த கோசலை, பரதன் நிலையைக் கண்டு.

மையறு மனத்தொருமாசுளான் அலன்
செய்யனே என்பது தேரும் சிந்தையாள்
கையர் கோன் மகள் இழைத்த கைதவம்
ஐய நீ யறிந்திலை போலுமால் என்றாள்''

பரதன் குற்றமற்றவன் என்று கோசலை இப்பொழுதுதான் எண்ணுகிறாள். **இதிலிருந்து இராமனின் 'பங்கமில் குணத் தம்பியைப் பற்றி கோசலை எவ்வளவு கொடுமையான எண்ணம் பூண்டிருந்தாளென்பது புலனாகிறது.**

தாயுரை காரணமாகத் தகப்பன் தந்த தரணியை மூத்தவனிருக்கத் தான் ஆளுதல் தீத்தொழில் என நினைத்து, காடு புகுந்த இராமனை நாடு கொணரத் துணிந்து, அவன் சென்ற திசை நோக்கிப் பரிவாரங்களுடன் புறப்பட்டு வருகிறான் பரதன். பரதன் தொலைவில் வருதலை முதலில் குகனும் பின்னர் இலக்குவனும் பார்க்கிறார்கள். **பரதன் பண்பினை முன் கூட்டி அறியாத குகன் நினைத்தவாறே, இலக்குவனும் பரதனைப் பற்றித் தவறாக நினைக்கிறான். பரதனும் இலக்குவனும் நெருங்கிப் பழகியோரல்லர்; ஒருவரையொருவர் புரிந்துகொண்டவரல்ல ரென்பதை இதனாலும் அறிகின்றோம்.** பரதன் தங்களுக்கு மீண்டும் தொந்தரை கொடுக்க வருகிறான் என்று எண்ணிய இலக்குவன் தன்னிழலோடு போரிடுவான் போல் போர்க்கோலங்கொள்கிறான். ''பரத சத்துருக்கனர் மார்புகளைத் துளைக்கும் வண்ணம் அம்புகளை எய்வேன்'' என்று வன்மொழி கூறுகின்றான். பின்னர், தான் நினைத்ததற்கு மாறான நிகழ்ச்சிகளைக் கண்டு, வெட்கி வீறழிந்து நிற்கிறான். தசரதன் தன்னை அரியணையேற்றுகிறான் என்ற செய்தி வந்த நிலையில், கேகய நாட்டிலிருந்த பரதனுக்கு ஒரு தூதுவனை அனுப்பி வைக்கும் செயல் மறந்த இராமன், இப்போது பரதனே தன்னைத் தேடி வந்த மகுடத்தைத் தட்டிக் கழிக்கும் நிலையிலிருத்தலைக் காண்கிறான். பரதனை ''சேனுயர் தருமத்தின் தேவை'' என்றும் ''செம்மையின் ஆணி'' என்றும் புகழ்கிறான், இபபோது.

சீதையின் விருப்பத்துக் கிணங்கி மானைத் தொடர்ந்து சென்ற இராமன், அதனைக்கொன்று வீழ்த்திய வேளையில், இலக்குவனின் அறிவுரை மெய்யுரையானமை கண்டு, அவனது அன்பையும் அறிவையும் போற்றி, ''ஐயன் வல்லவன். என்னுருயிர் வல்லவன்உய்ய வந்தவன் வல்லவன்'' என்று புகழ் செய்கின்றான். **இராமன் தன் பின் பிறந்தார்களைப் பற்றிப் பெரிதும் ''பின் புத்தி'' யுடனேயே நடந்து கொள்கிறான் என்பதற்கு இதுவும் ஒரு எடுத்துக் காட்டாகும்.**

இராமன் மாட்டு வாஞ்சை பூண்டொழுகியதில் பரதனுக்கு இலக்குவன் எந்த வகையிலும் பின் வாங்கியவனல்லன் என்பது வெள்ளிடை மலை எனினும் இராமனுக்கு மட்டும் இலக்குவனைப் பற்றிய எண்ணம் வேறாயிருத்தலைக்காணும் போது வருந்தாமலிருக்க முடியவில்லை. வாலி மீது சண்டை செய்ய சுக்கிரீவனை எவி விட்டு, மலைச் சாரலில் மறைந்து நின்றனர் அயோத்தி வீரர்.

இராமன், வாலி மீது மறைந்து நின்று அம்பெய்ய முயல்வது அரசர்க்குரிய அறப்போருக்கும் உண்மை வீரத்திற்கும் முற்றிலும் மாறானதென்பதை உணர்ந்த இலக்குவன் மிகவும் உளங் கலங்கினான். வாலியாகிய தமையனைக் கொல்ல, இராமனாகிய யமனைக் கொண்டு வந்து நிறுத்திய சுக்கிரீவன், தங்களுக்கு எப்படி உண்மையுடனிருப்பானென்று உரைத்தான். அது கேட்ட இராமன், இலக்குவன் அறமுறை பேசத் தொடங்கி விட்டான் என்று அஞ்சியோ பிறிது எக்காரணம்பற்றியோ ''எத்தாயர் வயிற்றினும், பின் பிறந்தார் களெல்லாம் ஒத்தால் பரதன் பெரிது உத்தமனாதலுண்டோ'' என்று கூசாது கூறுகின்றான். **பரதன் உத்தமன் எனின் இலக்குவன் நிலைதான் என்ன? இராமனின்எண்ணந்தான்என்ன? இதற்குப் பதில் கூற இலக்குவனுக்குக் கம்பர் வாய்ப்புத் தந்தாரில்லை.** இதற்குப் பின் எந்த இடத்திலும் இலக்குவன் அறமுறை பற்றிப் பேசியதாகப் புலப்படவில்லை

கிஷ்கிந்தை வீரர்களாகிய வாலி சுக்கிரீவரிடையே நெருங்கிய வாஞ்சையிருக்க வழியிருந்தும், அவர்களிடையேற்பட்ட வீணான சச்சரவு காரணமாக அது பாழ்பட்டொழிந்தது. மூத்தவனை இளையவன் கொல்லுவதற்கு வழி கோலி, துணைதேடி, கொன்று, அரசினைக் கைப்பற்று மளவுக்குக் கொண்டு சென்று விட்டது.

இனி இலங்கை வீரர்களைக் கவனிப்போம். இலங்கை வேந்தன் அயோத்தி இளவரசனின் தேவியைக் கவர்ந்து வந்தது பெருந்தவறென கும்பகர்ணன் விபீடணன் ஆகிய இருவரும் அண்ணனுக்கு உரைக்கிறார்கள். கும்பகர்ணன் இராவணனை மிக வன்மையாகக் கண்டித்து, பிறகுசீதையைப் பகைவனிடமே சேர்த்து விடலாமா என்பதையும் துருவி ஆராய்ந்து பார்க்கிறான். சீதையை விட்டிடில் பலரும் திண்ணமாய் எளனஞ் செய்வரே என்று அஞ்சுகிறான். **தோல்வியுற்றுஉயிரிழப்பதாயினும் போர் புரிவதே மேல் என்று சொல்லி கடைசி வரை துணை நின்று உயிரையுங் கொடுக்கிறான் உண்மைத்தமையனுக்காக. ''நீர்க்கோல வாழ்வை நச்சி நெடிதுநாள் வளர்த்துப் பின்னைப் போர்க்கோலஞ் செய்து விட்டாற் குயிர்கொடா தங்குப் போகேன்'' என்கிறான். இவனன்றோ உண்மைத் தம்பி!**

விபீடணனோவெனின், முன்னதாகவே எதிரிகளிடம் நட்பு முதிர்ந்தவனாகவும் தன் குலத்தவரிடை பகைமை முதிர்ந்தவனாகவும் காட்சியளிக்கிறான். அவனை உள்ளும் புறமும் ஒருங்கே அறிந்தே இராவணன்,

„நண்ணினை மனிதரை நண்பு
பூண்டனை
எண்ணினை செய்வினை என்னை
வெல்லுமாறு
உன்னினை அரசின் மேல் ஆசை
ஊன்றினை,
திண்ணி துன் செயல் பிறர் செறு
நர் வேண்டுமோ.”

என விபீடணனை விட வேறு எதிரி தனக்கில்லை என்று சொல்கிறன்.

விபீடணன் எதிரி பக்கம் சென்ற தோடு நிற்க வில்லை. இராமன் தூண்டுதலினுல் கும்பகர்ணனையும் இர்ரமனது பாசறைக்கு அழைத் துக் கொள்ள முயல்கிறன். தான் வேறு இராவணன் வேறு என்று எண்ணியறியாத கும்பகர்ணன், “தம்பி நான் எதிரியிட மிருக்க, தமையன் தனியாக மண்மேல் மாண்டு கிடப்பதா” என்கிறன். தலைவன் தீத்தொழில் புரிவதைத் தடுத்துத் திருத்துவதுகூடாதாயின், எதிரியைச் சார்தலால் அடையும் பொருளுமுண்டோ” என்று பதில் கூறுகிறன். இன்னும் இரா வணனே முதலில் இறந்தானுனு லும் அவனைக் கொன்ற எதிரியைக் கும்பிட்டு வாழ்கிலேன் யான்’ என விபீடணன் வெட்குமாறு கூறு கிறன். கும்பகர்ணன் தன் தமை யனுகிய இராவணனிடம் விடை பெற்றுப் போருக்குச் செல்லும் போது, கொற்றவ! சுற்றத்தான் முகத்தினில் விழித்தல்,” என்ற லுமே இராவணன் தன் கண்களில் „செவ்விழி நீரொடுங் குருதி தேக் கினுன்” இரத்தக் கண்ணீர் பெருக் கினுன் என்றுல், அவன் தம்பி பால் வைத்த அன்புக்கும் வாஞ் சைக்கும்அடைக்குந்தாள்உண்டோ?

இது காறுங் கண்ட வற்றுல் நாம் அறிவது: அயோத்தி வீரர்களிடம் நிகழ்ந்த அன்பும் தோழமையும் ஒரு தலைப்பட்டது. ஒருவருக்கொரு வர் நிகழ்ந்ததல்ல. தம்பிகளெல் லாம் இராமனிடம் வாஞ்சை (பக்தி) பூண்டொழுகுகிறுர்கள். ஆனுல் தங்களுக்குள் ஒருவருக்கொருவரை அறிந்து வாஞ்சை பூண்டொழுக வில்லை. இராமன் தடுத்திராவிடின், இலக்குவன் மற்ற இருவர்களின் மேல் போர் தொடுத்திருப்பான். பின்னும் இராமன் ஒரு மனிதன். அவன் தங்களுக்குத் தமையன் என்று மட்டும் தம்பிகள் நினைத்து ஒழுக வில்லை. இராமனைக் கடவுள் என்றே மதித்து ஒழுகிவந்தார்கள்; ஆதலால், இவர்களிடை நிலவியது சகோதர வாஞ்சையின் பாற் பட்ட தாகாது; பக்தியின்பாற்பட்டதாகும் சகோதர வாஞ்சை (பக்தி) யின் முழுப்பயனையும் துய்த்த இராமன், சகோதர வாஞ்சையின் சிறப்பினைப் பாரினுக் குணர்த்திய தாகக் கருதப்படும் இராமன், தன் எதிரிகளிடமும் அவ்வாஞ்சை நிலவ வேண்டுமென நினைத்தானில்லை. இது அருவருக்கத் தக்கதாகும். இக்கருத்தை வாலி கூட,

”தம்பியரல்லது தனக்கு வேறு
யிர்
இம்பரின் இலதென எண்ணி
ஏய்ந்தவன்
எம்பியும் யானு முற்றெதிர்ந்த
போரிடை
அம்பிடைத் தொடுக்குமோ
அருளின் ஆழியான்.”

என்று கூறி, தான் இராமனைப் பற்றிக் கொண்டிருந்த எண் ணத்தை வெளியிடுகிறன். சமன் செய்யும் கோல் போல் இராமன் நடந்திருப்பானுயின், முறிந்து போன சகோதர வாஞ்சை கிஷ்கிந் தையில் மீண்டும் கூடியிருக்கும்.

இலங்கை வீரர்களாகிய இரா வணன், கும்பகர்ணன் ஆகியோ ரிடை நிகழ்ந்ததையே சகோதர வாஞ்சை யென்னலாம். உடன் பிறந்தார் கட்குள் இருக்கக் கூடிய அன்பும் நேயமும் அவர்களிடந் தான் தஞ்சம் புகுந்திருந்தன. சகோதர இலக்கணத்துக்கு எடுத் துக் காட்டாக இலங்குவோர் இரா வண கும்பகர்ணர். வாஞ்சை இயற் கையாய்த் தோன்றி யெழுந்தது அவர்களிடைதான்.

புதுமை எழில்மிக்க நல்ல தமிழ் நூல்கள்! இன்பம் ‘கொள்ளை, கொள்ளை’யெனத்தரும் கருத்துச் செல்வங்கள்!

கவிஞர் கண்ணதாசன் எழுதிய

கூட்டுக் குரல் 1—0—0

ஈழத்துராணி 1—0—0

இலக்கியத்தில் காதல் 1—4—0
காரைமுத்துப்புலவர்

பிரெஞ்சு இலக்கியமேதை ‘எமிலிஸோலா’ எழுதிய
ஒப்பற்ற நாவல்

தெரெஸா (172 பக்கங்கள்) 2—0—0
தமிழாக்கம் குயிலன்

அருணோதயம்

5, தம்பைய ரெட்டி தெரு, மேற்கு மாம்பலம்
சென்னை-17.

இங்கே! அங்கே!!

கோசிகம்
பீதகம்
பச்சிலை
அரத்தம்
நுண்டுகில்
சுண்ணம்
வடகம்
பஞ்சு
இரட்டு
பாடகம்
கோங்கலர்
கோபம்
சித்திரக்கம்மி
குருதி
கரியல்
பேடகம்
பரியட்டக்காசு
வேதங்கம்
புங்கர்க்காழகம்
சில்லிகை
தூரியம்
பங்கம்
தத்தியம்
வண்ணடை
கவற்றுமடி
நூல்யாப்பு
திருக்கு
தேவாங்கு
பொன்னெழுத்து
குச்சரி
தேவகிரி
காத்தூளம்
இறஞ்சி
வெண்பொத்தி
செம்பொத்தி
பணிப் பொத்தி

திகைக்காதீர்கள்! இத்தனை வகை ஆடைகளை அணிந்து மகிழ்ந்தனராம், நந்தமிழ் நாட்டு மக்கள். சிலப்பதிகாரத்துக்கு உரையெழுதிய அடியார்க்கு நல்லார், அறிவிக்கிறார்!

இவ்வளவு வகை ஆடைகள் நெய்யப்பட்டது மட்டுமின்றி, அவைகள்யாவும் அன்றைய தினம் **கொள் முதலும்** செய்யப்பட்டதால், தறித்தொழில், தலைசிறந்து விளங்கியிருக்கிறது. நந்தமிழ்நாட்டினர் மட்டுமல்ல, வெளிஉலகும் இப்பொருள்களை விரும்பிக்கொண்டு சென்றதாம். அப்போது 'டில்லி' இல்லை! அதனால் யவனரும், உரோமரும், போட்டியிட்டுக்கொண்டு வாங்கிச் சென்றிருக்கின்றனர்!!

இப்போதோ இந்தப் பெயர்கள் கூட நமக்கு விசித்திரமாகத் தோன்றும். அந்தளவுக்கு, அந்த ஆடைவகைகள் அனைத்தும் மறைந்து போய்விட்டன. காலஓட்டம் மட்டுமல்ல! சிம்மாசனத்திலமர்ந்தோரின் சிரத்தையின்மையும் காரணமாகும்!

அன்று வெளிநாட்டினர், போட்டிபோட்டனர் வாங்க.

இன்றும் கூட, ஒன்றிரண்டு வகைகளில் உற்பத்தியாகும் நமது துணிகளுக்கு வெளிநாடுகளில் கிராக்கியில்லாமலில்லை.

அனுப்ப, சேரரும் சோழரும், பாண்டியருமா உள்ளனர்? இல்லையே!

இராம. அரங்கண்ணல்

வெளிநாட்டுக் கப்பல் நுழைய முடியுமா நாகைக்குள், டில்லியின் அனுமதியில்லாமல்.

எப்படி தொழில்வளம் பெருகும்? பழைமைச்சிறப்பு பொலிவுறும்?

உழவு
தொழில்
வரைவு
வாணிபம்
வித்தை
சிற்பம்

அறுவகைத் தொழில்கள், அப்போது தலைசிறந்து விளங்கிற்றாம், மது பூமியில்! இதனாலேயே, இதனை "**கர்மபூமி**" என்றுரைக்கிறார், 'பண்டைநிகண்டு' இயற்றிய, **திவாகர முடையார்**. கர்மம்என்பதுவைதீக கர்மங்களைக்குறிப்பது! கர்ம பூமி



என்பது, அந்த வைதீகத்தை மாற்றாது மறுக்காதுகையாண்ட பூமி என்று பொருள்படும்- என்று கூறும், குறுமதி யாளரைக்காய்வதுபோல், அவர் எழுதியிருக்கிறார்:—

"உழவு, தொழிலே, வரைவு, வாணி பம், வித்தை, சிற்பம், என்றித் திறத்தறுதொழில் கற்கும் நடையது கர்மபூமி"

அந்த அறுவகைத்தொழி லிலும், தலைப்பில் வைத்து எண்ணக்கூடிய வகையில், நந்தமிழ்நாட்டில் இருந்தது உழவும் வாணிபமுமாகும்.

இதனாலேயே, வாணிபம் பற்றிய அற்றை நாள்நூற்கள் பலவற்றில், பற்பல அரிய அறி உரைகள்காணக்கிடைக்கின்றன.

திவாகரமுடையார், அந்தக் குணவிசேஷங்களைக்கூட வரை யறுத்துச்சொல்கிறார்:—

தனிமையாதல்
முனிவிலனாதல்
இடனறிந்தொழுகல்
பொழுதொடு புணர்தல்
உறுவது தெரிதல்
இறுவதஞ்சாமை
ஈட்டல்
பகுத்தல்

என்றிவையெட்டும் வாட்ட மில்லா, வணிகரதியற் குணமாம்!!

இவ்வண்ணம் வரம்புகட்டி அறநெறிகூறவேண்டிய அளவுக்கு, வணிகமக்கள் நந்தமிழ்மடியிலே, இருந்திருக் கின்றனர். விவரத்தை, சிலப்பதி காரம் செப்பும்!

ஆனால், அந்த மண், இன்று வாடுகிறது! தேய்கிறது!!

செல்வமும், வளமும் செழித் தோங்கிய காரணத்தால், அப்போதிருந்தோர் அயலாரின் தொழில் நுணுக்கங்களை வெறுக்கவில்லை.

'தனிநாடு' ஆனால், வடவரு டன் நாம் வெஞ்சினம்கொண்டே வாழ்வோம் என்று அஞ்சிடு வோர் இருக்கின்றனரே; அவர் கள் பார்வைக்கு வைக்கிறோம் இதனை!

அன்று- உழவும், வாணிபமும் தென்னகத்தின் இருகண்களாக இருந்த அன்று- தமிழகம், பல வெளியார்களை விரும்பி அழைத்து அவர்தம் தொழில் திறமையைப் போற்றியிருக் கிறது.

பொருமையுணர்ச்சியுடன், ஆதிக்கம்செலுத்தும் ஆசை கொண்டதாயில்லை. இதனை, 'மணிமேகலை, கூறுகிறது.

"மகதவினைஞரும், மராட்டக் கம்மரும் அவந்திகொல்லரும், யவனத்தச்சரும் தண்டமிழ்வினை ஞர் தம்மொடுகூடிக்கொண்டினிதி யற்றிய கண்கவர்செய்வினை"

அவர்கள் எல்லாம், அவ்வளவு உரிமையுடன் செந்தமிழ் மண் ணில், சிறப்புற்றுவிளங்கியிருந் திருக்கின்றனர்.

ஆனால் அத்தகைய மண், இன்று ஏங்கிடும் நிலையில் இருக்கிறது.

சேலத்து இரும்பு தூங்கி, வடக்கில் ரூ 500 கோடியை அழிக்கப்போகின்றனர்- டில்லி யினர்! ஆலைகள் மூன்று அந்தப் பணத்தில், அங்கே!!

நிலைமை இது நீடித் தால், இன்பம் எங்கே பொங்கும்? இங்கா! அங்கா!!

★

எமது அன்பார்ந்த பொங்கல் வாழ்த்து. சிலேட், பிளாக், விளம்பர போர்ட்டுகள் போஸ் டர் டிசைன், ஷோகார்டு இன் னும் விபரங்களுக்கு :

சாயி ஆர்ட்ஸ்
காட்பாடி ரோட்
நேஷனல் டாக்கீஸ் சமீபம்
வேலூர் (N. A.)

A. S. A. BAKERY
88, Long Bazaar, VELLORE, N.A.
Prop: A. S. Arunachalam Pillai
PURE BUTTER & GHEE.

எமது பிஸ்கட் பாக்டரியில் கைதேர்ந்த ஆட்களைக்கொண்டு நல்ல முறையில் ரொட்டி பிஸ்கட் அண்டு கேக் வகையராக்கள் அசல் நெய்யினாலும் வெண்ணெயினாலும் தயார் செய்யப்படுகிறது.

A. S. அருணாசலம் பிள்ளை
பிஸ்கட் பாக்டரி,
88, லாங்கு பஜார், வேலூர்.
(N. A.)

பார்-அட்-லாவின் பங்களாவில்

தென்னரசு

சந்தனக்காட்டுமிராசுதாரின்மகன் நான். அந்த ஜமீன்வாழ்ந்து கெட்ட பிறகு சப் இன்ஸ்பெக்டர் உத்தியோகத்திற்கு வந்தேன். நான் எப்போதுமே பெரிய மனிதர்கள்வீட்டுவரவேற்பை விரும்பாத ஒருவன். விருந்தை வைத்துவிட்டு ஒன்பது பிரதி உபகாரங்களை எதிர்பார்த்திருப்பவர்களுக்குத் தானே இந்த உலகம் 'பெரிய மனிதர்கள்' என்ற பட்டத்தைத் தந்திருக்கிறது.

இரண்டுமாத ஓய்விலே என் சொந்த ஊருக்குப் போயிருந்த நான் ஒரு இக்கட்டான நிலைமையில் சிக்கிக்கொண்டேன். பால்ய காலத்து எனது நண்பர் பக்கிரிசாமி, வலுக்கட்டாயப்படுத்தி என்னை ஒரு விருந்துக்கு அழைத்துப் போய் விட்டார். விருந்து வைத்தவர் மேல் நாடு சென்றுபடித்து–பார்-அட்-லா-பட்டம்பெற்றவர் — முதலியார் வகுப்பைச் சேர்ந்தவர். என்னை அவர் இன்முகம் காட்டிவரவேற்று ஏதேதோ பேசினார்-அவர்கட்டிய புதிய பங்களாவைச் சுற்றிக் காட்டினார். வெண்பளிங்குச் சுவரும், வேலைப்பாடுகள் நிறைந்த உத்திரங்களும் பங்களாவின் வனப்புக்குச் சிகரம் அமைத்தன.

அங்கே ஒரு பூஜை அறை! வெளிநாடு சென்றுபட்டம் பெற்றவர் வேதாந்தியா என்று எண்ணுகிறீர்களா?.

வேதாந்தி மட்டுமல்ல; பெரிய வேசைக் கள்ளனுங்கூட அந்த பார் —அட்—லா! அகத்தின் அழகு முகத்தில் தெரியுமென்கிறார்கள்—நான் சொல்லுகிற பார்-அட்-லா விஷயத்தில் அத்தனையும் சரணாகதி! அத்தனையும் சரணாகதி!

அவர் காட்டிய பூஜை அறைக்கு மட்டும்---நிச்சயமாகச் சொல்கிறேன். பத்தாயிர ரூபாய்க்கு குறையாமல் செலவாகியிருக்கும். வெண்கலக் கதவு, வெள்ளிக்குத்துவிளக்கு தங்கத்தாம்பாளம், பொன்மணி இத்தனையும் என்மதிப்பீடுக்கு உதவின உயர்ந்த ரகப்பொருள்கள். பக்கிரிசாமியைக் கேட்டேன் —"பார் அட்லாவுக்குத் தான் சரியாகக் கூட கோர்ட்டிலே வாதாடத் தெரியாதே—இதுவரை எந்த வழக்கிலேயும் ஜெயித்ததில்லை—அப்படியிருக்கும்போது இந்த ஆடம்பர வைபவங்களுக் கெல்லாம் ஏது பணம்?"—என்று.

"செல்வமணி, பார்-அட்-லா எனக்குப் புதுப்பழக்கம்—ஆனாலும் அவருக்கு இந்த ஆடம்பரமான போக்குவரத்துகளும் அண்மையில் ஏற்பட்டவைதான்" என்றார். இதுபோதாதா எங்கள் இலாகாவுக்கு! சந்தேகத்திற்குரிய செய்திகள் இரண்டு கிடைத்துவிட்டால் போலீஸ் இலாகா ரத்தச்சுவை கண்ட புலியாகிவிடுமே!

விருந்து முடிந்தது — வீட்டுக்குப் போனேன்—பங்கையற்செல்வி — அவள்தான் என் மனைவி — முகவாட்டத்தோடு இருந்தாள் — காரணம் கேட்டேன்—"பாழாய்போன போலீஸ் உத்தியோகம் வேண்டாம், வேண்டாம் என்று இதற்குத்தான் முன்பே அடித்துக் கொண்டேன்—ஓய்வு தேவை என்றுதானே லீவு எடுத்துவந்தோம்."

"பங்கை, விஷயத்தைச்சொல்லு ஏன் புலம்புகிறாய்" என்றேன். மனைவி ஒரு அவசரக் கடிதத்தைக் கொடுத்தாள் அதில் "கோபிநகர் கோயிலில் கொள்ளை. உடன் புறப்பட்டு வருக' என்று டி. எஸ். பி. எழுதியிருந்தார். மறுநாள் கோபிநகர் சேர்ந்தேன்—கோபக்காரியான என் மனைவியோடு அல்ல! தனியாக!

துப்பறியும் வேலை துரிதமாக நடைபெற்றது. கோயிலுக்குள் இருந்துவரும் எறும்புகூட எங்கே போகிறது என்று பின்தொடராமலில்லை — அவ்வளவு தீவிரம் —களவுபோயிருப்பது காளியின் நகைகள் அல்லவா?

கோயில் பொறுப்பாளரை விசாரித்தேன். அவர் தனக்கு சந்தேகமேற்பட்டுள்ள ஒருசிலரைச் சொன்னார். அவர்களில் கிராமத் தலைவர் கிருஷ்ணக் கோனார் ஒருவர்.

கிருஷ்ணக் கோனார் விசாரிக்கப்பட்டார். "உன் கையிலே மின்னும் வைரமோதிரம் உனக்கு ஏது" என்றேன்.

"மகன் தந்தது" என்றார்.

மகன் விசாரிக்கப்பட்டான். "எனக்கும் கோயில் பொறுப்பாளர்மகள் மாலாவுக்கும் தொடர்பு உண்டு. அவள் தந்த அன்புப்பரிசுதான் இந்த வைர மோதிரம்" என்றான் கிராமத் தலைவர் கிருஷ்ணக் கோனாரின் மகன்.

மாலா வந்தாள்— "எனக்கு ஒன்றும் தெரியாது—என் தாயார் எனக்குக் கொடுத்தார்கள்—நான் அவருக்குக் கொடுத்தேன்" என்றாள்.

கோயில் பொறுப்பாளர் மனைவி பொங்கிவழியும் கண்ணீரோடு சொன்னாள்; "இன்ஸ்பெக்டர்சார், என் மானத்தைக் காப்பாற்றுங்கள். எனக்கும் பட்டமங்கலத்து பார்-அட்-லாவுக்கும் நெடு நாளையத் தொடர்புண்டு—என்மகள் மாலாகூட அவருக்குப் பிறந்தவள்தான். அவர்தான் வைகுண்ட ஏகா தேசியன்று இந்த வைரமோதிரத்தைத் தந்தார்" என்று சொல்லி முடித்தார்.

எனக்கு தூக்கிவாரிப் போட்டது. நான் எந்த பார்-அட்லாவை சந்தேகப்பட்டேனே அந்த பார்-அட்-லாதான் மாலாவின் தாயாரால் குறிப்பிடப்பட்டவர்.

போலீஸ் ஜீப் பறந்தது பட்டமங்கலம் நோக்கி. ஆனல் நான் எதிர் பாராதது அங்கே நடந்திருந்தது. பார்-அட்-லாவின் பங்களா போலீசாரால் 'சீல்' வைக்கப்பட்டிருந்தது.

பட்டமங்கலம் போலீஸ் ஸ்டேஷனில் விசாரித்தேன். அந்த பார்-அட்-லா தேவகோட்டை செட்டியார் ஒருவரிடம் பித்தளை நகைகளைக் கொடுத்து ஏமாற்றி விட்டதாகவும், அதற்காக பார்-அட்-லா கைது செய்யப்பட்டிருப்பதாகவும் பட்டமங்கலம் சப்இன்ஸ்பெக்டர் சொன்னர்.

தேவகோட்டை பயணமானேன். பார்-அட்-லா வினல் ஏமாற்றப்பட்ட பொருள்கள் நீதிபதியின் முன்பே வைக்கப்பட்டிருந்தது. மனமிக மகிழ்ந்தேன். பார்-அட்-லா வால் ஏமாற்றப் பட்டபொருள்கள் கோயில் நகைகளாக இருந்தால்—நிச்சயமாக எனக்கு 'பதவி உயர்வு' என்று எண்ணி எண்ணி என் நெஞ்சு ஆனந்த நடனமாடியது. ஆனல் ஊர் போனதும் நடந்தது என்ன?

கோபிநகர் போலீஸ் ஸ்டேஷனில் ஒரே பரபரப்பு! நான் உள்ளே நுழைந்ததும் சர்க்கிள் இன்ஸ்பெக்டர், "செல்வமணி நீ கைதுசெய்யப்பட்டிருக்கிருய்" என்றுர்.

"ஏன்—எதற்காக?"

"எல்லாம் நீதிமன்றத்தில்!"

"செல்வமணி நீ சந்தனக் காட்டு மிராசுதாரின் மகன்—உனது தந்தை கோபிநகர் காளி கோயிலின் பொறுப்பாளராக இருந்தகாலத்தில் கோயில் பணத்தில் காளிக்காக செய்து வைத்த நகைநட்டுகளில் பெரும் பகுதி,பித்தளை—எனவே உனது தந்தையின் இந்தப் பெரிய மோசடிக்கு வகைசெய்யவேண்டிய பொறுப்பு உன்னைச் சேருகிறது—காரணம் சந்தனக் காட்டு மிராசுவாரீசில் உன்னைத் தவிர வேறு யாருமில்லை" என்று நீதிபதி என்மீது குற்றப் பத்திரிகையை வாசித்தார், ஆனல் தீர்ப்பு ஒத்திவைக்கப் பட்டது. காரணம் அந்த நீதிபதி மறுநாள் பதவியை ராஜினமா செய்துவிட்டாராம்!

கடமைதான் பெரிதென்று எண்ணிய நானும், பார்-அட்-லாவும் ஒரே சிறைக்கூடத்தில் தான் இருக்கிறேம்.

அறிவூட்டும் புது நூல்கள் ! அழகான தமிழ் நூல்கள் !

பன்மொழிப் புலவர் கா. அப்பாதுரையாரின்

தென்னடு	2 0 0
வருங்கால தமிழகம்	0 12 0
சங்க இலக்கியமாண்பு	0 6 0
தென்மொழி	(அச்சில்)

கவிஞர் வாணிதாசனின்

எழிலோவியம்	0 12 0
தொடு வானம்	0 12 0
கொடி முல்லை	0 12 0
வாணிதாசன் கவிதைகள்	(அச்சில்)

எ. வி. பி. ஆசைத்தம்பி எழுதிய

வெய்யிலும் நிழலும்	1 4 0
என் மாமி	0 10 0
கொலைகாரி	0 12 0

இராதாமணாளனின்

கல்லறைக் குயில்	2 0 0
சிவந்த கன்னம்	1 4 0

கவிஞர் கண்ணதாசனின்

கூட்டுக் குரல்	1 0 0
ஈழத்து ராணி	1 0 0
இலக்கியத்தில் காதல்	1 4 0

மலர் நிலையம்

133, பிராட்வே :: சென்னை-1.

பத்மினி

காட்சி 1.

இடம்: டில்லியில்.

நிலைமை: [அரண்மனை நிலா முற்றத்தில் அலாவுதீன் உலவிக் கொண்டிருக்கிறான். அவனது அந்தரங்க ஆலோசகன் சலீமும் நிழலைப்போலத் தொடர்ந்துகொண்டிருக்கிறான்.]

அலாவுதீன்: சலீம்! நீலவானத்துக்குள்ளே ஊஞ்சலாடும் அந்த நிலவைப் பார்த்தாயா?

சலீம்: ஆமாம், பார்க்கிறேன்!

அலா: அந்த நிலவு பேசுவதில்லை நம்மோடு. ஆனால் அது பார்வையால் நெஞ்சிலே பதிய வைக்கின்ற நினைவுகளிருக்கின்றனவே...அப்பப்பா, என்னால் சகிக்கவே முடியவில்லை சலீம்! என் சிந்தனைப்புரு சிக்குகளை அறுத்துக் கொண்டுசித்தூர்நோக்கிப் பறக்கிறது என் சிந்தை குளிப்பாட்டும் சிங்காரி அங்குதானேயிருக்கிறாள். உனக்குத்தான் தெரியுமே!...வேதனையால் சாகடிக்கப்பட்டு வருகிறேன். பெயரும் புகழுமிருக்கிறது டில்லி சுல்தான் என்ற அளவிலே. ஆனால் ......என் தாகம் தீர்ந்ததா? பல நாளாகவே வலை வீசுகிறேன்...... அகப்பட்டதா அந்த அழகு மீன்? என் நெஞ்சுதான் நெருப்பாகியிருக்கிறது. சலீம்! நீதான் பார்த்திருப்பாயே - நிலவு முகத்தினள் தானே என் அழகு பத்மினி!

சலீம்: பத்மினி முகந்தான் நிலவுக்கு! கண்டால் கருத்திலே ஒட்டிக்கொள்ளும் சித்திரப்பாவைதான் அவள். மன்னவரே! தங்களது வேதனை எனக்குப் புரியாததல்ல! தங்கத்தகட்டிலே வைரமணியைப் பதிப்பதுபோல இந்த அழகு ராஜாவுக்குப் பக்கத்திலே அந்த அன்பு ரோஜாவும் அமர்ந்திருக்க வேண்டுமென்றுதான் நானும் விரும்புகிறேன். விழிமொழியிலே உலகை விலைபேசி மகிழ்ந்திருக்கிறாள் பத்மினி. அந்த வாடாமலர் இந்த டில்லியிலேதான் வளரவேண்டும்- போர்ப்புலிகளுக்கு கிலியைத் தந்த தங்களின் திரண்ட மார்பிலே அந்தப் பூங்கொடி புரள வேண்டும். ஆமாம்! மன்னவரே இதுதான் எனது ஆசையும். இதற்காகத் தாங்கள் சஞ்சலப்படுவானேன்? இருக்கவேயிருக்கிறது பெரும்படை! வீரர்களோ லட்சோப லட்சமாக உண்டு.

அலா: போர்முரசு கொட்டத்தான் போகிறேன். களம்பலசென்று வெற்றிக்கொடியின் நிழலிலே தான் ஓய்வெடுத்துக் கொண்டிருக்கிறேன். இப்போது நடத்தப்போகும் போர் என் வாழ்வுப் போர். என் இதயம் சித்தூர் சிங்காரியிடம் சிறைபட்டுக் கிடக்கிறது. மண்டலங்களின் மீது படையெடுத்துச் சென்று மணிமுடிகளைப் பரிசாகக் கொண்டு வந்திருக்கிறேன். வைரக்குவியலைவாரிக் கொண்டு வந்திருக்கிறேன். புகழ் இருந்தென்ன? ஜோதி அங்கேயல்லவா வீசிக்கொண்டிருக்கிறது. இதைஎன்னால் சகிக்கவே முடியாது. மிகமிக விரைவிலே போர் முழக்கம் ஒலிக்க வேண்டும். நமது படைகள் சித்தூர்க் கோட்டையை நோக்கி நடைபோட வேண்டும்!

சலீம்: டில்லி கர்த்தாவே! பத்மினி ரஜபுத்திரப் பெண்மணி. பாயும் புலிக்குணம் படைத்தவர்கள் அந்தக் குலத்தினர். அவளது கணவனை தோல்விக் குகைக்கு அனுப்பிவிட்டு டில்லி பீடத்துக்கு அழைத்தால் வருகிறாளோ என்னவோ? எனவே, நிலைமையை அறிய தூது செல்லும் முறையிலே நானே போர் ஓலை தூக்கிச் செல்லுகிறேன்..படைகள்பின்னே வரட்டும்.

அலா: சலீம்! நாளையே நீ ஓலை எடுத்துச் செல். நிலைமையை விளக்கிக் கூறு. பீம்சிங்கைப்பற்றி கவலைப்படாதே? பத்மினியிடம்...... என் ஆசைக்குரியவளிடம் எடுத்துச் சொல். டில்லியின் அதிகாரக் குரலுக்குப் பணிய மறுத்தால் அவள் கணவன் பீம்சிங் நேருக்கு நேராகவே சித்ரவதை செய்யப்படுவானென்று தெளிவாகவே கூறிவிடு. பெருமைவாய்ந்த ரஜபுத்திர வமிசத்தையே தூள்தூளாக்கி விடுவேனென்று திட்டவட்டமாகக் கூறு! மணிமாடங்களையும், அழகுக் கூடங்களையும் அழித்து...நாகரீகத்தையும், கலையையும் ஒழித்து ரஜபுத்திரர்களை நடமாடும் பிணமாக்கிடுவேன். எதைக்கூற மறந்தாலும் இதைக் கூற மறந்து விடாதே! போய் வா! சிந்தை குளிப்பாட்டும் செய்தியோடு திரும்பி வா!

காட்சி 2.

இடம்: மீவாரில் பீம்சிங்கின் மாளிகை.

[**நிலைமை:** பத்மினியோடு பேசி மகிழ்ந்திருக்கிறான் பீம்சிங். டில்லியிலிருந்து தூது வந்திருப்பதாகப் பணியாள் கூறிச் செல்லுகிறான். பத்மினி எழுந்து போய் விடுகிறாள். தூது வந்தவரை உள்ளேஅழைத்து வரும்படி பீம்சிங் பணியாளிடம் கூறுகிறான். அவனும் ஓடோடி வருகிறான்.]

பீம்சிங்: டில்லியின் தூதுவரே! வருக! உள்ளன்போடு வரவேற்கிறேன்.

சலீம்: வரவேற்பு பின்னர்! முதலில் எனது...இல்லை, மன்னரின்

மா. தங்கவேலர்

வேண்டுகோளை ஏற்றுக்கொள்ளுங்கள். அதைப் பொறுத்துத்தானிருக்கிறது எல்லா நிகழ்ச்சிகளும்.

பீம்சிங்: புரியவில்லையே! நீ என்னதான் கூறுகிருய்? வா, உட்கார்!

சலீம்: உட்காரும் நேரமல்லஇது! அங்கே ஊஞ்சலாடிக் கொண்டிருக்கிருர் மன்னர். இங்கே காலத்தை வேடிக்கைக்குப் பயன் படுத்திக் கொள்ள விரும்பவில்லை நான்.

பீம்சிங்: நீ என்ன டில்லியின் புதிரா?

சலீம்: புதிரல்ல...புயல்! கனல்கக்கும் விழிகளிலே அனலைப் பாய்ச்சிக்கொண்டுநெஞ்சிலே நெருப்பாகி யிருக்கிருர் டில்லியின் மூலவர் -எனது மன்னவர். அவரது ஆசைத் தீ அணைக்கப்பட வேண்டும். இல்லாவிட்டால் அது ரஜபுத்திர சாம்ராஜ்யத்தையே பற்றிப் பரவிக் கொண்டு நிர்மூலமாக்கி விடும். எனவேதான்கூறுகிறேன்.புண்பட்ட மன்னவரின் இதயத்திலே கோல் குத்தாதே! போர்முரசு ஒலிப்பதற்கு முன்பு...எங்களது அரும்பெரும் வீரர்கள் உமது சின்னஞ் சிறு சித்தூரிலே அணிவகுத்து நடை போடுவதற்கும் முன்னதாகவே எங்களது திட்டத்தைத் தெளிவாகவே கூறி விடுகிறோம், கேட்டுவிடு!

பீம்சிங்: என்ன? டில்லிசுல்தான் போர்தொடுத்து விட்டாரா...போர் ஓலையா அனுப்பியிருக்கிருர்?

சலீம்: புலி விழித்தாலும் அது இன்னும் பாயவில்லை! போர் ஓலையாகத்தான் வந்திருக்கிறது. அது இன்னும் போர் முழக்கத்தைக் கிளப்பவில்லை. தாங்கள் முயற்சித்தால்...அந்த முழக்கத்துக்கேவேலையில்லாமல் செய்து விடலாம். கத்தியின்றி ரத்தமின்றி அமைதியின் உதயத்தைக் காணலாம். அது மட்டுமா? டில்லி சுல்தானின் புன்னகை மாலை உம்மை நோக்கி வீசப்படும். விஷயத்தை விரித்துக் கூறுவானேன். ரத்னச் சுருக்கமாகவே கூறுகிறேன். உங்கள் தேவிபத்மினியின் மீது எங்கள் சுல்தானுக்கு விருப்பம். உங்கள் நாடுகூட அல்ல... பத்மினிதான் வேண்டுமாம். கனி குலுங்கும்சோலையையும், இனிமைக் குயில்கள் பாடும் சாலைகளையும் அவர் நினைக்கவுமில்லை—தேவையென்று கேட்கவுமில்லை. ரஜபுத்திர குளிர் ஓடையைத்தான் விரும்புகிருர். இந்த நிலா அங்கே உலா வரமுடியாதா?

பீம்சிங்: இனியும் இதுமாதிரி பேசினுல் உனது நாவு பேசும் நிலையை இழந்துவிடும். மிருக நெஞ்சு படைத்த மனிதனு நீ! அறிவுக்கும் உனது அனுபவத்துக்கும் சம்பந்தமேயில்லையா? டில்லி பெரிய பீடம் என்பதற்காகப் பயந்துவிட நாஞென்றும் கோழையல்ல. அளவிலே சிறிய நாடுடையவர்களாக யிருந்தாலும் பண்பிலே பெரிய்வர்கள் நாங்கள். உங்கள் மன்னவரின் சின்ன புத்தியைக் கண்டு நாங்கள் மிகமிக வெட்கப்படுகிறோம். மாற்ருனின் மனைவியை மனதாலும் எண்ணிப் பாராத உயர்ந்த லட்சியமுடையவர்கள் நாங்கள்தான். படை பலமும், அதிகாரமுமிருக்கிறதென்பதற்காக அநீதிக்கு வாழ்த்துக்கூறி வரவேற்பதா? மனைவியைத்தாவென்று உன் மன்னன் கேட்க...அந்தக் கட்டளையைத் தலைமேல் தாங்கி ‘ஆமாம்’ போடும் பேடிகளை இந்த ரஜபுத்திர ராஜ்யத்திலே வலை போட்டுத் தேடினுலும் கிடைக்க மாட்டார்களென்பது உனக்கோ, உனது மன்னனுக்கோ எங்கே புரியப் போகிறது? மதுவும் மங்கையும் உங்களை மதியிழந்தவர்களாக்கியிருக்கிறது. தீக்கங்குகளை எடுத்து வீணையை மீட்ட முயற்சிக்காதீர்கள். இந்த, எனது இதோபதேசத்தை உனது மன்னரிடம் எடுத்துக் கூறு! போதை தெளியும்...இல்லையென்ருல் போர் போரேதான்!

சலீம்: போரா! அதுவும் நீரா தொடுப்பது வேதனையான கட்டம். உம் பத்மினியென்ன சர்க்கரைக் கட்டியா...எம்மன்னவர் கடித்துத் தின்றுவிட! மூள்நீங்க வழியிருக்கிறது என்று கூறினேன். கேட்கா விட்டால் எனக்கொன்றும் நஷ்டமில்லை. ராஜபக்தி மிக்கவர்தானே நீர். உம் பத்மினியை இழந்து நாட்டைக் காப்பாற்றிக் கொள்ள முடியாதா? ரத்தக் குட்டையிலே நாட்டை மிதக்க வைப்பதிலேதானு உமக்குப் பெருமை. இவ்வளவும் யார் பொருட்டு? ஒரே ஒரு பத்மினியின் பொருட்டு! வெட்கமாகயில்லையா? இது உனது சுயநலம் தானே! வேண்டாம் பீம்சிங்...... சிறுநரி!

பீம்சிங்: உம் மன்னர் சிங்கமாகவே தானிருக்கட்டுமே! இந்தக் குள்ளநரியின் உடலிலே உயிரிருக்கும் வரை சும்மாயிருக்காது. உனது ஆசை வார்த்தைகள் ஒரு அறுந்த வலை. அதன்மூலமாக என்னை வீழ்த்திடலாமென்றுஎண்ணுதே! முயற்சி வீணுனது. விரைவாகச் சென்று டில்லி சுல்தானிடம் கூறு! டில்லி ஆதிபத்தியத்தின் போர் வாளை, ரஜபுத்திரத்தின் போர் வாள் முத்தமிடத் தயாராகக் காத்துக் கொண்டிருக்கிறதென்று விளக்கமாக எடுத்துச் சொல். விசித்திர நெஞ்சினரை...சூதின் செல்வரைக் களத்திலே சந்திக்க நான் தயார்...ரஜபுத்திர சீயங்களும் அப்படித்தான். வீரத்துக்கும், விரகதாபத்துக்கும் வித்தியாசம் தெரியாத வீணர்கள் ரத்தக் குளத்திலே பாடம் படித்துக் கொள்ளட்டும்.

[பின்னணிக் குரல்: சித்தூர்க் கோட்டையை சுல்தானின் படைகள் முற்றுகையிடுகின்றன. ரஜபுத்திரர்கள் மூர்க்கர்களை எதிர்த்து நிற்கின்றனர் சோர்வடையாமல். அலாவுதீனின் உள்ளத்திலே ஆசைத் தீ வளர்ந்து பரவிக் கொண்டிருந்தது. போரோ நிற்பதாக இல்லை. வேதனையை மட்டுப்படுத்திக் கொள்ள சூழ்ச்சி செய்தான். பத்மினியை ஒரே ஒரு முறை கண்ணுல் பார்த்தால் போதுமென்றும்...உடனே போர் நின்று விடுமென்றும் சமரசத்தூதனுப்பினுன். பீம்சிங்கும் ஒரே ஒரு முறை பத்மினியை தரிசிப்பதற்கு அனுமதி தந்தான். கண்ணுடியிலே அழகி பத்மினியைப் பார்த்தான்... மகிழ்ந்தான் அலாவுதீன் வாள் ஒலிக்கு ஓய்வு கிடைத்தது......போர் நின்றது. ஆனுல் அலாவுதீனின் மனப்போர்......!]

காட்சி : 3

இடம்: சித்தூர்க்கோட்டைக்குச் சமீபம்.

நிலைமை: போர்க் கூடாரமொன்றிலே அமர்ந்திருக்கிருன் அலா

வுதீன்...பக்கத்திலே சலீம் நின்றுகொண்டிருக்கிறான்.

அலா: கண்ணாடியிலே கட்டழகியைப் பார்த்தேன். இல்லை. அழகின் எல்லையை என் கண்கள் முத்தமிட்டன. வானத்து நிலவு வையத்திலே குதித்து வந்தது போல அந்த நிலா அழகி தங்கத் தரையிலே நடந்து வந்து, அங்கத்தைக் காட்டினாள். அந்த நடையிலே நாட்டியத்தைக் கண்டேன். சிரித்த முகத்திலே எத்தனை குறும்பு?... அவ்வளவும் வேலாகி என்னைத் தாக்குகிறதே! சின்ன விழிகளுக்கும், சிவந்த உதடுகளுக்குந்தான் எவ்வளவு படபடப்பு? காற்றிலே கலந்தாடும் ரோஜா இதழைப் போலத் துடிதுடிக்கின்றன. மை தீட்டிய விழியாளிடம் மையல் கொண்டுவிட்டேன். ஆடும் மயில் நெஞ்சிலே படமாகிவிட்டது. கூவுங் குயிலின் இசை என் ஜீவ மூச்சோடுகலந்துவிட்டது. சலீம்...நான் மறக்கமுடியுமா அந்த இன்பச் சோலையை! கனவிலே காதல் மொழி பேசுகிறாள். நினைவிலே தொடருகிறாளே! பசித்தவன் நான்...கனித்தட்டைப் பார்த்துவிட்டு கண்ணை மூடிக்கொள்ள முடியுமா? குருடனல்லவே...! குருடனுக்குக்கூட ஒளியூட்டிவிடுவாளே, அந்தக் குமரி! என் எழிலோவியத்தை—சிங்காரச் சித்திரத்தை எப்படி இதயத்தை விட்டு நகர்த்திவைப்பேன். என்உயிர் எப்போதோ பத்மினியின் நிழலாகிவிட்டது. பாராமல் பார்த்து, சாகாமல் சாகடிக்கும் அந்த சந்தன மேனியாள் எனக்குத்தான் சொந்தம். குவிந்திருக்கும் அந்த அதரங்களுக்குக் குவலயத்தைக் காணிக்கையாக்குகிறேன். ஒரேஒரு புன்னகை. அதற்கு என் வாழ்வையே பணயம் வைக்கிறேன்.

சலீம்: மன்னவரே! பித்தம்பிடித்தோரைப் போலப் பிதற்றுகிறீரே, சித்தங் கலங்கிவிட்டதோ? இதற்குத்தான் அப்போதே சொன்னேன். அந்த நிலா மோகினியை நேரிலே பார்க்கவேண்டாமென்று. கண்ணாடியிலே முகத்தைக் காட்டி அகத்தைப் புண்ணாக்கி விட்டாளே. அடடா...!

அலா: புண்ணாகவில்லை சலீம்! துன்பத் தொட்டிலிலே துயிலுகிறேன். இன்ப ஊஞ்சலுக்கு வர அதுதானே முதல்படி! என் இன்ப ஏடுகளிலே கரிப்படிந்திருக்கிறது. அதைத் துடைக்க வேண்டும். தோகை மயில் சுடுகாட்டிலே நாட்டியமாடக் கூடாது. சுந்தரப் பூக்காட்டுக்கு அது அழைத்துவரப்பட வேண்டும். பீம்சிங்—வஞ்சகவேடன் அவனிடம் என் ஆசைக்கிளிசிறைபட்டிருக்கிறது. வேடனை விரட்டுகிறேன். கிளி மொழியை விடுவிக்கிறேன். வீணைவீதியிலேவீசப்பட்டிருக்கிறது. அறுந்த தந்திகளை இறுகவைத்து நாதத்தை நான் எழுப்பப் போகிறேன்.

சலீம்: மீண்டும் போர் முழக்கம் கிளம்புமென்று கூறுங்கள். நம் வீரர்கள் ஊர் திரும்பும் மகிழ்ச்சியிலல்லவாயிருக்கிறார்கள். இது புதுப்புயல்!

அலா: டில்லிநோக்கிவெறுங்கையோடு போகப்போவதாக எண்ணமில்லை. போருக்குப்பின் மணிமுடிகளை—மயிலாசனங்களைப் பரிசாகக் கொண்டு சென்றிருக்கிறேன் என்னோடு. இப்போதோ சரித்திரமே மாறுகிறது. பெண்ணரசியை...பேசும் சிலையை...துள்ளி வரும் புள்ளிமானை அழைத்துச் செல்லப் போகிறேன். மீண்டும் சித்தூர்க் கோட்டை நம் வீரர்களால் முற்றுகையிடப்படட்டும். பீம்சிங்கின் நெஞ்செலும்பை உடைத்து ரஜபுத்திர சரித்திரத்துக்கு ரத்த முடிவுரை எழுதுகிறேன். உலக அழகை மீவார் மாளிகைக்குள்ளேயே தேக்கிக்கொண்டேனென்று பூரித்துக் கிடந்தானே...பாரடா பார்! உன் ஆசை நட்சத்திரம் அறுந்துவிழப் போவதைப் பார்! ஹா..ஹா..ஹா!

சலீம்: படைகள் நாளை காலையில்தானே...!

அலா: இல்லை இப்போதே, இந்த நள்ளிரவிலேயே சித்தூரை நோக்கிப் பாயவேண்டும். இதுதான் நல்ல நேரம்...மிக மிகநல்லநேரம். புதரிலேயிருக்கும் புலியும், புற்றிலேயிருக்கும் நாகமும்கூட இந்த நேரத்திலே தூங்கிக்கொண்டிருக்கும். ஆனால் நாம் விழித்துக்கொண்டிருக்கிறோம். சித்தூர்க் கோட்டையும் அந்தச்சிற்றிடைச் சிங்காரியும் நம் வசம் ஆகும்வரை தூக்கமேயில்லைதான்.

[பின்னணிக் குரல்: மீண்டும் பெரும் போர்; அலாவுதீன் படைகள் சித்தூர்க் கோட்டையை கைப்பற்றிக்கொண்டு உள்ளே புகுந்துகொண்டிருந்தது. ராணாபீம்சிங் டில்லி வீரர்களின் கையிலே சிக்கி சித்ரவதைக்கு ஆளாகிக்கொண்டிருந்தான். அலாவுதீனின் வெள்ளைக்குதிரை அவனைச் சுமந்துகொண்டு மீவார்மாளிகை நோக்கிப் பறந்தது.]

காட்சி: 4

இடம்:—மீவார் மாளிகை.

நிலைமை: [மாளிக்கைக்குள்ளே புகுந்த அலாவுதீன் உள்ளே தாழிடப்பட்டு சாத்தப்பட்டிருந்த பத்மினியின் அறைக்கு முன்னே நின்றுகொண்டிருந்தான். அறைக்குள்ளே நடந்துகொண்டிருந்தாள் பத்மினி இதயபாரத்தோடு. அல்லாவுதீன் கதவைத் தட்டிக்கொண்டிருந்தான்.]

அலா: கதவைத்திற கண்ணே, உனக்காகவே வாழும் இந்த அநாதையை கண்ணைத் திறந்து பார் ஓடோடி வந்திருக்கிறேன் டில்லியிலிருந்து. ஓய்வெடுத்துக்கொள்ள ஒய்யாரி நீ அன்பழைப்புத்தரமாட்டாயா? தாரகையை உன் புன்னகையிலே ஒட்டவைத்துக்கொண்டு ஒளிபாய்ச்சினாயே அன்று...அந்தச் சந்திரமுகத்தை என்பக்கம் திருப்பு அன்பே! சிரிப்பிலே காதல்மழை பொழிவாயாமே...சிந்துபாடும் அந்தக் காவியத்தைப் படித்துக்காட்டு ஆருயிரே! பத்மினி...பத்மினி... தேன் ஒட்டிக்கொண்டது கண்ணே உதட்டிலே, உன்பெயரைச் சொல்லும்போதே!

பத்மினி: மூடநெஞ்சே! தேனா ஒட்டிக்கொண்டது? இங்கே தேள் கொட்டுகிறது! சுடுகாட்டிலேயிருந்துகொண்டு சுந்தரகானமிசைக்கிறாய். பாவிகளின் தலைவனே! ரத்தக் குட்டையிலே மிதந்துவந்து விபசாரத்துக்கு விலை பேசுகிறாய். இவ்வளவுதானே டில்லியின் [illegible] அகராதி! உங்களது கலையும், நாகரீகமும் எது என்று எங்களுக்குப் புரிந்துவிட்டது. மாற்றானின் மனைவியை மஞ்சத்திற்கு அழைக்கும் மதியிழந்தவர்களே! நஞ்சு தடவப்பட்டதுதானா உங்களது இதயம். டில்லி அந்தப்புரத்து ராணிகளல்ல ரஜபுத்திரர்கள். மானத்தை உயிராக...... கௌரவத்தை உடலாக்கிக்கொண்டு நடமாடுபவர்கள். டில்லி கொடுங்கோலரே! உமது சாவுச் சங்கநாதம் கேட்கமுடியாதயிடத்திலேயிருக்கிறேன் நான்...

போய்வாருங்கள் உங்களின் ஆதிக்க பீடத்துக்கு !

அலா : சீறும் சிங்காரி ! கோபக் கனல் பிறக்கிறதே உனது கோமள உதடுகளிலிருந்து ! வேல்விழியே வெறுத்தொதுக்குகிறாயா என்னை ? பேசிப்பேசி காலத்தைத் தீயாக் காதே ! கதவைத்திறந்துவிடு. என் வீரவாளையே உன்னிடம் தருகிறேன். பிறகு வேண்டுமானால்...நீயே என்னைக் குத்திக்கொன்று போட்டுவிடு. உனக்காக உயிரையே தர சித்தமாயிருக்கிறேன். உனது திட்டுகளால் நிலை மாறிவிடமாட்டேன். திட்டுகள் —தித்திக்கின்றன. நீபாடும் வசை மழைதான் எனக்குப்போடும் வாழ்த்துமாலை. கண்ணே கதவைத் திற ! இருவரும் உறவு பேசுவதை இந்த இரும்புக்கதவல்லவா தடுத்து நிற்கிறது.

பத்மினி : உன் இதயத்தின் தோழன்தானே—அந்த இரும்புக் கதவு !...எப்படி இளகிக்கொடுக்கும், விலகிக்கொடுக்கும் சண்டாளனே ! நீ டில்லி சக்ரவர்த்தியாகயிருக்கலாம். ஆனாலுமென்ன; இந்தச் சின்னஞ்சிறு பத்மினியின் உடலை உன்னால் தொட்டுக்கூடப் பார்க்க முடியாது. வேதனைக்குரல் கொடுக்கிறேன்...வெட்கமில்லையா உனக்கு? அதிகாரத்தையும், அந்தஸ்தையும் போர்த்திக்கொண்ட ஒரு மிருகம் தானா நீ ! படைகளை அனுப்பி கோட்டை கொத்தளங்களைப் பிடிப்பது கோமள வல்லிகளின் கொவ்வைச் செவ்விதழ்களுக்குத்தானா ? துன்பத்தந்திகளிலே இன்ப இசை மீட்ட முயற்சிக்கிறாய். இந்தக்கேடு கெட்ட தர்பார் ராகம் எத்தனை நாளைக்கு? புயலே, நீ தென்றலாக நடிக்கிறாய். போலிவேடம், சூதுத் திரை கிழிக்கப்பட்டுத்தான் தீரும் !

அலா : சந்திர முகத்தாளே ! சாகசமாடுகிறாயே! வேண்டாம் உனக்கிந்தப்பிடிவாதம். உன் ராணா இந் நேரம் என் வீரர்களிடம் பிடிபட்டு சித்ரவதைப் பட்டுக்கொண்டிருப்பான். அந்த வாழத்தெரியாதவனை —ஆளத்தெரியாதவனை நம்பி உன் வாழ்வையே பாலைவனமாக்கிக் கொள்ளாதே ! பைங்கிளியே! வீடு தீப்பற்றிக்கொண்டது. தப்பிக் கொள்வதுதானே முறை. சித்தூர் வீழ்ந்துவிட்டது. வீதிகளிலே எங்கள் வீரர்களின் வெற்றிச்சிந்து! இந்தநிலையிலும் நீ பீம்சிங்கைத் தானா நம்பிக்கொண்டிருக்க வேண்டும்? உலகே நடுநடுங்கும் மாவீரன் உன்முன்னே வந்து நிற்கிறான். அவனை அலட்சியப்படுத்துகிறாயே? மாமலையை ஒதுக்கிவிட்டு மண் மேட்டுக்கா ஓடோடுகிறாய்? வேண்டாம்! என் வாழ்வோடு விளையாடாதே ! கோப உச்சிக்கு விரட்டியடிக்காதே!

பத்மினி : நீ எந்த உச்சிக்குப் போனால்தான் எனக்கென்ன ? நான் மரணமலையுச்சிக்குப் பயணம் துவக்கிவிட்ட பிறகு எதைப் பற்றித் தான் எனக்குக் கவலை? நான் அழியப்போகும் மலர் ! உடையப்போகும் சிலை ! வேதனையும் வெட்கமும் உனக்குத்தான் பிறக்கவேண்டும். அழியும் ஒரு உடலுக்காக ஆயிரமாயிரவரின் பிணங்களின் மீது நடந்து வந்த பெரிய மனிதரே ! நீர் வீரர் தான். அந்தவீரம் எதற்குப் பயன் பட்டிருக்கிறதென்பதை இன்னும் துளிநேரத்தில் தெரிந்துகொள்வீர். வட்டமிடும் கழுகே ! உன் கோரப் பயணம்என் வாழ்வுடனேயேயாவது நின்று போகட்டும். அக்ரமத்தின் அஸ்தமனம் அப்போதாவது ஏற்படட்டும். மங்கையர் குலத்தை மரப் பொம்மைக் கூட்டமாக மதித்திருக்கும் உன் கல்நெஞ்சிலே இனியாவது ஈர ஊற்றுக் கிளம்பட்டும். அதோ பீம்சிங் அழைக்கிறார். தீப் பாலத்தைக் கடந்து அந்த இடத்துக்குப் போகிறேன். ஏ ! டில்லிப் புலியே ! நீவிரும்பிய பொன்னுடல் தீக்குழியை முத்தமிட்டுக் கொண்டிருப்பதை வந்துபார். சத்தியவதிகளின் உடலை சர்வாதிகாரிகள் தொட்டுக்கூடப் பார்க்க முடியாதென்பதை அப்போதாவது உணர்ந்து கொள்...உண்மைக்குப் பாடுபடு !

பின்னணிக்குரல் : பத்மினி மாளிகைக்குள்ளே வளர்க்கப்பட்ட தீக்குழியிலே குதித்து விடுகிறாள். வீரர்களைவிட்டு இரும்புக்கதவை உடைக்கவைத்து—உள்ளே புகுந்த அலாவுதீன்......!

அலா : அய்யோ ! என் இன்பம் தீயைத் தழுவிவிட்டதா ? ஆசைச் சுமையைத் தேக்கிக்கொண்டு ஓடோடி வந்தேனே! உயிரே, உன் சாம்பலைச் சந்திக்கத்தானா இவ்வளவு வேகம்...பெரும் போர்! உன் சாவால் சத்தியத்தை நிலைநாட்டி விட்டாய். உன்னை அழித்துவிட்டு என் கண்ணைத் திறந்து விட்டாய் உன் சாம்பலைக்கூடத் தொட முடியவில்லையே... ...உன் நெஞ்சுபோலத் தீயாகிக்கிடக்கிறது. இன்பச்சித்திரமே! அழிந்துவிட்டாயா நீ ! இந்தப்பாவியின் கண்ணிலே படாமல் தீத் திரையை இழுத்துப் போர்த்திக்கொண்டாயோ ! அழகுத் தெய்வமே ! என்னை மன்னித்து விடு ; மாணிக்கமே! மன்னித்துவிடு. பாடிப்பறந்த பைங்கிளியின் சிறகுகளை அறுத்தேன்...கொடியவன்! சிங்காரச்சிலையை உருத்தெரியாமல் உடைத்தேன்...முரடன். ரஜபுத் திரத்தையே ரத்தக்காடாக்கினேன்.. அரக்கன். பத்மினியே எனக்கும் உனது மன்னிப்பு உண்டா...?

(மண்டியிடுகிறான்)

(திரை)

◉

கண்ணதாசன்

எழுதிய

மாங்கனி

[காதற்காவியம்]

—சிறையில் மலர்ந்த செந்தமிழ் மலர்—
—அழகிய முறையில்

விரைவில் வருகிறது !—
சேரன் அவை அமைச்சர் அழும்பில் வேள் மகனும் கணிகையொருத்தியும் காதல் கொண்டதை அழகுறச் சித்தரிக்கும் ஓவியம்

விபரங்கட்கு :

பாரிநிலையம்

பிராட்வே :: சென்னை

வளரும் சக்தி

A.கோவிந்தசாமி,M.L.A

புதிய நாடகச் சட்டம் கொண்டு வரப்பட்டிருப்பது நாடகக் கலையையே கொலை செய்யும் வகையில் இருக்கிறது. அரசாங்கத்தாரால் நியமிக்கப்படும் அதிகாரிகளின்சொந்த விருப்பு வெறுப்புகளின்படிதான் இனி எந்த ஒரு நாடகமும் நடைபெறமுடியும். அதிகாரிகள் தங்களுக்குப் பிடிக்காத நாடகங்களை ஆட்சேபகரமானது என்றுசொல்லி எந்த ஒரு நாடகத்தையும் தடை செய்துவிடலாம். இதற்கு நாடக மசோதாவின் (2 கிளாஸ் 5-வது ஷரத்து) இடங்கொடுக்கிறது. இறுதியில் இதன் விளைவு,நாடகக்கலையே நாசமாக்கிவிடும்.

இதனால் பெரும்பாலும் பாதிக்கப்படுவது சீர்திருத்த நாடகங்களேயாகும். சமூகத்திலுள்ள ஊழல்களையும், புராணங்களிலுள்ள ஆபாசங்களையும்—பொதுவாக மக்களிடையே நிலவிவரும் மூடப்பழக்கங்களையும் போக்குவதற்கு தோழர் எம். ஆர். இராதா அவர்கள் நாடகத்தின்மூலம் தொண்டு செய்து வருகிறார். ஆனால் மதுரையில் சில 'கூலி'கள் செய்தகாலித்தனத்தை வைத்து ராதாவின் நாடகத்தை தடை செய்தது பேதமை. மாறாக மதுரைக் கலவரத்திற்கு யார் காரணமோ அவர்கள் தண்டிக்கப்பட்டிருக்கவேண்டும்.

கருத்துப் புரட்சி செய்துவரும் இராதாவை - மக்கள் செல்வாக்கு பெற்ற ஒரு புரட்சி நடிகனை-மந்திரி சுப்பிரமணியம் சட்டசபையில் 'ரௌடி' என்று கூறுகின்ற அளவிற்கு இழிபண்பைப் பெற்றுள்ளார். இதனால் எத்தனை பேர் மனம் புண்பட்டிருக்கிறது என்பதை மந்திரியார் உணராதது விந்தையிலும் விந்தை !

◉

ஒவ்வொரு புராணத்திலிருக்கும் ஆபாசங்கள் ; புராண சம்பந்தமான நாடகங்களில் காட்டப்படும் கேவல செய்கைகள் எவ்வளவு! சர்க்கார் இன்றைய தினம் மதசம்மந்தமான நாடகங்கள் நடத்தப்படவேண்டுமென்று கூறுகிறது. அப்படிப் பார்த்தால் ; குளிக்கும் பெண்களின் சேலை திருடிய கோபாலனையும் ; மனைவியை மாற்றான் படுக்கை யறைக்கு அனுப்பிய இயற்பகையையும், பிள்ளைக்கறிசமைத்த சிறுத்தொண்டனையும், தாயைக் கூடி மோட்சம் பெற்ற ஒரு பார்ப்பானையும், நிர்வாணப் பிச்சை போட்ட அனுசூயாவையும், ஐவருடன் போராடிய பாஞ்சாலியையும், அப்படி அப்படியே, புராணங்களில் உள்ளது போல், நாடகமேடையில் ஏற்றிக் காட்டினால் பக்தர்களும்—அவர்களுக்கு பக்கமேளம் கொட்டும் சர்க்காரும் என்ன செய்யுமோ தெரியவில்லை. இராதாவின் ராமாயணம் பக்தர்களின் நெஞ்சைப்புண்ணாக்குகிறது என்றால், ராசமாணிக்கத்தின் 'குமாரவிஜயமும்', 'ஐயப்பனும்' எத்தனை பகுத்தறிவாளரைப் புண்படுத்துகிறது.

அரசியல் சட்டப்படி ஒருவன் இரண்டு தாரங்களை மணப்பது கூடாது. ஆனால் இந்த அரசியல் சட்டத்திற்கு விரோதமாக ஒரு ஆடவனுக்கு இரண்டு மனைவிகள் இருக்கலாம் என்று நாடகமூலம் 'நவாப்' காட்டுகிறார். நோய் தீர்க்க டாக்டர்களோ, மருந்தோ தேவையில்லை. ஐயப்பனின் 'விபூதி'யே போதும் என்கிறார். இதனால் டாக்டர்களின் மனம்கூட புண்படத்தான் செய்கிறது. நியாயமாக இத்தகைய நாடகங்கள்தான் தடை செய்யப்படவேண்டுமே தவிர அறிவுப் பணியாற்றும் இராதா போன்றோரின் பகுத்தறிவு நாடகங்களைத் தடை செய்வது விபரீதத்தை வளர்த்துக் கொள்வதாகும் என ஆட்சியாளருக்கு எச்சரிக்கை செய்கிறேன்.

பக்தர்கள் மதத்தின் பேரால் காலித்தனம் செய்கிறார்கள். அரசாங்கம் அவர்களைத் தட்டிக்கொடுக்கிறது.

தற்போது கொண்டு வரப்பட்டிருக்கும் இந்த மசோதாவை வாபஸ் பெறவேண்டும். சட்டத்தை மீறுபவர்க்கு நியாயமற்றமுறையில் தண்டனை தர இந்தச் சட்டத்தில் இடமிருப்பது கண்டிக்கத் தக்கது. நாடகத் தொழிலில் ஈடுபட்டிருப்பவர்களுக்கு தண்டனை ஆயிரம் ரூபாய் விதிப்பது பயங்கரக் கொடுமை. இந்த அழிவுப் பாதை நோக்கி சென்னை சர்க்கார் செல்லுமானால் இதனால் ஏற்படப் போகிற எதிர்ப்பை-இந்த சர்க்காரால் சமாளிக்க முடியாது என்பது நாடறிந்த உண்மை.

இதையெல்லாம் எடுத்துச்சொன்னால் திராவிட இயக்கத்தைச்சேர்ந்தவர்கள் எதையும் எதிர்ப்பதாக மந்திரி சுப்பிரமணியம் போன்றவர்கள் கோபப் படுவதில் பொருள் இல்லை. திராவிடர் இயக்கம் வளரும் சக்தி. விரைவில் லட்சியத்தில் அதாவது 'திராவிட நாடு திராவிடருக்கே' என்ற கொள்கையில், வெற்றி காணப்போவது திண்ணம் உறுதி.

ஆனால் சாக்கார், ஏதோஇவர்கள் பாட்டன் வீட்டுச் சொத்துபோல, திராவிட நாடு பிரிவதை நாங்கள் ஒப்புக்கொள்ள மாட்டோம் என்கிறார்கள்- ஆனால் அரசியல் சட்டத்தில் அதற்கு இடம் இருக்கிறது.

(a) From a new state by separation of territory from any state of by uniting two or more states or parts of states or by uniting any territory to a part of any state.

(79-ம் பக்கம் பார்க்க)

பராசக்தி

புரட்சியும், தமிழும்
பாலிந்த இருபடங்கள் !

ரத்தக்
கண்ணீர்

மனைவிமுகம் கணவனுக்கு மாறாத பொங்கல்--சின்ன
மகவுமுகம் அன்னையர்க்கு வற்றாத பொங்கல் !
நினைவுமுகம் காதலிக்கு நீங்காத பொங்கல் -- வண்ண
நிலவுமுகம் தாமரையின் நெஞ்சூறும் பொங்கல் !
அறிஞருக்கு வள்ளுவன்சொல் அன்றாடம் பொங்கல்-தமிழ்
அன்பருக்கு கவிதையெலாம் ஆக்காத பொங்கல் !
தமிழரெனும் எல்லோர்க்கும தையென்னும் திங்கள்--மெய்
தாங்கிவரும் பொங்கலதே தனிப்பெரிய பொங்கல் !
பொங்குமுகம்! பொங்குமனம்! பொங்கு அணுத்தோறும் !
பூச்சிரிப்புத் திராவிடனே ! பொங்கு ! துயர் ஆறும் !

எல்லோர்க்கும் எங்கள் பொங்கல் வாழ்த்துக்கள் !

நேஷனல் பிக்சர்ஸ்

சென்னை-1.

கி.பி. இரண்டாயிரம்

மாலை 6 மணி இருக்கும். இயந்திர உலகத்தில் வாழும் மனிதர்கள் அவர்களது அன்றாட வேலைகளை நிறுத்தப் போகிறார்கள் என்பதன் அறிகுறி மாலைப்பொழுது. நான் நடந்த வண்ணமிருந்தேன். மிகவும் குக்கிராமமாக இருந்ததால்அரசியல் பற்றிபேசவோ நகரத்திலே வாழும் மனிதனின் மனதைக் கவ்விக் கொண்டிருக்கும் பேராசைத் திட்டங்களைப்பற்றி விவாதிக்கவோ தோழர்கள் அங்கே கிடையாது. வறுமையுடன் போராடி, வயிற்றை நிரப்புவது எப்படி என்ற பிரச்சனையிலே சோர்ந்த உள்ளத்துடன் - ஆனால் என்றாவது ஓர்நாள் நல்லவாழ்வு வரும் என்ற நம்பிகையுடன் கூடிய மக்கள் நிறைந்த கிராமம் அது. திரும்பிப்பார்த்தேன். என் அருகே சேர்வராயன் மலைத்தொடர், காலத்திற்கும் மனித ஆசாபாசங்களுக்கும் கவலைப்படாது நெளிந்து, நெளிந்து சென்றுகொண்டிருந்தது- அந்த மலைத் தொடரின் உச்சியிலே ஒரு காலத்தில் சித்தர்கள் வாழ்ந்தார்களாம். மணலை தங்கமாக மாற்றினார்களாம். அதிசயமாக இருக்கிறதல்லவா ?

அதைவிட ஒரு பெரிய அதிசயம் நேற்றிரவு அங்கே நடந்ததாகச் சொன்னார்கள். நள்ளிரவில் ஒரு யந்திர அமைப்பு ஒளிவீசிக்கொண்டு ஒருகுன்றின் உச்சியிலே வந்து இறங்கியதாம். அதைக்கண்ட கிராமத்து வாலிபன் ஒருவன், ''அதோ பறக்கும் தட்டு !'' என்று கூவினானாம். ஊர்மக்கள் அந்த அதிசயத்தைப் பார்க்க ஓடினார்களாம் குன்றின் அருகே. ஆனால் வியப்படைந்த அந்த மக்கள் கூட்டம் குன்றின் அருகே செல்லும் முன்பாக அந்த பறக்கும் தட்டு ஒளிவீசிக் கொண்டு மீண்டும் உயரே சென்றுவிட்டதாம் வானத்தை நோக்கி. இன்று காலை எனக்கு அந்த செய்தினயச் சொன்னார்கள். ஆவலால் தூண்டப்பட்டு நான் அந்த குன்றின் உச்சியில் எறிணேன். என் சிந்தனையிலே பறக்கும் தட்டு தோன்றித் தோன்றிமறைந்தது. நம் நாட்டு மக்களின் மனோநிலையை எண்ணி, எண்ணி வியந்தேன். பத்துத்தலையுடன் கூடிய இராவணன், சக்கரமேந்திய மகாவிட்ணு, எலும்பை மாலையாக போட்டிருக்கும் காளி மாதா இவை அனைத்தும் உண்மை என்ற நம்பிக்கையிலே வாழும் நம் நாட்டு மக்கள் ''பறக்கும் தட்டை''ப் பற்றி என் நம்பமாட்டார்கள் என என்னை நானே கேட்டுக் கொண்டேன்.

'சில்' என்று காற்று வீசியது. 'தென்றல்' என்றுவேண்டுமானால் நீங்கள் நினைத்துக்கொள்ளுங்கள். தூக்கம் வருவது போன்ற உணர்ச்சி எனக்கு எற்பட்டது. சென்னை நகரில் சாக்கடை அருகே உல்லாசமாக தூங்குவதற்கு தங்களை தயார் செய்து கொண்டிருக்கிறார்கள் இந்த நாட்டு குடிமக்கள் எத்தனையோ பேர். மாலை நேரம், வீசுகின்ற தென்றல் இயற்கையின் எண்ணற்ற எழில் ஓவியங்களை கொண்ட அப்பகுதி. அதிகமான கவலையில் என் உள்ளத்தை ஈடுபடுத்தாத நான் அக்குன்றின் பாறை ஒன்றில்அமர்ந்திருக்கிறேன். தூக்கம் வந்து விட்டது.

உ...ர்...ர்...ர்...ர். என்று சப்தம் கேட்டது.

வானத்திலே ஒளி ஒன்று தோன்றியது. வர, வர அந்த ஒளி என் அருகே வருவதுபோல் தோன்றியது. சிறிது நேரத்தில் வட்டமான ஒரு அமைப்பு, பறக்கும் தட்டு என்று பத்திரிகையிலே எழுதுகிறார்களே அந்தப் பறக்கும் தட்டு ஒன்று குன்றின்மீது வந்து இறங்கியது. அதன் அடிப்பாகம் வட்டமாக இருந்தது. மேலே கூண்டு போன்ற ஒரு அமைப்பு, அதன் உள்ளே வெளிச்சம் காணப்பட்டது. எட்டிப்பார்த்தேன் ! பறக்கும் தட்டின் கதவின் ஒன்றின் வழியாக ஒரு உருவம் கீழே இறங்கியது. ஆச்சரியமும், அச்சமும் நிறைந்த உள்ளத்துடன் நான் எழுந்து நின்றேன்.

''குட் மார்னிங் !'' என்றது அந்த உருவம் தான் ! பெண். வயது சுமார் 20 இருககும். ஆங்கில நாட்டு முறையிலே உடை அமைப்பு காணப்படடது. எதாவது பேசலாமா என்று நினைத்தேன்.

'' நீ யார்?'' என்று தைரியமாகக் கேட்டு வைததேன். ''நானா, என்னை உனக்குத் தெரியாது, நான் செவ்வாய் கிரகத்திலிருந்து வருகிறேன். உனக்கு எப்படி என்னை தெரிய முடியும் ?'' என்றது அந்தப்பெண் உருவம்'' செவ்வாய் கிரகமா ?'' அங்கு மனிதர்கள் கூட வாழ்கிறார்களா ? செவ்வாய் கிரகம் என்று ஒன்று இருக்கிறது. அதிலே மனிதர்கள் வாழ்ந்தாலும் வாழலாம் என்றுதான் படித்திருக்கிறேன். ஆனால் நீயோ ஆங்கிலநாட்டுப்பெண் போல் இருக்கிறாய். தமிழ்மொழி

வி. சிவப்பிரகாசம். B.A.

உனக்குத் தெரியும் போலிருக்கிறது. என்னால் நம்பமுடியவில்லையே'' என்றேன் நான்.

"உன்னால் நம்பமுடியாது, உன்னால் மட்டுமல்ல, நீவாழும் இந்த உலகத்திலே இருக்கும் அத்தனை மக்களுமே நம்பமுடியாது; அதிலும் குறிப்பாக நீ பிறந்திருக்கும் நாட்டுமக்கள் தேவையில்லாத செய்திகளிலே நம்பிக்கை வைத்திருக்கிறார்கள். எதிர்காலத்தைப்பற்றி நீங்கள் அதிகம் நினைப்பதே கிடையாது.'' என்று பதில் கிடைத்தது.

எனக்கு ஒன்றுமே புரியவில்லை. செவ்வாய்க் கிரகத்திலிருந்துவந்த பெண் தமிழ் மொழி பேசுகிறாள் இந்தத்தரணியில்வாழும் மக்களின் மனப்போக்கை நன்றாக அறிந்துள்ளது போல் அப்பெண்மணியின் பதில் தெரிவிக்கிறது.

"செவ்வாய் கிரகத்திலிருந்து நீ இங்கே எப்படி வந்தாய் ?'' என்று கேட்டேன்.

"இதோ இருக்கிறதே இந்த இயந்திரம் — அதுதான் — உங்கள் நாட்டிலே பறக்கும் தட்டு என்று குறிப்பிடுகிறார்களே அதன் மூலமாகத்தான் வந்தேன். அது அணுசக்தியினால்இயங்குகிறது. உன்நாட்டில் நீ வாழும் உலகில் விஞ்ஞானம் எவ்வளவு தூரம் அபிவிருத்தியடைந்திருக்கிறதோ அதைவிட பன்மடங்கு நான் வாழும் உலகிலே விஞ்ஞான முன்னேற்றம் ஏற்பட்டிருக்கிறது. அணுசக்தியின் உதவியினால், அதில் நடத்தப்பட்ட ஆராய்ச்சியினால் எங்கள் நாட்டு விஞ்ஞானிகள் பறக்கும் தட்டு என்று நீங்கள் கூறும் இந்த புதிய விமானத்தை கண்டுபிடித்திருக்கிறார்கள். இதன் மூலம் நான் 10 மணி நேரத்தில் எங்கள் நாட்டிலிருந்து நீ வாழும் உலகுக்கு வரமுடியும்?'' என்றது அப்பெண்மணியின் குரல். பறக்கும் தட்டில் பறந்து வந்தேன் என்கிறாயே பாவையே நான் பேசும் மொழி உனக்குஎப்படித்தெரிந்தது என்று கேட்டேன்.

"நீ பேசும் மொழிமட்டுமல்ல, இந்த மண்ணுலகிலே பேசப்படும் 12 மொழிகள் எனக்குத்தெரியும். என் நாட்டு விஞ்ஞானத்தின் முன்னேற்றம் உங்களுடைய உதவியின்றியே நீங்கள் பேசும் மொழியை நாங்கள் கற்றுகொள்ளுமளவுக்கு வழி செய்திருக்கிறது.'' என்று பதில் கிடைத்தது.

"எப்படி ?'' என்று நான் கேட்டேன்.

"எப்படியா ?'' சுருக்கமாக சொல்கிறேன் கேளும். நீ வாழும் உலகில் "மைக்'' என்னும் ஒலி பெருக்கி இருக்கிறது அல்லவா! அது போன்று எங்கள் நாட்டிலே ஒரு இயந்திரம் இருக்கிறது. என்னுடைய நாட்டு சர்க்கார் அந்த இயந்திரக் கூடம் ஒன்றை அமைத்திருக்கிறார்கள். அதிலே உள்ள கருவிகள் பல்லாயிரக் கணக்கான மைல்களுக்கப்பால் கேட்கும் ஒலிகளை தன்னிடம் இழுத்து பதிவுசெய்கிறது. இந்த முறை மூலம் நாங்கள் உங்கள் மொழியை கற்றுக் கொண்டோம். நீங்கள் பேசுவதை பதிவு செய்யும் அந்த இயந்திரத்தைப் போன்றுவேறு ஒரு கருவி "டெலிவிஷன்'' என்று கூறுகிறீர்களே அதைப்போன்றது. அக்கருவி நீர் வாழும் நாட்டிலே நடைபெறும் காட்சிகளை படம் எடுத்துக் காட்டுகிறது. அக்காட்சிகளை பார்க்கிறோம். நீங்கள் பேசும் ஒலியையும் கேட்கிறோம். ஆகவே உங்கள் மொழியையும் கற்றுக் கொண்டோம்.''

இப்பதிலை கேட்டதும் அடுத்து என்ன கேள்வி கேட்கலாம் என்று யோசித்தேன். இங்கே நடக்கும் காட்சிகளை கண்கூடாக பார்க்கும் நீங்கள் இந்த உலகத்தின் மனிதனின் நடவடிக்கைகளை நன்றாக புரிந்துகொண்டிருக்கிறீர்களா ?'' என்று ஒரு கேள்வியை போட்டு வைத்தேன்.

"ஓ! நன்றாக புரிந்துகொண்டிருக்கிறோம். இந்த மண்ணுலகிலே நீங்கள் மறந்து மடிந்து சாம்பலாகப் போகும் காட்சியையும் ஆதிக்க வெறிபிடித்த வல்லரசுகள் அன்பை மட்டும் பண்பாக கொண்டு வாழும் சிறுநாடுகளை நாசமாக்கும் காட்சிகளையும் உழைக்காத ஓர் கூட்டம் வாழ்வதையும் மற்றவர் உழைப்பினால் ஒருசிறு கூட்டம் உல்லாசபுரியிலே வாழ்வதையும் நாங்கள் பார்த்துக் கொண்டுதான் இருக்கிறோம்.'' என்ற அப்பெண்மணியின் பதில் என்னைத் திகைக்க வைத்தது

"அப்படி என்றால் நீ தேவ லோகத்தில் இருந்து வருகிறாயே?'' என நான் கேட்டேன்.

"நண்பனே ! நான் தேவலோகத்திலிருந்து வரவில்லை. நான் தேவ கன்னிகையுமல்ல அப்படி ஒரு உலகம் இருப்பதாக உன்னையும் உன் மூதாதயரையும் நம்புமாறு செய்திருக்கிறார்கள். சென்ற இரண்டு ஆண்டுகளாக இப்போது நான் வந்திருப்பதைப் போல் பலர் எங்கள் உலகத்திலிருந்து பறக்கும் தட்டுகளில் நீ வாழும் உலகத்திற்கு வந்து போயிருக்கிறார்கள். உன் நாட்டிலே இருக்கிற மத வாதிகள் பறக்கும் தட்டுகள் எனப் படுவன அவர்கள் கூறும் தேவ உலகத்திலிருந்து வருகின்றன என்று கூறி, தேவர்கள் வாழும் உலகம் என்று ஒன்று இருப்பதாகச் சொல்லும் அவர்களது பொய்க் கூற்றுக்கு ஆதாரமாக எடுத்துக் கொள்ள முயற்சிக்கிறார்கள், அப்படி யாராவது கூறினால் நம்பாதே. நான் தேவ உலகத்திலிருந்து வர வில்லை. செவ்வாய் கிரகம் என்று உங்கள் நாட்டு விஞ்ஞானிகள் குறிப்பிடும் கோளத்திலிருந்து வருகிறேன். அங்கே மனிதர்கள் இருக்கிறார்கள் உன்னைப்போலவே ! அன்பை வளர்க்கவும், மக்கள் உற்பத்தியைப் பெருக்கவும்ஆண்,பெண் உறவும் இருக்கிறது. உன் உலகம் எப்படி இருக்கிறதோ அதைப்போல அங்கேயும் தாவரவர்க்கங்கள் உண்டு விலங்கினங்கள் இருக்கின்றன, ஆனால் நீ வாழும் உலகில் ஏழைகள் இருப்பது போல் அங்கே ஏழைகள் கிடையாது, மனிதனை சுரண்டிப் பிழைக்கும் ஆதிக்கக் கூட்டத்தினர் இல்லை. போர் மேகங்கள் ஊர்ந்து செல்வதில்லை, உத்தமர்கள் என்று உன் தமிழ் மொழியில் குறிப்பிடுகிறாயே அந்த இனத்தைச சேர்ந்தவர்கள் நாங்கள்,''

இந்தப் பதிலை கேட்டதும் ஏன் அந்தக் கேள்வியைக் கேட்டோம் என்று ஆகிவிட்டது. என் எதிரே நின்று கொண்டிருந்த அப் பெண்மணியை நன்றாகப் பார்த்தேன். பறக்கும் தட்டின் கம்பி ஒன்றைப் பிடித்துக் கொண்டு சாய்ந்த வண்ணம் நின்று கொண்டிருந்தாள். அப்பெண்ணால்பதில சொல்ல முடியாத பதில் ஒரு கேள்வியை கேட்க வேண்டும் என்று எண்ணினேன்.

"நீ வாழ்வதாக சொல்லப்படும் செவ்வாய் கிரகம் எப்போது தோன்றியது என்று கேட்டேன்.

சூரியனிலிருந்து பூமி என்று அழைக்கப்படும் கோளம் பல கோடி ஆண்டுகளுக்கு முன்னர் வெடித்து சூன்யமான பிரதேசத்தில் வீழ்ந்தது. அப்படி கீழே வீழ்ந்த அப்பகுதி குளிர்ந்து கல்லாகி மண்ணாகி மக்கள் வாழும் கூடமாகி அது தான் இப்போது பூமி என்று அழைக்கப்படுகிறது. என்று உமது நாட்டு விஞ்ஞானிகள் கண்டு பிடித்திருக்கிறார்கள் பூமி என்று அழைக்கப்படும் கோளம் சூரியனிலிருந்து பெயர்ந்து கீழே விழுவதற்கு சுமார் 50 ஆண்டுகளுக்கு முன்னர் செவ்வாய் கிரகம் என்று இப்போது அழைக்கப்படும் உலகம் சூரியனிலிருந்து பெயர்ந்து கீழே வீழ்ந்தது இது இப்பெண்மணி தந்தவிளக்கம். "நீ இங்கே வருவதன் நோக்கம் என்ன? என்று நான் வினவினேன்.

"உங்களை எல்லாம் பரர்ப்பதற்கு தான். பூமியில் வாழும் மக்களுடன் நாங்கள் தொடர்பு கொள்ள விரும்புகிறோம். உங்களை அடிமை கொள்ளவேண்டும் மென்ற நோக்கத் தோடல்ல. எங்கள் நாட்டு விஞ்ஞானிகள் பூமியில் வாழும் மக்களோடுப் நேரடியாக பேச விரும்புகிறார்கள். என் போன்ற பலர் சென்ற இரண்டாண்டு காலமாக பறக்கும் தட்டுகளில் இந்த உலகுக்கு வந்து இப்பகுதிகளின் அமைப்பையும் இந்த மக்களின் எண்ணங்களையும் அறிந்து போக முயற்சிக்கிறோம்.

என்று அப்பெண்மணி கூறிக் கொண்டிருக்கும் போதே "அதனால் உங்களுக்கு என்ன பயன் ?" என்று இடையே ஒரு குறுக்கு கேள்வியை போட்டேன்.

பூமியில் வாழும் மனிதர்களோடு தொடர்பு கொள்வதால் செவ்வாய் கிரகத்து மக்களுக்கு பயன் எதும் கிடையாது. நாங்கள் இந்த மண்ணில் வாழும் மக்களை விட உயர்தர மான வாழ்க்கை நடத்துகிறோம். ஊரை எமாற்றி பிழைப்பது கிடையாது- மதத்தின் பெயரால் மூட பழக்க வழக்கங்களின் பெயரால் எங்கள் வீட்டில் யாரும் சுரண்டுவது கிடையாது. வெவ்வேறு உலகத்தில் வாழும் மக்கள் அனைவரும் ஒருவருக் கொருவர் தொடர்பு கொள்ள வேண்டும் என்று நாங்கள் கருதுகிறோம். புரிகிறதா, போதுமா இந்த விளக்கம் ? என்று அந்த அணங்கு என்னையே திருப்பி கேட்கும் நிலை ஏற்பட்டது.

அடுத்து கேள்விகள் கேட்கும் அளவுக்கு மனமில்லை. வீட்டுக்கு அழைத்துக்கொண்டு போய் இப் பெண்மணிக்கு விருந்தளிக்கலாமா என்று நினைத்தேன். ஆங்கில முறையிலே உடை அணிந்திருக்கும் அப்பெண்மணிக்கு அரிசி சோறு பிடிக்குமோ என்னவோ, என்ற சந்தேகம் எனக்கு வந்தது. திடீரென்று எனக்கு ஒரு யோசனை— பேராசை வேண்டுமென்றாலும் வைத்துக்கொள்ளுங்கள். செவ்வாய் கிரகத்திற்கே போய்விட்டால் என்ன என நினைத்தேன். எத்தர்கள் நிறைந்த இந்தப்பூமியைவிட உழைப்புக்கு மதிப்புக் கொடுக்கும் செவ்வாய் கிரகம் எவ்வளவோ உயர்தரமானது அல்லவா என்று எண்ணினேன்

"என்ன யோசிக்கிறீர்கள் ?" என்று அந்தப் பெண்ணிடமிருந்து கேள்வி பிறந்தது.

"உங்கள் நாட்டிற்கு வந்துவிடலாம்எனஎண்ணுகிறேன். அழைத்து போகிறீர்களா ?" என்று கேட்டேன்.

"அழைத்துப போகிறேன், ஆனால் !—

"உங்கள் நாட்டிலே கூட 'ஆனால்' என்ற சொல்லுக்கு அதிக வேலையிருக்கிறதா" என்று கேட்டேன்.

"அழைத்துப்போகிறேன், ஆனால் அதற்கு எங்கள் நாட்டு சர்க்காரின் அனுமதி வேண்டும். என்றைக்கு நீங்கள் வாழும் பூமி அன்பின் இருப்பிடமாக மாறுகிறதோ, மூட பழக்கவழக்கங்கள் மறைந்து, வறுமை மறைந்து; எழைகளே இல்லாத நிலை என்று ஏற்படுகிறதோ, மக்களின் உயர் வாழ்வுக்கு வேண்டிய திட்டங்கள் அனைத்தும் நிறைவேறுகிறதோ அன்று அழைத்துப் போகிறேன். இப்போது நான் உம்மை அழைத்துச் சென்றால், மாலை நேரத்தில் மலை உச்சியிலே ஓர் மனிதன் படுத்திருந்தான் அந்த மலையில் குடிகொண்டிருக்கும் பிடாரித் தெய்வம் அவனை அப்படியே உயிருடன் விழுங்கிவிட்டது என்று உன் நாட்டு மக்கள் கதை கட்டி விடுவார்கள்—"

"அப்படியானால் எப்போது அழைத்துப்போவீர்கள்" என்றேன் நான்.

"இன்னும் ஐம்பது ஆண்டுகள் கழித்து அழைத்துப் போகிறோம். பூமியில் வாழும் மனிதர்களில் பலரை செவ்வாய் கிரகத்திற்கு அழைத்து வரவேண்டும் என்று

மக்களுக்கு மகிழ்வூட்டும் செய்தி !

கவியரசர் பாரதிதாசனின்,

திருக்குறள் உரை

தேனருவி

(புதிய கவிதைத் தொகுப்பு)

பாரதிதாசன் நூல்கள் அனைத்தும் கிடைக்கும்

அ. கி. பரந்தாமனாரின்

நல்ல தமிழ் எழுதவேண்டுமா ?	3	12
காதல் நிலைக் கவிதைகள்	0	10
பேச்சாளருக்கு	அச்சில்	
வாழ்க்கைக்கலை	"	

மலர் நிலையம்

133 பிராட்வே, சென்னை-1-

எங்கள் நாட்டு சர்க்கார் திட்டமிட்டிருக்கிறது.

அதற்கான பல சாதனங்களும் புதியவிஞ்ஞானக் கருவிகளையும் எங்கள் நாட்டு விஞ்ஞானிகள் தயார் செய்து கொண்டிருக்கிறார்கள். அவைகள் தயார் ஆனதும் வந்து அழைத்துப்போவோம். விருப்ப மிருந்தால் செவ்வாய் கிரகத்திற்கு நீங்கள் வரலாம் "என்ற அப்பெண்மணியின் பதிலைக் கேட்ட நான்" ஐம்பது ஆண்டுகளா? கி. பி. இரண்டாயிரத்திலா? அது வரை நான் உயிரோடு இருக்க வேண்டுமேஎன்று நான் சொல்லிக் கொண்டிருக்கும் போதே அந்தப் பெண்மணி பறக்கும் தட்டில் நுழைந்து கதவைத் தாளிடும் சத்தம் கேட்டது, அடுத்த வினாடியே விர்என்றசத்தம் கேட்டது. பறக்கும் தட்டு உயரே வானத்தை நோக்கிச்செல்ல ஆரம்பித்தது. என் முகத்திலே யாரோ டார்ச் லைட் அடிப்பதுபோல்தோன்றியது.'டேய்! எழுந்திரு! என்னடா இங்கேயே படுத்து தூங்க ஆரம்பித்து விட்டாய்? இந்த மலையிலே 'பிடாரி' என்ற பிசாசு இருக்கிறது. உன்னை அப்படியே விழுங்கி விடும்'' என்று யாரோ அதட்டும் குரலில் பேசுவது கேட்டது. கண் விழித்துப் பார்த்தேன். ஒரேஇருட்டு! என் முன்னே பத்துப் பதினைந்து பேர் நின்றார்கள். "உன்னை எங்கேயெல்லாம் தேடுவது எழுந்து வா, வீட்டிற்கு போகலாம். இரவு 8 மணிக்குமேல் ஆகிவிட்டது'' என்று என் நண்பன் துரைசாமி கோபமாக கூறினான். அரைத் தூக்கத்தில் எழுந்து அவர்களைப்பின் தொடர்ந்தேன்.

வளரும் சக்தி...

(74-ம் பக்கம் தொடர்ச்சி)

(b) Increase the area of any state.

(c) Diminish the area of any state.

(d) Alter the boundaries of any state.

(e) Alter the name of any state.

நிதிமந்திரி அவர்கள் இந்த அரசியல் சட்டத்தைப் படிக்காதவர் அல்ல. பாகிஸ்தான் பிரிவினையின் போதும் இப்படித்தான் எதிர்ப்பு ஏற்பட்டது. ஆனால் அறிஞர் அண்ணா கூறுவதுபோல், 'ஷெர்வானி நலுங்காமல், சிகரெட்டும் கையுமாய்' உட்கார்ந்தபடியே ஜின்னா பாகிஸ்தான் வாங்கிவிட்டார். அதைப்போல செய்வதென்றால் திராவிட இயக்கத்தாருக்கு அதிக நேரம் பிடிக்காது. ஆனால் அவர்கள் அறப் போராட்டத்தில் - நியாய வாதங்களில் நம்பிக்கை உள்ளவர்கள். வடக்கு வேறு தெற்கு வேறு தான். எந்த சரித்திரத்தை எடுத்தாலும், எந்த இலக்கியத்தில் பார்த்தாலும் வாடை வேறு; தென்றல் வேறு என்றுதான் காணப்படுகிறது.

வாடை வடக்கோடு நிற்கட்டும்; தென்றல் தென்னகத்திற்கு உரியது. அது இங்கு உலவட்டும். வெற்றிநடை போடட்டும். இதுவே என் ஆசை! அதற்கான ஒரு பெரிய அணிவகுப்பு, அறிஞர் அண்ணாவின் சக்தி வாய்ந்த அறிவுப் படை, வளர்ந்து வருகிறது. திராவிடம் பிரியத்தான் போகிறது, தன்னாட்சி, பெற்று, உலக நாடுகளோடு திராவிடம் தலைநிமிர்ந்து வாழத்தான் போகிறது. அதற்கான விடிவெள்ளி தென்படுகிறது. நேர்மைக்கு என்றும் உண்டு வெற்றி.

★

வாழ்த்துரைப்போம்!

—நா. அறிவழகன்—

செய்யை விளைத்துச்
சிறுகரும்பில் தேனேற்றி
மையைக் கிழித்து
வருங்கதிரைத்—தையால்!
புதுப்பொங்கல் நாம்இட்டுப்
பொன்னும் தமிழால்
குதித்தாடி வாழ்த்துரைப் போம்!

எ. எஸ். எ. & கோ.,

இங்லீஷ் மருந்து ஷாப்,

86, லாங்கு பஜார், வேலூர்

எமது மருந்து ஷாப்பில் எல்லாவிதமான இங்கிலீஷ் மருந்துகளும் மற்றும் ஆயுர்வேதிக் மருந்துகளும் குறைந்த லாபத்திற்கே விற்றுவருவது யாவரும்அறிந்ததே, நீங்களும் ஒருமுறை விஜயம்செய்து உண்மை அறியுங்கள்.

இப்படிக்கு.

A. S. அருணசலம் பிள்ளை.

சிதறிய ஒளிமுத் தென்னச்
  சிரித்திடும் விண்மீன் கூட்டம்
பதறிட, ஒளியும் மங்கப்
  பாய்ந்தெழும் நிலவே! உன்றன்
மதிமுகம் மறைக்க முந்தும்
  மைநிற முகில்போ லிங்கே
மதியினைச் சிதைக்க முந்தும்
  மனிதரும் சில்லோ ருண்டு!

வெறுப்பினுல், பொருமை தன்னுல்
  வீணர்கள் சூழ்ச்சி செய்தும்
சிறப்பினுல் வீழ்ந்தி டாமல்
  திகழ்ந்திடும் தமிழே போல,
மறைப்பினும் மறைந்தி டாமல்
  மலர்முகம் காட்டு கின்ருய்
சிறப்பினை மறைக்கச் சூழ்ச்சி
  செய்தவர் மினுங்கு வாரோ?

நீலப்பட் டாடை பூண்டு
  நீள்கருங் கூந்தல் கோதிக்
கோலஞ்செய் மலர்மு கத்தாள்
  குளிர் மலர்ச் சோலே புக்காற்
போல, நீ நீல வானிற்
  புறப்படு கின்ருய்! ஏனே
காலனுய் நினைக்கின் ருர்கள்
  காதலாற் பிரிந்து நைவோர்?

தன்னுயிர் காக்க வந்த
  தாயிடம் 'தலைவன் தாங்கும்
இன்னுயிர் காப்பாய்!' என்றே
  இயம்பிய மறவன் போல
நின்னகத் திருளை நீக்க
  நினைத்திலை; எனினு மிந்த
மன்னிருள் நீக்க லாலே
  மனமிக மகிழ்கின் ருயே!

வன்சொலால் வைய மக்கள்
  மகிழ்ந்திடார்; ஆத லாலே
இன்சொலே வழங்கு கென்றிங்
  கியம்பல்போல் குளிர்கு ழைந்த
பொன்னெளி பரப்பி இந்தப்
  புவியிருள் போக்கு கின்ருய்!
பொன்னவிர் மேனி யாளே!
  பூரிப்பால் வாழ்த்து கின்றேன்!

ஏழையர் செல்வரென்ற
  ஏற்றத் தாழ்வேது மின்றி
ஏழையர் குடிலே, செல்வம்
  ஏற்றவர் மாடி வீட்டைத்
தோழமை கொள்வாய்! எங்கும்
  தூய்மைசேர் ஒளியைப் பெய்வாய்!
வாழிநீ வாழ்க உன்றன்
  வண்மைசேர் வளமை யுள்ளம்!

● சாமி பழனியப்பன்

Edited and Published by Kannadasan, 13, Nallanna Mudali Lane, Madras-14. Printed by R. M. Kanagasabapathy at Elangovan Printers, 23, Muthu Mudali St., Madras-14.


ஜனவரி 5௳ முதல்
சென்னை
பிராட்வே · கெயிட்டி · சயானி
மற்றும் தென்னாடெங்கும்
கஸ்தூரி பிலிம்ஸ்
மேனகா
வடுவூராரின் பிரசித்திபெற்ற நாவல்
தயாரிப்பு, டைரக்ஷன்
வி.சி.சுப்புராமன்
மதராஸ் பிக்சர்ஸ்
வெளியீடு

THENRAL (PONGAL MALAR 1955) REGD. NO. M. 6259

சிறு கை விரித்து எழில்பரப்பி வரும் என்
செல்வமே! நீயும் நானும் உறவு கொள்ள
முடியாதா? உன் நினைவிலேயே நான்
வாழ்ந்து விடுவேனா? உயிரில் கலந்துவிட்ட
ஒளி முத்தே! நீ எங்கே இருக்கிறாய்?

உங்கள் மனதில் என்றும் நிலவ
நாங்கள் அளிக்கும் நற்றமிழ்
விருந்து!

சிவாஜி கணேசன்
பத்மினி, ராகினி, தங்கவேலு நடிக்கும்

மங்கையர் திலகம்

Anand

திரைக்கதை, வசனம், பாடல்
கண்ணதாசன்

டைரக்ஷன்
பிரசாத்

வைத்யா பிலிம்ஸ் சென்னை.24

MP

Wrapper Printed at the Asian Printers, Madras-5.